# ஸ்ரீகும்பகோணம் மடம்
## அதன் உண்மை

பாகம் 1 & 2

விலை ரூ. 2-00

ॐ

॥ श्री गुरुभ्यो नमः ॥

# ஸ்ரீ கும்பகோணம் மடம்

## அதன் உண்மை

### பாகம் 1 & 2

★


பாகம்—1

**R. கிருஷ்ணஸ்வாமி அய்யர், M. A., B. L.,**

அட்வகேட், திருநெல்வேலி

பாகம்—2

K. R. வெங்கட்ராமன்,

திருச்சிராப்பள்ளி


★


பதிப்புரிமை]  1965  [விலை ரூ. 2-00

# பொருளடக்கம்

## பாகம்—1


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| நூற்ருெகுதி | | |
| 1 முன்னுரை | ... | 1 |
| 2 புராண ஆதாரம் | ... | 14 |
| 3 ஸமகால ஆதாரங்கள் | ... | 28 |
| 4 ஆனந்த கிரீயம் | ... | 42 |
| 5 காவ்ய ஆதாரம் | ... | 61 |
| 6 வியாஸாசலீயம் | ... | 75 |
| 7 குருரத்னமாலிகா | ... | 100 |
| 8 ஸ்ரீ விசுவரூபாசார்யார் | ... | 111 |
| 9 முந்தின "ஆசார்யர்கள்" | ... | 126 |
| 10 பிந்தின "ஆசார்யர்கள்" | ... | 143 |
| 11 ஐந்தாவது மஹாவாக்கியம் | ... | 155 |
| 12 இந்திர ஸரஸ்வதீ | ... | 163 |
| 13 யோக லிங்கம் | ... | 171 |
| 14 நைஷ்த ஆதாரம் | ... | 194 |
| 15 ஸர்வக்ஞ பீடம் | ... | 202 |
| 16 மறைந்த ஸ்தலம் | ... | 218 |
| 17 ஐந்தாவது மடம் | ... | 230 |
| 18 சித்திர கல்பனை | ... | 248 |


## பாகம்—2


| | | |
|---|---|---|
| 1 வேறு சில உண்மைகள் | ... | 259 |
| 2 வேறு சில உண்மைகள் | ... | 268 |
| 3 தாமிர ஸாஸனங்களும் தானங்களும் | ... | 298 |
| 4 பலர் அபிப்ராயங்களும் குறிப்புகளும் | ... | 318 |
| 5 வேறு சில விஷயங்கள் | ... | 344 |
| 6 குறிப்புகள் | ... | 353 |
| 7 பிழை—திருத்தம் | | |

# நூற்றொகுதி

## இப்புத்தகத்தில் விசாரிக்கப்பட்ட நூல்களும் மேற்கோள் ஆதாரங்களும்

| | இயற்றியவர் அல்லது தனிப் பெயர் |
|---|---|
| சங்கர விஜயங்கள் | ஆனந்தகிரி<br>மாதவர்<br>சதானந்தர்<br>கேரளீயம்<br>வியாஸாசலர்<br>(இது சென்னை Oriental Manuscripts Library அதிகாரியால் 1954-ல் பிரசுரிக்கப்பட்டது) |
| ப்ராசீன சங்கர விஜயம் | மூககவி |
| ப்ரஹத் சங்கர விஜயம் | ஸர்வக்ஞ சித்ஸுகர் |
| சங்கராப்யுதயம் | ராஜசூடாமணி தீக்ஷிதர் |
| புராணங்கள் | மார்க்கண்டேய புராணம், சிவரஹஸ்யம் |
| ஸ்ரீ சங்கராசாரியாரின் காமகோடி பீடம் | ஆத்ரேய கிருஷ்ண சாஸ்திரிகள் |
| குருரத்னமாலா சுஷமா | ஷை குருரத்னமாலா வியாக்யானம் |
| ஜகத்குரு பரம்பரா ஸ்தோத்ரம் | ஸுதர்சன மஹா தேவேந்திர ஸரஸ்வதி |
| புண்ய ச்லோக மஞ்சரீ | |

| | |
|---|---|
| புண்ய ச்லோக மஞ்சரி பரிசிஷ்டம் | |
| புண்ய ச்லோக மஞ்சரி மகரந்தம் | |
| Sri Sankaracharya & His Kamakoti Pitha | N. K. Venkatesan 1915. Ananda Press, Madras. |
| Sri Sankaracharya The Great and His Successors in Kanchi | N. Venkataraman Ganesh & Co., Madras 1923 |
| Baghavad-padabhyudaya | Lakshmanasuri, 1927 Sri Vani Vilas Press, Srirangam. |
| Sri Sankaracharya | N. Ramesan, 1955 Published by Sri Bhava-narayanaswami Temple Devasthanam, Ponnur. |
| Kamakoti Pitham | N. Ramesan. 1962. Ganesh & Co., Madras. |
| Life & Time of Sankaracharya | C. N. Krishnaswami Aiyar, G. A. Natesan, Madras. |
| Saintly Seers of the Ship of Brahmavidya | Swami Anantanandesvara Sarasvati, Tirumalai Devasthanam bulletin— re-printed 1957. |
| Brahmasutra Sankara-bhashya | Published on the occasion of the 60th birthday of the Acharya of the Kumbakonam Mutt. Kamakoti Kosasthanam. |

| | |
|---|---|
| Rajatarangini | By Kalhana (referred as R. T.) |
| Copper plate inscriptions belonging to the Sankaracharya of the Kamakoti Pitha | T. A. Gopinatha Rao, 1916 Law Printing House, Madras. |

பத்திரிகைகளும் சஞ்சிகைகளும்.

காமகோடி பிரதீபங்கள்.

Bhavan's Journals.

| | |
|---|---|
| Brahmavidya | Kumbakonam Advaita Sabha Journal. |
| Annual reports on Epigraphy | referred as ARE 38 of 1912 |
| Ephigraphia Indica | ( „ „ E. I.) |
| Indian Historical Quarterly | ( „ „ I. H. Q.) |
| Journal of Indian History | ( „ „ J. I. H.) |
| Journal of Oriental Research | ( „ „ J. O. R.) |
| Vestiges of Old Madras | The Indian Records Series I H. B. Love |

மற்ற குறிப்புகளும் ஆதாரங்களும் மூல பாடங்களிலேயே விரிவாகக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

---

# முன்னுரை

இதன் முதற் பதிப்பில் கண்ட விஷயங்களைச் சேகரிக்கும் போது அவைகளைப் பிரசுரிக்க அவசியமிராதென்றே நினைத்தேன். ஆனால் கும்பகோண மடத்தாரின் பிரசாரம் நாளுக்கு நாள் அதிகப்பட்டு வந்ததுடன் ஸ்ரீ சிருங்கேரி ஆசார்யார் ஸ்வதந்திரமாய் தஞ்சாவூர் ஜில்லாவில் யாத்திரை செய்வதற்குக் கூட இடஞ்சல் செய்ய யத்தனித்தபடியால் அம்மடத்தின் விஷயமான உண்மையை வெளியிடும்படி ஏற்பட்டது. முதல் பதிப்பு வெகு சீக்கிரம் செலவாகி விட்டபடியாலும் அதைக் கொஞ்சம் விவரித்து எழுதவேண்டுமென்று சில நண்பர்கள் கேட்டுக் கொண்டபடியாலும் இப்பதிப்பு பிரசுரிக்கப்படுகிறது. உண்மையறிய ஊக்கமுள்ளவர்களை உத்தேசித்து மாத்திரம் இது வெளியிடப்படுவதால், உண்மையை மறைக்க எண்ணுபவர்களுக்கும், உண்மை தெரியாமல் இருப்பதே நல்லதென்று நினைப்பவர்களுக்கும் இது பிரீதிகரமாயிராது. விஷமப் பிரசாரத்தினால் உண்மை மறைபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது ஸகல ஆஸ்திகர்களின் கடமை. அதிலும் ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாரிடம் ஈடுபட்ட ஸகல பக்தர்களுக்கும் இக்கடமை அதிகம்.

இதில் கண்ட விஷயங்களுக்கு ஆதரவாக சரித்திர ரீதியில் பல விஷயங்களை என் ஆப்த நண்பர் ஸ்ரீ K. R. வெங்கட்ராம அய்யர் எழுதியிருப்பதை இதன் இரண்டாம் பாகமாக சேர்க்கப்பட்டிருக்கிறது. அவருக்கு நான் மிகவும் நன்றி செலுத்த வேண்டியவனாயிருக்கிறேன். அவர் காஞ்சியைப்பற்றி எழுதிவரும் புஸ்தகமும் சீக்கிரம் வெளிவரும் என்று எதிர்பார்க்கிறேன்.

இதை அழகாக அச்சடித்துக் கொடுத்து இருக்கும் தர்மபுரி ஸ்ரீ ராமா அச்சகத்திற்கும் என் நன்றி.

இச் சிறு புஸ்தகத்தில் காணப்படாத அநேக விஷயங்களைத் தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ஸ்ரீ J. V. ராஜகோபால சர்மா ஹிந்தியில் வெளியிட்டிருக்கும் "ஸ்ரீ சாங்கர மட விமர்சனம்" என்ற வெளியீட்டில் காணலாம்.

R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்,
Hyderabad, 16—1—65.

ॐ

॥ श्री गुरुभ्यो नमः ॥

# ஸ்ரீ கும்பகோணம் மடம்

# அதன் உண்மை

## அத்யாயம்—1

## முன்னுரை

ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாரவர்கள் இவ்வுலகில் அவதரித்து நம் நாட்டில் நம் வைதிக மதத்தை மறுபடியும் நிலைநாட்டினர். இப்பாரத பூமியின் தென் மேற்கு மூலையில் அவதரித்தும் கன்யாகுமாரி முதல் கைலாஸகிரி வரையிலும் காச்மீரத்திலிருந்து காமரூபம் வரையிலும் தேசம் பூராவும் ஸஞ்சரித்து இப் புண்ய பூமியிலுள்ள ஜனங்களின் ஸ்வபாவங்களும் பாஷைகளும் எவ்வளவு வேற்றுமைப்பட்டிருந்தாலும்மதவிஷயமான முக்கியமான பண்பாட்டில் வேற்றுமையில்லையென்பதை ருஜுப்படுத்தினர். பரிசுத்தமான வைதிக மதத்தில் நுழைந்து அசுத்தப்படுத்தவாரம்பித்திருந்த பலவித அவைதிக மனப்பான்மைகளையும் ஆசாரங்களையும் வேருடன் அகற்றினர். பிராசீனமாயுள்ள உபாஸனா மார்க்கங்களை நன்கு ஸ்தாபித்ததுடன் அவைகள்

ஒன்றுக்கொன்று விரோதமில்லையென்றும் எல்லாமே உபநிஷத்தில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிற பிரஹ்மாத்ம ஐக்யமாகிற லக்ஷ்யத்தை அடைவதற்கு முக்கியமான ஸாதனங்கள்தான் அவை என்றும் எடுத்துக்காட்டினார். அந்த லக்ஷ்யத்தின் தன்மையை உலகுக்கு தெளிவாய் காட்டியதுடன் அதில் ஊக்கமுள்ளவர்கள் இப்பிறவியிலேயே அதை கைப்பிடிக்க முடியுமென்று தன் சரித்திரத்திலும் உபதேசங்களிலும் நன்கு விளக்கினார். பின் வரும் ஸாதகர்களின் நன்மையை உத்தேசித்து அவரவர்களுடைய யோக்கியதைக்குத் தக்கபடி பாஷ்யங்களையும் பிரகரணங்களையும் ஸ்தோத்திரங்களையும் மற்றும் பலவித கிரந்தங்களையும் இயற்றி அனுக்கிரஹித்திருக்கிறார். அவர் கையாளும் ரீதியிலேயே ஸம்ஸ்கிருத பாஷைக்கு ஒரு புதிய அழகு ஏற்பட்டது. தன் மதத்தை ஸ்தாபிப்பதிலோ மற்ற மதங்களைக் கண்டிப்பதிலோ அவர் உபயோகித்த யுக்திகள் நிகரற்றவை.

தான் ஜீவித்திருந்த முப்பத்திரண்டு வருஷங்களில் இவ்விதம் செய்த பேருபகாரங்களைத் தவிர, தான் எடுத்துக் காட்டி அனுஷ்டித்து வந்த தத்வங்கள் மங்காமல் இந்நாட்டில் எப்பொழுதும் விளங்கி வரவேண்டுமென்ற உதாரமான நோக்கத்துடன் இந்நாட்டு பிரஜைகளின் அத்யாத்ம சிரேயஸ்ஸை பாதுகாத்து வருவதற்காக நான்கு திக்குகளிலும் நான்கு ஆசார்ய பரம்பரைகளை ஏற்படுத்தினார். தென் திசைக்காக சிருங்கேரியில் சாரதா மடத்தையும், மேற்கு திசைக்காக துவாரகையில் காளிகா மடத்தையும், வடக்கு திக்குக்காக பதரியில் ஜோதிர் மடத்தையும், கீழ் திசைக்காக புரீ ஜகன்னாதத்

தில் கோவர்த்தன மடத்தையும் ஸ்தாபித்து அவைகளில் தன் பிரஸித்த சிஷ்யர்களான ஸ்ரீ ஸுரேசுவராசார்யார், ஹஸ்தாமலகாசார்யார், தோடகாசார்யார், பத்மபாதாசார்யார் என்ற நால்வரை ஆசார்யர்களாக நியமித்தார்.

பிறகு காலம் செல்லச்செல்ல, ஒருவரே விஸ்தாரமான பிரதேசங்களில் ஸஞ்சாரம் செய்து ஜனங்களுக்கு உபதேசம் செய்வதில் ஏற்படக்கூடிய அஸௌகர்யத்தினுல், அந்தந்த இடங்களில் சில பெரியோர்கள் பிரஸித்திக்கு வந்தார்கள். அவர்கள் ஸன்யாஸிகளாகவும் இருந்துவிட்டால் ஜனங்களுடைய விசேஷ ஆதரவு பெற்றுவந்தார்கள். சாஸ்திர விதிப்படி ஸர்வ ஸங்க பரித்யாகம் செய்திருக்கும் ஸன்யாஸிகள் யாவருமே விஷ்ணுவிற்கு ஸமானமென்று சாஸ்திரம் கூறுவதால் அவர்களிடம் ஜனங்களுக்கு பக்தியும் ஆதரவுமிருப்பது ஸஹஜமே. தன்னுடைய யோக்கியதையினுலேயோ, படிப்பினுலேயோ, ஸித்திகளினுலேயோ, வாக்சாதுர்யத்தினுலேயோ, வேறு எந்த காரணத்தினுலேயோ தன்னிடத்தில் விசேஷ மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டு விட்டால், தானுகவோ தன் பக்தர்களின் ஏற்பாட்டின் பேரிலோ தனக்காக ஒரு மடம் ஏற்படுத்திகொள்ளத் தோன்றும். அதை சாசுவதமாக நிலைக்கச் செய்ய தன்னையே முதல் மடாதிபதியாக ஏற்படுத்திக் கொள்ளத் தோன்றும். இவ்விதம் அந்தஸ்து உயர்ந்தவுடன் ஜனங்களின் ஆதரவும் உயரும். இப்படியேதான் ஏகாந்தமாய் வஸித்து வந்த அநேக ஸன்யாஸிகள் ஜனங்களின் ஆதரவைப் பெற்றவுடன் மடாதிபதிகளாகவும் பீடாதிபதிகளாகவும் மாறிவிடுகிருர்கள்.

ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாரின் மஹிமை யாரையுமே கவரக்கூடியது. அவர் ஜனித்த பிரதேசத்தில் நாமும் ஜனித்தால் நமக்கும் அவருக்கும் ஒருவித உறவு ஏற்பட்டுவிட்டதாக பாவனை ஏற்படுகிறது. அப்படியே அவருடைய கோத்திரம், வேதம், ஸூத்திரம், ஏதேனும் நம்முடையதாக இருந்தால் ஒரு விசேஷ பெருமை தோன்றுகிறது. அவர் எட்டு வயதிலேயே துறவியாகிவிட்டபடியால், அவரை குலகூடஸ்தர் என்று சொல்லிக்கொள்ள இடமில்லை. அவருடைய சிஷ்ய பரம்பரையில் வந்தவர் என்று தன்னை சொல்லிக் கொள்ள ஏதேனும் நிமித்தமிருந்தால் அதுவே விசேஷ கௌரவத்திற்குக் காரணமாகுமல்லவா? தீர்த்த, ஆசிரம, முதலான பத்துவிதமான யோகபட்டத்தோடு கூடிய எந்த வைதிக ஸன்யாஸியும் ஸ்ரீ சங்கருடைய சிஷ்ய பரம்பரையில் சேர்ந்தவர்தான் என்பதை மறந்து, அவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஏதேனும் ஒரு மடத்தின் ஸம்பந்தமும் இருக்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். இந்தக் காரணத்தினால் அநேகம் மடாதிபதிகள் ஆதி ஆசார்யாரால் ஸ்தாபிக்கப்பட்ட நான்கு மடங்களின் துயற்சி தங்களுக்கு இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். அதாவது, தங்களுக்கு மாத்திரம் ஆசார்ய ஸம்பந்தமிருந்தால் போதாதென்று நினைத்து தங்கள் மடத்திற்கும் அந்த சம்பந்தம் இருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். இவ்விதம் தங்கள் மடம் மூல மடங்களைச் சேர்ந்த கிளை மடங்கள் என்று சொல்வார்கள். இப்படி சொல்லிக் கொள்ளாத விஷயத்தில் ஆதி ஆசார்யாரின் தொடர்பு இல்லாமல் போய்விடுமல்லவா? மூல மடங்களுக்கும் இந்த புது மடங்களுக்

கும் ஸம்பந்தம் வெகுசீக்கிரம் பேருக்கு மாத்திரம் இருப்பதாக ஏற்பட்டு கொஞ்ச நாள் சென்று ஸ்வதந்திரமாகவே ஆகிவிடும். அதன் பிறகு தாங்கள்தான் மூல மடம் என்றும் அங்கு பீடாதிபத்யத்தை பலாத்காரத்திலாவது ஏமாற்றத்தினுலாவது இழந்து வேறு இடத்தில் இருக்க ஏற்பட்டுவிட்டது போலவும் சொல்வார்கள். எப்படியும் நம் தேசத்தின் நான்கு திக்குகளில் ஸ்தாபிக்கப்பட்ட மூல மடங்களை வைத்தே தங்களுக்கு பிராமாண்யம் கொண்டாடுவார்கள்.

கும்பகோணம் மடத்தாருக்கு இந்த பாத்தியதை போதாதென்று நினைத்து தாங்கள் அந்த நான்கு பிரஸித்த மடங்களுக்கு வேறுபட்டவர்களாக ஸாக்ஷாத்தாக ஸ்ரீ சங்கர பகவத் பாதரின் பரம்பரையைச் சேர்ந்தவர்களென்றும், அவர் தனக்கென்று காஞ்சீபுரத்தில் ஒரு ஐந்தாவது மடம் ஸ்தாபித்தாரென்றும், அதுவே மத்ய மடமென்றும், பிரஸித்த நான்கு மடங்களும் இதற்குட்பட்ட "சிஷ்ய மடங்கள்" என்றும், இதுவே 18-ம் நூற்ருண்டு ராஜ்ய கலக ஸமயத்தில் கும்பகோணத்திற்கு மாற்றப்பட்டதென்றும் சொல்கிருர்கள். சரித்திர ஸம்பந்தமான அம்சங்களைப் பற்றி பரிசீலனை செய்து முடிவுக்கு வரவேண்டிய பொறுப்பு சரித்திர ஆராய்ச்சியில் நிபுணர்களாகயிருப்பவர்களைச் சேர்ந்தபோதிலும், அம்மடத்தார் சொல்லும் பிரமாணங்களை பரிசீலனை செய்தாலே அவர்கள் கொண்டாடுவது சரியாவென்று தீர்மானிக்க முடியும்.

கும்பகோண மடத்தார் கொண்டாடும் பாத்தியதைகளை இப்பொழுதுள்ள அம்மடத்து ஆசார்யார் தானுக

புதிதாகக் கல்பித்ததில்லையென்பது வாஸ்தவம். ஆனால் முன்னாலேயே கல்பிக்கப்பட்டிருந்ததை அவர் விசேஷமாக பிரசாரம் செய்தும், அவைகளுக்கு தன்னால் கூடியவரை பக்கபலம் கட்டியும், அவைகளை ஸ்தாபிப்பதற்காக அவருடைய உதவியின்பேரிலும் அவருடைய அனுமதியின்பேரிலும் அவருக்கு ஸமர்ப்பணம் செய்தும் பலவிதமாய் இங்கிலீஷிலும் தேசபாஷைகளிலும் பிரசுரமாய்க் கொண்டுவருகிற புஸ்தகங்கள் முதலானவை மூலமாக பிரசாரம் செய்தும் வருவதால் அவருக்கும் இவ்விஷயத்தில் நன்கு பொருப்பு உண்டு. இவ்விஷயத்தில் வெகு அக்கரை எடுத்துக் கொண்டு பிரசாரம் செய்வதுடன் வடநாட்டில் பலமாயும் விஸ்தாரமாயும் விசேஷப் பிரயத்தினம் எடுத்துக் கொண்டு சில "வியவஸ்தா பத்திரிகைகள்," "அனுமோதனப் பத்திரிகைகள்," "ஸ்வாகத பத்திரிகைகள்" சேகரித்திருக்கிறார். இங்கிலீஷ் படிப்பின் பலத்தினால் நம் தேசத்தின் எந்த பாகத்திலும் காணக்கூடிய அவர்களுடைய சில செல்வாக்குள்ள சிஷ்யர்கள் மூலமாக, இவ்வித பாத்தியதைகளைக்கண்டும் அவைகளுக்கு ஆதாரமாய்க் கொண்ட கிரந்தங்களையுமே குறித்தும், இப்பத்திரிகைகள் வாங்க மிகவும் ஸௌகரியமாயிருந்தது. இப்பாத்தியதைகள் ஆதாரமற்றவை என்பதையும் இவைகளுக்கு ஆதாரமாக சொல்லப்படும் கிரந்தங்கள் பிராமாண்யமற்றவை என்பதையும் கூர்மையான புத்தி சக்தியுடன் கூடிய அவர் உணராமலிருப்பாரா என்று தோன்றுகிறது. தன் நலம் முன் நிற்கும்போது திருஷ்டியும் மறைவுபடுமென்று நினைக்க வேண்டியிருக்கிறது. அவருடைய அத்யாத்ம நிலையைப் பற்றி அளவிட நமக்கு அதிகாரமில்லை. இந்த சிரமமான

காலத்திலும் தர்மப் பிரசாரத்திற்காக அவர் செய்து வரும் முயற்சிகளை நாம் அறியாதவருமில்லை. தன் மடத்தை அநாவசியமாக உயர்த்திவைப்பதற்காக அவர் செய்து வரும் பிரசாரங்களை நிறுத்திக் கொண்டு தர்மப் பிரசாரத்துடன் இருந்துக் கொண்டால் அவருடைய மேன்மை நன்கு விளங்கும். இரண்டையும் கலக்கும் போது தர்மப்பிரசாரம் என்பதே மடத்தின் பிரசாரத்திற்காகவே ஒரு வியாஜமாகக் கைக்கொள்ளப்பட்டிருக்கிறதோவென்ற ஸந்தேஹமும் ஏற்படுகிறது.

அவர்கள் கொண்டாடும் பாத்தியதைகள் ஆதாரமற்றவையென்பதை விளக்கி, பொதுஜனங்கள் வெளி ஆடம்பர விளம்பரங்களினால் புத்தி மோஹமடையாமல் உண்மையை நன்கு அறிந்து கொள்ளும்படி செய்வதே நம் நோக்கம். அப்பிரசாரங்களின் நியாயமில்லாத் தன்மையைக் கண்டு நாம் வெகுநாள் முன்பு சென்னை சுதேசமித்திரன் 8—8—1935 தேதிப் பத்திரிகையில் எழுதினோம். ஆனால் அப்பிரசாரம் நாளுக்கு நாள் விருத்தியடைந்தே வருகிறது. பக்ஷபாதமில்லாமல் பேசுபவர் போல சிலர்கள் இவ்வித பரிசீலனை உசிதமில்லையென்றும் அத்வைதிகளுக்குள் பிளவுக்கே காரணமாகுமென்றும் சொல்கிறார்கள். கும்பகோண மடத்தின் பிரபாவத்தைப்பற்றி இதுவரை பிரசுரமாயிருக்கிறதும் இனிப் பிரசுரமாகக்கூடியதுமான வெளியீடுகளுக்கு எவ்வித மறுப்பும் இல்லாமல் செய்துவிட வேண்டியதைவிட அவர்களுக்கு வேறு உத்தேசமில்லை. ஆதாரமற்றபாத்தியங்களைக் கொண்டாடிக்கொண்டுபுஸ்தகங்கள் வெளியிடுவதும் உபன்யாஸங்கள் செய்வதும்

அவர்களுக்கு அனுசிதமாய்த் தோன்றவில்லை. ஸத்தியத்தை எடுத்துச் சொன்னால் அனுசிதமென்று சொல்லக்கூடிய மனோபாவத்தையும் கலியின் மஹிமையென்றே சொல்லவேண்டும். ராவணன் ஸீதையை அபஹரித்தானென்பதை மறந்து செழிப்பாயிருந்த லங்கையை ராமர் அழித்தாரென்று குற்றம் சாட்டுவது போலாகிறது. ஸத்தியத்தை வெளியிடுவது அவர்களுக்கு இடைஞ்சலாகவும் பிடிக்காததாகவும் இருக்கலாம். இவர்களிடத்தில் தாக்ஷிண்யப்பட்டுக்கொண்டு உண்மையைச் சொல்லாமலிருப்பது தர்மமாகுமா? அவர்கள் கொண்டாடும் பாத்தியதைகளுக்கு ஏதேனும் ஆதாரமுண்டாவென்று பரிசீலனை செய்யவேண்டியதே நம் கடமையாகும். ஸத்யமானாலும் அப்பிரியமான விஷயத்தை சொல்லக்கூடாதென்ற நியாயமுண்டல்லவா என்று சிலர் கேட்கிறார்கள். அஸத்தியத்தையும் அப்பிரியத்தையும் பிரசாரம் செய்யத் தலைப்பட்டவர்கள் விஷயத்திலுமா இந்த ஸாமான்ய நியாயம்?

இதுவரை செய்துவந்த பிரசாரம் போதாதென்று நினைத்து தாங்கள் கொண்டாடும் பாத்தியதைகளை வற்புறுத்துவதற்கென்றே ஸமீபத்தில் அம்மடத்தார் "காமகோடி பிரதீபம்" என்று ஒரு மாதப்பத்திரிகை ஆரம்பித்திருக்கிறார்கள். அதில் ஒரு பிரஸித்த பண்டிதரின் உதவியையும் நாடியிருக்கிறார்கள். தான் பார்த்து ரஸித்துக்கொண்டிருந்தஒரு நீர்குமுழியைஇன்னொருவர் குத்திவிட்டால் ஆக்ரோஷம் வருவதும் அதை தைத்து சரிப்படுத்தி விடலாமென்று நினைப்பதும் ஸஹஜம். இந்த வீண்காரியமான தையல் போடுவதில் அமர்ந்

திருக்கும் இப்பண்டிதர் தன்ருல் கூடியவரை ஆபாஸ யுக்திகள், விபரீத அர்த்தங்கள், அர்த்தமற்ற வார்த்தை கள், ஸம்பந்தமில்லாத வியவஹாரங்கள், கடைசியாக கிராம்யமான வசவு, முதலான கருவிகளை உபயோகித்தும் போதாமல் "ஸ்வர்க்கம்" என்ருல் "ஹிமயமலை," "காச்மீரம்" என்ருல் "காஞ்சீபுரம்" என்றெல்லாம் சொல்லவேண்டிய நிலைக்கு வந்திருப்பது மிகவும் வியஸனிக்கத்தக்கது. இவ்விளக்கத்தில் அவருடையசில வாதங்களையும் கண்டிக்க வேண்டிவரும். ஆனால் அவருடைய பிடிவாதத்தைவிட சொல்வதற்குக்கூட ஆதாரமில்லாத மற்ற எல்லா வாதங்களுக்கும் பதில் சொல்ல நம் காலத்தையும் சக்தியையும் வீணுக்க நமக்கு இஷ்டமில்லை. அப்படியே அம்மடம் விஷயமாக ஆத்ரேய கிருஷ்ணசாஸ்திரி, N.K.வெங்கடேசம்பந்துலு, N.வெங்கடராமன், N. ரமேசன், R. கணபதி முதலியோர் மூலம் பிரசுரித்திருக்கும் புஸ்தகங்களிலும் மேலே கண்டபடி பலவிடங்களில் சேகரித்த பத்திரிகைகளிலும் வெளியிடும் பத்திரிகைகளிலும் கண்டிருக்கும் வாதங்களையும் ஒவ்வொன்ருய் கண்டிக்க அவசியமில்லை. அவைகள் கொஞ்சமேனும் ஆதாரமற்றவை என்பதையும், பொதுஜனங்களைக் கலக்கி உண்மை தெரியவொட்டாமல் செய்வதற்கான முயற்சிகள்தான் அவை என்பதையும் யாரும் ஸுலபமாய் அறிந்து கொள்ளமுடியும். ஆகையால் அவர்களால் ஆதாரமென்று சொல்லப்படும் கிரந்தங்களுக்கு கொஞ்சமேனும் பிராமாண்யமில்லை யென்பதையே முக்கியமாக இதில் விளக்க உத்தேசிக்கிருேம்.

முன் சொன்ன 1935 சுதேசமித்திரனில் கண்ட விஷயங்கள்தான் இந்த விளக்கத்தில் முக்கியமாய்

விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புவோருக்காக அதன் முக்கியாம்சங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன :—

---

## சுதேசமித்திரன் 8-8-1935 (பவ, ஆடி 21)

[ஸ்ரீ கும்பகோணம் மடத்து ஆதரவில் பிரசுரமாயிருக்கும் பலவிதமான சங்கராசார்ய சரித்திரங்களிலும் ஆசார விசாரத்திற்காக மேற்கு திக்கில் துவாரகையில் ஓர் மடமும், வடக்கு திக்கில் பதரியில் ஓர் மடமும், கிழக்கு திக்கில் ஜகன்னாதத்தில் ஓர் மடமும், தென் திசையில் சிருங்கேரியில் ஓர் மடமும் ஸ்தாபித்திருப்பதாக ஒப்புக்கொள்கிறபடியால் காஞ்சீபுரம் கும்பகோணம் உள்பட தென் தேசத்திலுள்ள யாவரும் சிருங்கேரி மடத்து சிஷ்யர்கள் என்பதை ஸ்ரீ கும்பகோண மடத்தாரும் ஆக்ஷேபிக்க இடமில்லை. ஆகையால் சிருங்கேரி மடத்து சிஷ்யர் வேறு என்று பிரிக்க எவ்வித நியாயமுமில்லை. தாங்கள் சிருங்கேரி மடத்து சிஷ்யர் அல்லவென்று நினைத்துக்கொண்டு சிலர் இருக்கிறபடியால்தான் சிருங்கேரி மடத்து சிஷ்யர்களென்று வியவஹாரம் ஏற்படுகிறது.

சிருங்கேரி மடத்து ஸ்ரீமத் ஆசார்யார் அவர்கள் மடங்கள் விஷயமான தாரதம்ய விசாரத்தில் அதிருப்திப்படுவதாக ஒரு நிருபர் எழுதுகிறார். அவ்வதிருப்தி ஆஸ்திகர்கள் யாவருக்குமே இருக்கக் கூடியதுதான். இவ்விதமான வியவஹாரம் சரியில்லையென்பது வாஸ்தவமாயிருந்தாலும், இவ்வியவஹாரங்களை ஆரம்பித்தவர்களுக்கு அதை நிறுத்திவிடும்படி உபதேசம் செய்தால் உசிதமாகும். அதைவிட்டுவிட்டு தப்பு பிரசாரத்தை தப்பு என்று எடுத்துச் சொல்பவர்களிடம் நீங்கள் ஆக்ஷேபிக்கக் கூடாதென்று செய்யும் உபதேசம் கொஞ்சமேனும் நியாயமாகாது ... ... ... ... ஆகையால் இக்கிளர்ச்சியில் அதிருப்திப்படுவோர்கள்

தங்களுக்கு செல்வாக்கு இருக்குமேயானால் இவ்வித பிரசாரங்களை நிறுத்திக்கொள்ளும்படி கும்பகோணம் மடத்தார்களையே கேட்டுக்கொள்வது பொருத்தமாகும்.

கும்பகோணம் மடத்து ஆதரவில் பிரசுரமாயிருக்கும் புஸ்தகங்களில் சிருங்கேரி மடத்தைப்பற்றி கௌரவக் குறைவாக ஒரு வார்த்தைகூட கிடையாதென்று ஒருவர் எழுதுகிறார். அயோக்கியர், துஷ்டர் என்ற மாதிரி எழுதினால்தான் கௌரவக் குறைவு ஆகும்போலும்.

(1) சிருங்கேரி மடம் கும்பகோணம் மடத்தின் மேல் பார்வைக்கு உள்பட்டது.

(2) ஸுரேசுவராசார்யார் சிருங்கேரி மடத்தில் இருந்ததில்லை. அவர் பரமஹம்ஸ ஸன்யாஸியுமில்லை.

(3) சிருங்கேரி மடத்தில் ஆசார்யராக நியமிக்கப்பட்ட விசுவரூபாசார்யாரென்ற வேறொருவர் யமனது அவதாரம். பிருத்வீதவாசார்யார் மிருத்யு தேவதையின் அவதாரம்.

(4) சிருங்கேரி மடம் பரம்பரை வெகு நாளாக விச்சின்னமாயிருந்தது.

(5) வித்யாசங்கரருடைய ஆலயம் சிருங்கேரியில் இருந்த போதிலும்கூட, வித்யாசங்கரர் சிருங்கேரி மடத்தில் இருந்திருப்பதில்லை. கும்பகோணம் மடத்திலிருந்தவர்.

(6) வித்யாரண்யர் பேருக்கு விஜயநகர ஸம்ஸ்தானத்திலிருந்து சாஸன மூலமாக சில கிராமங்கள் கொடுக்கப்பட்டு இன்னமும் அந்த கிராமங்கள் சிருங்கேரி ஸம்ஸ்தானத்தின் ஆளுகையில் இருந்து வருகிறதாயினும்கூட, அவர் சிருங்கேரி மடத்தில் இருந

திருப்பதில்லை. அவர் பரமஹம்ஸ ஸன்யாஸியு மில்லை. அவர் கும்பகோண மடத்து சிஷ்யர், அவரை இங்கிருந்து அனுப்பி சிருங்கேரி மடத்தை புனர் உஜ்ஜீவனம் செய்யப்பட்டது.

(7) சிருங்கேரி ஆசார்யார்களை "குரு" என்று சொல்ல லாமே தவிர, "ஜகத்குரு" பட்டம் கும்பகோணம் மடாதிபதியையே சேர்ந்தது.

என்றும் இன்னும் இது போன்ற பலவிதமாய் கும்பகோணம் மடத்தார் சொல்வதெல்லாம் சிருங்கேரி மடத்துக்கு தூஷணை ஆகாது போலும்.

கும்பகோணம் ஸ்ரீ ஸ்வாமிகள் இவ்வித வியவ ஹாரக்ரஸ்தமான கிரந்தங்களை அநேக கனவான் களுக்கும் அநேக லைப்ரரிகளுக்கும் கொடுத்து வருவதுடன், அவர்கள் அனுமதி பெற்று சில புஸ்தகங்கள் அவர்களுக்கே ஸமர்ப்பணம் செய்யப்பட்டும், விவா தாம்சங்களைக் குறிப்பிட்டுக் கண்டு எழுதியிருக்கும் ஸ்வாகத பத்திரிகைகளை அங்கீகரித்தும், ஸ்ரீ சங்கரா சார்ய சரிதம் என்ற விஷயம் எடுத்துக்கொண்டு இவ் விவாதாம்சங்களையே வற்புறுத்தி உபன்யஸித்தும், வருகிற முறையில் இப்பிரசாரங்களில் ஸ்ரீ ஸ்வாமிக ளவர்கள் தலையிடுகிறதில்லை போலும் சொல்வது ஆதாரமற்றதாகும்.

இவ்வித பிரசாரங்கள் சிவரஹஸ்யத்தின் ஆதாரத் தின்பேரில்தான் நடப்பதாகவும் சிவரஹஸ்யத்தின் பிராமாண்யத்தை ஒப்புக்கொண்ட அத்வைதி யாரும் ஆக்ஷேபிக்கக் கூடாதென்றும் மற்றொரு நிருபர் எழுது கிறார். சிவரஹஸ்யம் பிரமாணம் என்றால் அதில் சொல்லப்பட்டது மாத்திரம் பிரமாணமாகுமே தவிர, அதில் சொல்லப்பட்டதாகச் சொல்வதெல்லாம் பிரமாணமாகாது. தவிரவும் ஸ்ரீ சங்கராசார்யாரைப் பற்றி சொல்லியிருப்பதைப்போல ஹரதத்தாசார்

யாரைப்பற்றி ஒரு அத்யாயம், அதாவது நவாம்சம் **17**-வது அத்யாயம் ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. அப்படியே ஸமீப காலத்திலிருந்த அப்பய்ய தீக்ஷிதரைப் பற்றியும் சிவரஹஸ்யத்தில் சொல்லியிருப்பதாக புஸ்தகங்கள் அச்சாகியிருக்கின்றன. இச்சரித்திரங்களையுடைய பாகங்களுக்கு எவ்வளவு தூரம் பிரமாண்யம் கொடுக்கவேண்டுமென்பதை அவரவர்களே தீர்மானித்துக் கொள்ளவேண்டியது... ........

இந்திர ஸரஸ்வதி பட்டம் கும்பகோணம் மடாதிபதிக்கு மாத்திரம் ஏற்பட்டதாகச் சொல்லிவருவதும் சரியல்ல. அது விஷயமாய் இப்போது பிரகிருதமில்லாததால் எழுதவில்லை.

ஆகையால் அப்பிரமாணமாயிருக்கிற கிளர்ச்சிகளை புதிது புதிதாக ஏற்படுத்தாமல் இருந்துவிட்டால் அவை விஷயமான ஆக்ஷேபணைகளுக்கும் இடமில்லாமலிருக்கும். சிருங்கேரி மடத்து சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்வதை நிறுத்தி கிளர்ச்சிக்கு மூலகாரணமான வாதங்களை கிளப்பாமலும் தலை தூக்காமல் செய்வதுமே ஸகல ஆஸ்திகர்களின் கடமையாகும்.]

அத்யாயம்—2

## புராண ஆதாரம்

கும்பகோணம் மடத்தார் கொண்டாடும் பாத்தியதைகளை பரிசீலனை செய்வதற்கு முன்னதாக அப்பாத்தியதைகளுக்கு அஸ்திவாரமாய்ச் சொல்லப்படும் ஆதாரங்களைக் கவனிப்பது உசிதமாகும். அவை பொதுவாக மூவகைப்படும்.

1. புராண கிரந்தங்கள்.
2. ஸமகால கிரந்தங்கள்.
3. பின்காலத்திய கிரந்தங்கள்.

இவ்வரிசையிலேயே இவைகளைக் கவனிப்போம்.

ஸ்ரீமத்வாசார்யாருடைய அவதாரத்தைக் குறித்து ரிக் வேதத்திலேயே ஆதாரமிருப்பதாக அவருடைய பக்தர்கள் சொல்லத் தலைப்பட்டவுடன், ஸ்ரீசங்கராசார்யாருடைய பக்தர்களும் தங்கள் ஆசார்யாரைப்பற்றி ரிக் வேதத்திலும் ஸ்ரீ ருத்திராத்யாயத்திலும் சொல்லப்பட்டிருப்பதாக வியாக்யானம் செய்ய ஆரம்பித்தார்களென்று தோன்றுகிறது. பின்னல், ஏராளமாயிருந்து வந்த புராணங்களின் மத்தியில் ஸ்ரீ மத்வரை உயர்த்தி ஸ்ரீ சங்கரரைத் தாழ்த்தியும் ஸ்ரீசங்கரரை உயர்த்தி ஸ்ரீ மத்வரை தாழ்த்தியும் வாக்கியங்கள் அவ்ரவர்கள் இஷ்டப்படி கற்பித்து சேர்த்துக் கொள்வதும் ஸுலபமாயிருந்தது. ஆனல் இவ்விதம் தங்கள் தங்கள்

ஆசார்யாரை உயர்த்துவதற்காக இவ்விதம்செய்ததினுல் எந்த புராணங்களில் இவ்வித வாக்கியங்கள் நுழைக்கப் பட்டனவோ அப்புராணங்களின் பிராமாண்யத்திற்கே ஹாநி ஏற்படுமே யென்பதை அவர்கள் மறந்துவிட் டார்கள். இம்மஹான்களுடைய பெருமையை எடுத்துக் காட்ட புராண ஆதாரம் தேவையே இல்லை. அவ்வித ஆதாரம் இருந்தால் அப்பெருமையை எடுத்துக்காட்டா ததுடன் அப்புராணத்தின் பிராமாண்யத்தையே வேரறுத்துவிடுகிறது. பிரகிருத விஷயத்திற்கு வாயு, கூர்ம, சைவ, பவிஷ்யோத்தர முதலான புராணங்களில் காணப்படுவதாகச் சொல்லும் வாக்கியங்களையோ, ரிக் வேதம் ஸ்ரீ ருத்ராத்யாயம் இவைகளிலுள்ள வார்த்தை களுக்கு செய்யப்படும் அர்த்தங்களையோ, பரிசீலிக்க அவசியமில்லை. அவைகள் பொதுவாக ஸ்ரீ சங்கரரின் அவதார மஹிமையை குறிக்கின்றனவே தவிர் கும்ப கோணம் மடத்து வாதங்களுக்கு எவ்வித அனுகூலமு மில்லை.

அவர்கள் சிவரஹஸ்யம், மார்க்கண்டேயஸம்ஹிதை என்ற இரண்டு புராண ஆதாரங்கள் சொல்கிருர்கள். வியாஸ பகவான் 18 புராணங்களையும் 18 உப புராணங் களையும் எழுதினதாக பிரஸித்தியிருந்து வருகிறது. ஆனல் இவ்விரண்டும் அந்த 36 புராணங்களிலும் சேர்ந் ததல்ல. புராணங்களில் மிகப் பெரிது ஸ்காந்தம்; எந்த சின்ன கிராமமும் தனக்கென்று ஒரு ஸ்தல புராணமுண் டென்றும் அது ஸ்காந்தத்தில் இருப்பதாகவும் ஸௌகர் யமாகச் சொல்லலாம். அப்படியே இந்த சிவரஹஸ்ய மும் ஸ்காந்தத்தில் சேர்ந்தது என்று முதலில் சொல்லப் பட்டது. இப்பால் இதற்கு இதிஹாஸத்தின் அந்தஸ்து

கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமத் மஹாபாரதம் இவைகளுக்கு ஸமமான பிராமாண்யம் இதற்கும் உண்டென்று காட்ட உத்தேசமிருக்கலாம். ஆனால் இக்கிரந்தத்தில் ஸ்ரீ சங்கராசார்யாரைப்பற்றி மாத்திரம் இல்லை, ஹரதத்தாசார்யார் முதலானவர் களைப்பற்றியும் ஸமீப காலத்திலிருந்த அப்பய்ய தீக்ஷித ரைப் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

வாஸ்தவத்தில் ஸ்காந்தபுராணத்தில் அடங்கிய சங்கரஸம்ஹிதையின் ஒரு பாகமாக சிவரஹஸ்ய கண்டம் என்று ஒன்று இருந்து வருகிறது. அது தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடியிலிருந்த பிரஸித்த வித்வான் மஹா மஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகளின் ஆசியுடன் வெகு நாட்களுக்கு முன்னமேயே கிரந்த லிபியில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஆகையால் அதுதான் இது என்று சொல்வதற்கு இடமில்லை. பிராசீனப் புராணங்களும் உபபுராணங்களும் பெயரிட்டு கணக் கிடப்பட்டிருக்கிறபடியால் இதை அவைகளில் சேர்த்து விடவும் வழியில்லை. ஸ்ரீசங்கரானந்தர் எழுதியிருக்கும் ஆத்மபுராணம் மாதிரி இதுவும் என்று சொன்னால் மஹரிஷிகள் செய்ததென்று கௌரவம் சொல்ல முடி யாது. ஆகையால் இதை மூன்றாவது இதிஹாஸமாக கற்பிக்க வேண்டி வந்தது. பிராசீன இதிஹாஸங் களான ராமாயணமும் மஹாபாரதமும் வால்மீகி, வியாஸர், என்ற மஹாமுனிகளால் இயற்றப் பட்டவை. அவைகளை விட இதற்கு ஜாஸ்தி மஹிமை கொடுக்கக் கருதி இதைஇயற்றியவர் யாரென்றே காணப்படவில்லை. இதுவும் "அபௌருஷேயம்" மனிதரால் ஏற்பட்ட

தல்லவென்று கருத்தாயிருக்கலாம். N. K. வெங்கடேசம் பந்துலு தன் "ஸ்ரீசங்கராசார்யாரும் அவருடைய காம கோடிபீடமும்" என்கிற புஸ்தகத்தில் ஸ்ரீசங்கரர் கைலாஸத்திற்குப்போய் பரமசிவனை ஸ்துதித்து விட்டு அவரிடமிருந்து இந்த சிவ ரஹஸ்யத்தையும் பெற்றுக் கொண்டு திரும்பினர் என்று சொல்லியிருக்கிறர். ஸ்ரீமத் ஆசார்யார் பரமசிவனின் அவதாரம்தான் என்று ருசுச் செய்ய ஒரு ஆதாரம் பகவான் தயாராக வைத்துக் கொண்டு அவரிடம் கொடுத்தார் போலும்! எப்படியும் மேல் உலகத்திலிருந்து ஸ்ரீ சங்கரர் இவ்வுலகிற்கு இதைக் கொண்டுவரும்வரை இதற்கு இங்கே பிரசாரமில்லை யென்பது தெளிவாய்த் தெரிகிறது.

நிர்ணய ஸிந்துவில் கமலாகர பட்டர் சிவரஹஸ்ய வாக்கியங்களை உதாஹரித்திருக்கிறபடியால் இது பிராசீன கிரந்தமென்று ருசுவாவதாக ஒரு வித்வான் சொல்கிறர். அதே கிரந்தத்தில் கமலாகர பட்டர் தன் தம்யனர், தன் தகப்பனர், தன் பாட்டனர், இவர்கள் எழுதின கிரந்தங்களிலிருந்தும் உதாஹரிக்கிறரென்பதையும், ஒருவிடத்திலாவது சிவரஹஸ்யத்தைபிராசீன கிரந்தமென்று அவர் சொல்லவில்லை என்பதையும் இப் பண்டிதர் மறந்துவிடுகிறர். மேலும் கமலாகரருக்குமுன் சிவரஹஸ்யமென்று ஒரு கிரந்த மிருந்ததென்றல் அதிலிருப்பதாக இப்பொழுது சொல்லப்படுகிற வாக்கியங்களுக்கெல்லாம் பிராமாண்யமுண்டென்று எப்படி ஏற்படும்? சிவரஹஸ்யமென்று ஒரு கிரந்தம் சில நாட்களாக இருந்து வருகிறதா என்பது பிரகிருதமேயில்லை; இப்பொழுது சொல்லப்படும் வாக்கியங்கள் அதில் இருந்

தனவா? அவைகள் பிரமாணம் தானா? என்பது தான் கவனிக்கவேண்டிய விஷயம்.

மாதவீய சங்கர விஜயத்திற்கு 1824ல் அச்யுத ராயர் எழுதிய அத்வைத ராஜ்ய லக்ஷ்மீ என்ற வியாக்யானத்தில் உதாஹரித்திருப்பதால் பிராமாண்யம் என்றும் அப்பண்டிதர் சொல்கிறார். மாதவீயத்தில் ஸ்ரீ சங்கரர் கேதாரத்திலிருந்து கைலாஸம் சென்றுசென்று கண்டிருக்கிறது; மூலத்திற்கு விருத்தமாக அவர் காஞ்சியில் ஸித்தியடைந்ததாக வாக்கியங்களை மாத்திரம் கண்டுவிட்டு இரண்டையும் ஸமரஸப்படுத்தாமல் அப்படியே விட்டுவிட்டதிலிருந்து, மூலத்தை தெளிவுபடுத்துவதற்காக இவை உதாஹரிக்கப்படவில்லை, இவைகளுக்கு பிரசாரம் கொடுக்கவேண்டுமென்றுதான் அப்பிரகிருதமாய் பிரகிருத விருத்தமாய் சொல்லப்பட்டிருக்கின்றன, என்று நன்கு ஸந்தேஹிக்க இடம் கொடுக்கிறது. கும்பகோண மடம் குருரத்ன மாலிகை வியாக்யானத்தை 1720ல் எழுதின ஆத்மபோதேந்திரர் சிருங்கேரியில் ஸ்ரீ சாரதாவை பிரதிஷ்டை செய்ததாக சில சுலோகங்கள் சிவ ரஹஸ்யம் ஒரு பிரதியில் காணப்படுவதாகவும் ஆனால் அதை தான் ஒப்புக்கொள்ளவில்லையென்றும் சொல்கிறார். அதாவது அந்த சுலோகங்களை எடுத்து விடவேண்டுமாம். அவ்விதமே எடுத்துத்தான் அச்யுத ராயர் வியாக்யானத்தில் காணப்படுகிறது. இதிலிருந்தே கும்பகோண மடம் பாடத்திற்கு பிரசாரம் கொடுக்க உத்தேசித்தே பிராசீன டிண்டிம வியாக்யானத்துடன் இந்த வியாக்யானமும் பிரகரிக்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. சென்னையிலேயே வெகு காலத்திற்குமுன்

கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கும் சிவ ரஹஸ்யத்தில் கும்பகோணம் பாடத்தைவிட சுமார் 16 சுலோகங்கள் அதிகமாயிருக்கின்றன; அவைகளை சிலர்கள் விட்டு விடுவது வேறு நோக்கத்துடன் என்பதையும் அந்த பிரசுரகர்த்தா வெளியிட்டிருக்கிறார். எப்படியும் ஆத்ம போதேந்திரர் காலத்திற்கு முன்பே பாட பேதங்கள் இருந்தனவென்பது தெளிவாய்த் தெரிகிறது. சிவ ரஹஸ்யத்தின் பிராமாண்யத்தைப்பற்றி சிருங்கேரி மடம் அதிகாரிகளும் சிஷ்யர்களும் "ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்" என்பதை ஒரு பக்க பலமாக அப்பண்டிதர் சொல்கிறார். ஒரு கிரந்தம் பிரமாணமா இல்லையா என்கிற விஷயத்தில் இவ்வித வாதம் அர்த்தமற்றது. மேலும் அவர்கள் ஒப்புக்கொண்டதாக சொல்லும் சிவ ரஹஸ்ய வாக்கியங்களுக்கும் கும்பகோண மடத்தாருடைய பாடத்திற்கும் வித்யாஸமிருப்பதை அவர் மறைத்துவிடுகிறார்.

சிவரஹஸ்யம் பழைய புஸ்தகமாக இருக்கலாம், ஜனங்களுக்குள் பிரஸித்தியடைந்து பிரமாணமென்று நம்பப்பட்டும் இருக்கலாம், பின்னால் வந்தவர்களால் உதாஹரிக்கப்பட்டும் இருக்கலாம். இவைகளைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அதில் இருப்பதாக அம்மடத்தாரால் சொல்லப்படும் வாக்கியங்கள் வாஸ்தவமா? பின்னால் நடந்த விஷயங்களைப்பற்றி சொல்லும் அவ்வாக்கியங்களுக்கு ஸத்திய நிலையில் சரித்திர ரீதியில் எவ்வாறு பிராமாண்யம் கொடுக்கமுடியுமென்பதுதான் கேள்வி.

ஸ்ரீசங்கராசார்யாரைப் பற்றி சொல்லும் அத்யாயத்தில் அவருடைய ஜனனத்தைப் பற்றியும் அவர்

செய்யும் காரியங்களைப் பற்றியும் பரமசிவன் பார்வதி தேவிக்கு சொல்வதாகக் கண்டிருக்கிறது.

| | Sloka |
|---|---|
| शृणु देवि भविष्यत्सद्भक्तानां चरितं कलौ । | 3 |
| भविष्यति महादेवि शङ्कराख्यो द्विजोत्तमः । | 15 |
| उपनीतस्तदा मात्रा वेदान् साङ्गान् ग्रहिष्यति । | 16 |
| तदा मातरमामन्त्र्य परिव्राट् स भविष्यति । | 19 |
| तेषामुद्बोधनार्थाय तिष्ये भाष्यं करिष्यति । | 24 |
| अद्वैतमेव सूत्रार्थं प्रमाणेन करिष्यति । | 25 |

"ஹேதேவி, கலியுகத்தில் இருக்கப் போகும் நல்ல பக்தர்களுடைய சரித்திரத்தைக் கேள் ......சங்கரர் என்ற பெயருடன் ஒரு பிராஹ்மண சிரேஷ்டர் ஏற்படுவார் ...... அவர் தாயாரால் உபநயனம் செய்விக்கப்பட்டு ஸாங்கமாக வேதங்களைக் கற்பார் ......அப்பொழுது தாயாரிடம் அனுமதி பெற்று ஸன்யாஸியாக ஆவார்......அவர்களுக்கு நன்கு விளக்குவதற்காக கலியில் பாஷ்யம் செய்வார். ...அத்வைதம்தான் ஸூத்திரங்களின் அர்த்தமென்று பிரமாணத்துடன் செய்வார்"

இவ்விதம் சொல்லிக்கொண்டு வந்த பகவானுக்கு பின் நடக்கப் போவதை சொல்கிறோம் என்பது எப்படியோ மறந்துபோய் சென்றகாலத்தை உபயோகிக்கிறார். ஸ்ரீசங்கரர் பகவானை ஸ்துதி செய்தார். பிறகு

इति शङ्करवाक्येन विश्वेशाख्यादहं तदा ।

Sloka

प्रादुर्बभूव लिङ्गात् स्वादलिङ्गोऽपि महेश्वरि ॥ 35

तमब्रुवं महादेवि प्रणतं यतिनां वरम् । 37

स शङ्करो मां प्रणनाम मस्करी । 45

> " இவ்விதம் சங்கருடைய வாக்கியத்தைக் கேட்டு, நான் லிங்கமற்றவனுயிருந்தும் விசுவேசர் என்ற என் லிங்கத்திலிருந்து வெளிக் கிளம்பினேன் ...... என்முன் நமஸ் கரித்த ஸன்யாஸி சிரேஷ்டரிடம் சொன் னேன் ...... அந்த ஸன்யாஸியான சங்கரர் என்னை நமஸ்கரித்தார் "

स काञ्च्यामथ सिद्धिमाप ।

"அவர் பிறகு காஞ்சியில் ஸித்தியை அடைந்தார்" என்ற வாக்கியத்திற்கு ततो लोकमवाप शैवम्, ततो नैजमवाप लोकम्, स काञ्च्यामथ सिद्धिमवाप शैवम्, என்றெல்லாம் பாட பேதமிருந்தாலும் எல்லாவற்றிலுமே சென்ற காலமே உபயோகித்திருக்கிறது. அத்யாய ஆரம்பத்தில் வரும் காலமும் பின்னல் சென்ற காலமும் உபயோகித்திருப் பதிலிருந்தே இதன் கல்பிதத் தன்மை தெரிவதுடன் இவ்வாக்கியங்களை எழுதினவர்கள் மனஸில் சென்ற கால ஸம்பவங்களையே சொல்வதான எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது நன்கு தெரிகிறது.

"ஆர்ஷம்" என்ற முறையில் சென்ற காலப் பிரயோகம் நியாயம் தானென்று ஸமாதானம் சொல்கிருர்கள். புராணங்களில் வியாகரண விருத்தமாக ஏதேனும் வார்த்தைகளோ காலப்பிரயோகங்களோ காணப்பட்டால், அவைகளை எழுதின ரிஷிகளும் பாணினிக்கு ஸமானமான அந்தஸ்து உடையவர்களாதலால் பாணினியின் நியமங்களுக்கு கட்டுப்படவேண்டியதில்லையென்ற நியாயத்தை வைத்து "ஆர்ஷம்" என்று சொல்வதுண்டு. தன் கிரந்தம் ரிஷிகளால் சொல்லப்பட்டதென்று நினைக்கட்டுமென்ற எண்ணத்திலும் வேண்டுமென்றே அபசப்தம் பிரயோகிப்பதும் ஸம்பவம்தானே. சிவரஹஸ்ய வாக்கியம் இசைத்தவரை அவ்விதம் பாவிக்க வேண்டாமென்றே அவரை தன் மறதியினுல் மறந்து சென்றகாலம் உபயோகித்திருக்கிருரென்று கௌரவப்படுத்திச் சொன்னேமே.

வரும் காலத்தைக் குறிக்க சென்ற காலத்தை உபயோகிக்கலாமென்பதற்கு ஆதாரமாக முன்சொன்ன பண்டிதர் சிரமப்பட்டு ராமாயணம் பாலகாண்டம் 9-வது ஸர்க்கத்தைத் தேடி எடுத்து உதாஹரிக்கிருர். நன்கு கவனிக்கையில் அதனுல் அவருக்கு எவ்வித அனுகூலமும் கிடையாது. வெகுநாட்களுக்கு முன் ஸநத்குமாரர் ரிஷிகளுக்குச் சொல்லிக்கொண்டிருந்ததாக ஸுமந்திரர் தசரதருக்குச் சொல்லும் ஸந்தர்ப்பம். ஸநத்குமாரருடைய வாக்கியத்தை அப்படியே சொல்லும் போது வரும்காலம் உபயோகிக்கிருர்.

| | Sloka |
|---|---|
| ऋश्यशृङ्ग इति ख्यातस्तस्य पुत्रो भविष्यति । | 4 |
| वक्ष्यन्ति ते महीपालं ब्राह्मणा वेदपारगाः । | 12 |

पुरोहितममात्यांश्च प्रेषयिष्यति सत्कृतान् । 15
वक्ष्यन्ति चिन्तयित्वा ते तस्योपायांश्च तान् क्षमान् । 17

"ரிஷ்யசிருங்கரென்ற கியாதியுடன் ஒரு புத்திரன் அவருக்கு பிறப்பார் ... ... வேதவித்துக்களான பிராஹ்மணர்கள் அந்த அரசனிடம் சொல்வார்கள் ... ... புரோஹிதரையும் மந்திரிகளேயும் மரியாதை செய்து அனுப்புவார் ... ... அவர்கள் அதற்கு தகுந்த உபாயங்களை ஆலோசித்துச் சொல்வார்கள்"

ஸநத்குமாரருடைய வாக்கியத்தை முடித்து ஸுமந்திரர் தன் வாக்கியமாகவே சொல்லும் போது சென்ற காலத்தை உபயோகிக்கிறுர்

एवमङ्गाधिपेनैव गणिकाभी ऋषेः सुतः ।
Sloka
आनीतो ऽवर्षयद्देवः शान्ता चास्मै प्रदीयते ॥ 18

"இவ்விதமாக கணிகைகளேக் கொண்டு அங்கராஜனல் அந்த ரிஷிபுத்திரர் அழைத்துவரப்பட்டார். இந்திரனும் மழை பெய்தார். அவருக்கு சாந்தையும் கொடுக்கப்படுகிறுள்"

இது ஸுமந்திர வாக்கியம் தானென்பது அடுத்த வாக்கியத்திலிருந்தும் ஸ்பஷ்டமாக தெரிகிறது.

Sloka
ऋश्यशृङ्गस्तु जामाता पुत्रांस्तव विधास्यति। 18

"இந்த மாப்பிள்ளை ரிஷ்யசிருங்கர் தங்களுக்கு புத்திரர்களைக் கொடுப்பார்"

இது தசரதரைப் பார்த்து சொன்ன வாக்கியமென்பதில் ஸந்தேஹிக்க இடமில்லை. ஸம்பவத்திற்கு வெகு நாள் முன்பாக ஸநத்குமாரர் சொன்னதாகச் சொல்லும்போது வரும் காலத்தையும், ஸம்பவத்திற்குப் பின் ஸுமந்திரர் தன் வாக்கியமாக சொல்லும்போது சென்ற காலத்தை யும் உபயோகிப்பது மிகவும் நியாயமே. ஆகையால் காலத்தில் ஏற்பட்ட தடுமாற்றத்திற்கு ராமாயணத்தில் பிரமாணமிருப்பதாகச் சொல்வது வீண் வாதமேயாகும்.

இந்த சிவரஹஸ்ய வாக்கியங்கள் எல்லாம் பரமே சுவரர் பார்வதீ தேவிக்கு சொல்வதாக காணப்படு கின்றன. அவர் காசியில் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு சங்கரரிடம் ஸம்பாஷணை செய்யும்போது அந்ததேவியும் கூடவே வெளியில் வந்ததாக வர்ணிக்கப்படுகிறது.

वरकाकोदराधीशराजद्धारस्त्वया सह ।
तमद्रुवं महादेवि प्रणतं यतिनां वरम् ॥ Sloka 37

"உத்தமமான ஸர்ப்ப ராஜனை ஹாரமாக உடைய நான் உன்னுடன் சேர்ந்து, நமஸ் கரித்த அந்த யதிசிரேஷ்டரிடம் சொன்னேன்"

இந்த ஸம்பவம் நடக்கும்போது தேவியே கூட விருந்திருக்கையில் அவளிடம் இவ்விதம் நடந்ததாக பகவான் ஏன் மறுபடியும் அவளுக்குச் சொல்லவேண்டு

மென்று தெரியவில்லை. இந்த ஸம்பவத்தை தேவி மாத்திரம் பார்த்துக்கொண்டிருக்கவில்லை; சங்கரருடைய நான்கு சிஷ்யர்களும் அப்பொழுது அங்கே அவருடனேயே இருந்திருக்கிறார்கள்.

शिष्यैश्चतुर्भिश्च युतं भस्मरुद्राक्षभूषणम् ॥ Sloka 38

"விபூதி ருத்ராக்ஷங்களால் அலங்கரிக்கப்பட்டு நான்கு சிஷ்யர்களோடும் கூடின அவரை"

இது முதலான வாக்கியங்களைப்பற்றி பின்னாலும் பிரஸ்தாபிக்கும்படி ஏற்படும். இவ்விடத்தில் இவைகளின் பிராமாண்யத்தைப்பற்றியோ அவைகளுக்கு சரித்திர ரீதியாகக் கொடுக்க வேண்டிய மதிப்பைப் பற்றியோ அதிகம் சொல்ல அவசியமில்லை.

கும்பகோண மடத்தார் சொல்லும் மற்றொரு புராணத் தன்மையுள்ள பிராசீன ஆதாரம் "மார்க்கண்டேய ஸம்ஹிதை" என்பது. இதை புராணம் என்கிறார்களா, இதுவும் ஓர் இதிஹாஸம் என்கிறார்களா, என்று தெரியவில்லை. பிரஸித்தமான 18 புராணங்களிலும் 18 உப புராணங்களிலும் சேரவில்லை என்பது நிச்சயம். இந்த "ஸம்ஹிதையில்" 100 கண்டங்கள் இருக்கின்றனவாம், இவர்கள் சொல்லும் "பிரமாண" வாக்கியங்கள் 72-வது கண்டம் 7-வது 8-வது பரிஸ்கந்தங்களில் இருக்கின்றனவாம். அம்மடத்து ஸ்வாமிகள் பிருஹ்மாண்ட புராணம் 3வது பரிஸ்கந்தத்தில் இருப்பதாக சொல்லிக் கொண்டிருக்கிறார். அதற்கும் பிரமாணம் தெரியவில்லை. பூராப் புஸ்தகமே மனக் கல்பிதமாயிருக்கையில் அதில்

துல்யமாய் கண்டம், பரிஸ்கந்தம், சுலோகம் எல்லாவற்றிற்கும் லக்கம் கொடுப்பதில் என்ன சிரமம்? இவ்வாக்கியங்களை மேலாக வாசித்தாலே இவைகள் வேண்டுமென்று ஒரு கக்ஷிக்காக உண்டுபண்ணப்பட்டவை என்றும் எவ்விதத்திலும் பிராசீன கிரந்தமாகாதென்றும் நன்கு துலங்கும். அவைகளின் பாஷை, விருத்தம், விஷயம் யாவும் அதன் கல்பிதத் தன்மையைக் காட்டுமென்றே அம்மடத்தார் பூரா வாக்கியங்களையும் இப்பொழுது வெளியிடுவதில்லை. "காஞ்சி பீட" அதிபதிகளை ஆராதிக்காதவர்களுக்கு ஏற்படும் கெடுதலைப்பற்றியும், ஆராதிப்பவர்களுக்கு ஏற்படும் ஸர்வ ஸௌக்கியங்களைப்பற்றியும் சொல்லும் இரண்டு சுலோகங்களை மாத்திரம் இங்கு உதாஹரிக்கிறோம்.

श्रीकांचीकामकोटीनिलयशशिकलोत्तंसपूजाधुरीणं
पारीणं श्रीकलायाः परमगुरुपदाधीश्वरं-योगिराजम् ।
ये वा नार्चन्ति भूमौ शुभतरपरमाद्वैतसिद्धान्तमार्गो-
द्योतं श्रीराज्यसिंहासनपदद्महो पामरास्ते पतन्ति ॥
कांचीपीठाधिपं ये यतिपतिमखिलाचार्यमाखण्डलश्री-
संपन्नं पन्नगारिध्वजविधिहरिभिर्भाव्यमानं शरण्यम् ।
ते सातत्यं रमन्ते कलशजलधिजायुरारोग्ययुक्ताः
स्थानेष्वानन्दभूमस्वनवरतशुभैश्वर्यभाजो महीपाः ॥

இவைகளிலிருந்து அந்த மடத்து அதிபதிகள் இப்பூலோகத்திலுள்ள மனுஷ்யர்களுக்கு மாத்திரம் ஆரா

திக்கத் தகுந்தவரென்பதில்லை, விஷ்ணு, பிரஹ்மா, இந்திரன் கூட அவர்களை உபாஸிக்க வேண்டுமென்று தெரிகிறது! பரமசிவனுடைய அவதாரமாயிருக்கும் ஸ்ரீ சங்கரருக்கு மாத்திரம் இந்த மஹிமை என்பது கிடையாது! அப்பீடத்தில் அமரும் எந்த யதிக்கும் ஏற்பட்டதாம். இவ்விதம் சொல்வது அபசாரமென்பதைக் கூட உணராமல் இவ்விதம் கல்பித்திருப்பது ஆச்சர்யமே.



## ஸமகால ஆதாரங்கள்.

முன்சொன்ன "பிராசீன" ஆதாரங்களைத் தவிர ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசார்யாரின் ஸமகாலத்திலேயே ஏற்பட்டதாக மூன்று ஆதாரங்கள் இருப்பதாகச் சொல்லப் படுகிறது.

(1) அவைகளில் முதலாவதாக ஸ்ரீசங்கராசார்யரே எழுதினதாகச் சொல்லப்படும் "மடாம்நாயஸேது". இது அந்த மஹான் செய்திருக்க முடியாதென்பதற்கு

कृते विश्वगुरुर्ब्रह्मा त्रेतायामृषिसत्तमः ।
द्वापरे व्यास एव स्यात् कलावत्र भवाम्यहम् ॥

"க்ருதயுகத்தில் ஜகத்குரு பிரஹ்மா; திரேதா யுகத்தில் ரிஷிசிரேஷ்டர் (தத்தாத்ரேயர்?); த்வாபரயுகத்தில் வியாஸர்; இந்த யுகத்தில் நான் ஜகத்குரு" என்ற பெருமை கொண்டாடும் வாக்கியமே போதும். தவிரவும் நம் தேசத்தில் பிரசாரத்திலிருக்கும் மடாம்நாயங்களிலிருந்து இந்த மடாம்நாயஸேது மிகவும் வித்தியாஸப் பட்டது, அதன் வாசகத்திலிருந்தே நான்கு பிரஸித்த மடங்களுக்குமேல் கும்பகோண மடத்திற்கு ஒரு ஸ்தானம் கல்பிப்பதற்காகவே ஏற்பட்டதென்று வியக்தமாய் தெரியும். ஆசார்யாரால் ஸ்தாபிக்கப்பட்ட மடம் என்ருவது அதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் அதன் அந்தஸ்தை வெகு உயர்த்தப் பார்த்திருக்கிறது. ஆனல் அதின் கல்பிதத் தன்மை

நன்கு விளங்கினபடியால் அதை யாரும் மதிக்கவில்லை. ஆனால் இப்பொழுதுள்ள ஆசார்யர் அதையும் பிரமாண மாக்கி தன் வருதிக்குள்ள ஜனங்களின் ஆதரவைத் தேடுகிறார். அதில் கொண்டாடப்படும் பாத்தியங்கள் அஸ்திவாரமற்றவை யென்பதை எடுத்துக் காட்ட அவசியமே யில்லை. இது விஷயமாகவும் பின்னால் பிரஸ்தாவிக்க நேரிடும்.

(2) சித்ஸுகர் என்பவர் ஸ்ரீமத் ஆசார்யரின் ஜீவிய சரித்திரத்தைக் குறித்து "பிருஹத் சங்கரவிஜயம்" என்று ஒரு கிரந்தம் எழுதியிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இவர் அத்வைத கிரந்தங்கள் எழுதின பிரஸித்தரான சித்ஸுகாசார்யர் அல்ல. இந்த சித்ஸுகருக்கு ஸர்வக்ஞர் என்ற அடைமொழி உண்டாம். இவர் ஆசார்யர் ஜனித்த கிராமத்திலேயே பிறந்து அவருடைய ஆயுள் பூராவும் அவருடனேயே இருந்து வந்தவராம். ஆகையால் ஆசார்யருடைய சரித்திரத்தை எடுத்துச் சொல்ல இவரே நன்கு தகுதியுள்ளவராம்.

கும்பகோணமடம் முக்கிய ஆதாரமான குருரத்ன மாலிகையின் வியாக்யாதா இந்த சித்ஸுகரைப்பற்றி

अनुक्षणं उपचरिताचार्यचरणाः सर्ववृत्तान्तसाक्षिणः
सहजवत् एकाग्रहारोत्पन्ना आजीवं अविरहजुषः श्रीसर्वज्ञ-
चित्सुखाचार्याः स्वकृतौ बृहच्छंकरविजये ... ...

"ஒரே அக்ரஹாரத்தில் பிறந்து ஜீவ்ய காலம் முழுவதும் விட்டுப் பிரியாமல் பிரதிக்ஷணம் ஆசார்ய சரண ஸேவை செய்துகொண்டு உடன் பிறந்தாரைப்போல்

எல்லா விருத்தாந்தங்களையும் கூடவேயிருந்து பார்த்து வந்த ஸ்ரீ ஸர்வக்ஞசித்ஸுகாசார்யர் தன் கிரந்தமான பிருஹத் சங்கர விஜயத்தில் ........'' என்று வர்ணிப்பதுடன் அக்கிரந்தத்தில் காணப்படுவதாக அநேக வாக்கியங்கள் உதாஹரிக்கிருர். இவ்வளவு முக்கியமான ஆதாரம் அந்த வியாக்யாதாவிற்கு கிடைத்திருந்தும் அதை அம்மடத்தார் ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளாதது வருந்தத் தக்கது. தவிரவும், இவ்வளவு நெருங்கிப்பழகி ஆசார்யரைவிட்டு ஒரு க்ஷணம் கூடப் பிரியாமலிருந்த இந்த ஆப்த சிஷ்யரைப்பற்றி ஒரு சங்கர விஜயத்திலும் பிரஸ்தாவிக்காததும் வியஸனிக்கத் தக்கது. ஸ்ரீமத் ஆசார்யர் ஸர்வ ஸங்க பரித்யாகம் செய்து ஸந்யாஸம் பெற்றும் இந்த ஆப்த ஸ்நேஹிதரை மாத்திரம் விடவில்லையென்று தோன்றுகிறது. நதியில் முதலையால் பிடிபட்டு பிராணனுக்கே ஆபத்து ஏற்படும் நிலையில் தாயாரிடம் ஸந்யாஸத்திற்கு அனுமதி கேட்கும் ஸமயத்திலும் இந்த ஆப்தர் வேடிக்கையாய் பார்த்துக்கொண்டிருந்தார்போலும். காசி விசுவேசுவரர் ஸர்வக்ஞரென்பதில் ஸந்தேஹமில்லை. அவரும் கூட லிங்கத்திலிருந்து ஆவிர்பாவமடையும்போது இந்த இணைபிரியாத நண்பரை கவனித்ததாகத் தெரியவில்லை. அவர் இவரைப்பற்றி பிரஸ்தாவமே இல்லாமல் நான்கு சிஷ்யர்களையே பார்த்ததாக சிவரஹஸ்யம் கூறுகிறது.

சிவகுரு தன் குமாரருக்குத் தானே உபநயனம் செய்து வைத்து வேதாத்யயனம் செய்து வைத்ததாக இவர் சொல்லுகிருரென்று ஆத்மபோதேந்திரர் சொல்கிருர்.

शिवगुरूपनीय शंकरार्यं
निगममशेषमथाध्यजीगपत् तम् ।

இது மாதவீய சங்கர விஜயத்திற்கு விரோதமென்பதுடன் அந்த மடம் பிரமாணமாய் சொல்கிற சிவரஹஸ்யம், "வியாஸாசலீயம்", கேரள சங்கர விஜயம், ஆனந்த கிரீயம் முதலிய கிரந்தங்களுக்கும் விரோதம். கும்பகோணம் மடம் மௌளாம்நாயம் என்பதற்கும் காஞ்சியில் ஸர்வக்ஞ பீடம் உண்டென்பதற்கும் ஸர்வக்ஞாத்மரை அம்மடத்திற்கு ஏற்படுத்தினதற்கும் இக்கிரந்தம் ஒரு ஆதாரம். இவை விஷயமாய் பின்பு கவனிப்போம்.

(3) ஆனந்தகிரி அல்லது அனந்தானந்தகிரி என்பவரும் ஒரு சங்கர விஜயம் எழுதினவராம். இவரும் ஸர்வக்ஞராம். இவரும் ஸ்ரீமத் ஆசார்யரின் ஸாக்ஷாத் சிஷ்யராம்.

नमामि शंकराचार्यगुरुपादसरोरुहम् ।
यस्य प्रसादान्मूढोऽपि सर्वज्ञोऽहं सदाऽस्म्यहम् ॥
अनन्तानन्दगिरिः अहं अप्रतिहतज्ञस्य भगवतः
शिष्यः गुरोः अवतारप्रयोजनं वर्णयामि ।

"சங்கராசார்ய பாத கமலத்தை நமஸ்கரிக்கிறேன். அதன் பிரஸாதத்தினால்தான் மூடனான நான் கூட ஸர்வக்ஞனாக எப்பொழுதும் இருந்துவருகிறேன்.

அனந்தாநந்தகிரியாகிய நான் எவருடைய ஆக்ஞைக்குத் தடையே கிடையாதோ அந்த பகவானுடைய சிஷ்யன்; என் குருவினுடைய அவதார பிரயோஜனத்தை வர்ணிக்கிறேன்."

"ஸ்ரீ சங்கராசார்யரும் அவருடைய காமகோடிபீடமும்" என்ற புஸ்தகம் எழுதியிருக்கும் N. K. வெங்கடேசம் பந்துலு தோடகாசார்யர்தான் இந்த ஆனந்தகிரியென்றும், இதுவே மிக பிராசீன கிரந்தமென்றும், ஆனால் பிரசுரிக்கப் படாமலிருக்கிறதென்றும் சொல்லுகிறார். வெகுநாள் முன்னமேயே கல்கத்தாவில் அச்சாகியிருக்கிற விஷயம் அவருக்குத் தெரியவில்லை போலும். "ஸ்ரீ சங்கராசார்யரும் அவருடைய காஞ்சீ பரம்பரையும்" என்ற புஸ்தகத்தில் N. வெங்கட்டராமன் இக்கிரந்தம் "மதிப்பற்றது. வ்யக்தமாய் கல்பிதம்" என்று எழுதியிருக்கிறார்.

இந்த ஸர்வக்ஞரான ஆனந்தகிரியின் பிரகாரம் ஸ்ரீ சங்கரர் பிறந்தது சிதம்பரத்தில். விசுவஜித் என்ற ஒருவரின் பார்யை விசிஷ்டா என்பவளுக்கு பிறந்தவர். இது எல்லா சங்கர விஜயங்களுக்கும் விருத்தமாயிருப்பதுடன் சிவரஹஸ்யத்திற்கும் மார்க்கண்டேய ஸம்ஹிதைக்குமே விருத்தம். இது வெறும் அபத்தமென்று நன்கு தெரிந்தும் அதில் ஆசார்யர் காஞ்சியில் சரீரத்யாகம் செய்ததாகக் கண்டிருப்பதால் அதை விட்டு விட அம்மடத்தாருக்கு இஷ்டமில்லையாகையால் சில சில முக்ய அம்சங்களில் திருத்தியும் சேர்த்தும் "பரிஷ்காரம்" செய்தும் தெலுங்கு லிபியில் ஒரு புஸ்தகம் அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டு பதிப்புகளிலுமுள்ள

பாஷா சைலியும் விஷயங்களும் அது யாரோ ஸாமர்த்தியமில்லாதவரால் பின்னுல் கல்பிக்கப்பட்டதென்பதை வ்யக்தப்படுத்துகின்றன. அதினுலேயே அதன் ப்ராமாண்யத்தை வற்புறுத்தாமல் கொஞ்ச காலம் இருந்தார்கள். இப்பால் சிலகாலமாக இன்னம் வேறு திருத்தங்களைச் செய்துகொண்டு அதையும் பிரமாணம் போல் காட்டமுன் வருகிருர்கள்.

இந்த ஆனந்தகிரியின் ப்ராமாண்யத்தைப் பற்றிச் சொல்லும் போது N. ரமேசன் என்பவர் பக்கபலமாக H. H. வில்ஸன் என்ற மேற்கத்திய விமர்சகரின் வாக்கியத்தைக் குறிப்பிடுகிருர்.

"It bears internal evidence of being the composition of a period not far removed from that at which he *(Sankara)* may be supposed to have flourished and we may therefore follow it as a very safe guide.'

"அவர் (சங்கரர்) ஜீவித்திருந்ததாக நினைக்கக்கூடிய காலத்திற்கு வெகுதூரம் தள்ளிப்போகாத ஸமயத்தில் இது ஏற்பட்டதாக கிரந்தத்தின் மூலமாகத் தெரிகிறது. ஆகையால் இதை நல்ல வழிகாட்டியாக நாம் எடுத்துக் கொள்ளலாம்."

"அவர்" என்பது சங்கரரைக் குறிப்பதாக ரமேசன் சொல்வதற்கு மூலத்தில் ஆதாரமில்லை. அதில் "அவர்" என்பது ஆனந்தகிரியைத் தான் குறிப்பது நியாயமாகும். ஸ்ரீ சங்கரர் 509 B.C யில் பிறந்ததாக கும்பகோணம் மடத்தார் சொல்லுவது சரியல்ல வென்றும் அவர் பிறந்தது கிறுஸ்துவுக்கு முந்தின முதல்

நூற்றுண்டு, அல்லது பிந்தின முதல் நூற்றுண்டில் இருக்க வேண்டுமென்றும் ரமேசன் சொல்லுகிறர். ஆனந்தகிரி தன்னுடைய கிரந்தத்தில் பன்னிரண்டாவது நூற்றுண்டில் இருந்த வைஷ்ணவ ஆசார்யரான ஸ்ரீ ராமனுஜரைப்பற்றியும், அதற்குப்பின்னல் வந்த ஸ்ரீ மத்வாசார்யரைப் பற்றியும் பிரஸ்தாவிக்கிறர். மேலும் பதினன்காவது நூற்றுண்டிலிருந்த ஸ்ரீ பாரதீ கிருஷ்ண தீர்த்தருடைய வையாஸிக நியாய மாலா என்கிற கிரந்தத்திலிருந்து சுலோகங்களையும் உதாஹரிக்கிறர். ஆகையால் இவரை ஸ்ரீ சங்கரர் காலத்திற்கு வெகு நாள் தள்ளிப்போகாதவர் என்று சொல்வதற்கு இடமேயில்லை. ஸ்ரீ ரமேசன் ஆனந்தகிரியின் கிரந்தத்தை வாசித்திருந்தாலும், மேலேகண்ட விஷயங்களை அவருக்கு யாரேனும் எடுத்துச் சொல்லி இருந்தாலும், வில்ஸனுடைய வாக்கியத்திலுள்ள "அவர்" என்பது சங்கரரைக் குறிக்கிறது என்று சொல்லி இருக்கமாட்டார் என்பது நிச்சயம். வில்ஸன் புஸ்தகத்திலிருப்பதாக யாரோ ஒருவர் சொன்னதை ரமேசன் சரிபார்க்கவில்லை யென்றும் தெரிகிறது. அந்த விமர்சகர் வாஸ்தவத்தில் சொல்லியிருப்பதாவது:—

"Some of the marvels it records of Sankara which the author professes to have seen may be thought to affect its credibility if not its authenticity and *either Anandagiri must be an unblushing liar or the book is not his own.* It is however of little consequence, as, even if the work be not of Anandagiri himself, it bears internal and indisputable evidence of being the composition of a period not far removed

from that at which he may be supposed to have flourished and we may therefore follow it as a very safe guide *in our enquiries into the actual state of the Hindu religion about eight or nine centuries ago.*"

இதிலிருந்து வில்ஸன் ஆனந்தகிரிக்கு கொஞ்சமேனும் சரித்திர விஷயமான பிராமாண்யம் கொடுக்கவில்லையென்றும், அதில் கண்ட ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்கு மாத்திரம் அதை உபயோகித்துக்கொள்ளக் கருதினுரென்றும் நன்ருகத் தெரிகிறது. இதின் முன்னுள்ள வாசகங்களையும் பின்னுள்ள வாசகங்களையும் கத்தரித்துவிட்டு மத்தியிலுள்ளதைமாத்திரம் பிரமாணம் போல் காட்டுவது எவ்விதத்திலும் ஒழுங்கில்லை.

தவிரவும் இந்த கத்தரித்த வாக்யத்தை பிரமாணமென்று வைத்துக்கொண்டு ஆனந்தகிரிக்கு பிராமாண்யம் கொடுத்து, காஞ்சிதான் ஆசார்யரின் ஸித்திஸ்தலமென்று இரண்டு நவீன விமர்சகர்கள் முடிவுசெய்வதாக அப்புஸ்தகத்தின் அனுபந்தத்தில் கண்டிருப்பதும் நியாயமில்லை. இவர்களும் மூலக் கிரந்தத்தை எடுத்துப் பார்க்கவில்லையென்று நன்கு தெரிகிறது. வில்ஸன் எவ்வித ஸந்தேஹத்திற்கும் இடமன்னியில் ஸ்ரீ சங்கரர் ஹிமாலயத்தில் கேதாரத்தில் மறைந்தார் என்று வியக்தமாய் சொல்லி இருக்கையில் இவர்களுடைய ஊஹத்திற்கு அவசியமேது ? இப்புஸ்தகத்திலும் அனுபந்தத்திலும் கண்ட விஷயங்கள் யாவும் கும்பகோணம் மடத்தார் சொல்லி வருவதையே அனுஸரிப்பதால் இவைகளுக்குத் தனித்து மறுப்பு எழுதவேண்டிய அவசியமில்லை.

தஞ்சாவூர் ஜில்லா ஜட்ஜாயிருந்த பிரஸித்தரான ஸம்ஸ்கிருத வித்வான் டாக்டர்பர்னல் என்பவர் பிராசீன கிரந்தங்களின் அட்டவணை எழுதியதில் இந்த ஆனந்த கிரி சங்கர விஜயத்தைப்பற்றி

"This seems to be quite a modern work written in the interests of the schismatic mathas on the Coromandal coast which have renounced obedience to the Sringeri matha where Sankaracharíar's legitimate successor resides"

"சங்கராசார்யாருடைய நியாயமான சிஷ்ய பரம் பரை இருந்துவரும் ஸ்ரீங்கேரி மடத்திற்கு உள்பட் டிருந்ததை மீறிக்கொண்டு சோழ மண்டலக் கரையில் தோன்றியிருக்கும் பிளவுபட்ட மடங்களின் அக்கரையை உத்தேசித்து வெகு ஸமீபத்தில் எழுதின கிரந்தமாக இது தோன்றுகிறது" என்று சொல்லுகிறார். இவர் இவ்விதம் எழுதியதற்கு யாரோ இவரை ஏமாற்றி இருக்க வேண்டும் என்றுதான் ஸமாதானம் சொல் கிறார்கள்.

இந்த சங்கர விஜயம்தான் பிராசீன சங்கர விஜயம் என்றும் பிருஹத் சங்கர விஜயம் என்றும் இதிலிருந்து தான் மாதவர் ஸங்கிரஹம் செய்தார் என்றும் இப்பால் சொல்கிறார்கள். அவ்விதம் சொல்லும் பண்டிதர், இதற்கு முன்னால் அம்மடத்தாரால் "பிருஹத் சங்கர விஜயம்" சித்ஸுகராலும், "பிராசீன சங்கர விஜயம்" மூகசங்கரேந்திரராலும் செய்யப்பட்ட கிரந்தங்களென்று சொல்லியிருப்பதை மறந்துவிட்டார் போலும். அந்த

கிரந்தங்களுக்கு ஏற்பட்ட பெயர்களை இப்பொழுது ஆனந்தகிரியின் புஸ்தகத்திற்கு மாற்றுவது முறையாகாது. மேலும் மாதவீயத்தில் முதல் சுலோகமான

प्रणम्य परमात्मानं श्रीविद्यातीर्थरूपिणम् ।
प्राचीनशंकरजये सारः संगृह्यते स्फुटम् ॥

"ஸ்ரீவித்யாதீர்த்த ரூபியான பரமாத்மாவை நமஸ்கரித்து பிராசீன சங்கர விஜயத்திலிருந்து தெளிவாக ஸாரத்தை ஸங்கிரஹிக்கிறேன்" என்பது யாரோ பின்னால் சேர்த்திருக்கிறார்களென்று சொல்லும் வாயினாலேயே அப்பண்டிதர், இந்த சுலோகத்திலிருந்து பிராசீன சங்கர விஜயம் என்று ஒன்று உண்டென்றும் அதுதான் ஆனந்தகிரி என்றும் முடிவுக்கு வருகிறார். ஆனந்தகிரியைப்பற்றி மாதவர் பிரஸ்தாவிக்கவேயில்லை. அதன் வியாக்யானங்களில் ஆனந்தகிரியைப் பற்றி பிரஸ்தாவமிருந்தால், வியாக்யானம் ஏற்பட்டகாலத்தில் ஆனந்தகிரி கொஞ்சம் பிரஸித்திஅடைந்திருப்பதாக மாத்திரம் ஏற்படும்.

இதினால் கும்பகோணம் மடத்தார் சொல்லும் வாக்கியங்களுக்கெல்லாம் பிரமாண்யம் ஏற்பட்டு விடாது.

ஆத்மபோதேந்திரர் ஆனந்தகிரி என்ற பெயரைக் குறிக்காமல் போனாலும் ஆசார்ய விஜயம் என்று சொல்லி 23வது பக்கத்தில் तथा चोक्तं आचार्यविजये-श्रुत्याचारं परित्यज्य .... ... ....इत्यादि .... ... ....என்றும், 25ம் பக்கத்தில் आचार्यविजये च-तृतीये वर्षे चौलकर्म पञ्चमे मौञ्जीबन्धं विध्युक्तितः चक्रुः विप्रौघाः என்றும் உதாஹரிக்கிறார். இவ்வாக்யங்கள்

ஆனந்த கிரியில் காணப்படுகின்றன. இதிலிருந்து ஆசார்ய விஜயமென்று ஆத்மபோதேந்திரர் சொல்லும்போது ஆனந்தகிரியின் கிரந்தத்தைத்தான் குறிப்பிடுகிறார் என்பது வ்யக்தமாகத் தெரிகிறது. ஆனந்தகிரியின்படி ஸ்ரீசங்கரர் சிதம்பரத்தில் பிறந்ததாகச்சொல்வது மற்ற எல்லா ஆதாரங்களுக்கும் ஸ்திரமான ஸம்பிரதாயத்திற்கும் வேறுபட்டிருப்பதால் ஸ்ரீசங்கரர் பிறந்தது காலடியில் தான் என்றும், அவர் தகப்பனார் சிவகுருதான் என்றும், கண்டு ஒரு பாடம் இப்பொழுது வெளி வருகிறது. ஆனால் ஆத்மபோதர் எழுதும்போது இப்பாடம் கிடையாது என்பதும் துலங்குகிறது. ஆத்மபோதேந்திரர் ஸ்ரீசங்கரருக்கு உபநயனமான பிறகு தான் சிவகுரு இறந்தாரென்றும் இதற்கு விரோதமாக ஆசார்ய விஜயம் சொல்லுவது பிசகு என்றும் சொல்லுகிறார். ஆசார்ய விஜயத்திலிருந்து तृतीये वर्षे चौल-कर्म पञ्चमे मौञ्जीबन्धं विप्युक्ति: चक्रु: विप्रौघा: என்ற வாக்கியத்தையே குறிப்பிடுகிறார். இவ்வாக்கியத்தில் பிராஹ்மணர்கள் உபநயனத்தைச் செய்துவைத்தார்கள் என்று மாத்திரம் கூறுகிறதே தவிர, அக் காலத்தில் சிவகுரு இறந்து விட்டார் என்பது வ்யக்தமாக காணப்படவில்லை.

அப்படியிருந்தும் இவ்வாக்கியத்திலிருந்து சிவகுரு இறந்துவிட்டாரென்று ஊஹித்துக் கொண்டு அவ்வாக்கியத்தைக் குறிப்பிட்டு ஆத்மபோதேந்திரர் எழுதியிருக்கிறார். புதுப்பாடத்தில் உபநயனம் ஆவதற்குமுன் சிவகுரு காலமாகிவிட்டாரென்றும், அதன் பிறகே தாயார் உபநயனத்தைச் செய்து வைத்தாளென்றும் வ்யக்தமான வாக்யங்களே இருக்கின்றன.

उपनीतिमकृत्वैव ममार महितः पिता ।
तस्योर्ध्वदेहिकं साध्वी चकार ज्ञातिभिः समम् ॥
अथोपनययामास माता तनयमात्मनः ।


இவைகள் ஆத்மபோதேந்திரர் காலத்தில் இருந்திருந்தால் அவைகளை உதாஹரிக்காமல் தெளிவில்லாத வேறு வாக்கியங்களை உதாஹரிக்கிறதற்குக் காரணமென்ன? இதிலிருந்தே முன் இருந்த ஆனந்தகிரி பாடத்தை திருத்தியே புதுப்பாடம் ஏற்பட்டிருக்கிறது என்பது வ்யக்தமாகிறது. தவிரவும் இப்பொழுது சொல்வதுபோல் எல்லா கிரந்தங்களுக்கும் மூலமான பிரமாணம் ஆனந்தகிரி யென்ருல் அதை பிசகு என்று ஆத்மபோதேந்திரர் அவ்வளவு ஸுலபமாகத் தள்ளிவிட முடியுமா?

காசியிலுள்ள தாரக மடத்தில் இருப்பதாகச் சொல்லும் இப்புது ஆனந்தகிரி பாடத்திற்கு ஒரு பிரதி ஒரு நண்பரின் மூலமாகக் கிடைத்திருக்கிறது. இந்த பாடமுள்ள கிரந்தம் எப்படி, எப்பொழுது அந்த மடத்தின் கோசத்தில் போய் சேர்ந்தது என்பதைப் பற்றியாவது, ஸ்ரீ கும்பகோணம் ஆசார்யர் காசிக்குப் போனபிற்பாடு அது எப்படி கண்டுபிடிக்கப்பட்டது என்பதைப் பற்றியாவது, விசாரிக்க அவசியமில்லை. அக்கிரந்தத்திலிருந்தே அது பின்னுல் ஏற்பட்ட கல்பித கிரந்தம் என்பது நன்கு தெரிகிறது. முன்னிருந்த ஆனந்தகிரியை விட இது சிலாக்கியமாக இல்லாததுடன் அதிலுள்ள அபத்தங்களை வற்புறுத்தியும் சில புது அபத்தங்களைச் சேர்த்தும் இருப்பதாகத் தெரிகிறது. "பிராசீன" மாகவும்

"வாஸ்தவ"மாகவும் இருந்ததாகச் சொல்லும் இந்தப் பாடத்தில் அதற்கு முன்னுள்ள பாடங்கள் மறைவு படாமல் நன்கு தென்படுகின்றன.

தவிரவும் 18வது நூற்றாண்டின் கடைசியில் மாதவீய சங்கர விஜயத்திற்கு டிண்டிமம் என்ற வ்யாக்யானம் எழுதினவர் புதுப்பாடத்தை உதாஹரிக்காமல் பழைய பாடத்தையே உதாஹரிக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது. இப்பொழுது ஆனந்தகிரிக்கு விசேஷ கௌரவம் கொடுக்க அம்மடத்தார் யத்தனிப்பதால் அதிலுள்ள அபத்தங்களை எடுத்துக்காட்ட வேண்டியது அவசியமாகிறது. அடுத்த அத்யாயத்தில் அவைகளைக் குறிப்பிடுவோம். ஆனந்தகிரியை பூராவும் யார் வாசித்தாலும் அது "மதிப்பற்றது, வ்யக்தமாய் கல்பிதம்" என்று N. வெங்கட்டராமன் சொல்லுவது மிகவும் வாஸ்தவம் என்பதை உணர முடியும். ஸ்ரீ சங்கர பாஷ்யங்களுக்கு டீகை எழுதியிருக்கும் ஆனந்தக்ஞானர் என்பவருக்கும் ஆனந்த கிரி என்ற பெயர் பிரஸித்தமானது. இதை வைத்துக்கொண்டு வில்ஸன் "லஜ்ஜையில்லாமல் பொய் சொல்லுகிறவர்" என்று பிருது கொடுத்திருக்கும் அநந்தானந்த கிரியை டீகாகாரரான ஆனந்தகிரிதான் என்று சிலர் நினைப்பது ஆச்சர்யத்தைக்கொடுக்கிறது. முன்னொரு காலத்தில் ஒரு பிராசீனமான ஆனந்தகிரீய சங்கர விஜயம் இருந்ததா என்று இப்பொழுது சர்ச்சை செய்ய அவசியமில்லை. இப்பொழுது ஆனந்தகிரியென்று வெளிவந்திருக்கும் கிரந்தங்கள் கொஞ்சமேனும் நம்பத்தக்கது இல்லையென்பதை மாத்திரம் காட்டினால் போதுமானது.

இதுவரை சொன்னதிலிருந்து அம்மடத்தார் "பிராசீன பிரமாணங்கள்" என்று குறிப்பிடும் கிரந்தங்கள் "பிராசீன"முமல்ல, "பிரமாண"ங்களும் அல்லவென்பதும், தன்னலத்தை உத்தேசித்து புதிதாகக் கல்பிக்கப்பட்டவைகள் தான் என்பதும், அவைகள் நம்பத்தக்கவைகளல்லவென்பதும் நன்கு தெரியவரும்.



அத்யாயம்—4

## ஆனந்த கிரீயம்.

ஆனந்தகிரி சங்கரவிஜயமென்று சொல்லப்படும் கிரந்தத்தை எழுதிய அனந்தாநந்தகிரி யென்பவர் புஸ்தகம் ஆரம்பத்திலேயே தன்னை ஸ்ரீசங்கர பகவத் பாதரின் சிஷ்யரென்றும் அவருடைய பிரஸாதத்தி லுலேயே தான் கூட ஸர்வக்ஞராக ஆனதாகவும் சொல்லிக் கொள்ளுகிறார்.

नमामि शंकराचार्यगुरुपादसरोरुहम् ।
यस्य प्रसादान्मूडोऽपि सर्वज्ञोऽहं सदाऽस्म्यलम् ॥

अनन्तानन्दगिरिः अहं अप्रतिहताज्ञस्य भगवतः शिष्यः गुरोः अवतारप्रयोजनं वर्णयामि । (பிர 1)

அப்படி இருக்க அவர் ஸாக்ஷாத் சிஷ்யர் அல்ல வென்றும், சிஷ்யபரம்பரையில் வந்தவரென்றும் சொல்லுவதற்கு இடமேயில்லை. புஸ்தக முடிவிலும் சங்கராசார்யரை என்னுடைய குரு என்று சொல்லு கிறார்.

इह तु सकललोकैः सेव्यमानो गुरुर्मे विदितसकलवेदः शंकराचार्यनामा । (ch. 74)

இது தவிர 66 வது பிரகரணத்தில் ஸ்ரீசங்கரரிடம் "ஒரு ஸமயம் அனந்தாநந்தகிரி முதலான சிஷ்யர்கள் நமஸ் கரித்து இதைச் சொன்னார்கள்"

कदाचित् शिष्याः अनन्तानन्दगिरिमुखा नत्वा इदमूचुः।

என்று வ்யக்தமாகவே சிஷ்யர்களுக்குள் தன் பெயரையும் கண்டிருக்கிறபடியால் அவர் தன்னை ஸ்ரீசங்கரருடைய ஸாக்ஷாத் சிஷ்யரென்றே சொல்லிக் கொள்ளுகிறார் என்பதில் ஸந்தேஹமில்லை. அவ்விதம் சிஷ்யராக இருந்தால் பன்னிரண்டாவது நூற்றாண்டில், அதாவது வெகு நூற்றாண்டுகளுக்குப் பின், தோன்றின ராமானுஜரைப் பற்றி இவர் எப்படி ப்ரஸ்தாவிக்க முடியும்? ராமானுஜாசார்யருக்கு லக்ஷ்மணாசார்யர் என்று பெயர் கொடுத்து சேஷனுடைய அவதார மென்று சொல்லியிருக்கிறார். ராமானுஜருக்கே சேஷனுடைய அவதாரமென்ற பிரஸித்தி இருந்து வருகிறது. தவிரவும், பதினான்காவது நூற்றாண்டிலிருந்த ஸ்ரீபாரதீ கிருஷ்ண தீர்த்தருடைய கிரந்தத்திலிருந்து சுலோகங்களை எடுத்து எப்படி உதாஹரிக்கிறார்? வெகு நூற்றாண்டுகளுக்குப் பின்னால் வரப்போகிறவர்களையும் அவர்களுடைய கிரந்தங்களையும் இவர் ஸாக்ஷாத்கரிக்க முடிந்ததேயானால், அவர் தன்னை சொல்லிக் கொள்ளுகிறபடி ஸர்வக்ஞராகத் தானிருந்திருக்க வேண்டும்!

இந்த ஆனந்தகிரி சங்கர விஜயத்தில் முதல் பிரகரணம் பின்வரும் விஷயங்களைக் குறிக்கும் அட்டவணையேயாகும். இரண்டாவது பிரகரணத்திலிருந்து தான் சரித்ரம் ஆரம்பம். பூலோகத்தில் வைதிக அனுஷ்டானம் மிகவும் கெட்டிருப்பதாக பிரஹ்மாவிடம் நாரதர் சொல்லி, பிரஹ்மா மஹேச்வரரிடம் போய் முறையிட்டதின்பேரில், தர்மத்தை ஸ்தாபிப்பதற்காகத்

தானே பூமியில் அவதாரமெடுப்பதாக பகவான் சொன்ன விஷயம் காண்கிறது. அதைக் கேட்டுக்கொண்டு பிரஹ்மா திரும்பிவிடுகிருர். இதற்குப் பின்னுல்தான் கல்கத்தா பிரதியும் புது பாடமும் வேற்றுமையடைகின்றன.

கல்கத்தா புஸ்தகத்தின்படி, ஸர்வக்ஞர், காமாக்ஷி என்கிற தம்பதிகள் சிதம்பரத்தில் இருந்தார்கள்; அவர்களுடைய பெண் விசிஷ்டை என்பவளை விசுவஜித் என்பவருக்கு விவாஹம் செய்துகொடுக்கப்பட்டது. அந்த விசுவஜித் அவளை விட்டுவிட்டு தபஸ் செய்வதற்காக காட்டிற்குப் போய்விட்டார்; அவள் எப்பொழுதும் சிதம்பரேசரையே தியானித்து பூஜை செய்துவந்தாள்; அவளுடைய வாய் வழியாக அவளுடைய சரீரத்தில் பகவான் புகுந்தார்; அதன்பேரில் அவள் கர்ப்பவதியானுள்; மூன்ருவது மாதம் முதல் செய்ய வேண்டிய சடங்குகளுக்கு சிதம்பரேசரையே யஜமானராக வைத்துக்கொண்டு அங்குள்ள பிராஹ்மணர்கள் நடத்தி வைத்தார்கள்; பத்தாவது மாதத்தில் குழந்தை பிறந்தது. (அனுபந்தம் A)

புதுப்பாடத்தில் சொல்லுவதாவது (அனுபந்தம் B)—

கேரள தேசத்தில் காலடி என்ற கிராமத்தில் வித்யாதிராஜனென்று பெயர்பெற்ற சிவகுரு என்பவர் இருந்து வந்தார்; அவருடைய பத்தியின் சரீரத்திற்குள் பகவான் நுழைந்தார்; பின்னுல் கிரமப்படி குழந்தை பிறந்தது; பிறந்த பையனுக்கு உபநயனம் செய்விப்பதற்குமுன் தகப்பனுர் காலம் சென்றுவிட்டார்; பின்னுல் உபநயனத்தை தாயாரே செய்தாள். குழந்தை பிறந்ததைப்பற்றி வர்ணிக்கும்போது

शंभोर्वरमनुस्मृत्य पिता शिवगुरुः किल ॥
आयुषो ह्रस्वतां जानन्नपि नोवाच किंचन ।
सर्वज्ञत्वादिसुगुणान् शंभुक्तान् तस्य संस्मरन् ॥

"பகவானுடைய வரத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு குழந்தையினுடைய ஆயுஸ் அல்பம் என்பதை நன்கு தகப்பனர் சிவகுருவானவர் அறிந்திருந்த போதிலும் பகவானல் ஸர்வக்ஞத்வம் முதலான குணங்கள் இருக்குமென்று சொல்லியிருந்த வார்த்தையை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு ஒன்றுமே சொல்லாமல் இருந்துவிட்டார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் முந்தின சுலோகங்களில் வரனைப்பற்றியாவது, அல்பாயுசு என்பதை பற்றியாவது, ஸர்வக்ஞன் என்பதைப் பற்றியாவது, எவ்வித பிரஸ்தாவமும் இல்லை. ஆகையால் இந்த சுலோகங்கள் பூராவும் புதிதாக நுழைக்கப்பட்டிருக்கின்றன என்று நன்ருய்த் தெரியவருகிறது. மேலும் உபநயனமும் வித்யாப்யாஸமும் இந்தப் பிரகரணத்திலேயே துயர்ந்து காணப்படுவதால் அடுத்த பிரகரணத்தில் மூன்ருவது வயதில் சௌளம், ஐந்தாவது வயதில் உபநயனம் என்று சொல்வதற்கு அர்த்தமில்லாமலே போய்விடுகிறது. இதிலிருந்து இதர சங்கர விஜயங்களுக்கு ஒத்துப் போகும்படிக்கு ஆனந்தகிரியில் உள்ள சுலோகங்களை எடுத்து இந்த சுலோகங்களை நுழைத்திருக்கிருர்கள் என்பது ஸந்தேகத்திற்கு இடமன்னியில் தெரிகிறது.

சிதம்பரத்தில் இருந்த விசிஷ்டையென்பவள் கர்ப்பிணியாயிருக்கும்போது, சிதம்பரேசனை யஜமானராக

வைத்துக் கொண்டு பிராஹ்மணர்கள் சடங்குகளை நடத்தினார்கள் என்றும், அவள் எப்பொழுதும் சிதம்பரேசனையே நினைத்துக் கொண்டு பூஜை செய்து வந்தாளென்றும், சொல்லியிருப்பதால், பிறந்த குழந்தை சிதம்பரேசன் மாதிரியே இருந்தது என்று கல்கத்தா பதிப்பு சொல்வது நியாயமாகலாம்.

## साक्षात् चिदम्बरेश इव विराजमानः

அவள் இருந்துவந்த சிதம்பரக்ஷேத்திரத்தின் அதிபதியான பகவான்தான் சிதம்பரேசர் என்று சொல்வது நியாயமாகும். காலடியில் இருந்தவள் சிதம்பரத்தில் இருந்தவள் ஆகமாட்டாள். அவள் சிதம்பரேசனை பூஜை செய்ததும் கிடையாது, அப்படியிருந்தும் புதுப் பாடத்தில் கூட குழந்தை "ஸாக்ஷாத் சிதம்பரேசன் மாதிரியே பிரகாசித்தான்" என்று அப்படியே சொல்லப் படுகிறது. இரண்டாவது பிரகரணத்தின் கடைசியில் சுலோகங்களை மாற்றிப்போட்டு சிதம்பரத்திற்குப் பதிலாக காலடி என்று போட்டவர், ஞாபகப் பிசகினால் மூன்றாவது பிரகரணத்திலுள்ள சிதம்பரேசன் என்ற வார்த்தையைத் திருத்த மறந்துவிட்டாரென்று தெரிகிறது. இதிலிருந்தும் முதலிலிருந்த பாடம் சிதம்பரத்தையே குறித்ததென்றும் காலடியைச் சொல்லவில்லையென்றும் வியக்தமாகத் தெரிகிறது.

சிதம்பரத்தில் பிறந்ததாகச் சொல்லும் சங்கராசார்யார் ஆதிசங்கர பகவத்பாதரில்லையென்றும், கும்பகோண மடத்து பரம்பரையில் பின்னால் வந்த வேறொரு ஆசார்யரென்றும் அம்மடத்தார் சொல்லுகிறார்கள். மேலும் தகப்பனார் தபஸ்ஸிற்கு போயிருக்கிறார் என்ப

தற்குப் பதிலாக, குழந்தை பிறப்பதற்கு மூன்று வருஷங்களுக்கு முன்னாலேயே அவர் இறந்துபோய்விட்டதாகவும் சொல்லுகிறார்கள். அவ்விதம் பிறந்த குழந்தை ஆதிசங்கரர் இல்லையென்று சொல்லுகிறமட்டில் நமக்கு ஸந்தோஷம். அவ்விதம் பிறந்த குழந்தை தங்கள் ஆசார்ய பரம்பரையில் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொள்ளுவதில் அம்மடத்தாருக்கு ஸந்தோஷமிருக்கும் பக்ஷத்தில் நாம் ஆக்ஷேபிப்பதற்கு அவசியமில்லை.

ஆனந்தகிரியின்படி, ஸ்ரீ சங்கரர் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளுவதற்கு முன்னமேயே அநேக சிஷ்யர்களுக்கு அத்வைதத்தை போதித்தாராம். இதைவிட ஆச்சர்யமான விஷயம் என்னவென்றால், அவ்விதம் போதிக்கும்போது "இந்த விஷயத்தைப்பற்றி விஸ்தாரமாக என்னுடைய கிரந்தங்களில் பஹுப்பிரகாரமாக சொல்லியிருக்கிறேன்" என்று சொல்லுவதால் அவர் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்வதற்கு முன்னாலேயே கிரந்தங்களையும் எழுதி இருக்கிறாரென்று தெரிகிறது. ஆனால் என்ன கிரந்தமென்று சொல்லவில்லை.

एतद्विषयप्रपञ्चस्तु बहुधा मदीयेषु ग्रन्थेषु दर्शितः

அவை எதெல்லாமென்று நமக்கு ஸந்தேஹம் வரக்கூடும். அந்த ஸந்தேஹத்தை விலக்கி புது பாடத்தில்

एतद्विषयकप्रपञ्चस्तु बहुधा मदीयेषु ग्रन्थेषु भाष्यादिग्रन्थेषु दर्शितः

என்று சொல்லுவதிலிருந்து அக்கிரந்தங்கள் பாஷ்யாதிகளையே குறிப்பிடுகிறதென்று சொல்லி அபத்தத்தை இன்னமும் பலப்படுத்திக்கொள்ளுகிறது.

கல்கத்தா பதிப்புப்படி ஸ்ரீசங்கரர் சிஷ்யர்களுக்கு உபதேசம் பண்ணி அனுக்ரஹித்த பிற்பாடு எட்டாவது வயதில் கோவிந்த யோகீந்திரருடைய உபதேசம் பெற்று ஸந்யாஸாசிரமம் ஸ்வீகரித்துக் கொண்டார் என்று காண்கிறது. வேறு ஒரு இடமும் ஸ்ரீசங்கரர் போனதாகச் சொல்லாததினால் இந்த ஸம்பவமும் அவருடைய ஜன்மபூமியான சிதம்பரத்திலேயே நடந்ததென்று நினைக்க இடம் கொடுக்கிறது.

एवं अनेकप्रकारेण बहुशिष्यान् धन्यान् कृत्वा अष्टमे वयसि प्राप्ते श्रीमद्गोविन्दयोगीन्द्रस्य सदुपदेशात् परमहंसाश्रम–स्वीकारं कृतवन्तः श्रीमच्छंकरभगवत्पादाचार्यसर्वज्ञाः

ஜன்மபூமியை சிதம்பரத்திலிருந்து காலடிக்கு புதுப் பாடத்தில் மாற்றிஇருப்பதால், அவர் காலடியிலிருந்து சிதம்பரம் போனதாக திருத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆசார்யர் நதியில் முதலையால் பிடிக்கப்பட்டபோது ஆபத்ஸந்யாஸம் எடுத்துக் கொண்டு வேறொரு இடத்திற்குப்போய் கோவிந்தபாதரிடம் உபதேசம் பெற்றுக்கொண்டார் என்ற பிரஸித்தமான கதையையும் இந்த ஸந்தர்ப்பத்தில் நுழைக்க ஸௌகர்யம் ஏற்பட்டது. ஆகையால் புதுப்பாடத்தில் ஸந்யாஸம் பெற்று காலடியை விட்டு வ்யாக்ரபுரம் என்ற சிதம்பரத்திற்கு வந்து கோவிந்த பாதரிடத்திலிருந்து பரமஹம்ஸாசிரமம் பெற்றாரென்று புதுப்பாடத்தில் காண்கிறது.

एवं अनेकप्रकारेण बहुशिष्यान् धन्यान् कृत्वा अष्टमे वर्षे प्राप्ते निजग्रामसमीपवाहिन्यां नद्यां ग्राहग्रहवशात् संन्यस्य

कालट्यारूयात् निजग्रामात् निर्गत्य श्रीमद्व्याघ्रपुरमागत्य तत्र गोविन्दयोगिसदुपदेशात् परमहंसाश्रमं स्वीकृतवान् श्रीशङ्कराचार्यः।

கும்பகோணம் மடத்து குருரத்னமாலிகையிலும் ஆத்ரேய கிருஷ்ண சாஸ்திரி, ரமேசன் முதலானவர்கள் எழுதிய பிரசுரங்களிலும் ஸ்ரீசங்கரர் கோவிந்த பாதரை ஸந்தித்தது நர்மதா நதிக்கரையில் என்பதை அம் மடத்தார் இப்பொழுது விட்டுவிட்டார்களா? அவர்கள் மிகவும் பிரமாணமாகச் சொல்லுகிற பதஞ்ஜலி சரிதத்தில் ஸந்தித்த இடம் பதிரிகாசிரமம் என்று எழுதியிருப்பதையும் விட்டுவிட்டார்களா? இதிலிருந்து ஆசார்யாருடைய ஜனனம், ஸித்தி இவைகளுடன் குரு உபதேசத்தையும் கும்பகோணத்திற்குப் பக்கத்திலேயே கொண்டுவந்துவிடவேண்டுமென்று புதுப்பாடத்தின் நோக்கம் என்று தெளிவாகிறது.

ஆனந்தகிரி வெறும் அபத்தமென்பதற்கு, ஸ்ரீசங்கரருக்கு வியாஸபகவான் தர்சனம் கொடுத்த விஷயத்தை வர்ணித்திருப்பதேபோதும். வியாஸபகவான் ஒருவிருத்த பிராஹ்மண ரூபத்துடன் வந்து பிரஹ்ம ஸூத்திரத்தில் ஒரு ஸூத்திர விஷயமாக வியவஹாரம் கிளப்புகிறார். அக்கிழவர் உறுதியுடன் வ்யவஹாரம் செய்வதைப் பார்த்து ஸ்ரீ சங்கரர் கோபம் கொண்டு, தானே வியாஸருடைய கன்னத்தில் அறைகிறார். அதிலும் திருப்திப்படாமல், அவரை பூமியில் குப்புறத் தள்ளிக் காலைப்பிடித்து இழுத்து வெளியில் தள்ளும்படி தன்னுடைய சிஷ்யர் பத்மபாதருக்கு ஆக்ஞை செய்கிறார்.

இந்த வர்ணனை வெகு அழகாக இருக்கிறதென்று மதித்து, இதைப் புதுபாடத்தில் மாற்றாமல் அப்படியே காண்கிறது. வியாஸர் சங்கருடைய வாக்கியத்தைக் கேட்டுத் தானாகவே வேகமாகத் தள்ளிப் போய் விட்டாராம்.

न हि निराश्रयाः प्राणाः क्वचित् तिष्ठन्ति गच्छन्ति वा जीवतोऽदर्शनात् इत्याग्रहेण जल्पतो वृद्धस्य कपोलताडनं आचकार। परं पद्मपादं निजशिष्यं इदमाह—एनं परपक्षश्रेष्ठं वृद्धं अधोमुखं पातयित्वा पादाग्रावलम्बनात् दूरं त्यज इति। स तु गुरुभिः एवमुक्तो तूष्णीमास। यतिराड्वाक्यश्रवणात् स्वयमेवाशु दूरमगमत्।

நல்லவேளையாக பத்மபாதர் வியாஸரை அவ்விதம் தள்ளாமல், அவர் வியாஸபகவான் என்று அறிந்து ஆசார்யாரிடம் சொல்கிறார். அப்பொழுதும், ஆசார்யர் நம்பாமல் "அப்படியானால் தன்னுடைய ஸ்வயரூபத்தைக் காட்டட்டும்" என்கிறார். அப்படியே வியாஸர் தன் ஸ்வயரூபத்தைக் காட்டினவுடன் ஆசார்யர் அவருக்கு நமஸ்காரம் செய்கிறார். ஆனால் தான் செய்த அபசாரத்திற்கு வருத்தப்பட்டதாக ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் இருந்தது மிகவும் ஆச்சர்யம். தனக்கு ஆயுஸ் ஆகிவிட்டபடியால் தான் புறப்படுவதை கூட இருந்து பார்க்கவேண்டுமென்று மஹரிஷியைக் கேட்டுக் கொள்கிறார். அத்வைத ஸித்தாந்தத்தை இவ்வுலகத்தில் பிரசாரம் செய்வதற்காக ஸ்ரீசங்கரர் இங்கே

இருக்கவேண்டுமென்று சொல்லி, ஸத்யலோகத்தி லிருந்து பிரஹ்மாவை வரவழைக்கிறார். அப்படியே பிரஹ்மா வந்து "இஷ்டப்படி பூமியில் இருந்துவிட்டு, பின்னால் போகலாம்."

यावदिच्छाब्दं उर्व्यां हि स्थित्वा पश्चात् गमिष्यति ।

என்று சொல்லுகிறார். இவ்விதம் பிரஹ்மா சொன்னதைக்கேட்டு வியாஸர் கையில் கங்கா ஜலத்தைக் கொண்டுவந்து "நீ நூறு வருஷம் ஜீவித்திரு" என்று சொல்லிவிட்டு, ஸ்ரீ சங்கரரின் பேரில் ப்ரோக்ஷணம் செய்கிறார்.

इति ब्रह्मवचः श्रुत्वा व्यासः काशीकृतालयः ।
करेणानीय गङ्गाम्बु जीव त्वं शरदां शतम् ॥
इत्युक्त्वा प्रोक्षयामास शङ्कराचार्यमुत्तमम् ।

பிரஹ்மா வரம் கொடுத்த பிற்பாடு வியாஸர் மறுபடியும் ஆசீர்வதிக்கக் காரணம் தெரியவில்லை. இவ்விரண்டு பெரியோர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றும் ஏன் ஆசார்யர் முப்பத்திரண்டு வருஷங்கள் தான் இருந்தார் என்பதும் புரியவில்லை! வியாஸர் அனுக்கிரஹித்த நூறு வருஷ வரனுக்குப் போக்கு என்ன?

பிரயாகையில் குமாரில பட்டரைப் பார்த்த பிற்பாடு மண்டனமிச்ரரை ஸந்திப்பதற்காக ஆசார்யார் புறப்படும் போது "எட்டு திக்குகளிலுமுள்ள ஜனங்களுக்கு காது செவிடாகப் போகும்படி டக்கா, சங்கம், தாளம் முதலான வைபவங்களோடு" புறப்படுகிறார். சிஷ்யர்கள்

கைகளால் தாளம் போட்டார்களாம். அந்த சிஷ்யர்களைக் குறிப்பிடும்போது கல்கத்தா பிரதியில் "பத்மபாதர் முதலானவர்கள்" என்று கண்டிருக்கிறது.

ढकाशङ्खतालध्वनिभिः जयशब्दैः वन्दिमागधसूतस्तवैः पद्मपादादिशिष्यकृतकरतालैः दिक्करिकर्णकुहरबधिरत्वं संपादयन्तः श्रीपरमगुरुप्रमुखाः

புதுப் பாடம் கல்பித்தவருக்கு பத்மபாதரை மாத்திரம் சொன்னால் போதாதென்று தோன்றி "பத்மபாதர், ஸுரேசுவரர் முதலானவர்கள்" என்று கண்டிருக்கிறார்

ढकातालशंखध्वनिभिः जयशब्दैः वन्दिमागधसूतस्तवैः पद्मपादसुरेश्वरादिशिष्यकृतकरतालैः दिक्करिकर्णकोटरबाधां संपादयन्तः श्रीपरमगुरुप्रमुखाः ... ... ...

மண்டனமிச்ரரைப் பார்க்கப் போகும்போது, ஸுரேசுவரர் கூட வந்தாரென்றால் அபத்தம் என்பதை அவர் மறந்துவிட்டாரென்று தோன்றுகிறது. மண்டனமிச்ரர் வ்யவஹாரத்தில் தோற்றுப்போய் ஸந்யாஸம் வாங்கிக் கொண்ட பிறகல்லவா ஸுரேசுவரர் என்று ஏற்பட்டுப் போகிறார்!

ஆனந்தகிரியை அவர்காலத்திலுள்ள மதபேதங்கள் விஷயமாக பிரமாணமாக எடுத்துக்கொள்ளலாமென்று வில்ஸன் சொல்லியிருப்பதற்குக் காரணம், அவருக்கு நம் ஜன ஸமூஹத்தில் நெருங்கிப் பழக்கமில்லாததேயாகும்.

யாகும். ஜனங்களுடனாவது அவர்களுடைய கிரந்தங்களுடனாவது அவருக்கு நெருங்கிப் பழக்கமிருந்திருக்குமேயானால், ஆனந்தகிரி குறிப்பிட்டிருக்கும் அநேக மதங்கள் ஒரு காலத்திலேயும் இருந்ததில்லையென்றும், புஸ்தகத்தைப் பெரிதாக்கி தான் ஒரு வித்வான் என்று ஸாமான்ய ஜனங்கள் நினைக்கட்டுமென்று ஆனந்தகிரியால் தனக்குத் தோன்றினபடி கல்பித்திருக்கிறார் என்பதையும் நன்கு உணர்ந்திருப்பார். ஆனந்தகிரி சொல்லும் மதங்களின் விவரத்தை எடுத்துச் சொன்னாலே இது தெளிவாய் தெரியவரும்.

| | மதம் | பிரகரணம் | | மதம் | பிரகரணம் |
|---|---|---|---|---|---|
| 1. | சைவ மதம் | 4 | 30. | குபேர | 32 |
| 2. | டிட்டோ உள்பிரிவு | 5 | 31. | இந்திர | 33 |
| 3. | பாகவத | 6 | 32. | யம | 34 |
| 4. | வைஷ்ணவ | 7 | 33. | வருண | 35 |
| 5. | பாஞ்சராத்ர | 8 | 34 | வாயு | ,, |
| 6. | வைகானஸ | 9 | 35. | பூமி | ,, |
| 7. | கர்மஹீன வைஷ்ணவ | 10 | 36. | தீர்த்த | ,, |
| 8. | ஹைரண்யகர்ப | 11 | 37. | சூன்ய | 36 |
| 9 | அக்னிவாதி | 12 | 38. | வராஹ | 37 |
| 10. | ஸௌர | 13 | 39. | லோக | 38 |
| 11. | கணபதி | 15 | 40. | குண | 39 |
| 12. | டிட்டோ உள்பிரிவு | 16 | 41. | ஸாங்க்ய | 40 |
| 13. | டிட்டோ உச்சிஷ்ட | 17 | 42. | யோக | 41 |
| 14. | டிட்டோ நவநீத | 18 | 43. | பீலு | 42 |
| 15. | டிட்டோ ஸ்வர்ண | ,, | 44. | கர்ம | 43 |
| 16. | டிட்டோ ஸந்தான | ,, | 45. | சந்திர | 44 |
| 17. | சக்தி | 19 | 46. | அங்காரக | 45 |
| 18. | டிட்டோ உள்பிரிவு | 20 | 47. | புத | ,, |
| 19. | டிட்டோ இன்னொரு உள்பிரிவு | 21 | 48. | குரு | ,, |
| 20. | டிட்டோ இன்னொரு உள்பிரிவு | 22 | 49. | பிருகு | ,, |
| 21. | காபாலிக | 23 | 50. | மந்த | ,, |
| 22. | டிட்டோ உள்பிரிவு | 24 | 51. | ராகு | ,, |
| 23. | சார்வாக | 25 | 52. | க்ஷபணக | 46 |
| 24. | ஸௌகத | 26 | 53. | பித்ரு | 47 |
| 25. | ஜைன | 27 | 54. | சேஷ | 48 |
| 26. | பௌத்த | 28 | 55. | கருட | ,, |
| 27. | மஸ்கரி | 29 | 56. | ஸித்த | 49 |
| 28. | விசுவகர்ம | 30 | 57. | கந்தர்வ | 50 |
| 29. | ஜன்மத | 31 | 58. | பூத வேதாள | 51 |

பகவானுடைய ஒவ்வொரு விபூதிக்கும் ஒவ்வொரு சக்திக்கும் தனித்தனியாக மதிப்புக் கொடுத்து உபாஸிக்கிறவர்களுடைய எண்ணிக்கையை வைத்து அவ்வொவ்வொன்றும் "மதம்" என்று கணக்கிட்டால் மதங்களுக்கு முடிவே கிடையாது. பகவானுக்கு கீழ்பட்ட தேவதைகளையும் தேவாம்சமே இல்லாத க்ஷுத்ரமான பூதப்ரேதாதிகளையும் கணக்கிட ஆரம்பித்தால், மதங்கள் அனந்தமேயாகும். சில ஸமயங்களில் சில உத்தேசத்தின் பேரில் குபேரன், நவக்ரஹங்கள் முதலானதுகளை பூஜை செய்வதிலிருந்து அப்பூஜைகள் எல்லாவற்றையும் தனித்தனி மதமாக ஆக்கி அவைகளைக் கண்டிக்கவேண்டிய அவசியம் ஆசார்யருக்கு ஏற்பட்டது போல சொல்வது மிகவும் அசட்டுத்தனம். இவ்வித மதங்களைக்கண்டே ஆனந்தகிரியின் பெரும்பாகம் எழுதப்பட்டிருக்கிறது.

இது தவிர ஸ்ரீ சங்கரர் வாஸ்தவமாகவே ஷண்மதஸ்தாபனசார்யார் என்று ஏற்படவேண்டுமானல் அவரே அந்தந்த மதங்களை பிரசாரம் செய்வதற்காகத் தன் சிஷ்யர்களையே அனுப்பினது போல ஆனந்தகிரியில் காண்கிறது. இவ்விதம் அவர் செய்தது, அத்வைத ஞானமாகிய உத்தம நிலையை அடைவதற்கு யோக்யதை இல்லாதவர்களுக்கு உபயோகப்படட்டும் என்று செய்தாராம். இக்கதை வெறும் கல்பிதம்என்றும், கொஞ்சமேனும் ஆதாரம் கிடையாதென்றும், இக்கிரந்தத்தை பார்க்கும் எவர்க்கும் நன்கு தெரியவரும். மேலும் வைஷ்ணவ மதத்தை ஸ்தாபிப்பதற்காக லக்ஷ்மணசார்யரையும், ஹஸ்தாமலகரையும் ஆசார்யார்

அனுப்பினதாகக் காண்கிறது. ராமானுஜரும், மத்வாசாரியரும் முறையே ஆதிசேஷனுடையவும், வாயுவினுடையவும் அவதாரமென்று அவர்கள் பக்தர்கள் சொல்லிவருகிறார்கள் என்பது பிரஸித்தம். அப்படியே லக்ஷ்மணாசார்யரும், ஹஸ்தாமலகரும் ஆதிசேஷனுடையவும், வாயுவினுடையவும் அம்சம் என்று கல்கத்தா பதிப்பு ஆனந்தகிரி சொல்கிறது. புதுப் பாடத்தில் "வாயு" என்பதற்கு பதிலாக "வாஸுகி" என்று இருப்பது கைத்தவறுதலாக இருக்கலாமென்று தோன்றுகின்றது. எப்படியும் லக்ஷ்மணாசாரியார் சிலர்களை ஊர்த்வ புண்ட்ரமும், புஜங்களில் சங்குசக்கிர அடையாளங்களும் போடும்படிசெய்தார் என்றுசொல்லுவதால் ராமானுஜாசாரியரையும், ஹஸ்தாமலகர் மேற்கு திக்குபோய் சிலர்களை பஞ்சமுத்திரை போடும்படி செய்ததாகவும், உடுப்பியில் கிருஷ்ணனை பிரதிஷ்டை செய்ததாகவும் காணுவதினால் மத்வாசார்யரையும், தான் குறிப்பிடுகிறார் என்பதில் ஸந்தேஹமில்லை. இவ்விருவரும் ஸ்ரீசங்கரருடைய ஆக்ஞையைப் பெற்றுக்கொண்டு இவ்விதம் செய்தார்கள் என்பதை யாரும் ஒப்புக் கொள்ளுவது ஸாத்யமில்லை. அவ்விருவர்களும் ஆசார்யாருக்கு வெகுநாள் பின்னால் வந்தவர்களாக இருப்பதும் தவிர, அவ்விருவர்களும் ஆசார்யருடைய ஸித்தாந்தத்தை வெகு பலமாகக் கண்டித்திருப்பதினாலேயும், இக்கதை வெறும் கல்பிதம் என்று நன்கு தெரியவரும்.

महीपूर्वभागं लक्ष्मणाचार्यः किल दिग्विजयं कृत्वा कांश्चित् ब्राह्मणादीन् छिद्रोर्ध्वपुण्ड्रधारणशङ्खचक्राङ्कभासुर-

भुजयुगलान् कृत्वा बहुशिष्यसमेतः पुनरागत्य परमगुरुचरणं नत्वा तदनुज्ञावशात् मतविजृम्भणहेतुकं भाष्यादिग्रन्थ-चयमकरोत्।

हस्तामलकस्तु भूमध्यात् पश्चिमखण्डदिग्विजयं कृत्वा पञ्चमुद्राङ्कितविराजितान् भगवदष्टाक्षरमन्त्रजपासक्तान् कांश्चित् ब्राह्मणादीन् कृत्वा रजतपीठस्थलेषु कृष्णादिप्रतिष्ठां कृत्वा स्वकृतं विज्ञापयितुं पुनः परमगुरुं प्राप।

இதுவும் தவிர இவ்விருவர்களுக்கும் ஸ்ரீ சங்கரரே ஸந்யாஸம் கொடுத்து வைஷ்ணவ மத பிரசாரத்திற்காக அவரே அவர்களை வெளியில் அனுப்பினதாகச் சொல்லுவது இன்னமும் அபத்தம்.

"समीचीनं लक्ष्मण, हस्तामलक, युवां ब्रह्मचारिणौ किल, मतकल्पनाय स्वीकुरुतं" इति। तौ अत्यन्तसंतोष-चित्तौ तदानीमेव परमगुरूपदेशवशात् संन्यासिनौ भवतः स्म।

இவ்விதம் சொல்லும் ஆனந்தகிரியை, வில்ஸன் வாக்கியத்திலிருந்து கத்தரித்துவிட்டு சொல்லப்படும் ஆதாரத்தின் பேரில், மிகவும் நம்பத்தகுந்தவர் என்று ஜனங்கள் ஒப்புக் கொள்ளவேண்மென்று கும்பகோண மடத்தார் எதிர்பார்க்கிருர்கள். ஆசார்யார் முதல் முதல் திக்விஜயமாகப் புறப்படும்போது பத்மபாதர் முதலானவர்களுடன் ஹஸ்தாமலகரும் இருந்ததாக நான்காவது பிரகரணத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

அதுமுதல் இதுவரை அதாவது ஸ்ரீ சங்கரருடைய அவதார ஸமாப்தி ஏற்படும் தருணம்வரை, ஹஸ்தா மலகர் பிரஹ்மசாரியாகவே இருந்தார் என்பதை யாராவது நம்பமுடியுமா ?

ஸ்ரீசங்கரர் ஷண்மதஸ்தாபனத்திற்காக சிஷ்யர்களை வெளியில் அனுப்பினது காஞ்சீபுரத்திலிருந்து என்றும், அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காரியங்களை முடித்துக் கொண்டு காஞ்சீபுரத்திற்கே திரும்பி வந்து ஆசார்யாரிடம் தெரிவித்துக் கொண்டார்களென்றும் ஆனந்தகிரி சொல்லுகிறார். ஆனால் கடைசி பிரகரணத்தில் ஸ்ரீ சங்கரர் ஸித்தியடைந்த காலம் சிஷ்யர்களை பல இடங்களுக்கு அனுப்பி விட்ட பிறகு என்று கண்டிருக்கிறார். தான் ஏகாந்தத்தில் ஸித்தியடைய வேண்டுமென்பதற்காக அவர்களை மறுபடியும் முன்போல் வெளியில் அனுப்பிவிட்டார் என்று நினைப்பதா ? அவர் ஸித்தியடைந்த விவரத்தைப் பற்றி ஆனந்தகிரி வர்ணித்திருப்பதும் வெகு விசித்திரமானது. ஒரு சாஸ்திரத்திற்குள்ளும் வராது. ஆசார்யார் தன்னுடைய ஸ்தூல சரீரத்தை ஸூக்ஷ்ம சரீரத்தில் ஒடுக்கி ஸத்தாக ஆனாராம், பிறகு ஸூக்ஷ்ம சரீரத்தை காரண சரீரத்தில் ஒடுக்கி கட்டைவிரல் அளவுள்ள சித்தாக ஆனாராம்; பிற்பாடு ஈசுவரனுடைய ஸந்நிதியில் பரிபூர்ண ஆனந்தத்தை யடைந்தாராம்; அதன் பிறகு ஸர்வ வியாபகமான சைதன்யமாக ஆகி இன்னமும் அப்படியே இருந்து வருகிறாராம்.

ततः परं सर्वज्ञः सकलगुरुः आचार्यः स्वशिष्यान् परमतकालानलादीन् यतीन् तदन्यांश्च तत्र तत्र विषयेषु

प्रेषयित्वा स्वयं स्वेच्छया स्वलोकं गन्तुमिच्छुः काञ्चीनगरे मुक्तिस्थले कदाचिदुपविश्य स्थूलशरीरं सूक्ष्मेऽन्तर्धाय सद्रूपो भूत्वा, सूक्ष्म कारणे विलीनं कृत्वा चिन्मात्रो भूत्वा अंगुष्ठपुरुषः तदुपरि पूर्णं अखण्डमण्डलाकारं आनन्दं ईश्वरसंनिधौ प्राप्य सर्वजगद्व्यापकं चैतन्यमभवत् । सर्वव्यापकचैतन्यरूपेण अद्यापि तिष्ठति ॥

இவ்விதம் ஸித்தியடைவதற்காக உட்காரும் போது தன்னுடைய லோகத்திற்கு திரும்பிப் போகவேண்டுமென்ற ஸங்கல்பத்துடன் இருந்ததாக கண்டுவிட்டு அவர் ஸர்வவியாபக சைதன்யமாக ஏன் ஆனார் என்பதற்குக் காரணம் சொல்லவில்லை. நமக்குத் தெரியவும் இல்லை.

இதற்குப் பின்வரும் வாக்யங்களில் அவருடைய சரீரத்தை ஒரு குழியில் வைத்து கிரமப்படி ஸம்ஸ்காரங்கள் செய்துவிட்டு விமரிசையாக பிராஹ்மண போஜனம் செய்விக்கப்பட்டது என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. காஞ்சியில் அந்தக்குழி எங்கே இருக்கிறது? இவ்வளவு பெரிய மஹானுடைய ஸமாதிஸ்தலம் வெகு பிரஸித்தி பெற்று இருக்க வேண்டாமா? என்ற கேள்விகள் எல்லாம் ஏற்படக்கூடியதென்று நினைத்து இப்பின் வாக்கியங்களைப் புதுப் பாடத்தில் காணவே இல்லை. ஆசார்யார் தன் சரீரத்தைக் கீழே போடாமல் அப்படியே அந்தர்தானம் அடைந்துவிட்டாரென்று இப்பொழுது அம்மடத்தார் சொல்லுகிறார்கள்.

இவ்விதம் சங்கரருக்கு ஜன்ம பூமியும் உபதேச ஸ்தலமும் சிதம்பரமென்றும், பிரசாரத்திற்கு சிஷ்யர்களை அனுப்பின இடமும் ஸித்தி ஸ்தலமும் காஞ்சீ என்றும், ஏற்படுத்திக் கொண்டார்கள். இவ்விதம் சொன்னாலும் போதாது என்று நினைத்து ஸ்ரீ சங்கரர் கைலாஸம் சென்று அங்கிருந்து பரமேசுவரரிடமிருந்தே ஐந்து லிங்கங்கள் வாங்கிக் கொண்டு வந்ததாக ஒரு கதையும், காஞ்சியில் ஸுரேசுவரரின் தலைமையில் ஒரு மடம் ஸ்தாபிக்கப்பட்டது என்ற ஒரு கதையும், அதற்கு அனுகூலமாக ஸ்ருங்கேரிக்கு ஏற்பட்ட ஸுரேசுவரரை மாற்றி வெறொருவரை அங்கே நியமித்ததாக ஒரு கதையும் கல்பிப்பது நல்லது என்று நினைத்து கல்கத்தா பதிப்பில் இல்லாத இவ்விஷயங்கள் புதுப் பாடத்தில் காண்கின்றன. அவைகள் வேண்டுமென்று பின்னால் சேர்க்கப்பட்ட அம்சங்கள் என்று மேல்வரும் அத்யாயங்களில் காட்ட உத்தேசித்திருப்பதால் இப்பொழுது அவ்விஷயங்களைப்பற்றி இங்கு பிரஸ்தாவிக்கவில்லை.

இது வரை சொன்ன விஷயங்களை, பக்ஷபாதமன்னியில் கவனிக்கும் வாசகர் எவரும் ஆனந்தகிரி, அதிலும் விசேஷமாக திருத்தின பாடங்கள், கொஞ்சமேனும் பிரமாணமல்லவென்றும், ஸ்ரீ சங்கருடைய வாஸ்தவமான சரித்திரத்தை அறிய விரும்புவோர் யாவரும் அவைகள் ஆதாரமற்றவையென்று தள்ளிவிடவேண்டுமென்றும், நன்கு உணருவர். மாதவீய சங்கர விஜய வியாக்யானமான டிண்டிமம் என்பதை எழுதின தனபதி ஸூரி அநேகம் வாக்யங்களை, முக்யமாக 15வது அத்யாயத்தின் வியாக்யானத்தில் ஏராளமான வாக்யங்களை,

உதாஹரிப்பதால் வாஸ்தவமான ஆனந்தகிரீய சங்கர விஜயம் என்று ஒன்று இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது வெளிவந்திருக்கும் பிரதிகள் அது அல்லவென்று நிச்சயமாய் சொல்லலாம். அதிலிருந்தும் ஏதேனும் சில வாக்யங்கள் காணப்படுவதாயிருந்தாலும் இது வயக்தமாக ஒரு கக்ஷியின் பேரில் ஏற்பட்டதென்பது தெளிவாகத் தெரிவதால் N. வெங்கட்டராமன் சொல்லுகிறபடி "மதிப்பற்றது, வ்யக்தமாக கல்பிதம்" என்று தள்ள வேண்டுமென்பதில் ஸந்தேஹமில்லை.



## அத்யாயம்—5

# காவ்ய ஆதாரம்.

ஜானகிபரிணயம் என்ற பிரஸித்தமான நாடகத்தை இயற்றிய ராமபத்திர தீக்ஷிதர் என்பவர் பதஞ்ஜலி சரிதம் என்று ஒரு காவ்யம் எழுதினதாக, தஞ்சாவூரிலிருந்து அனுப்பப்பட்ட ஒரு பிரதியிலிருந்து பம்பாய் காவ்யமாலையில் பிரசுரமாயிருக்கிறது. பகவான் பதஞ்ஜலி மஹாபாஷ்யம் எழுதினபிற்பாடு ஒரே ஸமயத்தில் ஆயிரம் சிஷ்யர்களுக்கும் தனித்தனியே பாடம் சொல்லவேண்டுமென்று நினைத்து தன் நிஜ ஸ்வரூபமான ஆதிசேஷ மூர்த்தியை எடுத்துக் கொள்ளும்போது விஷஜ்வாலையை சிஷ்யர்கள் தாங்க மாட்டார்களாதலால் தனக்கும் சிஷ்யர்களுக்கும் மத்தியில் ஒரு திரையை போட்டு மறைந்திருந்து உபதேசித்ததாகவும், சிஷ்யர்கள் அசட்டுத்தனமாய் திரையை விலக்கிப் பார்த்த க்ஷணமே எல்லாரும் சாம்பலாகிவிட்டார்களென்றும், குருவின் உத்திரவு அன்னியில் மத்தியில் வெளியில் போயிருந்த ஒரு சிஷ்யன் மாத்திரம் திரும்பி வருகையில், அனுமதியில்லாமல் வெளியில் போனதற்காக அவனை பிரஹ்ம ராக்ஷஸனாக ஆகவேண்டியதென்று சபித்து விட்டதாகவும், பின்னால் கருணையேற்பட்டு அந்த சிஷ்யனைப்பார்த்து அவன் கற்றுக்கொண்டதை தக்க சிஷ்யனுக்கு அவன் உபதேசம் செய்துவிட்டால் சாப மோக்ஷமாகுமென்று சொன்னதாகவும், அப்படியே

அந்த சிஷ்யன் பிரஹ்ம ராக்ஷஸனாக இருந்து வருகையில் சந்திரகுப்தன் என்று ஒரு சிஷ்யன் அகப்பட்டதாகவும், அவன் இந்த பிரஹ்ம ராக்ஷஸனிடம் மஹாபாஷ்யம் கற்றுக் கொண்டபிறகு நான்கு ஜாதிகளிலும் பெண்கள் விவாஹம் செய்துகொண்டு முறையே வரருசி, விக்ரமாதித்யன், பட்டி, பர்த்ருஹரி என்று நான்கு புத்திரர்களைப் பெற்றதாகவும் ஒரு நாடோடிக் கதையுண்டு.

இந்தக் கதையில் அந்த சிஷ்யன் பிராஹ்மணன் என்றும் சந்திர குப்தன் என்ற பெயருள்ளவனென்றும் சொல்வதே பொருந்தாது; கலியுகத்தில் வர்ஜிக்கப் பட்டிருக்கிற கலப்புவிவாஹத்தை இவன் செய்ததாகவும், தனக்கு சூத்திர ஸ்திரீயிடம் பிறந்த புத்திரனுக்கு சாஸ்திர விருத்தமென்று தெரிந்தும் ரஹஸ்யமாக வேதாங்கமான வியாகரணத்தை பாடம் சொன்னதாகவும், சொல்வதுடன் வெவ்வேறு காலங்களில் இருந்திருக்கக்கூடிய வரருசி முதலானவர்களை ஸம காலத்தவர்போலும் ஸஹோதரர்கள் போலும் சொல்லப் பட்டிருக்கிறது. கவி எதை வேண்டுமானாலும் கல்பிக் கலாமென்பது வாஸ்தவம். ஆனால் அதை சரித்திர ரீதியாய் வாஸ்தவமென்று ஒப்புக் கொள்ள அவசியமில்லை.

மேலும் கும்பகோண மடத்தாரின் பொறுப்பை வைத்து அந்த பிரஹ்மரக்ஷஸ்தான் பின்னால் கௌட பாதாசார்யார் ஆனார் என்றும் ஒப்புக்கொள்ள வேண்டுமாம். ஆனால் அவர்கள் பிரமாணமாய்க்கொள்கிற இந்த காவ்யமே இந்த வாதத்திற்கு விரோதமாயிருக்கிறது. அதன்படி சிஷ்யனுக்கு மஹாபாஷ்யத்தை சொல்லிக்

கொடுத்தவுடன் பயங்கரமான பிரஹ்மரக்ஷஸ் ரூபம்போய் திவ்ய சரீரம் ஏற்பட்டு ஸ்வர்க்கத்திற்கு போய்விட்டதாக வியக்தமாக சொல்லப்படுகிறது.

अथ ... ... रक्षोवपुरपहाय स दिव्यमूर्तिरासीत् ॥ V, 34

व्रज सुखमवनौ कुरु प्रचारं
भुजगकृतेरितितं स शेषशिष्यः ।
दिवमगमदुदीर्य सोऽपि बद्ध्वा
वटदलसंचयमंशुके प्रतस्थे ॥ V, 35

"பிற்பாடு ரக்ஷோரூபத்தை விட்டுவிட்டு திவ்ய **மூர்த்தியாக** ஆனான். அந்த ஆதிசேஷனுடைய **சிஷ்யன்** தன் சிஷ்யனை பார்த்து 'ஸௌக்கியமாய் **போ. பூமியில்** சேஷனுடைய கிரந்தத்தை **பிரசாரம் செய்**' என்று சொல்லிவிட்டு ஸ்வர்க்கம் **போய்விட்டார்.** இந்த சிஷ்யனும் (மஹா **பாஷ்யம்** எழுதியிருந்த) ஆலிலைக் குவியலை **வஸ்திரத்தில்** கட்டிக்கொண்டு புறப்பட்டார்."

இந்த **பிரஹ்மரக்ஷஸ்** வியாகரணம் வாசித்ததே அரைகுறை. **அவர் அச்சாஸ்திரத்தில்** பூர்ணமான ஞான முடையவர் **என்று** வைத்துக் கொண்டாலும் அவருக்கு அத்யாத்ம **விஷயத்தில்** எவ்விதஞானமாவது ருசியாவது இருந்ததாக **தெரியவில்லை.** சந்திர குப்தனுக்கு பாடம் சொன்னவுடன் ஸ்வர்க்கத்திற்கு போய்விட்டபடியால் இவருக்கு வேதாந்தம் கற்றுக்கொள்ள அவகாசமேது? தவிர இவரே கௌடபாதாசார்யாராவதற்கு அவகாச

மெங்கே? ஸந்தர்ப்பம்தான் எங்கே? இந்த காவ்யத்தில் இவ்வளவு வியக்தமாய் சொல்லியிருந்தும் அதற்கும் விசித்திரமான ஸமாதானத்தை அம்மடத்து அபிமானி ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். அதாவது, "ஸ்வர்க்கம்" என்றால் "ஸ்வர்க்கம் போலுள்ள ஹிமயமலை" என்று தான் அர்த்தம் என்கிறார். ஹிமயமலையை ஸாக்ஷாத்தாக சொல்ல வார்த்தை அகப்படாமல் ராமபத்திர தீக்ஷிதர் சிரமப்பட்டாரா? சில நூற்றாண்டுகள் சென்று ஒருபண்டிதர் ஏற்பட்டு இவ்வர்த்தத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியத்திற்கு காரணமாய் ஏன் அவ்விதம் செய்தார்? இவ்வித அசட்டு ஸமாதானங்களுக்கு இவ்வித பண்டிதர்கள் தங்கள் பெயரையும் கொடுக்கிறார்களே யென்பது மிகவும் வியஸனிக்கத்தக்க விஷயம்.

ஆதிசேஷனுடைய சிஷ்யனாயிருந்த பிரஹ்மரக்ஷஸ் தான் கௌடபாதரென்று பலப்படுத்த "வியாஸாசலீய சங்கர விஜயத்தின்" ஆதரவை அப்பண்டிதர் கோருகிறார். அக்கிரந்தத்தைப் பற்றி பின்னால் விசாரிப்போம். இப்பொழுது அது சரியான கிரந்தமென்றே வைத்துக் கொண்டாலும் அதன் வாக்கியங்களுக்கும் இப்பண்டிதர் எவ்விதம் துரர்த்தம் செய்கிறாரென்பதை கவனிப்போம்.

> व्यासः पराशरसुतः किल सत्यवत्यां
> तस्यात्मजः शुकमुनिः प्रथितानुभावः ।
> तच्छिष्यतामुपगतः किल गौडपादो
> गोविन्दनाथमुनिरस्य च शिष्यभूतः ॥ IV, 63

शुश्राव तस्य निकटे किल शास्त्रजालं
यश्चाशृणोद्भुजगसद्मगतस्त्वनन्तात् ।
शब्दाम्बुराशिमखिलं समयं विधाय
यश्चाखिलानि भुवनानि बिभर्ति मूर्ध्ना ॥ IV, 64

வியாஸர் ஸத்தியவதியிடம் பராசரருக்குப் பிறந்த புத்திரர். அவருடைய புத்திரர் கியாதி பெற்ற சுகமுனி. அவருடைய சிஷ்யராக இருந்தவர் கௌடபாதர். அவருடைய சிஷ்யர் கோவிந்த நாதர். அவரிடமிருந்து அவர் சாஸ்திரங்களைக் கேட்டார். எவர் நாகலோகத்திற்குப் போய் அனந்தரிடமிருந்து பூராசப்த ஸமுத்திரத்தையும் வாக்குக் கொடுத்து கிரஹித்தாரோ எவர் எல்லா லோகங்களையும் தலையால் தாங்கிக் கொண்டு மிருக்கிருரோ (அவரிடமிருந்து)

இதில் "அவர்" என்பது கோவிந்தபாதர் என்றும், "அவரிடமிருந்து" என்பது கௌடபாதர் என்றும், முதல் "எவர்" கௌடபாதர் என்றும், இரண்டாவது "எவர்" அனந்தர் என்றும் அப்பண்டிதர் சொல்கிருர். இரண்டாவது எவருக்குப் பின்ஞல் வரும் ச (உம்) என்பதற்கு அர்த்தமில்லை போலும். இவ்விரண்டு "வியாஸாசலீய" சுலோகங்களும் மாதவீயசங்கர விஜயம் 5-வது அத்யாயம் 105, 106 வது சுலோகங்களே யாகும். தனபதிஸூரி வியாக்யானத்தில்

तस्य गोविन्दनाथमुनेः समीपे शास्त्रकदम्बं श्रीशंकरः शुश्राव। यश्च गोविन्दनाथः शेषालयं गतो "भवदीयं शास्त्रं भूतले प्रवर्तयिष्ये" इति संकेतं विधाय शब्दशास्त्रसमुद्रं शेषादशृणोत्। यश्चानन्तो निखिलानि भुवनानि शिरसा धारयति॥

> அந்த கோவிந்தநாத முனியின் ஸமீபத்தில் சாஸ்திரங்களை ஸ்ரீ சங்கரர் சிரவணம் செய்தார். எந்த கோவிந்தநாதர் சேஷகிருஹம் போய் தங்கள் சாஸ்திரத்தை பூலோகத்தில் பிரசாரம் செய்கிறேன் என்று வாக்குக் கொடுத்து சேஷரி டமிருந்து சப்தசாஸ்திரஸமுத்திரத்தை கிரஹித் தாரோ, எந்த அனந்தர் எல்லா லோகங்களையும் தலையினால் வஹிக்கிறாரோ

என்று வியக்தமாக எழுதியிருக்கிறார். கோவிந்தநாதர் கோவிந்தநாதர் முறையிலேயே சேஷலோகம் போய் சாஸ்திரம் கற்றுக் கொண்டாரென்றாவது அல்லது முன் அவதாரமான பதஞ்ஜலியாயிருந்த போது அங்கே போய் சேஷனிடம் கற்றுக்கொண்டாரென்றாவது தான் ஏற்படும். இந்த ஸந்தர்ப்பத்தில் கௌடபாதரை இழுக்க எவ்வித நியாயமுமில்லை. மாதவீயத்தில் நாக லோகம் போய்வந்தது இவர்தான் என்பதை ஸந்தேஹ மன்னியில் முன்னுள்ள ஒரு சுலோகம் நன்கு தெளிவு படுத்துகிறது.

उरगपतिमुखादधीत्य साक्षात्
स्वयमवनेर्विवरं प्रविश्य येन।

प्रकटितमचलातले सयोगं
जगदुपकारपरेण शब्दभाष्यम् ॥ V. 86

எவர் பூமியின் துவாரத்தின் வழியாய் சென்று ஸர்ப்பராஜனிடம் சப்த பாஷ்யத்தைக் கற்றுக் கொண்டு ஜகத்தின் உபகாரத்தை உத்தேசித்து யோக சாஸ்திரத்துடன் பூமியில் பிரசாரம் செய்தாரோ.

மாதவர் விஷயம் தெரியாமல் இந்தச் சுலோகம் எழுதியிருக்கிறாரென்பதே அப்பண்டிதரின் ஸமாதானம். தன் வாதத்திற்கு பக்க பலம்போல் தங்கள் பிரமாண கிரந்தமான சங்கராப்யுதயத்தை உதாஹரிக்கிறார். அதிலும் பாதாள லோகம் போனது கோவிந்தபாதர் தான் என்பதுதான் வியக்தமாய் தெரிகிறது.

शिष्यं शुकर्षिशिष्यस्य गौडपादयतीशितुः ।
गोविन्दभगवत्पादं गुरुमग्रे ददर्श सः ॥
पातालतलमाविश्य फणाधरशिखामणेः ।
येन व्याकरणं कृत्स्नं योगेन सह साधितम् ॥

சுக மஹர்ஷியின் சிஷ்யரான யதி சிரேஷ்டரான கௌடபாதருடைய சிஷ்யரான கோவிந்த பகவத் பாதரான குருவை அவர் தன்முன் கண்டார். அவர் பாதாள லோகம் போய் நாகராஜனிடம் பூரா வியாகரணத்தையும் யோகத்துடன் சேர்த்து ஸம்பாதித்தவர்.

இதிலும் இரண்டாவது வாக்கியம் கோவிந்தபாதருக்கு இல்லை, கௌடபாதரையே சேரும் என்று அப்பண்டிதர் வாதாடுகிறார். அன்வயம் செய்யவேண்டிய முறைகளை மீறி வாதாடுகிறவர்களிடம் வியவஹாரம் செய்வதே உசிதமில்லை.

தவிரவும் கௌடபாதர் பாதாளத்திற்குப் போனதாகவாவது ஆதிசேஷரிடம் வித்யாப்யாசம் செய்ததாகவாவது எவ்வித பிரஸித்தியும் கிடையாது. பதஞ்ஜலி சரித்திரத்தில் கண்ட பிரஹ்மரக்ஷஸ்தான் கௌடபாதர் என்று வைத்துக்கொண்டால் அவர் பாதாள லோகத்திற்குப் போகவில்லையென்பதற்கும், அங்கே போய் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் அவருக்கு இல்லையென்பதற்கும் அந்தக் காவ்யமே பிரமாணமாகும். அவர் ஆதிசேஷனிடம் கற்றுக்கொண்டது இந்த லோகத்தில்தான். அதுவும் சிதம்பர க்ஷேத்திரத்தில், பாதாளத்தில் இல்லை. இங்கே அறைகுறையாகக் கேட்டிருந்தபடியால் பாக்கியைக் கேட்க பாதாளத்திற்குப் போயிருக்கலாமென்று சொல்வதற்கும் இடமில்லை. இங்கேயே பூரா சாஸ்திரமும் உதிக்குமென்று சொல்லி சேஷர் மறைந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

व्याकरणमहाभाष्यं मत्कृतमखिलं मत्प्रसादात् ते ।
स्फुरतु यथेष्टं याहीत्युक्त्वा तमृषिस्तिरोदधे सहसा ॥ V, 24

"நான் செய்த பூரா வியாகரண மஹாபாஷ்யமும் என்னுடைய பிரஸாதத்தினால் உனக்கு ஸ்புரிக்கட்டும், இஷ்டப்படி போ" என்று அவனிடம் சொல்லிவிட்டு அந்த ரிஷி உடனே மறைந்தார்.

இவ்விதம் ஸ்புரிக்கும்படி அனுக்ரஹமிருக்கும்போது சேஷரைத் தேடிக்கொண்டு இன்னொரு லோகத்திற்குப் போக அவசியமேயில்லை. தவிரவும், ஏற்கனவே எடுத்துக் காட்டினபடி, பிரஹ்மரக்ஷஸ் சரீரம் விட்ட வுடன் ஸ்வர்க்கத்திற்குத் தான் நேரே போனதாகக் கண்டிருக்கிறது.

தவிரவும் மாதவீயத்திலும் சங்கராப்யுதயத்திலும் வியாகரணத்துடன் யோகத்தையும் சேர்த்தே சொல்லி யிருக்கிறது. பதஞ்சலிதான் யோக ஸூத்திரங்களையும் வியாகரண மஹாபாஷ்யத்தையும் எழுதினவர். ஆகையால் இவ்வாக்யங்கள் கோவிந்தபாதரின் முன் அவதாரமான பதஞ்ஜலிக்குத்தான் பொருந்தும், கௌட பாதருக்குப் பொருந்தாது. ஸ்ரீ சங்கரர் கோவிந்த பாதரை ஸ்தோத்திரம் செய்யும்போது அவரை பதஞ் சலியுடனும் ஆதிசேஷனுடன் ஒன்றுபடுத்திச்சொல்வது நியாயமேயாகும்.

கோவிந்தபாதரோ பதஞ்ஜலியோ, இருவரும் ஆதி சேஷரின் அம்சமாயிருப்பதால் அவர் ஆதிசேஷரிடம் கற்றுக் கொண்டாரென்றால் தன்னிடத்திலேயே தான் கற்றுக்கொண்டதாக ஆகாதா என்று ஒரு சிறிய ஆக்ஷேபணை செய்யப்படுகிறது. இது அவதாரத்தின் தன்மையை அறியாதவர்களே செய்யக்கூடிய ஆக்ஷேபணை. ஸ்ரீ சங்கரர் பரமசிவனின் அவதாரமா யிருக்கையில் காசியிலோ கைலாஸத்திலோ பகவானை தர்சித்து பிரஸாதமும் ஆக்ஞையும் பெற்று வரலாமா? அர்ஜுனன் ஸ்வர்க்கத்திற்குப் போய் இந்திரனால் ஸத்காரம் அடைந்திருக்க முடியாது; யுதிஷ்டிரர் மேல் லோகத்தில் தர்மராஜனால் வரவேற்கப்படவில்லையா?

இவ்விதம் கௌடபாதரை பிரஹ்மரக்ஷஸ் என்று தூஷிப்பதுடன் அந்த பிரஹ்மரக்ஷஸ்ஸின் சிஷ்யன் சந்திரகுப்தன் தான் கோவிந்த பகவத் பாதர் என்றும் அம்மடத்தார் சொல்கிறார்கள்; அதற்கு பிரமாணம் இந்த பதஞ்ஜலி சரிதமே. பிராஹ்மணனுக்கு குப்தர் என்ற பெயர் வராதென்பதை முன்னமேயே காட்டினோம்; அப்படியே கலியுகத்தில் நிஷேதிக்கப் பட்டிருக்கிற கலப்பு விவாஹத்தை இவர் செய்ததாகவும், சாஸ்திர விரோதமென்று தெரிந்து ரஹஸ்யமாய் தன் சூத்திரஸ்திரீயின் புத்திரனுக்கு சாஸ்திரம் சொல்லிக் கொடுத்ததாகவும் சொல்கிறார்கள். இவன் தான் கோவிந்த பாதர் என்று சொல்வது மஹத்தான அபசாரம். மஹாபாஷ்யத்தையே இயற்றின பகவான் பதஞ்ஜலிக்கு தானே சபித்து பிரஹ்ம ரக்ஷஸ்ஸாக்கின சிஷ்யரிடம் அந்த சாஸ்திரத்தைக் கேட்கும்படிக்கும், அதையும் கொஞ்சம் கொஞ்சமாய் ஆலிலைகளில் தன் நகத்தால் எழுதிக் கொள்ளும்படிக்கும், அவ்வாலிலைகளை மூட்டைக் கட்டிக் கொண்டு தூங்கிவிடும்படிக்கும், அந்த ஸமயம் ஒரு கன்று அதைக்கடித்துத் தின்றதுபோக மீத முள்ளதுடன் திருப்தி யடையும்படிக்கும், நிலை ஏற் பட்டிருந்தால் மிகவும் பரிதபிக்கத்தக்கதே. அந்த சிஷ்யன் ஆதிசேஷனுடைய அவதாரமில்லையானாலும் கோவிந்த பகவத் பாதராகக்கூடிய மஹிமை வாய்ந்தவன் கன்று தின்றுவிட்ட பாகங்களை பூர்த்தி செய்ய சக்தியற்று போய்விட்டான்? இவ்விதக் கதை குழந்தைகளுக்குச் சொன்னால் உத்ஸாஹமாகக் கேட்டுக் கொண்டிருக்கும். சாஸ்திரத்தில் விசுவாஸமுள்ளவரும் இம்மஹான்களிடம் மதிப்பு வைத்திருக்கிறவருமான

எவரும் இதை உண்மையென்று ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இந்த அசட்டுக் கல்பனைகள் பெரிய அபசாரமேயாகும். அப்படியிருந்தும் தத்கால கும்பகோண ஆசார்யார் தன் மடத்து ஆதாரங்களின் பலத்தைக்கொண்டு இது எல்லாம் வாஸ்தவமாக நடந்த சரித்திரம்போல் தான் எதுசொன்னாலும் நம்புவார்களென்று தோன்றின சிஷ்யர்களுக்குச் சொல்லி வருகிறார்.

பதஞ்சலி சரித்திரத்தில் முன்பாகங்களில் பிரஸ்தாவமே யில்லாமல் திடீரென்று கடைசி 8வது ஸர்க்கம் 17வது சுலோகத்தில் ஶ்ரீசங்கரர் வருகிறார். அதில் 18, 19 சுலோகங்கள் மாதவீயம் 5வது ஸர்க்கம் 87, 90 சுலோகங்களேயாகும். அப்படியே 45, 46மாதவீயம் 6 வது ஸர்க்கம் 54, 55 சுலோகங்கள்; 60 முதல் 70 வரை 11 சுலோகங்கள் மாதவீயம் 6வது ஸர்க்கம் 57, 58, 59, 5வது ஸர்க்கம் 91 முதல் 95ம் 98 முதல் 101 சுலோகங்களுமாகும். பதஞ்ஜலி சரிதத்திலிருந்துதான் மாதவர் திருடியிருக்கிறார் என்று அப்பண்டிதர் வற்புறுத்துகிறார். அவர் வாதம் ஆதாரமற்றதென்றும் வாஸ்தவத்தில் அந்த சுலோகங்கள் மாதவீயத்திலிருந்துதான் எடுக்கப் பட்டிருக்கின்றன வென்றும் தெளிவுபடுத்த ஒரு விஷயம் போதும். பதஞ்ஜலி சரிதத்தின்படி பிரஹ்மரக்ஷஸ்ஸைத் தவிர மற்ற எல்லா சிஷ்யர்களும் சாம்பலாய்ப் போய் விட்டார்; மஹாபாஷ்யம் பிரசாரத்திற்கு வந்ததே இந்த பிரஹ்மரக்ஷஸின் மூலமாய்த்தான். இந்தக் கதையை மாதவர் சொல்லவுமில்லை, ஒப்புக் கொள்ளவுமில்லை. ஆயிரம் தலையோடுகூடின ஆதிசேஷருடைய ரூபத்தைக் கண்டு சிஷ்யர்கள் பயந்தபடியால் ஒரு முகத்துடன்

பதஞ்ஜலியாக அவதரித்து சிஷ்யர்களுக்கு அனுக்ரஹித்தார் என்று மாதவர் சொல்கிருர்.

दृष्ट्वा पुरा निजसहस्रमुखीमभैषु-
र्न्तेवसन्त इति तामपहाय भूयः ।
एकाननेन भुवि यस्त्ववतीर्य शिष्यान्
अन्वग्रहीन्ननु स एव पतञ्जलिस्त्वम् ॥ V 95

சிஷ்யர்கள் அந்த க்ஷணத்திலேயே பஸ்மமாய்ப் போய் விட்டால் பயப்பட அவகாசமேது? பின்னை் அனுக்ர ஹிக்கப்படுவது எப்படி ? இதை கவனிக்காமல் இந்த மாதவீய சுலோகத்தை அப்படியே பதஞ்சலி சரிதத்தில் VIII, 66 ஆக நுழைத்திருக்கிருர்கள். த்விரவும் இந்த சுலோகத்திற்கு அர்த்தம் சொல்லும்போது அப்பண்டிதர் " பூர்வாசிரமத்தில் சந்திரகுப்தராயிருந்த நீர் " என்று மூலத்தில் இல்லாத அம்சத்தையும் சேர்க்கத் துணிகிருர். இவ்விதம் பலவிதமான அபத்தங்களிருந்தும்கூட இவ் வாக்யங்களின் நேர் அர்த்தங்களையும், தான் பிரமாண மாய்க் கொள்ளும் ஆதாரங்களையும், உதறித் தள்ளி விட்டு தான் கொடுக்கும் அர்த்தமே சரியென்று வாதாடு கிருர்.

இக்காவ்யத்தை ராமபத்திர தீக்ஷிதர் எழுதவில்லை என்று சொல்ல நமக்கு அவசியமில்லை. யார் எழுதி யிருந்தாலும் சரி, அதில் கண்ட விஷயங்கள் உண்மை யான ஸம்பவங்களில்லையென்று காட்டுவதற்கும் பொது வாய் காண்கிற சுலோகங்கள் மாதவீயத்தில்தான் பொருத்தமாயிருக்கின்றனவென்பதற்கும் போதுமான ஆதாரம் இருக்கிறது. கடைசி சுலோகத்தில்

गोविन्ददेशिकमुपास्य चिराय भक्त्या
तस्मिन्स्थिते निजमहिम्नि विदेहमुक्त्या।
अद्वैतभाष्यमुपकल्प्य दिशो विजित्य
काञ्चीपुरे स्थितिमवाप स शंकरार्यः॥ VIII, 71

கோவிந்த பகவத்பாதர் காலமான பிறகு பாஷ்யம் எழுதி திக் விஜயம் செய்து காஞ்சீபுரத்தில் இருப்பை அடைந்தார் என்று வெகு சுருக்கமாக ஸ்ரீ சங்கரருடைய சரித்திரத்தைக் கண்டிருப்பதிலிருந்து ஸ்ரீ சங்கரரின் மஹிமையை வர்ணிப்பதைவிட காஞ்சீபுரத்தை இழுக்கவே உத்தேசமென்று தெரிகிறது. ஸ்ரீ சங்கரர் ஆபத் ஸன்யாஸம் பெற்று கிரமமாக உபதேசம் பெற வேண்டுமென்று கோவிந்தபாதரிடம் வேகமாய்ப் போனாரென்பது யாவரும் அறிந்த விஷயம். இந்த கிரந்தத்தில் கோவிந்தபாதர் நர்மதைக் கரையில்கூட இருக்கவில்லை; பதரிகாசிரமத்தில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இவர் வெகு ஸாவகாசமாக காசிக்குப் போய்விட்டு வேதாந்த ஸூத்திரங்களுக்கு பாஷ்யம் எழுதும்படி விசுவேசுவரரிடம் அனுக்ரஹத்தையும் பெற்றுக் கொண்ட பிறகுதான் குருவிடம் பேரனதாக இதில் காண்கிறது. இந்த காவ்யத்தைப்பற்றி பின்னும் பிரஸ்தாபிக்க நேரிடும்.

ராஜ சூடாமணி தீக்ஷிதர் எழுதினதாகச் சொல்கிற சங்கராப்யுதய காவ்யம் இதைவிட விசித்திரமானது. அந்த தீக்ஷிதர் மஹானா இல்லையா என்பதைப் பற்றி யாவது அவர் சங்கராப்யுதயம் என்று ஒரு காவ்யம் எழுதினாரா இல்லையா என்பதைப் பற்றியாவது நமக்கு அக்கரையில்லை. இம்மடத்தாரால் அவர் எழுதினதாகச்

சொல்லும் காவ்யம் வாஸ்தவமானதுதானு? வாஸ்தவ மாயிருந்தாலும் அதற்கு சரித்திர ரீதியாய் பிராமாண்யம் கொடுக்கவேண்டியதுதானு, என்பதுதான் பிரகிருதம். இக்காவ்யம் சில வருஷங்களுக்குமுன் ஸஹ்ருதயா என்ற ஸம்ஸ்கிருத பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. இதற்கு மூல கிரந்தம் எங்கிருந்து கிடைத்ததென்று தெரியவில்லை; 7, 8 ஸர்க்கங்கள் கும்பகோண மடத் தாரால் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இக்காவ்யம் பூர்த்தியானதாகவும் தோன்றவில்லை. மாதவீய சங்கர விஜயத்திலுள்ள 145 சுலோகங்கள் அப்படியே இந்த காவ்யத்தில் காணப்படுகின்றனவென்பது ஆச்சரியத்தை யும் வருத்தத்தையும் உண்டுபண்ணுகிறது. மாதவீயத் தின் பிராமாண்யத்தை உலைக்கப் பார்க்கவே இவ்விதம் இக்காவியம் வெளியிட்டிருப்பதாகத் தோன்றுகிறது. அப்படியே அதே நோக்கத்துடன் ஸமீபத்தில் தஞ்சாவூர் ஸரஸ்வதி மஹாலில் சில்லரை கிரந்தங்களின் மத்தியில் ஜகன்னுத கவி என்பவர் எழுதினதாக ஒரு சங்கர பகவத்பாத ஸப்ததி வெளிவந்திருக்கிறது; அதில் அநேக சுலோகங்கள் மாதவீயத்தில் உள்ளது. இன்னொரு சங்கர பகவத்பாத ஸப்ததியும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்புதுப் பிரயத்தனங்களுக் கெல்லாம் நோக்கம் ஒன்றே. ஆனுலும் எந்த கிரந் தத்தில் இந்த சுலோகங்கள் ஸரஸமாய் பொருந்து கின்றனவென்பதையும் யார் யாரிடமிருந்து எடுத்திருக் கிருரென்பதையும் ஸாமான்யமான வாசகர்களே ஸுலப மாக நன்கு தெரிந்துகொள்ளலாம். இந்த காவ்யங்கள் விஷயமாய் நாம் முன் சொன்னதெல்லாம் இப்பொழுது புதிதாய் வெளிவந்திருக்கும் "வியாஸசலீய சங்கர விஜய"த்திற்குப் பொருந்தும். இனி அக்கிரந்தத்தைப் பற்றி விசாரிப்போம்.

## அத்யாயம்—6

# வியாஸாசலீயம்

வியாஸாசலர் என்று ஒருவர் எழுதினதாக ஒரு சங்கர விஜயம் சென்னை ஓரியண்டல் லைப்ரரியாரால் ஸமீபத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. அப்புஸ்தகத்தில் காணப்படும் சங்கர சரித்திரத்தை விட்டுவிட்டு சிரமப்பட்டு கும்பகோண மடத்தார் சொல்லும் கதைகளையே அதை பிரசுரித்த அதிகாரி தன் முன்னுரையில் கண்டிருக்கிறார். இதற்குக் காரணம் அவருக்குத்தான் தெரியும். இக்கிரந்தம் எழுதினவர் கும்பகோண மடத்தில் 1498 முதல் 1507 வரை பீடாதிபத்யம் வஹித்த 52-வது ஆசார்யரான மஹா தேவேந்திர ஸரஸ்வதீ என்றும் அவர் வியஸாசலம் என்ற மலையின் குஹையில் தபஸ் செய்தபடியால் அவருக்கு வியஸாசலர் என்று பெயர் வந்ததென்றும் சொல்லப்படுகிறது. குருரத்ன மாலிகை 82-வது சுலோகத்தில் இவரைப்பற்றி வர்ணித்தும் அதிலாவது அதன் வியாக்யானத்திலாவது இந்த வியாஸாசலர் என்ற பெயர் காணப்படவில்லை. அம்மடத்தில் ஆசார்யராக இருந்தவர் ஆதி ஆசார்யாரால் ஸ்தாபிக்கப்பட்டதாகச் சொல்கிற காஞ்சீ மடத்தைப் பற்றி பிரஸ்தாவமே செய்யாதது விசித்திரம் என்று அவ்வதிகாரி குறிப்பிடுகிறார். இதிலிருந்து வியாஸாசலர் அம்மடத்தில் இருந்திருப்பது கிடையாதென்றும் எப்படியும் அவர் யாராயிருந்தாலும் அவர் இக்கிரந்தம் எழுதும் காலத்தில் அம்மடம் கிடையாதென்றும் நன்கு தெரிகிறது.

இக்கிரந்தம் பிராசீனம் என்று காட்டுவதற்காக அவ்வதிகாரி சில ஆதாரங்களைக் காட்டுகிறார்; ஆனால் அவைகள் யாவும் கொஞ்சமேனும் நிற்கக் கூடியதில்லை. மாதவீய சங்கர விஜயத்திலேயே இதைப்பற்றி சொல்லியிருப்பதாக ஒரு சுலோகம் சொல்கிறார்

व्यासाचलप्रमुखपूर्विकपण्डितक्ष्मा-
भृत्संभृतोच्चतरकाव्यतरोः सुगूढात् ।
विद्वन्मधुव्रतसुखोरुरसानि सर्वा-
ण्यादातुमर्थकुसुमान्यहमक्षमोऽस्मि ॥

இந்த சுலோகம் இந்தியாவில் பல லிபிகளில் அச்சாகியிருக்கிற எந்த மாதவீய சங்கர விஜயப் பிரதியிலும் கிடையாது. என் கைவசமுள்ளதுள்பட எந்த பிராசீன ஏட்டுப் பிரதிகளிலும் கிடையாது. இந்த சுலோகத்துடன்

यत्नादुदल्पधिषणासृणिना ग्रहीतुं
शक्यं तदत्र सरसं सकलं गृहीत्वा ।
काञ्चिन्महेश्वरगुरुस्मृतिभिन्नमोहः
संक्षेपशंकरजयस्रजमातनोमि ॥

என்கிற சுலோகமும் அந்த லைப்ரரி D 12174 லக்கமிட்ட பிரதியிலிருப்பதாக ஒரு பண்டிதர் சொல்கிறார். இதர பிரதிகளிலெல்லாம் காணப்படாதது நகல் எழுதினவர்களுடைய அஜாக்கிரதையினால் இருக்குமென்கிறார். அப்படியே மாதவீயத்திற்கு இருக்கும் இரண்டு வியாக்யானங்களிலும் இந்த இரண்டு சுலோகங்கள் காணாததும்

அந்த வியாக்யாதாக்களுக்கு கிடைத்த பிரதிகளில் விடப்பட்டிருக்கலாம் என்றும் ஸமாதானம் சொல்கிருர். ஒரு வியாக்யாதா மஹாராஷ்டிர தேசத்தவர், மற்றவர் பஞ்சாபிலுள்ளவர், இந்த சுலோகங்கள் இல்லாமலே இக்கிரந்தம் 100 வருஷமாக அச்சிலும் இருந்து வருகிறது. இந்த ஸ்திதியில் யாரும் இப்பண்டிதரின் வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. "வியாஸாசலீய"த்தை பிராசீன கிரந்தமாக சொல்லி வெளியிட நினைத்தவர்களே இவ்வித சுலோகங்களை கல்பித்து அந்த சுலோகங்களையும் சேர்த்து ஒரு பிரதி ஏற்படுத்தியிருக்கவேண்டுமென்பதுதான் நன்கு தெரிகிறது. லைப்ரரிக்காக கையெழுத்துப் பிரதிகள் ஸம்பாதிக்கும் இயக்கத்தை உபயோகித்துக்கொண்டு இதையும் அதில் சேர்ப்பித்திருக்கலாமென்று சொல்வதே நியாயமாகும். தத்கால லைப்ரரிகளில் ஏதேனும் கிரந்தமிருந்தால் அது வாஸ்தவமான கிரந்தம் என்ருவது அது பிராசீன கிரந்தமென்ருவது ஏற்படாதென்ற விஷயம் யாவரும் அறிந்ததே.

மேலும் அவ்வதிகாரி, இவ்வியாஸாசலரைப்பற்றி பகுமானத்துடன் கோவிந்தநாதர் என்பவர் தன் "சங்கராசார்ய சரித"த்தில் சொல்வதாக

सर्वागमास्पदं वन्दे व्यासाचलमिमं कविम् ।
बभूव शंकराचार्यकीर्तिकल्लोलिनी यतः ॥

என்ற ஒரு சுலோகத்தையும், அப்படியே "கேரள சங்கரவிஜய"த்தில் கூட இவரைப் பற்றி

अत्युन्नतस्य काव्यद्रोण्यांसाचलमहीरुहः।
अर्थप्रसूनान्यादातुमसमर्थोऽहमद्भुतम् ॥

என்ற ஒரு சுலோகத்தையும், தனித்தனி பிரமாணங்கள் போல இரண்டு ஆதாரமென்று காட்டுகிறார். கோவிந்த நாதருடைய சங்கராசார்ய சரிதம்தான் கேரளீய சங்கர விஜயம் என்பது அவருக்குத் தெரியாதென்று ஸ்பஷ்ட மாகத் தெரிகிறது. இவ்விரண்டு சுலோகங்களும் ஒரே புஸ்தகத்தில்தான் 1வது அத்யாயம் 6, 7 சுலோகங்களாக இருக்கின்றன. வியாஸாசலர் என்பவர் ஸன்யாஸியா யும் அதிலும் மடாதிபதியாயும் இருந்திருந்தாரேயானல் அவரை வியாஸாசல "கவி" என்று கோவிந்தநாதர் குறிப்பிட்டிருக்க மாட்டார். கையெழுத்துப் பிரதியில் அகப்பட்டதாக சொல்கிற இரண்டு சுலோகங்களும் இந்த கோவிந்தநாதருடைய இரண்டாவது சுலோகத் தின் அர்த்தத்தை குறிக்கின்றன வென்பதும் இந்தச் சுலோகத்தை வைத்து அவ்விரண்டும் ஏற்பட்டிருக்கலா மென்பதும் கவனிக்கத் தக்கது.

கோவிந்தநாதருடைய கிரந்தத்தில் ஸ்ரீ சங்கரர் திருச்சூரில் ஸித்தி யடைந்ததாகவும், சோழ தேசத்துக் காரர் என்று எல்லாரும் ஒப்புக்கொள்கிற பத்மபாதரைக் கூட கேரள தேசத்தில் குண்டா என்ற ஊரைச் சேர்ந்த வர்போலும், காணப்படுவதால் அவர் தன்னிஷ்டப்படி ஸ்ரீ சங்கரருடைய சரித்திரத்தை கேரளதேச அபிமானத் துடன் சொல்கிறரென்பது நன்கு தெரியவரும். அக் கிரந்தத்தை நன்கு கவனித்துப் பார்த்தால் அவர் குறிப் பிடும் "வியாஸாசலகவி" இப்பொழுது வெளிவந்திருக்

கும் வியாஸாசலீயத்தின் கிரந்தகர்த்தா அல்லவென்றும் வாஸ்தவத்தில் மாதவீயம் எழுதினவரையே அவர் குறிப்பிடுகின்ருரென்றும் தெளிவாகத் தெரிகிறது. புது "வியாஸாசலீய"த்தில் ஒரு இடத்திலாவது விசுவரூபரை பிரஹ்மாவின் அவதாரமென்று சொல்லவில்லை; மாதவீயத்தில்தான் அவ்விதம் கண்டிருக்கிறது. கோவிந்தநாதர் விசுவரூபரை பிரஹ்மாவின் அம்சம் என்று வியக்தமாய் சொல்வதால் அவர் மாதவீயத்தை மனதில் வைத்துக்கொண்டுதான் சொல்கிருர், "வியாஸாசலீய"த்தை இல்லை என்பது ஸ்பஷ்டமாகிறது.

विधातुरंगभूतस्य विश्वरूपस्य ... IV, 28
विरिञ्चांशो विश्वरूपो ... V, 42
विश्वरूपं विरिञ्चांशं ... V, 64

"வியாஸாசலீய"த்தின்படி மண்டன மிசிரர் என்பதும் விசுவரூபர் என்பதும் வெவ்வேறு புருஷர்கள்; கும்பகோண மடத்துப்படி மண்டனமிசிரர் பிரஹ்மாவின் அவதாரம், விசுவரூபர் யமனுடைய அவதாரம். மாதவீயத்தில் மண்டனமிசிரரும் விசுவரூபரும் ஒருவரே, அவர் பிரஹ்மாவின் அவதாரம். கோவிந்தநாதர் மண்டனமிசிரர் என்ற பெயரையே குறிப்பிடவில்லை; விசுவரூபரை பற்றித்தான் பிரஸ்தாவித்து அவர் பிரஹ்மாவின் அம்சம் என்றும் அவருடைய பத்தினி ஸரஸ்வதியின் அம்சம் என்றும் சொல்கிருர். கும்பகோண மடத்தார் சொல்கிறபடி வைத்துக் கொண்டால் யமனுடைய அவதாரமான விசுவரூபருக்கு ஸரஸ்வதீ பார்யையாக அவதரித்தாள் என்ற அசட்டுத்தனத்தை கோவிந்தநாதர் காட்டினதாக

ஏற்படும். இதிலிருந்தும் வியாஸாசலகவி என்று அவர் சொல்வது மாதவரைத் தான் என்று தெளிவாகத் தெரிகிறது.

"வியாஸாசல"ருடைய மஹிமையைப் பற்றி மாதவரே முதல் ஸர்க்கத்தில் சொல்லியிருப்பதாக அவ்வதிகாரி இந்த சுலோகத்தை எடுத்துக் காட்டுகிருர்.

नेता यत्रोल्लसति भगवत्पादसंज्ञो महेशः
शान्तिर्यत्र प्रकचति रसः शेषवानुज्ज्वलाद्यैः ।
यत्राविद्याक्षतिरपि फलं तस्य काव्यस्य कर्ता
धन्यो व्यासाचलकविवरस्तत्कृतिज्ञाश्च धन्याः ॥I, 17

எந்த காவியத்தில் பகவத்பாதரென்ற பெயருடைய பரமேசுவரர் கதாநாயகனே, எதில் சிருங்காரம் முதலான ரஸங்களுடன் சாந்திரஸம் விளங்குகிறதோ, எதற்கு பலன் அவித்யா நாசமோ, அந்த காவ்யத்தை செய்த வியாஸாசல கவி தன்யன், அந்த கிரந்தத்தை அறிகிறவர்களும் தன்யர்கள்.

இந்த சுலோகத்திற்கு வியாக்யானம் செய்திருக்கும் இரண்டு வியாக்யாதாக்களும் இதில் வியாஸாசல கவி என்பது மாதவர் தான் என்று குறிப்பிடுகிருர்கள். மேலே சொன்ன அதிகாரியும் பண்டிதரும் மாத்திரம் மாதவருக்கு முன்ஞல் இருந்த வியாஸாசல கவியென்ற வேருருவரே குறிப்பிடப் படுகிறதென்று சொல்லுகிருர்கள். அதாவது வியாக்யானங்களை தூர எடுத்து வைத்துவிட்டு தாங்கள் சொல்வதை ஒப்புக் கொள்ள

வேண்டுமென்கிறுர்கள். ஆனுல் இதற்கு அடுத்தாற்போல் வரும் சுலோகமும் பின்வரும் எட்டு சுலோகங்களும் அவ்விதம் அர்த்தம் செய்ய வழியேயில்லை யென்பதும் முன் சுலோகத்தில் சொன்ன காவ்யம் மாதவீயம் தான் என்றும் வியக்தமாய் காட்டுகின்றன.

तत्रादिम उपोद्घातो द्वितीये तु तदुद्भवः ।
तृतीये तत्तदमृतान्धोऽवतारनिरूपणम् ॥ I, 18
... ... .... .... ... .... ...
षोडशे शारदापीठवासस्तस्य महात्मनः ।
इति षोडशभिः सर्गैर्व्युत्पाद्या शांकरी कथा ॥ I, 26

அந்த காவ்யத்தில் முதல் ஸர்க்கம் உபோத்காதம். இரண்டாவதில் அவருடைய அவதாரம். மூன்ருவதில் அந்தந்த தேவதைகளின் அவதார நிருபணம் ... ... 16ல் அந்த மஹாத்மாவின் சார்தாபீட வாஸம். இவ்விதம் 16 ஸர்க்கங்களாக் சங்கருடைய சரித்திரம் விவரிக்கப்படுகிறது.

இப்பொழுது வெளிவந்திருக்கும் 'வியாஸாசலீயத்'தில் 12 ஸர்க்கங்கள் இருக்கின்றன. ஆகையால் "அந்தக் காவ்யத்தில்" என்பது மாதவீயத்தைத்தான் குறிக்கமுடியும், புது "வியாஸாசலீய"த்தைக் குறித்திருக்க முடியாது என்பது நிச்சயம்.

குருரத்னமாலை எழுதினவரும் அதன் வியாக்யர்தா ஆத்ம போதேந்திரரும் வியாஸாசலரையும், மாதவரையும் ஒன்ருகவே பாவித்திருக்கிருர்கள் என்பதையும் ஆக்ஷேபிக்க முடியாது. குருரத்னமாலிகா 20வது சுலோகத்தில்

कुहनान्त्यजविश्वनाथसृष्टः

"சண்டாள வேஷத்துடன் வந்த விசுவநாதரால் ஏவப்பட்டவர்" என்றிருப்பதற்கு வியாக்யானம் செய்கையில்

कुहनान्त्यजेन कपटचाण्डालरूपिणा विश्वनाथेन विश्वेश्वरेण सृष्टः, सृजिः प्रेरणार्थः, प्रेरितः इति यावत्। ... विस्तृतमिदं व्यासाचलीये—

सोऽन्त्यजं पथि निरीक्ष्य चतुर्भिः
भीषणैः श्वभिरनुव्रतमारात्।
गच्छ दूरमिति तं निजगाद
प्रत्युवाच स च शंकरमेनम्॥

... ... ... .... ... ... ...

एवमेनमनुगृह्य कृपावान्
आगमैः सह शिवोऽन्तरधत्त।
विस्मितेन मनसा सह शिष्यैः
शंकरोऽपि सुरसिन्धुमयासीत्॥

என்று 28 சுலோகங்கள் வியாஸாசலீயத்தில் இருப்பதாக எடுத்து எழுதுகிறார். விசுவேசுவர் இவ்விதம் வந்த விஷயமே புது "வியாஸாசலீய"த்தில் கிடையாது. இந்த சுலோகங்களும் அதில் கிடையாது. ஆனால் மாதவீய சங்கர விஜயம் 6-வது ஸர்க்கத்தில் இந்த சுலோகங்கள் அதே வரிசையில் இருக்கின்றன. ஆகை

யால் ஆத்மபோதேந்திரர் வியாஸாசலீயம் என்று சொல்வது மாதவீயம்தான் என்றும் மாதவர்தான் வியாஸாசலர் என்பதும் நன்கு தெரிகிறது. இது மாதவீய வியாக்யானம் எழுதினவர்களுடைய தாத்பர்யத்தை உறுதிப்படுத்துகிறது. இந்தக் சிரமத்தை நிவர்த்தி செய்யக் கருதி, கும்பகோண மடத்திலிருந்து கொடுத்த பிரதிகள் உள்பட மூல கையெழுத்துப் பிரதிகளில் இல்லாது போனாலும், அடுத்த வியாஸாசலீயப் பதிப்பில் இந்த சுலோகங்களையும் சேர்த்துவிடலாமென்ற ஆலோசனையை அப்பண்டிதர் வாய் கூசாமல் சொல்கிறார்!

குருரத்னமாலிகை 18-வது சுலோகத்தில் ஸ்ரீ சங்கருடைய தகப்பனார் தன் புத்திரருடைய உபநயனத்தை நடத்திவிட்டு பிறகு இறந்ததாகக் காண்கிறது. இதுதான் சரியென்று "பிரஹத் சங்கர விஜயம்", "பிராசீன சங்கர விஜயம்" இவைகளைக் கொண்டு வியாக்யாதா சொல்லும்போது "ஆசார்ய விஜயம்", "சிவரஹஸ்யம்", "கேரள சங்கர விஜயம்" இவைகளுடன் "வியாஸாசலீயம்" உபநயனத்திற்கு முன்னாலேயே தகப்பனார் இறந்துவிட்டதாகச் சொல்வது பிசகு என்றும் சொல்கிறார். அப்பொழுது "வியாஸாசலீய" சுலோகத்தை

शिवगुरुः स जरन् त्रिसमे शिशौ
अमृत कर्मवशः सुतमोदितः ।
उपनिनीषितसूनुरपि स्वयं
न हि यमोऽस्य कृताकृतमीक्षते ॥

என்று உதாஹரிக்கிருர். இந்த சுலோகம் அப்படியே மாதவீயம் 4-வது ஸர்க்கம் 11-வது சுலோகம். இது புது "வியாஸாசலீய"த்தில் 11-வது ஸர்க்கம் 116-வது சுலோகம்

त्रिसम एव शिशोर्जनको जरन्
अमृत कर्मवशः सुतमोदितः ।
उपनिनीषितसूनुमपि स्वयं
न हि यमोऽत्र कृताकृतमीक्षते ॥

என்று காணப்படுகிறது. இதிலிருந்து மாதவீய பாடத்தைத்தான் வியாஸாசலீயம் என்று ஆத்மபோதேந்திரர் வியவஹரிக்கிருரென்பதும் அவர் புது "வியாஸாசலீய"த்தை சொல்லவில்லையென்பதும் நன்கு தெரிவதுடன் அவர் மாதவீயத்தையே வியாஸாசலீயமென்கிருர், அதாவது மாதவர்தான் வியாஸாசலர் என்பதும் ஸ்பஷ்டமாகிறது. "வியாஸாசலீய"த்திலிருப்பதாக ஆத்மபோதேந்திரர் சொல்லும் வேறு வாக்கியங்களைப் பற்றி மற்ெருரு ஸந்தர்ப்பத்தில் விசாரிப்போம்.

இப் புதுவெளியீட்டின் உள்ளடக்கத்தைக் கவனிப்போமாளுல் இதற்கும் மாதவீய சங்கர விஜயத்திற்கும் சுமார் 543 சுலோகங்கள் பொதுவாக இருக்கின்றனவென்பதை முதலில் குறிப்பிட வேண்டியிருக்கிறது. இதில் கண்டிருக்கும் விஷயங்களை கவனித்தால் ஸாமர்த்தியமில்லாமல் ஜோடிக்கப்பட்ட கிரந்தமென்பது நன்கு விளங்குகிறது.

கேரள தேசத்தில் காலடிகிராமத்தில் ஒரு பிராஹ்மணர் பிறந்தார் என்று முதல் அத்யாயம் ஆரம்பிக்கிறது. இவருடைய தகப்பனர் பெயர் 20வது சுலோகத்தில்தான் வருகிறது, இவருடைய பெயர் 4-வது அத்யாயத்தில் தான் வருகிறது! இதற்குக் காரணம் மாதவீயம் 2வது அத்யாயத்தில் நியாயமாக இருந்த சுலோகங்களை அப்படியே இங்கே நுழைத்ததுதான். மாதவீயத்தில் 1, 2 சுலோகங்களில் விருஷபாசலேசுவரரையும் 3வது சுலோகத்தில் காலடியையும் வர்ணித்துவிட்டு 4ல் வித்யாதிராஜரையும் 5-ல் சிவகுருவையும் கிரமமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த சுலோகங்களை விட்டுவிட்டு 6 முதல் 46 சுலோகங்களை மாத்திரம் அப்படியே "வியாஸாசலீ" யத்தில் 2 முதல் 42 சுலோகங்களாக சேர்த்துவிட்டால் எப்படிப் பொருந்தும்? இதனுலேயே முதல் அத்யாயம் முதல் சுலோகத்தில் கண்ட பிராஹ்மணர் பெயரைத் தெரிந்து கொள்ள 4-வது அத்யாயம் வரை காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.

42வது சுலோகத்தில் (மாதவீயம் II, 46)ல் சிவகுருவின் பத்தினி புத்திரன் ஏற்படுவதற்கு பரமேசுவரனை பஜிக்கலாமென்று தன் பர்த்தாவிடம் சொல்கிருள். மாதவீயத்தில் அடுத்த சுலோகமான 47-வது சுலோகத்தில் பகவானுடைய அனுக்ரஹத்தினுல் உபமன்யு சிரேயஸ் அடைந்ததை உபமானமாகச் சொல்கிருள்.

भक्तेप्सितार्थपरिकल्पनकल्पवृक्षं
देवं भजाव कमितः सकलार्थसिद्ध्यै ।

तत्रोपमन्युमहिमा परमं प्रमाणं
नो देवतासु जडिमा जडिमा मनुष्ये ॥

இதை கொஞ்சம் மாற்றி "வியாஸசலீயம்" 4-வது அத்யாயம் முதல் சுலோகமாகக் காண்கிறது.

एवं फलप्रदमुनीश्वरमीश्वराणां
ईशं भजाव किमितः सकलार्थसिद्ध्यै ।
तत्रोपमन्युमहिमा परमं प्रमाणं
नो देवतासु जडिमा जडिमा मनुष्ये ॥

இவைகளின் மத்தியில் இரண்டு முழு அத்யாயங்கள் $22 + 117 = 139$ சுலோகங்கள் அடங்கியவை இந்த உபமன்யுவின் சரித்திரத்தை வர்ணிக்கின்றன. கிரந்தம் மொத்தமே 12 அத்யாயங்கள்தான். அதில் இரண்டு அத்யாயம் உபமானமாக சொல்லப்படும் உபமன்யு சரித்திரத்திரத்தில் போய்விடுகிறதென்றால் எவ்வளவு அஸம்பாவிதம், எவ்வளவு நியாயமில்லாதது என்பதை யாவரும் அறிவார்கள். உபமன்யுவைப் பற்றி ஒரு பத்தினி தன் பர்த்தாவிற்கு ஞாபகப்படுத்தலாம். ஆனால் பிரஸித்த வித்வானாக வர்ணிக்கப்பட்டிருக்கிற சிவகுருவுக்கு உபமன்யு கதை தெரியாதது போலும் அதை அவர் பார்யை சொல்லியே தெரியவேண்டியது போலும் சொல்வது இருவருடைய கௌரவத்தையுமே குறைப்பதாகும். உபமன்யுவைப் பற்றி சில சுலோகங்கள் தானோ மற்றும் யாரோ எழுதிவைத்ததை இதில் நுழைத்திருக்கிறார்களென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. வேறு எந்த காரணமும் பொருந்தாது.

4-வது அத்யாயம் 3 முதல் 30 வரை சுலோகங்கள் மாதவீயம் 2-வது அத்யாயம் 49 முதல் 65, 71 முதல் 75, 79 முதல் 84 சுலோகங்களேயாகும். எடுத்து எழுதுவதில் கொஞ்சம் வரிசைக் கிரமம் மாறிவிட்டதினுல் சிலவிடங்களில் சுலோகங்கள் பொருத்தமில்லாமலிருக்கின்றன. மாதவீயம் 62-வது சுலோகம் 4-வது பாதம்

हा हन्तगर्भधरणं खलु दुःखहेतुः ।

"கர்ப்பத்தை தரிப்பது துக்கமல்லவா"

என்று சிவகுருவின் பார்யையைப் பற்றி சொல்லி விட்டு உடனே 63வது சுலோகத்தில்

मानुष्यधर्ममनुसृत्य मयेदमुक्तं
काऽपि व्यथा शिवमहोभरणे न वध्वाः ।

"மனிதத் தன்மையை அனுஸரித்து இவ்விதம் என்னுல் சொல்லப்பட்டது. சிவனுடைய தேஜஸ்ஸை வஹிக்கிற அப்பெண்ணுக்கு ஒருவித சிரமமும் கிடையாது."

என்று சொல்கிருர். "வியாஸாசலீய"த்தில் முன் சொன்னது 16-வது சுலோகக் கடைசியிலும் பின்சொன்னது 19-வது சுலோகத்தின் ஆரம்பத்திலும் வருகிறது. மத்தியில்வரும் இரண்டு சுலோகங்கள் நியாயமாகவரும் அர்த்தக் கிரமத்தை கெடுத்துவிடுகின்றன. அதே அத்யாயம் 49 முதல் 61, 63, 64ம், 71 முதல் 76, 81, 82, 85, 86 சுலோகங்கள் மாதவீயம் 5-வது அத்யாயம் 68 முதல் 80, 105ம் 7-வது அத்யாயம் 23 முதல் 28, 39, 40, 44, 57, 58 சுலோகங்களேயாகும்.

[illegible] மஹர்ஷி வயதான பிராஹ்மண வேஷத்துடன் வந்து ஸ்ரீ சங்கரரிடம் வந்து வாதம் செய்ததில் அவர் ஸாமான்ய மனுஷ்யரல்லவென்று உணர்ந்த பத்மபாதர் "பரதத்வத்தைப்பற்றி மஹாவிஷ்ணுவும் பரமேசுவரரும் வாதம் செய்தால் எங்களைப்போலுள்ளவர்களுக்கு கதியென்ன ?" என்று கேட்டு மேல் வியவஹாரத்தை நிறுத்தினதாக ஒரு ஸம்பவம் பிரஸித்தமானது. "வியாஸாசலீய"த்தில் வியாஸரை ஸ்ரீ சங்கரர் தர்சித்த பிறகே பத்மபாதர் சிஷ்யராக வந்ததாகக் கண்டிருக்கிறது. பத்மபாதர் 87 முதல் 92 (மாதவீயம் VI, 1 முதல் 5, 14) சுலோகங்களில் தான் முதல் தடவை வருகிறார். ஆசார்யார் தன் தாயாருக்கு ஸம்ஸ்காரம் செய்ததைச் சொல்லும் மாதவீயம் XIV, 30, 35, 42, 48 முதல் 50 வரை சுலோகங்கள் அது வெகு முன்னமே நடந்ததாகக்கண்டு வியாஸாசலீயம் IV, 95, 96, 99, 101 முதல் 103 சுலோகங்களாக காண்கின்றன.

குமாரிலபட்டரை ஸ்ரீ சங்கரர் கண்டதாக மாதவீயம் VII, 64, 66, 72, 79 முதல் 100ம் 114, 115 சுலோகங்களே இதில் 5-வது அத்யாயத்தில் 3, 5, 9 முதல் 31ம் 35, 36 சுலோகங்களாக காணப்படுகின்றன. "வியாஸாசலீய" த்தின்படி பின்னால் ஸுரேசுவராசார்யராக ஏற்பட்ட விசுவரூபர் வேறு, மண்டனமிசிரர் வேறு என்பது குறிப்பிடத் தக்கது. ஸ்ரீ சங்கரரைப் பார்த்து குமாரிலர் "மகத" தேசத்திற்குப் போய் விசுவரூபரை எப்படியாவது ஜயிக்க வேண்டுமென்று 34 முதல் 36 சுலோகங்களில் சொல்கிறார். அவ்விதம் சொல்லும் ஸமயத்தில் மண்டனமிசிரர் கூடவே நின்று ஸ்ரீ சங்கரரிடம் வந்ததாக 37-வது சுலோகம் சொல்கிறது.

एतावदुक्त्वा विरराम शंकरं
स भट्टनामा मरणाय दीक्षितः ।
तत्पार्श्ववर्ती विदितार्थसंग्रहः
स मण्डनाख्योऽभिजगाम शंकरम् । (37)

6-வது அத்யாய ஆரம்பத்தில் ஸ்ரீ சங்கரர் விசுவரூபர் வீட்டுக்குப் போய் அவரால் வெகு மரியாதையாய் உபசரிக்கப்படுகிறார். பிறகு ஸ்ரீ சங்கரர் போஜனம் செய்ய உட்கார்ந்தவுடன் விசுவரூபருடைய பத்தினி உபயபாரதீ பலவித பக்ஷ்ய போஜ்யாதிகளை கலத்தில் வைக்கிறாள்.

अन्नं घृतं पक्वविशेषजातं
तथोपदंशान् गुडवैकृतानि ॥
भक्तानि चिक्षेप वराभिधानं
यस्या बभूवोभयभारतीति । 8-9

இத்தனையும் பரிமாரியும் அவள் கையில் தீர்த்தம் போடுவது 78-வது சுலோகத்தில்தான்.

सा भारती चुलुकिते भगवत्पदस्य
हस्ते जलं समदिताच्छमनोहराङ्गी ।

மத்தியில் உள்ள 70 சுலோகங்களில் அவளுடைய பிறப்பு வளர்ப்பு, விவாஹம் எல்லாம் விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகின்றன; அந்த சுலோகங்கள் யாவையும் மாதவீயம் 3-வது அத்யாயம் 10 முதல் 77 சுலோகங்களே. மாத

வீயத்தில் 3-வது அத்யாயத்தில் ஸ்ரீ சங்கரருடைய சிஷ்யர்களாக அவதரித்த தேவர்களைப்பற்றி சொல்லி விட்டு, கிரமமாக ஸரஸ்வதியின் அம்சமான உபயபாரதீ யைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அந்த சுலோகங் களை எடுத்து அன்னம் பரிமாறுவதற்கும் தீர்த்தம் போடுவதற்கும் மத்தியில் நுழைத்தால் எவ்வளவு உசிதமென்பதை வாசகர்களே தீர்மானிக்கலாம். பிற்பாடுள்ள 84 முதல் 87, 91 முதல் 95, 97 முதல் 101 சுலோகங்கள் மாதவீயம் VIII, 45 முதல் 48, 61 முதல் 65, 67 முதல் 69, 72, 73 சுலோகங்களேயாகும். 104-வது சுலோகம் (மாதவீயம் X, 76) ஸ்ரீ சங்கரர் ஸுரேசுவர ருக்கு ஆத்ம தத்துவத்தை உபதேசித்துவிட்டு 'மேலும்' சொன்னதாகக் காண்கிறது.

आचार्यवर्यः श्रुतिमस्तकस्य
तदादिवाक्यं पुनराबभाषे ॥

ஆனால் மாதவீயத்தில் தொடர்ந்து 77 முதல் 103 சுலோகங் களாக இருப்பதை "வியாஸாசலீய"த்தில் அடுத்த அத்யாயத்திற்குக் கொண்டுபோய் 1 முதல் 27 ஆக கணக்கிடப்பட்டிருக்கிறது. ஸுரேசுவரர் ஸன்யாஸா சிரமம் பெற்றவுடனேயே அவரை சங்கரர் தன் பாஷ்யத் திற்கு வார்த்திகம் எழுதவேண்டுமென்று சொன்னதாக வும் அதற்கு அவர் "பாஷ்யம் யுக்திகளோடும் கம்பீர மாயும் இருப்பதைப் பார்த்திருக்கிறேன். எனக்கு சக்தி இல்லையானாலும் தங்கள் அனுக்ரஹத்தினால் பிரயத் தினம் செய்கிறேன்" என்று சொன்னதாகக் காண் கிறது.

दृष्टुं सतर्कं भवदीयभाष्यं
गंभीरवाक्यं न ममास्ति शक्तिः।
तथाऽपि भावत्ककटाक्षपातैः
यते यथाशक्ति निबन्धनाय ॥ (VII, 30)

ஆசார்யார் பாஷ்யத்தை எழுதி முடித்துக்கொண்டு குமாரிலரைப் பார்த்துவிட்டு நேரே விசுவரூபரிடம் வருகிறார். இவர் இதற்கு முன் பாஷ்யத்தை எப்படி பார்த்திருக்க முடியும்? இதே சுலோகம் மாதவீயம் XII, 4ல் த்ரஷ்டும் என்றிருக்கிறது. அதாவது தர்க்கத்தோடும் கம்பீர வாக்குமுள்ள தங்கள் பாஷ்யத்தைப் பார்க்கக்கூட எனக்கு சக்தியில்லை. இருந்தாலும் தங்கள் கடாக்ஷ பலத்தினால் யதாசக்தி கிரந்தம் செய்ய பிரயத்தினம் செய்கிறேன் என்று அர்த்தமேற்படுகிறது. தவிரவும் இந்த ஸம்பவத்தை ஸன்யாஸகாலத்தில் சொல்லாமல் பின்னால் சொல்லியிருப்பதுதான் உசிதமாகும். இந்த அத்யாயத்தில் சுலோகங்கள் 28 முதல் 30, 37 முதல் 71ம் மாதவீயம் XIII, 6 முதல் 14, 40 முதல் 48, 51முதல்61, 64 முதல் 70, சுலோகங்களேயாகும். பத்மபாதருடைய தீர்த்தயாத்திரையை வர்ணிக்கும் 72 முதல் 101 சுலோகங்கள் மாதவீயம் XIV, 1முதல் 26, 28, 56முதல்58 சுலோகங்களே; 102வது சுலோகம் மாதவீயம் 59வது சுலோகத்தனையே சொல்கிறது. 103முதல் அத்தியாயம் முடியும்வரை 42 சுலோகங்கள் காஞ்சீபுரம் மாஹாத்மியத்தை சொல்கின்றன.

8வது அத்தியாயம் 1, 2 சுலோகங்கள் மாதவீயம் XIV, 60, 61 சுலோகங்களை ஒட்டினவை; 3முதல்10, 19,

20, 36முதல்70, 74முதல் 93, மாதவீயம் XIV 62முதல்71, 74முதல்90, 92முதல்95, 107முதல்110, 114முதல்133 சுலோகங்களேயாகும். 94முதல் அத்தியாய முடிவு வரை 47சுலோகங்கள் ராமேசுவர லிங்கப்பிரதிஷ்டையைப் பற்றினவைகள்.

9வது அத்யாயம் 1முதல்28 சுலோகங்களும் ஸேதுமாஹாத்மியத்தைப் பற்றியே. 29முதல் 33 சுலோகங்கள் மாதவீயம் XIV, 138 முதல் 142 சுலோகங்கள். ஆனால் "வியாஸாசலீய"த்தில் பத்மபாதருடைய மாமன் அவருக்கு மருந்துகொடுத்து புத்திக்கு மாந்தியம் ஏற்பட்டதாக நிறுத்திவிடுகிறது. பின்னால் சங்கருடைய கிருபையால் பத்மபாதர் எழுதின கிரந்தம் மறுபடியும் பிரஸித்தியை அடைந்தது என்ற மாதவீய சுலோகங்களையும் சேர்த்துக் கொண்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். காபாலிக விருத்தாந்தம் 35வது சுலோகத்தில் கொண்டுவரப்படுகிறது. 38முதல்49, 52, 54முதல் 61 சுலோகங்கள் மாதவீயம் XI, 23, 16, 17, 19, 27 முதல் 32, 37, 38, 44, 60 முதல் 67 சுலோகங்களேயாகும். பின்னால் வரும் 21 சுலோகங்கள் விஷ்ணுவையும் அவர் பத்து அவதாரங்களையும் வர்ணிக்கின்றன. 83-வது சுலோகம் மாதவீயம் XI, 74 தான். 84ல் தோடகாசார்யர் சரித்திரம் ஆரம்பிக்கப்படுகிறது; 84 முதல் 88, 95, 96 சுலோகங்கள் மாதவீயம் XII, 70 முதல் 74, 84, 85 சுலோகங்களே.

10-வது அத்யாயத்தில் ஆசார்யாருக்கு ஏற்பட்ட பகந்தர ரோகத்தை சிஷ்யர்கள் நிவிருத்தி செய்ய செய்த

யத்தினம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. 1, 2, 3, 5 முதல் 12, 17 சுலோகங்கள் மாதவீயம் XVI, 4 முதல் 15 சுலோகங்களாகும். 12-வது சுலோகத்தில் குருவினிடம் வெகு சிரமப்பட்டு அனுமதி வாங்கிக்கொண்டு வைத்தியர்களைத் தேட புறப்படுகிறார்கள்; 17ல் நல்ல கெட்டிக்காரர்களாக இருக்கும் வைத்தியர்கள் அநேகமாய் அரசர்களிடமே இருப்பார்களென்ற தீர்மானத்துடன் சிஷ்யர்கள் புறப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் "வியாஸாசலீய"த்தின்படி ஒரு அரசனையும் அண்டாமல் ஒரு வருஷத்திற்கு மேல் ஊர் சுற்றிக்கொண்டு உத்ஸாஹமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாகவே தெரிகிறது. அவர்கள் திரும்பிவருவது இந்த அத்யாயம் முடிந்து அடுத்த 11 வது அத்யாயம் 78 வது சுலோகத்தில்தான். 12 வது சுலோகமும் 17வது சுலோகமும் மாதவீயத்தில் துயர்ந்து 14, 15 சுலோகங்களாக கிரமமாய் இருந்து வருகின்றன. "வியாஸாசலீய"த்தில் இவ்விரண்டு சுலோகங்களுக்கும் இடையில் கொஞ்சமேனும் பிரகிருதமில்லாமல் சூர்யோதயம், சூர்யாஸ்தமனம் இவைகளை வர்ணிக்கும் நான்கு சுலோகங்கள் காணப்படுகின்றன. சிஷ்யர்கள் எதற்காக புறப்பட்டார்களோ அதை முற்றும் மறந்து ஸஹ்ய பர்வதத்தில் ஏறி அதன் சோபையை அனுபவிக்கிறார்கள். பிற்பாடு ஸமுத்திர வர்ணனை; வஸந்தகாலத்தில் காமுகர்களுக்கு ஏற்படும் காமவிகாரங்கள் வெகு உத்ஸாஹத்துடன் வர்ணிக்கப்படுகின்றன. பிறகு கோடைகாலம், ஜலக்கிரீடை, ஸுராபானம், காமலீலை, ஸாயங்கால அழகு, நிலாவின் சோபை முதலான வர்ணனைகள் அத்யாயம் முடியும் வரை. அடுத்த அத்யாயத்தில் சரத், ஹேமந்தம், சிசிரருதுக்கள் அதே ரீதியில் வர்ணிக்கப்

படுகின்றன. ஆக 10-வது அத்யாயத்தில் 117, 11வது அத்தியாயத்தில் 77 என்று மொத்தம் 194 சுலோகங்கள் இவ்விதம் சிருங்கார வர்ணனையிலேயே இருந்து வருகின்றன. தங்கள் குருநாதர் கொடூரமான வியாதியினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பதை பொருட்படுத்தாமல் அவரிடமிருந்தால் நிர்பந்தமென்று நினைத்து வெளியில் புறப்பட்டு உத்ஸாகமாக ஒரு வருஷம் ஊர் சுற்றுகிறார்களென்பது எவ்வளவு தூரம் பொருந்தக்கூடியதென்பதை வாசகர்கள் கவனித்துக் கொள்ளலாம். இவ்வித சுலோகங்களை எழுதி ஸ்ரீ சங்கரரின் சரித்திரத்தில் நுழைக்கலாமென்று நினைக்கும் மனோபாவமுள்ளவருக்கு ஆசார்யரிடம் கௌரவ புத்தியில்லையென்பதும் அவர்சிஷ்யர்களையும் மதிக்காதவர் என்றும் நன்றாகத் தெரிகிறது; இவர் இவ்விதமாக தன்னுடைய சொந்த சுலோகங்களையும் மாதவீயத்திலிருந்து திருடின சுலோகங்களையும் கலந்து ஒரு காவ்யம் உண்டுபண்ணியிருப்பதில் ஆச்சர்யமில்லை. மாதவீயத்தில் சிஷ்யர்கள் புறப்பட்டதாக சொல்கிற சுலோகத்திற்கு அடுத்த சுலோகத்திலேயே வைத்தியர்களை அழைத்து வந்துவிட்டார்களென்று வெகு உசிதமாக சொல்லப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ சங்கரருக்கும் வைத்தியர்களுக்கும் குசலபிரச்னம் செய்வதற்கு 79 முதல் 92 வரை 14 சுலோகங்கள் காணப்படுகின்றன. பிற்பாடு 93 முதல் 95, 98, 99, 101 முதல் 103 எல்லாம் மாதவீயம் XVI, 18 முதல் 26 சுலோகங்கள். ஆசார்யார் தனக்கு வைத்தியம் செய்து கொள்ள இஷ்டப்படாததாக முன்னால் வர்ணித்தும்கூட இப்பால் அவரே அசுவினி தேவதைகளை வேண்டினதாக 104வது

சுலோகத்தில் சொல்லப்படுகிறது. அவர்கள் இந்திரனையும் பிரஹஸ்பதியையும் கேட்டதாகவும் அப்பொழுது பிரஹஸ்பதி ஸ்ரீ சங்கரர் பரமசிவனின் அவதாரமென்று சொன்னதுடன் அவருடைய பால்ய சரித்திரத்தை 113 முதல் 125, 127 முதல் 134 சுலோகங்களில் வர்ணிக்கிருர். இவை மாதவீயம் IV, 1 முதல் 3, 11 முதல் 17, V, 4, 2, 3, 61 முதல் 67 சுலோகங்களேயாகும். பிரஹஸ்பதியின் வார்த்தையின்பேரில் அவர்கள் ஆசார்யருக்கு சிகித்ஸை செய்து ஸ்வஸ்தம் செய்ததாக அவ்வத்யாயத்திலுள்ள பாக்கி சுலோகங்களில் சொல்லப்படுகிறது.

கடைசியான 12-வது அத்யாயத்தில்தான் ஹஸ்தாமலகர் வருகிருர். அதில் 2 முதல் 4, 11 முதல் 29 (மாதவீயம் XII, 40 முதல் 42, 44 முதல் 62) சுலோகங்கள். காச்மீரத்தில் ஸர்வக்ஞபீடாரோஹணம் 30 முதல் 55 வரை (மாதவீயம் XVI, 55 முதல் 60, 62 முதல் 81) சுலோகங்களில் வர்ணிக்கப்படுகிறது. காமசாஸ்திரவாதமும் அமருகராஜனின் சரீரத்தில் ஆசார்யார் பிரவேசித்ததும் இந்த ஸந்தர்ப்பத்தில் 62, 63, 66, 67, 70, 71 சுலோகங்களில் காணப்படுகின்றன. மாதவீயத்தில் உபயபாரதியுடன் வியவஹாரகாலத்தில் நடந்ததாக இதே சுலோகங்கள் IX, 69, 70, 105, 106ம் X, 17, 18 சுலோகங்களாக இருக்கின்றன. 79 முதல் 82 சுலோகங்களும் மாதவீய XVI, 84 முதல் 87 சுலோகங்களே.

83-வது சுலோகம் விஷயமாக குறிப்பிடவேண்டிய விசேஷமுண்டு. மாதவீயத்தில்

> इत्थं निरुत्तरपदां स विधाय देवीं
> सर्वज्ञपीठमधिरुह्य ननन्द सभ्यः ।

संभावितोऽभवदसौ विबुधैश्च वाण्या
गार्ग्या कहोलमुखरैरिव याज्ञवल्क्यः॥ XVI, 87

என்பதை "வியாஸாசலீய"த்தில்

एवं निरुत्तरपदां स विधाय देवीं
सर्वज्ञपीठमधिरुह्य ननन्द सभ्यः।
मात्रा गिरामपि तथा पुरुषैश्च सभ्यैः
संभावितो रुचितदेशमयं जगाम॥ XII, 82

என்று மாற்றிக் காண்கிறது. இன்னமும் அதிகமாய் மாற்றி "வியாஸாசலீய"த்தில் இருப்பதாக ஆத்மபோதேந்திரர் சொல்லுகிருர்.

एवं निरुत्तरपदां स विधाय देवीं
सर्वज्ञपीठमधिरुह्य मठे स्वकृते।
मात्रा गिरामपि तथोपगतैश्च मिश्रैः
संभावितः कमपि कालमुवास काञ्च्याम्॥

இவ்விதம் காஞ்சியை இழுத்து சுலோகத்தை மாற்றினதுடன் இன்னும் நான்கு சுலோகங்கள் வியாஸாசலீயத்தில் இருப்பதுபோல் உதாஹரிக்கிருர். அந்த சுலோகங்கள் இப்புது வெளியீட்டில் இல்லை. இதுவிஷயமாய் மறுபடியும் பின்னுல் பிரஸ்தாவிக்க நேரிடும்.

இவ்விதம் "வியாஸாசலீய"த்திலுள்ள விஷயங்களை பரிசீலனை செய்து அதில் அப்பிரகிருதமாகவும் அஸப்யமாகவும் இருக்கும் சுலோகங்களை எடுத்து

**விட்டால்** மாதவீயத்திலிருந்து எடுத்தெழுதின **சுலோகங்கள்** தான் மிஞ்சும்; அவைகளும் தாறுமாருக **வரிசையை** மாற்றி போடப்பட்டிருக்கின்றன. 'மாத **வீயத்தில்** 16 ஸர்க்கங்களும் சுமார் 1850 சுலோகங்களும் **எத்தனையோ** விசித்திரமான அழகான கதாஸந்தர்ப்பங் **களும்** உத்தமமான சாஸ்திர விசாரங்களும் கவரக்கூடிய **ஸாஹித்யமும்** இருந்து வருகையில், 12 ஸர்க்கங்கள் 1200க்கு குறைவான சுலோகங்கள் உள்ளதும் ஒரு விதமான ரஸமும் உபதேசமுமில்லாததுமான இந்த "வியாஸாசலீய"த்தின் ஸங்கிரஹம் "சுருக்கம்" மாதவீயம் என்று அம்மடத்தார் இப்பொழுது சொல்லு கிருர்கள். பொதுவாயிருக்கிற சுலோகங்கள் எந்த கிரந்தத்தில் ஸரஸமாய் பொருந்துகின்றனவென்பதை யும் யார் யாரிடமிருந்து எடுத்திருக்கிருரென்பதையும் எந்த ஸாமான்ய வாசகரும் எளிதில் அறிந்துகொள்ள முடியும்.

கும்பகோண மடத்தாருக்கு மாதவீயத்தின் பேரில் ஏற்பட்டிருக்கிற துவேஷத்திற்கும் அதை எப்படியாவது பிராமாண்யமில்லையென்று கங்கணம் கட்டிக் கொண்டி ருப்பதற்கும் காரணம் கொஞ்சமேனும் தெரியவில்லை யாரோ ஒருவர் தான்தான் அதை சில வருஷங்களுக்கு முன் எழுதினதாக ஒப்புக்கொண்டதாக மற்ருெருவர் சொல்வதாகவும் சொல்லிவருகிருர்கள். எழுதினதாகச் சொல்லப்படுகிறவர் பிறப்பதற்கு வெகுநாள் முன்ன மேயே மாதவீயம் பிரஸித்தமாயுள்ளதென்பதை அவர்கள் மறந்துவிடுகிருர்கள். மாதவீய வியாக்யானம்

**தனபதிஸூரி**யால் 1779ல் எழுதி முடிக்கப்பட்டது. **மாதவீயத்தை**த் தழுவி ஸதாநந்தர் எழுதின சங்கர **விஜயம் 1783;** அதற்கும் தனபதிஸூரி வியாக்யானம் **1804ல்** எழுதியிருக்கிறார். மாதவீயத்தின் மற்றொரு **வியாக்யான**மான அத்வைத ராஜ்யலக்ஷ்மீ எழுதப் **பட்டது** 1824ல். 1704க்கு முன்னால் இருந்த கும்பகோண மடம் முக்கிய பிரமாணமான ஆத்மபோதேந்திரரே தன் குருரத்னமாலிகா வியாக்யானத்தில் மாதவர் என்று பெயர் குறிப்பிடாமல் போனாலும் "ஸம்க்ஷேப சங்கரவிஜயம்" என்று குறிப்பிடுகிறார். இந்தப் பெயர் மாதவீயத்திற்கே ஏற்பட்டதென்பது யாரும் ஒப்புக் கொண்ட விஷயம். ஆகையால் மாதவீயத்தை ஏதோ நவீன கிரந்தம் போல் சொல்லத் தலைப்படுவது வெறும் வீண் கார்யம். ஆனால் இக்காலத்தில் பிரசார ரீதியில் மாதவீயத்திற்கு "மூல"மாக "அநாமத்து" கட்டு களிலிருந்து தோண்டியெடுத்தாக வெளியிடுவதற்கும் சுலோகங்களுக்கு துரர்த்தம் செய்வதற்கும் ஏராளமான ஸௌகர்யங்கள் இருந்துவருகிறபடியால் யாரையும் தடுக்கமுடியாது.

மற்ற கிரந்தங்களை விட மாதவீயத்தில் கும்ப கோணம் மடத்தாருக்கு என்ன பாதகமிருக்கிறதென்றும் தெரியவில்லை. அது எவ்விதத்திலும் சிருங்கேரி மட பக்ஷபாதியுமாகாது; அதில் யாரையும் குறைத்துப் பேசவும் இல்லை. நாம் இப்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டிருக்கிற கும்பகோணம் மடம் கொண் டாடும் பாத்தியதைகள் விஷயமாய் மாதவீயத்தை பிரமாணமாகச் சொல்ல நமக்கு அவசியமில்லை. அம்

மடத்தார் பிரமாணமாய் வைத்துக் கொண்டிருக்கிற கிரந்தங்களைக் கொண்டே அந்த பாத்தியதைகள் ஆதாரமற்றவை என்று நன்கு காட்டப் போதுமானது.

இதுவரை காட்டியதிலிருந்து அம்மடத்தார் சொல்லும் காவிய ஆதாரங்கள் மாதவீயத்திலிருந்து எடுக்கப்பட்ட சுலோகங்களுடன் தங்கள் கல்பனை சுலோகங்களையும் சேர்த்து தனி கிரந்தம் போல் காட்டப்படுகின்றனவே தவிர எவ்விதத்திலும் பிரமாண கிரந்தங்களல்லவென்று வாசகர்கள் அறிந்திருப்பார்கள். கல்பனை சுலோகங்கள் என்று நாம் சொன்னது கூட வேறு எங்கேயிருந்தாவது அவர்கள் எடுத்திருக்கக் கூடியதே.



## அத்யாயம்—7

# குருரத்னமாலிகா

கும்பகோண மடத்தார் பிரதான பிரமாணமாகக் கொண்டாடுவது குருரத்னமாலிகா என்கிற கிரந்தம். இதை நெரூரில் ஸமாதி யடைந்திருக்கும் ஸ்ரீ ஸதாசிவேந்திர ஸரஸ்வதீயே எழுதினதாகச் சொல்கிறார்கள். அம்மஹான் செய்திருக்கும் ஐந்து பிரகரணங்களில் இது சேர்ந்தது போல் "வேதாந்த பஞ்ச பிரகரணீ" என்ற பெயருடன் வெளியிட்டார்கள். அவர் எழுதினதாக ஸந்தேஹ மன்னியில் பிரஸித்தி யடைந்திருக்கும் ஆத்ம வித்யா விலாஸம் என்ற கிரந்தத்தை இதில் சேர்த்தார்கள்; அதன் உத்தேசம் மற்ற நான்கும் அவருடையதுதான் என்று ஜனங்கள் நினைக்கட்டுமென்று தெரிகிறது.

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य—श्रीमत्परमशिवेन्द्र-सरस्वतीश्रीचरणशिष्येण विदितवेदितव्येन परोरजसा श्रीसदा-शिवब्रह्मेन्द्रेण कृताः बोधार्या–गुरुरत्नमालिका–आत्मविद्या-विलास-शिवमानसिकपूजा–सपर्यापर्यायस्तवः इति पञ्च कृतीः

மேலும் ஸ்ரீ ஸதாசிவரை அம்மடத்து ஆசார்ய பரம்பரையில் சேர்த்துவிடக்கூட உத்தேசமிருந்திருக்கலாமென்று தோன்றுகிறது. "போதார்யா" என்ற முதல் கிரந்தத்தின் கடைசியில்

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य-श्रीमज्जगद्गुरु-भगवत्पाद-विरुद-श्रीसदाशिवबोधेन्द्रसरस्वती-प्रणीतं बोधार्याप्रकरणम् ॥

என்று காண்கிறது. அம்மஹான் எக்காலத்திலும் "ஜகத்குரு" என்றாவது "பகவத்பாதர்" என்றாவது பிருது வஹித்தவர் இல்லை. மத்தியில் வரும் "போத" பதமும் அவருக்குக் கிடையாது. தவிரவும் இந்த "போதார்யா" என்பது ஆதி ஆசார்யாள் செய்த பிரஸித்தமான "ஸ்வாத்ம நிருபணம்" என்ற கிரந்தமே தான். இதை ஸதாசிவர் செய்ததாகச் சொல்வது கொஞ்சமேனும் ஒழுங்கல்ல. "ஸபர்யா பர்யாயஸ்தவம்" என்கிற 5-வது கிரந்தத்தின் 26-வது சுலோகத்தைக் கவனித்தால் அதுவும் ஆதிசங்கருடையதாக இருக்க வேண்டுமென்று தெரிகிறது. அதில் இதைச் செய்தது பாஷ்யகாரர் என்று கண்டிருக்கிறது. ஸதாசிவருக்கு அந்தப் பெயர் கிடையாது.

यतीन्द्राणां राजा जयति भगवान् भाष्यकृदसौ
नमस्यः प्राज्ञानां सदसि य इमामुज्ज्वलपदाम् ।
सपर्यापर्यायस्तुतिमिति विधाय श्रुतिशिरः—
प्रसिद्धन्यायार्थामलसमनुजग्राह सुजनम् ॥

இதை வெளியிட்டவர் வெகுஜாக்கிரதையாக இந்தச் சுலோகம் சில பிரதிகளில் இல்லையென்றும் ஸதாசிவேந்திரரையே கிரந்த கர்த்தாவென்று சொல்வதாகவும் ஒரு குறிப்பில் கண்டிருக்கிறார். சிவமானஸிக பூஜா என்ற ஒரு கிரந்தத்தையும் இவ்வைந்தில் சேர்த்திருக்கிறார். எல்லாம் ஸதாசிவருடைய கிருதிகளென்று நினைக்க

வேண்டுமென்று அவர் வாஸ்தவமாக செய்திருக்கிற ஆத்ம வித்யாவிலாஸத்தை இவைகளின் மத்தியில் கண்டிருப்பதுடன் அவர் செய்த ஆறு கீர்த்தனங்களையும் இந்த புஸ்தகத்தில் சேர்த்து அச்சிட்டிருக்கிறார்கள். ஆனால் இதே வெளியீட்டில் அம்மடத்து "ஜகத்குரு பரம்பராஸ்தவம்" "ஜகத்குரு பரம்பரா நாமாவளி" என்றவைகளையும் அம்மடத்திலுள்ள நான்கு தாம்ர சாஸனங்களையும் சேர்த்து அச்சிட்டிருப்பதால், இதன் உத்தேசமே அம்மடத்து மஹிமையை பிரகடனம் செய்வதற்கென்று நன்குதெரிகிறது.

ஸ்ரீ ஸதாசிவேந்திரருடைய கிரந்தங்கள் யாவற்றிலும் காணப்படும் அஸாதாரணமான ஸரஸமான வாக்கு சைலீ இந்த குருரத்ன மாலிகையில் கொஞ்சமேனும் இல்லையென்பது முதலில் குறிப்பிடத் தக்கது. அம்மடத்தில் ஆசார்யராக இருந்ததாகச் சொல்கிற ஆத்ம பிரகாசேந்திர ஸரஸ்வதீ என்ற மஹாதேவேந்திர ஸரஸ்வதியின் சிஷ்யரான ஆத்மபோதேந்திர ஸரஸ்வதீ என்று ஒருவர் 1720ல் இந்த கிரந்தத்திற்கு வியாக்யானம் எழுதியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மூலகிரந்தத்தை ஸதாசிவேந்திரர் எழுதினது அம்மடத்து ஆசார்யரான பரமசிவேந்திர ஸரஸ்வதியின் சிஷ்யரும் அவருக்குப்பின் ஆசார்யருமாயிருந்த ஆத்மபோதேந்திர ஸரஸ்வதியின் வேண்டுகோளின் பேரில் என்கிறார்கள். ஸதாசிவேந்திரரின் குருவான பரமசிவேந்திர ஸரஸ்வதீ அம்மடத்தில் இருந்ததுண்டா என்பது பின்னால் விசாரிக்கப்படும்.

இந்த கிரந்தத்தை மேலாக வாசித்துப் பார்த்தாலே, காச்மீரம், மகதம், உஜ்ஜயினீ முதலான வடக்கேயுள்ள

பிரதேசங்களிலிருந்த அரசர்களைப்பற்றி பிரஸ்தாவம் காணப்படுமே தவிர, சேர, சோழ, பாண்டிய கேரள தேசங்களைப் பற்றியாவது, காஞ்சியைப் பற்றியாவது, அவைகளிலுள்ள அரசர்களைப் பற்றியாவது, அதிக பிரஸ்தாவம் காணப்படாது. இந்த குரு பரம்பரை தயாரித்தவரிடம் தென் தேசத்து அரசர்களின் விவரம் அகப்படவில்லையென்று தெரிகிறது. இன்னும் கொஞ்சம் கவனித்துப் பார்த்தால் வடதேசத்து அரசர்களின் விவரங்களையும் கல்ஹணர் செய்திருக்கும் ராஜதரங்கிணீ என்ற கிரந்தத்திலிருந்தே எடுத்திருக்கிறாரென்பதும் தெளிவாகும். ராஜ பரம்பரையை சொல்லக்கூடியதாக ஸம்ஸ்கிருதத்தில் இந்த ராஜதரங்கிணீ தான் இருந்தது. தன் குரு பரம்பரைக்கு சரித்திர ரீதியாக அநுவாதமிருக்க வேண்டுமென்று நினைத்து இப்புஸ்தகத்தையே வைத்துக்கொண்டு பரம்பரை தயாரித்திருப்பதாகத் தெரிகிறது. வெறும் கதைகள் விக்கிரமார்க்க சரித்திரம் முதலான புஸ்தகங்களிலும் ஏராளமாயிருக்கும் நாடோடிக் கதைகளிலும் கிடைக்கின்றன. இவைகளையும் வைத்துக்கொண்டு பல பெயர்களைக் கோர்த்து அழகாக ஒரு குரு பரம்பரை ஜோடிப்பதில் சிரமமேயில்லை. அந்த "குரு"க்கள் பிறந்த தினம், ஸித்தி தினம், பீடத்திலிருந்த காலம், பெற்றோர்கள் பெயர்கள், பூர்வாசிரமப் பெயர், ஜாதி, குலம், ஊர், விசித்திர ஸம்பவங்கள், முதலானவைகளைக் கல்பித்துச் சொல்வதிலும் சிரமம் இல்லை. யார் இவைகளை சரிபார்க்கப் போகிறார்கள்? வெகுகாலத்திற்குமுன் நடந்ததாகச் சொல்லும் விஷயங்களை எப்படி சரிபார்க்க முடியும்? இவைகள் பொய்யென்று யாரால் ருசு செய்யப்படும்? என்கிற தைர்யமிருந்தால்

எதற்கும் துணியலாம். ஆனாலும் கல்பனைக்கும் ஒரு வரம்பு வைத்துக்கொள்ள வேண்டும். இதை மறந்து விட்டால் கல்பனையென்பது ஸ்பஷ்டமாகி பிரயத்தினம் வீணாகப் போய் பரிதபிக்கக் கூடிய நிலைதான் ஏற்படும்.

இம்மடத்தின் மஹிமைக்கும் இம்மட்த்து ஆசார்யர் களின் மஹிமைக்கும் பிரமாணமாய் ஆத்மபோதேந்திரர் குறிப்பிடும் வாக்கியங்களுக்குரிய மூலகிரந்தங்கள் "இப்பொழுது அகப்படவில்லை" என்று N. வெங்கட ராமன்சொல்கிறார். இனிமேல் தயாரிக்கப்படும் என்ற அர்த்தத்தில் இப்படி சொல்லவில்லை யென்று நம்புகி றோம். 18-வது நூற்றாண்டில் ஆத்மபோதேந்திரருக்கு உதாஹரிக்கக் கிடைத்த இவ்வளவு முக்கிய பிரமாண மான கிரந்தங்கள் இப்பொழுது "அகப்படவில்லை" என்றால் துக்கிக்கத் தக்கதே. அவைகள் மறைந்து போனது மாத்திரமில்லாமல் ஆத்ம போதேந்திரரைத் தவிர வேறு யாருக்கும், அவருக்கு முன்னமேயோ பின்னாலோ கண்ணில் தென்படவில்லை யென்றால் ஆச்சரியமே.

பரம்பரை தயாரித்தவர் சுலோகம் எழுதுவதில் கெட்டிக்காரர் என்பது அவர் உதாஹரிக்கும் 'பிரமாண' வாக்கியங்களினாலேயே தெரிகிறது. அப்படியே அவர் வியாகரணப் பயிற்சியுள்ளவரென்றும் தெரிகிறது. குரு ரத்னமாலிகை, அதன் வியாக்யானம், "பிரமாண" வாக் கியங்கள், எல்லாவற்றிலும் அபூர்வமான பதப் பிரயோ கம் காணப்படுவது அவருடைய வியாகரண ஞானத்தை வெளிப்படுத்துவதுடன், எல்லாமே அவருடைய கிருதி

கள்தான் என்பதையும் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கிறது. அவருக்கு தர்ம சாஸ்திரஞானம் மிகவும் ஸ்வல்பம் என்றும் தெரிகிறது.

அவர் உதாஹரிக்கும் பிரமாணங்களை இவ்விதம் வகுக்கலாம்.

A. **பெயரில்லாதது**

1. ஆசார்ய விஜயம். இது ஆனந்தகிரி சங்கர விஜயம் என்று தெரிகிறது.
2. ஜகத்குரு கதா ஸங்கிரஹம். வியாக்யானம் 40-வது பக்கத்தில் பூராவும் காண்கிறது.
3. ஸத்குரு ஸந்தான பரிமளம்.

B. **பிரஸித்தியில்லாத கிரந்த கர்த்தர்களின் பிரஸித்தியில்லாத கிரந்தங்கள்.**

ஏற்கெனவே சித்ஸுகரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் பிரஹத் சங்கர விஜயத்தைத் தவிர ஆத்மபோதேந்திரர் உதாஹரிப்பது.

1. பிராசீன சங்கர விஜயம். அம்மடத்து 28-வது ஆசார்யரான மூக சங்கரேந்திரர் எழுதினதாம். மூக பஞ்சசதீ எழுதின மூலகவி இவர்தான் என்றும் கல்பிக்கிறார்கள்.
2. புண்ய சுலோக மஞ்சரீ. அம்மடத்து 56-வது ஆசார்யரான ஸர்வக்ஞ ஸதாசிவேந்திரர் எழுதினதாம். அம்மடத்தில் ஆசார்யர்களாக இருந்ததாக சொல்லப்படுகிற ஒவ்வொருவரைப்பற்றி

யும், முக்கியமாய் அவர்களுடைய ஸித்தி தினத்தைப் பற்றியும், விவரங்கள் காண்கின்றன. அவருக்கு இவைகள் எங்கேயிருந்து கிடைத்தனவென்று தெரியவில்லை. பின்னுள்ள ஆசார்யார்களைக் குறித்து ஆத்மபோதேந்திரரே இதற்கு ஒட்டுப் போட்டிருக்கிறார்.

3. மணிப்பிரபா. ராமில்லர் எழுதினது. இவர் குதிரைக் காஸாரியாக இருந்து "மூகசங்கரேந்திர"ருடைய அனுக்ரஹத்தினால் கவியாக மாறினவராம்.

4. ஹயக்ரீவ வதம். இது எழுதினது மேது அல்லது மேந்தர். இவர் யானைப்பாகனாக இருந்து அதே ஆசார்யரின் அனுக்ரஹத்தினால் கவியானவராம்.

5. ஸித்த விஜயம். மந்த பட்டர் எழுதினது. அம் மடத்து 23-வது ஆசார்யரான ஸச்சிதானந்தகனரின் சரித்திரமாம்.

6. வைத்யாபிதான சிந்தாமணி. காச்மீரத்தில் பெரிய வைத்தியராக இருந்தாகச் சொல்லப்படும் குஹலர் எழுதினதாம்.

7. கௌடபாத உல்லாஸம். ஹரிமிச்ரர் எழுதின கௌடபாதருடைய சரித்திரமாம்.

8. வித்யா சங்கர விஜயம். அபிநவ உத்தண்ட வித்யாரண்ய பாரதீ எழுதினது. இதை ஆத்ம போதேந்திரர் கண்டிப்பதினால் இது கல்பிதம் தானா என்று நிச்சயமாய் சொல்லமுடியவில்லை.

**C. பிரஸித்த கிரந்த கர்த்தாக்கள் செய்ததாகச் சொல்லும் அப்பிரஸித்த கிரந்தங்கள்.**

1. மஹா புருஷ விலாஸம் : பவபூதி. இதில் அம்மடத்து 31-வது ஆசார்யர் பிரஹ்மானந்தகனரைப் பற்றியும் 32-வது ஆசார்யரான சிதாநந்த கனரைப்பற்றியும் புகழ்ந்திருக்கிறதாம்.

2. சங்கரேந்திர விலாஸம் : வாக்பதி பட்டோத்படர். இது அம்மடத்து 38-வது ஆசார்யரான அபிநவ சங்கரருடைய சரித்திரமாம்.

3. ஸர்வக்ஞ விலாஸம் ; ஸர்வக்ஞாத்மா.

4. குரு விஜயம் : கிருஷ்ண மிச்ரர்

5. பக்தி கல்ப லதிகா : ஜயதேவர்.

6. சாந்தி விவரணம் : அத்வைதாநந்தர்.

7. குரு பிரதீபம் : அத்வைதாநந்தர்.

8. சிவசக்தி ஸித்தி : ஸ்ரீ ஹர்ஷர்.

9. ஸ்தைர்ய விசாரணப் பிரகரணம் : ஸ்ரீஹர்ஷர். ஸ்ரீ ஹர்ஷர் தன்னுடைய நைஷத காவ்யத்தில் 8, 9 பெயருள்ள கிரந்தங்கள் உள்பட அநேக கிரந்தங்கள் எழுதியிருப்பதாகச் சொல்கிறுர். ஆனல் நைஷதத்தையும் கண்டனகண்ட காத்யத்தையும் தவிர மற்ற புஸ்தகங்கள் அகப்படவில்லை. 8-ம், 9-ம் ஆத்மபோதேந்திரருக்கு மாத்திரம் அகப்பட்டனபோலும்.

D. திருத்தங்கள்.

1. சிவரஹஸ்யம்.

2. ஆனந்தகிரி சங்கர விஜயம்.

3. வியாஸாசலீய சங்கர விஜயம்.

4. கேரளீய சங்கர விஜயம்.

5. சங்கரானந்தருடைய பிரஹதாரண்ய உபநிஷத் தீபிகை.

6. ஸ்ரீ ஹர்ஷரின் நைஷதம்.

இவைகள் அந்தந்த இடங்களில் விசாரிக்கப்படும்.


இவ்விதம் நான்கு வகையாக "பிரமாண"ங்களை உதாஹரிப்பது போதாதென்று, சில நவீன ஆராய்ச்சிக்காரர்களும் ஆதி ஆசார்யரையே தூஷிக்கத் தலைப்பட்டவர்களும் சொல்லும் வார்த்தைகளுக்கும் 'தீர்மான"ங்களுக்கும் மதிப்புக் கொடுத்து ஸ்ரீ சங்கர பகவத்பாதரையே ஐந்தாகப் பிரித்து அவ்வைந்து பேர்களும் அம்மடத்தில் இருந்ததாக மஹிமை கொண்டாடுகிறார்கள். காலடியில் பிறந்து பாஷ்யம் எழுதினது ஒருவராம். அம்மடத்தில் 7-வது ஆசார்யராயிருந்து வாஸ்தவமாக ஷண்மத ஸ்தாபனம் செய்து சிருங்கேரியில் விசுவரூபரை நியமித்த "கிருபாசங்கரர்" இரண்டாவதாம். கேரள அரசன் குலசேகரர் என்பவரை அனுக்ரஹித்து கவியாகச் செய்து அம்மடத்து 14-வது ஆசார்யராகவிருந்த "உஜ்ஜ்வல சங்கரர்" மூன்றுவதாம். நான்காவது சங்கரர் பஞ்சசதீ யியற்றிய மூககவி

பின்னர் மூக சங்கரேந்திரர் என்ற பெயருடன் அம் மடத்து 18-வது ஆசார்யராம். ஐந்தாவது சங்கரர், சிதம்பரத்தில் விசுவஜித் இறந்து மூன்று வருஷங்களுக் குப் பின் அவருடைய பார்யை விசிஷ்டையிடம் 788ல் பிறந்து, காச்மீரத்தில் ஸர்வக்ஞபீடம் ஏறி, ஹிமாலயம் தத்தாத்ரேய குஹையில் மறைந்தவராம்.

இவ்விதம் ஐந்து சங்கரர்களும் போதாதென்று ஸுரேசுவராசார்யரையும் மற்றும் அத்வைதிகளில் பிர ஸித்தமான கிரந்த கர்த்தாக்களையும் அப்பரம்பரையில் சேர்க்க வேண்டுமென்று தோன்றிற்று. ஸம்ஸ்கிருத கிரந்த கோசங்களில் கிடைக்கக்கூடிய இன்னம் அநேகம் பெயர்களை வைத்துக் கொண்டு, இன்னம் அநேகம் பெயர்களையும் ஸம்பவங்களையும் கல்பிக்கக்கூடிய புத்தி சக்தியுடன், சரித்திர அனுவாதத்திற்கு கையில் ராஜ தரங்கிணியும் இருக்கும்போது, சுலோகங்கள் எழுதுவ தற்கு வேண்டிய பாண்டித்தியமும் இருக்க, இந்த விசால மான பூமியில் தனக்கு மாத்திரம் கண்ணுக்குப்படும் "பிரமாண" கிரந்தங்கள் இருக்க, கூசாமல் சொல்ல நாக்கும் எழுத கையும் இருக்க, வேறுவிதமான தூண்டு தலும் ஸௌகர்யமும் ஏற்பட்டிருக்க, பார்ப்பதற்கு வெகு அழகாக துடர்ச்சியாக நம்பக்கூடிய வகையில் ஒரு குரு பரம்பரை தயாரிப்பது அதிக சிரமமில்லை. ஆனால் இந்த பரம்பரை எவ்வளவு தூரம் வாஸ்தவமாக நம்பக் கூடியதென்பதையும், அம் மடத்தின் கௌரவத்தை கல்பித்து உயர்த்திக் காட்ட எவ்வளவு பிரயத்தினப் பட்டிருக்கிறாரென்பதையும், அவருடைய பேராசையினா லேயே அவருடைய அசட்டுத்தனம் எப்படி வெளியாகிற

தென்பதையும் பின்னால் விளக்குவோம். நெரூர் மஹானான ஸ்ரீ ஸதாசிவேந்திரர் இந்த கிரந்தத்தை எழுதியிருக்கவே முடியாதென்பதற்குள்ள வேறு நியாயங்களையும் பிறகு காட்டுவோம்.

ஸுரேசுவரர் பரமஹம்ஸ ஸன்யாஸியல்லவென்று சொல்வதிலிருந்து ஆத்மபோதேந்திரருக்கு ஸாமான்ய ஸன்யாஸ தர்மம் கூடத் தெரியாதென்று தெரிகிறது. அதினால் அவர் ஸ்வயம் ஸன்யாஸியில்லையென்றும் "ஆத்மபோதேந்திரர்" என்கிற பெயரே கல்பிதமென்று தோன்றுகிறது. அப்படியே அவர் எழுதின காலம் 1720 A. D. என்பதும் குறைந்தது 100 வருஷம் முன் தேதி போட்டிருக்கலாமென்றும் தோன்றுகிறது.



## அத்யாயம்—8

# ஸ்ரீ விசுவரூபாசார்யார்

ஸ்ரீ சங்கர பகவத்பாதருக்கு அடுத்தபடியாக அத்வைதாசார்யர்களுக்குள் ஸ்ரீ ஸுரேசுவராசார்யார் வெகு மேன்மையடைந்தவர். அவர் வயதில் பெரியார் என்பது மாத்திரமில்லை; ஆசார்யாருடைய சிஷ்யர்களுக்குள் மிக்க பாண்டித்யம் வாய்ந்தவர். மற்ற சிஷ்யர்களெல்லாம் ஆசார்யாரைத் தேடப் போனார்கள்; இவரை சிஷ்யராக்கக் கருதி ஆசார்யரே அவரைத் தேடிப் போகும்படியிருந்தது; இதிலிருந்தே இவருடைய மேன்மை வெளியாகும்.

*ஸ்ரீ சங்கரர் சிருங்கேரியில் "சில வருஷங்கள்" தங்கினதாக குருரத்னமாலிகையிலேயே காண்கிறது*

कलयन् निलयं च तुङ्गभद्रा-
तटिनीरोधसि वेधसः स्त्रिया द्राक् ।
कतिचिच्छरदोऽत्यवीवहद्यो
यतिराट् क्वापि मठे स मेऽस्तु सद्यः ॥ (சு 25)

*வியாக்யாதா "சில" என்பது "பன்னிரண்டு" என்று சொல்லி அதற்கு*

अब्दान् द्वादश सोऽत्यवीवहदधिव्याख्यानसिंहासनं
शिष्यान् स्वान् विनयन् स्वभाष्यसरणौ श्रीतुङ्गभद्रातटे ॥

என்ற ஒரு வாக்கியத்தை உதாஹரிக்கிறார். ஸ்ரீ சங்கரர் வியாஸ பகவானை தர்சிக்கும்போது அவருக்கு வயது 16; அவரிடமிருந்தே இன்னம் 16 வயது பெற்றார்; இதன் பிறகு அவர் பாஷ்ய பிரசாரத்திற்காக புறப்பட்டது. இந்த 16 வருஷங்களில் 12 வருஷ காலம் சிருங்கேரியில் இருந்தார் என்றால் அவருக்கு சிருங்கேரியில் எவ்வளவு பற்றுதல் இருந்திருக்கவேண்டும்? இவ்விதம் தன்னைக் கவர்ந்த அந்த புண்ய க்ஷேத்திரத்தில் ஏற்படுத்தும் சிஷ்ய பரம்பரைக்கு தன்னுடைய சிஷ்யர்களில் உத்தமரை நியமிப்பதே நியாயமல்லவா? அப்படியே ஆனந்தகிரி சங்கர விஜயமும் கூறுகிறது

तत्र परमगुरुः द्वादशाब्दं विद्यापीठे स्थित्वा बहुशिष्येभ्यः शुद्धाद्वैतविद्यायाः सम्यगुपदेशं कृत्वा तदनन्तरं कंचित् शिष्यं सुरेश्वराख्यं पीठाध्यक्षं कृत्वा स्वयं निश्चक्राम।

பரமகுருவானவர் அந்த வித்யா பீடத்தில் 12 வருஷ காலம் இருந்து அநேக சிஷ்யர்களுக்கு சுத்தமான அத்வைத வித்யையை நன்கு உபதேசம் செய்துவிட்டு அதன் பிறகு ஸுரேசுவரர் என்று பெயருடைய ஒரு சிஷ்யரை பீடாதிபதியாகச் செய்துவிட்டு, தான் புறப்பட்டார்.

இப்பால் இவ்வாக்யத்தை இவ்விதம் திருத்திச் சொல்கிறார்கள்

तत्रैव परमगुरुः द्वादशाब्दकालं विद्यापीठे स्थित्वा बहु-शिष्येभ्यः शुद्धाद्वैतविद्यायाः सम्यगुपदेशं कृत्वा तदनन्तरं

पद्मपादाख्यं कंचित् शिष्यं पीठाध्यक्षं कृत्वा भोगनामकलिङ्गं एतस्मिन् पीठे निक्षिप्य स्वयं निश्चक्राम ।

பரமகுருவானவர் அங்கேயே வித்யா பீடத்தில் 12 வருஷ காலம் இருந்து அநேக சிஷ்யர்களுக்கு சுத்தமான அத்வைத வித்யையை நன்கு உபதேசம் செய்துவிட்டு, அதன் பிறகு பத்மபாதர் என்ற பெயருடைய ஒரு சிஷ்யரை பீடாதிபதியாகச் செய்துவிட்டு போகம் என்ற பெயருள்ள லிங்கத்தை இந்த பீடத்தில் வைத்துவிட்டு, தான் புறப்பட்டார்.

இத்திருத்தலின் உத்தேசம் ஸுரேசுவரரை சிருங்கேரியிலிருந்து எடுத்துவிடவேண்டுமென்பதும் சிருங்கேரியில் ஒரு "போக லிங்க"த்தை நுழைக்கவேண்டுமென்பதுமே என்று தெளிவாய்த் தெரிகிறது. இதற்கு பக்க பலமாக "மார்க்கண்ட ஸம்ஹிதை"யில் பிரமாணம் தோண்டியெடுத்தார்கள்

श्रीदेशिकः पद्मपदं स्वशिष्यं
पाषण्डखण्डार्थमतिप्रचण्डम् ।
शृङ्गाद्रिदेशे श्रिततुङ्गभद्रे
नियोजयामास स शंकरार्यः ॥

அந்த சங்கரராகிய ஆசார்யர் பாஷண்டர்களை கண்டிப்பதற்காக மிகவும் சக்தி வாய்ந்த தன்னுடைய சிஷ்யரான பத்மபாதரை துங்கபத்ரையை ஒட்டின சிருங்ககிரி தேசத்தில் நியமித்தார்.

பத்மபாதரை சிருங்கேரிக்கு நியமித்ததாக வேறு எங்கேயும் சொல்லப்படவில்லை. ஆனால் குருரத்ன மாலிகையில் ஸுரேசுவரர் சிருங்கேரியில்வெகுகாலம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. "பிருத்வீதவர்" என்பவரை ஸ்ரீ சங்கரர் சிருங்கேரியில் நியமித்ததாகவும் துவாரகா மடத்தில் பத்மபாதரை நியமித்ததாகவும் சொல்லப்படுகிறது. சிருங்கேரியில் ஸுரேசுவரர் தங்கினது சிருங்கேரியிலிருந்த "பிருத்வீதவர்", "விசுவரூபர்" இவர்களுடைய பிரார்த்தனையின் பேரிலாம்.

पृथिवीधवपद्मपादहस्ता-
मलकानन्दगिरीनतिप्रशस्तान् ।
चतुरोऽकृत यश्चतुर्षु पीठे-
ष्वतुलां नश्चतुरो गिरं स देयात् ॥ (சு 32)

பிருத்வீதவர், பத்மபாதர், ஹஸ்தாமலகர், ஆனந்தகிரி என்று வெகு பிரஸித்தி பெற்ற நால்வரையும் நான்கு பீடங்களிலும் எவர் நியமித்தாரோ அந்த புத்திமான் நிகரற்ற வாக்கை நமக்கு கொடுக்கட்டும்.

இதற்கு வியாக்யானம் செய்கையில் ஆத்மபோதேந்திரர்

पृथिवीधवः पूर्वमेव शृङ्गगिरौ निवेशितः, पद्मपादः द्वारकायां, हस्तामलकः जगन्नाथे, आनन्दगिरिः बदरिकाश्रमे

பிருத்வீதவர் முன்னாலே சிருங்கேரியில் நியமிக்கப்பட்டார்; துவாரகையில் பத்மபாதர், ஜகன்னாதத்தில் ஹஸ்தாமலகர், பதிரிகாசிரமத்தில் ஆனந்தகிரி.

என்று வியக்தமாய் எடுத்துச் சொல்லுகிருர். குருரத்ன மாலிகை:

स्थिरबोधघनप्रतापदाम्नो :
गुरुपृथ्वीधवविश्वरूपनाम्नो: ।
चिरमर्थनयोपतुङ्गभद्रं
सरसः सौतु सुरेश्वरः स भद्रम् ॥ (சு. 34)

பிருத்வீதவர், விசுவரூபர் என்ற பெயருடைய ஸ்திர போதகனர், பிரதாபதாமர் இவர்களுடைய பிரார்த்தனையின்பேரில் துங்கபத்ரா ஸமீபத்தில் வெகுநாள் இருந்த ஸுரேசுவரர் க்ஷேமத்தைக் கொடுக்கட்டும்.

இதிலிருந்து சிருங்கேரியில் பத்மபாதர் என்ற விஷயம் குருரத்னமாலிகையும் அதன் வியாக்யானமும் ஏற்பட்ட காலத்தில் உத்பத்தியாகவில்லையென்று தெரிகிறது.

கும்பகோணம் ஸர்வோத்தம மடமென்று சொல்லிக் கொள்ளவேண்டுமென்று நினைக்கையில், ஸ்ரீ சங்கரர் ஸுரேசுவரர் இருவருமே தங்களைச் சேர்ந்தவர்களென்று சொல்ல நினைப்பது ஸஹஜம். ஆனுல் சிருங்கேரியில் ஸுரேசுவரர் இருந்ததாக இருந்து வந்த பிரஸித்தியை நிராகரிக்க முடியாமலிருந்தபோது, ஸுரேசுவரர் எங்கள் மடத்தில் இருந்தார் என்று துவாரகா மடத்தாரும் சொல்லிவந்தபடியால், 'ஸமரஸ' மாய் ஆத்மபோதேந்திரர் ஸுரேசுவரரை எந்த மடத்திலும் பீடாதிபதியாக வைக்கவேண்டாமென்று தீர்மா

**வித்துவிட்டார்.** அவருக்கு எல்லா மடங்களின் மேல் **பார்வை மாத்திரம்** கொடுக்கப்பட்டதாகவும், அதனால் **அவர்** அங்கங்கு கொஞ்ச நாள் தங்கும்படி ஏற்பட்ட **தாகவும்,** அதினாலே அவரை ஸ்ரீ சங்கரருக்குப் பிறகு **அவரவர்கள்** பரம்பரையிலும் காட்டுகிறார்களென்றும், ஆத்மபோதேந்திரர் சொல்கிறார். பதரியிலாவது பூரி **யி**லாவது ஸுரேசுவரர் இருந்ததாக யாரும் சொல்ல வில்லையென்பது குறிப்பிடத் தக்கது.

सुरेश्वरस्य सकलविबुधशिरोमणित्वेऽपि स्वपथपथैक-प्रापिताश्रमतया स्वयमपरमहंसतया च न क्वाप्याचार्यतया प्रतिष्ठितता ॥

अयं सुरेश्वरः स्वयं अपरमहंसतया परमहंसैकसमध्यासनीये जगद्गुरुणा स्वपीठे शिष्यपीठेषु वा न निवेशितोऽपि स्वसमानवैदुष्यभाजनतया महायोगितया च सर्वपीठव्यवस्थागोपने नियुक्तः तत्र तत्र कियन्तंचित् कालमुवास। ततः तन्मठीयैः स एव परमाचार्यात् परं आचार्यपरम्परायां पठ्यते इति वस्तुस्थितिः ॥

இதில் ஸுரேசுவரர் பீடாதிபத்யத்திற்கு அர்ஹரில்லா மல் போனதற்குக் காரணம் அவர் பந்தயத்தின்பேரில் ஸன்யாஸம் வாங்கிக்கொண்டாரென்றும் அவர் பரம ஹம்ஸர் இல்லையென்றும் சொல்லப்படுகிறது. முதல் காரணம் கொஞ்சமேனும் உசிதமில்லையென்பதற்கு அவருடைய அத்புதமான வார்த்திகங்களும், நைஷ் கர்ம்ய ஸித்தியும், மானஸோல்லாஸமும், மற்றும் கிரந்

தங்களும் அத்தாக்ஷியாகும். ஸுரேசுவரர் ஏன் பரமஹம்ஸர் இல்லையென்று ஆத்மபோதேந்திரர் விளக்கவில்லை. கிரஹஸ்தராயிருந்து ஸன்யாஸம் எடுத்துக்கொண்டபடியால் பரமஹம்ஸரில்லை போல N. K. வெங்கடேசம் பந்துலு சொல்கிறார். இது எந்த சாஸ்திரத்திலும் கிடையாது.

எப்படியும் ஆத்மபோதேந்திரர் காலத்திற்கு முன்னமேயே ஸுரேசுவரர் சிருங்கேரி மடத்தில் இருந்ததான பிரஸித்தி இருந்ததானது வியக்தமாய் தெரிகிறது. அவருடைய வியாக்யான காலம் 1720 என்றும் சொல்லப்படுகிறது. அப்படியிருந்தும் கும்பகோண தீவிர அபிமானி T. S. நாராயணய்யர் என்பவர் "ஸுரேசுவரரை சிருங்கேரி மடத்தில் சேர்க்கப்பார்ப்பது 1856-க்குப் பின்னால்தான். அதாவது யாவரும் சங்கரருக்கு அடுத்தாப்போல் பிருத்வீதவர் அல்லது விசுவரூபர் என்றுதான் நம்பியிருந்தார்கள் ...... விசுவரூபர்தான் ஸுரேசுவரர் என்று சொல்ல முடியாது. அவர்கள் இரண்டு பேர்களும் வெவ்வேறே பிராசீனமான எல்லா சங்கர விஜயங்களிலும் விசுவரூபர் யமனுடைய அவதாரமென்றும் மண்டனமிச்ரர் என்ற ஸுரேசுவரர் பிரஹ்ம தேவனின் அவதாரமென்றும் வியக்தமாய் சொல்லப்பட்டிருக்கிறது" என்கிறார். இவருடைய பிரமாணங்களைப்பற்றி தனியாக விமரிசனம் செய்ய அவசியமில்லை. விசுவரூபரும் ஸுரேசுவரரும் ஒருவரேயென்று காட்டிவிட்டால், அவர்கள் வெவ்வேறு தேவதைகளின் அவதாரங்கள் என்றும் சிருங்கேரியிலிருந்தது விசுவரூபரே தவிர ஸுரேசுவரர் அல்லவென்றும் வாதங்கள் யாவை

யும் அந்த வாதங்களுக்கு பிரமாணங்களாக சொல்லப் படும் கிரந்தங்கள் யாவையும் தானே அடிபட்டுப்போய் விடும்.

(1) பிரஸித்தமான மாதவீயம், ஸதானந்தர் எழுதியது, கோவிந்தநாதீயம் எல்லாம் ஸுரேசுவரரை விசுவரூபர் என்றே வியவஹரிக்கின்றன. கும்பகோண மடத்தார் மிகவும் பிரமாணமென்று வைத்துக்கொண்டிருக்கிற "வியாஸாசலீயம்", "சங்கராப்யுதயம்" இவைகளும் அப்படியே சொல்கின்றன வென்பதை முதலில் குறிப்பிடவேண்டும்.

(2) ஸ்ரீ சங்கர பகவத் பாதருடைய தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்திற்கு ஸுரேசுவரர் எழுதியிருக்கும் மானஸோல்லாஸம் என்றவார்த்திகத்திற்கு ராமதீர்த்தர் வியாக்யானம் எழுதவாரம்பிக்கையில்

तच्छिष्यैः विश्वरूपाचार्यैः सुरेश्वरापरनामभिः तत्पद्य-बन्धार्थतत्त्वं तात्पर्यतो मानसोल्लासनाम्ना वार्त्तिकात्मना ग्रन्थ-संदर्भेण आविष्कृतम् ।

என்று விசுவரூபருக்குத்தான் ஸுரேசுவரர் என்ற பெயர் என்று வியக்தமாய் சொல்லியிருக்கிருர்.

(3) மாதவாசார்யார் பராசர மாதவீய வியாக்யானத்தில்

इदं च वाक्यं नित्यकर्मविषयत्वेन वार्त्तिके विश्वरूपाचार्यः उदाजहार —

आम्रे फलार्थे इत्यादि ह्यापस्तम्बस्मृतेर्वचः
फलवत्त्वं समाचष्टे नित्यानामपि कर्मणाम् ॥ इति ।

என்று ஸுரேசுவரரால் செய்யப்பட்டதென்று நிர்விவாதமாய் ஒப்புக் கொள்ளப்படும் பிரஹதாரண்யக ஸம்பந்த வார்த்திகத்தில் உள்ள சுலோகத்தை "விசுவரூபாசார்யர் சொல்கிறார்" என்று கண்டிருக்கிறது.

(4) அப்படியே வித்யாரண்யர் விவரணப் பிரமேய ஸங்கிரஹத்தில்

तत्तारतम्यं च तदेतत् प्रेयः पुत्रात् इत्यस्याः श्रुतेः व्याख्यानावसरे विश्वरूपाचार्यैः दर्शितम् —
वित्तात् पुत्रः पुत्रात् पिण्डः पिण्डात् तथेन्द्रियम् ।
इन्द्रियेभ्यः प्रियः प्राणः प्राणात् आत्मा परः प्रियः ॥ इति ।

என்று ஸுரேசுவரருடைய பிரஹதாரண்யக வார்த்திக சுலோகத்தை விசுவரூபாசார்யருடையதாகச் சொல்கிறார்

(5) அப்படியே வித்யாரண்யர் ஜீவன் முக்தி விவேகத்திலும்

तदाहुः विश्वरूपाचार्याः —
शुभैराप्नोति देवत्वं निषिद्धैर्नारकीं गतिम् ।
उभाभ्यां पुण्यपापाभ्यां मानुष्यं लभतेऽवशः ॥ इति ।

என்று ஸுரேசுவரர் செய்திருக்கும் நைஷ்கர்ம்ய ஸித்தியிலுள்ள சுலோகத்தை விசுவரூபருடையதாகச் சொல்கிறார்.

(6) யாக்ஞ்ய வல்க்ய ஸ்மிருதிக்கு விசுவரூபாசார்யர் பாலக்ரீடை என்றொரு வியாக்யானம் எழுதியிருக்கிறார். அதை வெளியிட்ட திருவாங்கூர் ஸம்ஸ்தானம் மஹா மஹோபாத்யாய T. கணபதி சாஸ்திரிகள் விசுவரூபர் என்பது ஸுரேசுவரரே என்று சொல்வதுடன் பாலக்ரீடையின் பேரில் உள்ள வசனமாலா என்ற வியாக்யானத்தில்

> अवनम्य मनुसुरेश्वर–
> योगीश्वरतीव्रकिरणगुरुचरणान् ।
> शास्त्राणां व्याकर्तॄन्
> कर्तॄनपि देवता निखिलाः ॥

என்றும், விபாவனையென்ற மற்றொரு வியாக்யானத்தில்

> यत्प्रसादादयं लोको धर्ममार्गस्थितः सुखी ।
> भवभूतिसुरेशाख्यं विश्वरूपं प्रणम्य तम् ॥

என்றும், விசுவரூபாசார்யரையே ஸுரேசுவரர் என்ற பெயரில் நமஸ்கரித்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

(7) ஸ்ரீ சங்கரானந்தர் தைத்திரீய உபநிஷத் தீபிகையில் தனக்கு முன்னால் அவ்வுபநிஷத்தின் தாத்பர்யத்தை வெளியிட்ட பாஷ்யகாரரான ஸ்ரீ சங்கர பகவத்பாதரையும் வார்த்திககாரரான ஸுரேசுவரரையும் குறிப்பிடும் போது ஸுரேசுவரரை விசுவரூபர் என்ற பெயராலேயே சொல்கிறார்

वक्ष्येऽधुना शंकरविश्वरूप-
वाचा विनिर्णीतसमस्तवाक्यम् ।
कृष्णं यजुस्तित्तिरिनामचिन्हं
पदार्थसुद्ध्यर्थमतीव सार्थम् ॥

(8) **புரி ஜகன்னாதத்திலுள்ள** கோவர்த்தன மடம் **குரு பரம்பரையில்** ஸ்ரீ சங்கர பகவத்பாதருக்கு நான்கு **ராஜ சிஷ்யர்களும், பன்னிரண்டு** ஸாதாரண சிஷ்யர் **களும், நான்கு** ஜகத்குரு சிஷ்யர்களும் இருந்ததாகக் **கண்டிருக்கிறது.** அதிலும் "வார்த்திகம் முதலான **கிரந்தங்கள் இயற்றிய** விசுவரூபராகிய ஸுரேசுவரர்" **என்று வியக்தமாய்** காண்கிறது.

पद्मपादादिकर्तारं पद्मपादं सनन्दनम् ।
वार्त्तिकादिग्रन्थकारं विश्वरूपं सुरेश्वरम् ॥
पृथिवीधराख्यं श्रीमद्धस्तामलकयोगिनम् ।
तोटकं चानन्दगिरिं प्रणमामि जगद्गुरून् ॥

(9) துவாரகா மடத்தார் சொல்லும் ஸுதன்வராஜ னின் சாஸனத்தில் ஸுரேசுவரர் துவாரகையில் இருந்த தாகக் கண்டிருந்தபோதிலும், விசுவரூபர்தான் ஸுரேசு வரர் என்று அதிலும் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

विश्वरूपापरनामकसुरेश्वराचार्यान्

இந்த சாஸனத்திலும், புரி ஜகன்னாத குரு பரம்பரையில் போலவே, பிருத்வீதரர்தான் ஹஸ்தாமலகர் என்று

காண்கிறது. கும்பகோண மடத்தார் மாத்திரம் இவ்விருவரும் தனித்தனியே போல, பிருத்வீதரர் சிருங்கேரியிலும் ஹஸ்தாமலகர் ஜகன்னாதத்திலும் இருந்ததாகச் சொல்கிறார்கள்.

(10) ஸ்ரீ ஸுரேசுவரருடைய ஸமாதி ஸ்தலம் சிருங்கேரியில் ஸ்ரீ சாரதா ஆலயத்திற்கு தென்புறம் காப்பாற்றப்பட்டு வந்து பூஜிக்கப்பட்டு வருகிறது. அவர் காஞ்சியில் ஸித்தியடைந்ததாகவும் அவருடைய ஞாபகார்த்தமாக மண்டனமிச்ர அக்ரஹாரம் என்று ஒரு தெரு இருப்பதாகவும் சொல்கிறார்கள். அப்படி ஒரு தெரு பிராசீனமாய் உண்டா, இப்பெயர் அதற்கு யாரால் எப்பொழுது ஏன் கொடுக்கப்பட்டதென்று தெரியவில்லை. எப்படியும் அங்கே ஸித்தியடைந்த ஸுரேசுவரருடைய ஞாபகார்த்தமாக ஏற்பட்டிருந்தால் அவருடைய பூர்வாசிரம பெயரால் குறிப்பிட எவ்வித காரணமும் நியாயமும் கிடையாது. "வியாஸாசலீய"த்தின்படிக்கே, மண்டன மிச்ரர் வேறு, ஸுரேசுவரரான விசுவரூபர் வேறு. அப்படியிருக்குமானால் இந்த அக்ரஹாரத்தை வைத்து ஸுரேசுவரருக்கு காஞ்சியில் ஸித்தி யென்ற வாதத்திற்கு இடமேயில்லை.

(11) சிருங்கேரியில் இருந்தது பிருத்வீதவர் என்று சொல்லும் ஆத்மபோதேந்திரரே ஒரு மடாம்நாயத்தில் சிருங்கேரி ஆசார்யராக விசுவரூபரைச் சொல்லப்பட்டிருக்கிறதென்று ஒப்புக்கொள்கிறார். இதற்கு விசித்திர ஸமாதானம் சொல்கிறார். யமனையும் மிருத்யுவையும் பிரிக்க முடியாததால் யமனுடைய அவதாரமான விசுவ

ருபரும் மிருத்யுவின் அவதாரமான பிருத்வீதவரும் பிரிவின்றி ஒரே இடத்தில் இருந்தபடியால் அவர்களுக்குள் பேதமில்லாமல் சொல்வது உசிதமே என்கிறார்.

**आचार्यो विश्वरूपकः** इत्याम्नायस्य च मृत्युयमावतारयोः **अविनाभावं एकाधिकरणवृत्त्योः** अनयोः पृथ्वीधवविश्वरूपयोः **राजपुरोहितन्यायेन** अभेदप्रतिपिपादयिषया भक्त्या प्रवृत्यौ-**चित्यात्** ।

**இந்த ஸமாதானம்** யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை. **எப்படியும்** இதிலிருந்து விசுவரூபர் சிருங்கேரி**யில் இருந்தார்** என்ற பிரஸித்தி ஸ்திரமாகிறது. அவர் **தான் ஸுரேசுவரர்** என்று மேலே காட்டியபடி ஆக்ஷே**பிக்க முடியாத பிரமாண**ங்கள் இருக்கும்போது அவர்கள் **வெவ்வேறுபோல்** சொல்லிக்கொண்டு விசுவரூபரை **சிருங்கேரியில்** இருந்ததாகவும் ஸுரேசுவரர் கும்ப**கோண மடத்திலோ** எல்லா மடங்களின் மேல் **பார்வைக்கோ நியமிக்**கப்பட்டதாகவும் கல்பித்து வாதம் **செய்வது வீணையாகும்.**

**(12) இவ்விதம்** விசுவரூபர் சிருங்கேரியில் இருந்தா**ரென்றும் அவர்தான்** ஸுரேசுவரர் என்றும் ஏற்படுவ**தால் ஸுரேசுவரர்** சிருங்கேரி பீடத்தில் இருந்தவ**ரென்பது உறுதியா**கிறது. கும்பகோணத்திற்கு வெகு **ஸமீபத்திலுள்ள** நடுக் காவேரி கிராமத்தைச் சேர்ந்த**வராய் மிகவும்** பிரஸித்தி பெற்றிருந்த பிரஹ்மஸ்ரீ **ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள்** ஆதி ஆசார்யருடைய ஜன்ம**ஸ்தல**மான காலடி க்ஷேத்திரத்தை தர்சித்தபோது நூறு

சுலோகங்கள் எழுதியிருக்கிறார். அவைகளில் ஒரு சுலோகத்தில் துங்கபத்ரா தீரத்தில் சாரதா பீடத்தில் விசுவரூபர் நியமிக்கப்பட்டதாகக் காண்கிறார்.

अद्राक्षं भाग्ययोगाच्छ्रुतिहृदयविदामग्रणीर्योगिराजो
येन श्रीविश्वरूपो न्ययमि पुरवरे शारदापीठरम्ये ।
तुङ्गाभङ्गानुषङ्गप्रतिकलकलितस्वाश्रमध्यानयोगे
शृङ्गेरीधाम्नि तस्य श्रुतिशिखरगुरोः पावनं जन्मदेशम् ॥

(13) கும்பகோணத்திலேயே இருந்த பிரஹ்மஸ்ரீ ஹாலாஸ்யநாத சாஸ்திரிகள் ஜகத்குரு தாராவளி ஸ்துதியில் சிருங்கேரி பரம்பரையை ஸுரேசுவரருடைய பரம்பரை என்று சொல்கிறார்.

सुरेश्वरपरम्पराकृतसपर्यतुङ्गासरि-
त्तटाश्रयसरोरुहासनकलत्रसेवोत्सुकम् ॥

நவீன பண்டிதர்கள் ஸ்துதிக்கும் மனுஷ்யர்களின் போக்குப்படியே ஸ்துதிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் இருந்துவர ஆரம்பித்துவிட்டபடியால் அவர்களுடைய வாக்கியத்தை பிரமாணமாக எடுத்துக்கொள்வதற்கில்லை. ஆகையினால் பக்ஷபாத ஸந்தேஹமேயில்லாத மேலே கண்ட பிரமாணங்கள் எடுத்துக்காட்டப்பட்டன.

(14) இப்பால் விசுவரூபரும் ஸுரேசுவரரும் வேறு என்று T. S. நாராயண அய்யரும் தானும் சொன்னது நிலை நிற்காதென்று உணர்ந்து வெங்கடேசம் பந்துலு

தன் புஸ்தகம் இரண்டாம் பதிப்பின் அனுபந்தத்தில் இன்னும் சில வாதங்களையும் "பிரமாண வாக்கிய"ங்களையும் சொல்லும்போது, ஸுரேசுவரருக்கு விசுவரூபர் என்ற பெயரும் உண்டு என்று சேர்த்திருக்கிறார். ஆகையால் காஞ்சீ மடத்தில் இருந்ததும் விசுவரூபர் தான் என்கிறார்!

சிருங்கேரியில் ஸுரேசுவரருக்குப் பதிலாக பத்மபாதரைப் போட்டு ஆனந்தகிரி சங்கர விஜயத்தை திருத்திச் சொல்கிறார்களென்று முன்னமேயே பிரஸ்தாவித்தோம். இத்திருத்தல் வேண்டுமென்று செய்யப்பட்டிருக்கிறதென்பதை 1799ல் எழுதப்பட்டிருக்கும் மாதவீய வியாக்யமான டிண்டிமம் நன்கு துலக்குகிறது. அதில் 12-வது ஸர்க்கம் 62-வது சுலோக வியாக்யானத்தில்

अत्र प्राञ्च :— मठं कृत्वा तत्र विद्यापीठनिर्माणं कृत्वा भारतीसंप्रदायं निजशिष्यं चकार।

यस्त्वद्वैतमते स्थित्वा भारतीपीठनिन्दकः।
स याति नरकं घोरं यावदाभूतसंप्लवम्॥
कंचित् शिष्यं सुरेश्वराख्यं पीठाध्यक्षमकरोत्। इति॥

இந்த வாக்கியம் கல்கத்தா பதிப்பையே ஒத்திருக்கிறது. "பரிஷ்கார"ப் பதிப்பாவது கும்பகோணம் ஆசார்யார் காசிக்குப் போன ஸமயம் அங்கே கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லும் பிரதியாவது கொஞ்சமேனும் உண்மையில்லை என்பது இதிலிருந்து நன்கு துலங்குகிறது.

## அத்யாயம்—9

# முந்தின "ஆசார்யர்கள்"

ஸ்ரீ ஸுரேசுவராசார்யரை கும்பகோண மடம் அதிபதியாகவோ எல்லா மடங்களின் மேல்பார்வையாளராகவோ சொல்வது எவ்வளவு நியாயமென்பதை கவனித்தோம். இன்னம் சில பிரஸித்த கிரந்தகர்த்தர்களையும் அம்மடத்து பரம்பரையில் சேர்த்திருப்பதைப் பற்றி இப்பொழுது கவனிப்போம். பரம்பரை தயாரித்தவர் அந்தந்த காலத்திலுள்ளவர்களாக அநேகம் அரசர்களையும் கிரந்த கர்த்தர்களையும் குறிப்பிடுகிறார். இது எவ்வளவு தூரம் சரித்திர ரீதியாய் ஒப்பக்கூடியதென்ற விஷயத்தைப்பற்றி சரித்திர விமர்சகர்கள் ஆராய்ந்து சொல்வதுதான் நியாயமாகும். அவ்வித ஆராய்ச்சியில் இறங்காமல் ஸாமான்ய ரீதியிலேயே கவனித்தாலும் அப்பரம்பரை ஆதாரமற்றதென்று தெளிவுபடுத்த அநேக காரணங்களிருக்கின்றன.

முதலில் ஸ்ரீ சங்கரரையே எடுத்துக்கொள்வோம். அவர் கலியுகம் 2593-ம் வருஷத்தில் நந்தன ஸம்வத்ஸரம் உத்தராயணத்தில் பிறந்ததாகச் சொல்லி அதற்கு பிரமாணமாக "பிராசீன சங்கர விஜய" வாக்கியம் சொல்லப்படுகிறது

**तिष्ये प्रयात्यनलशेवधिबाणनेत्रे**
**यो नन्दने दिनमणावुदगध्वभाजि ।**

राधेऽदितेरहनि निर्गतमस्त्रलग्ने
ऽप्याहूतवान् शिवगुरुः स च शंकरेति ॥

அதிலேயே ஸர்வக்ஞரென்பவருக்கு ரக்ஷகராக ஸுரேசுவரரை நியமித்துவிட்டு கலி 2625ல் ஸித்தியடைந்ததாகவும் இன்னொரு சுலோகம் சொல்லப்படுகிறது

कल्यब्दैश्च शरेक्षणाध्वनयनैः सत्कामकोटिप्रथे
पीठे न्यस्य सुरेश्वरं समवितुं सर्वज्ञसंज्ञं मुनिम् ।
कामाक्ष्याः संविधे स जातु निविशन्नुन्मुक्तलोकस्पृहो
देहं स्वं व्यपहाय देहसुगमं धाम प्रपेदे परम् ॥

இதன்படி ஸ்ரீ சங்கருடைய காலம் கிறிஸ்துவுக்கு முன் 608 லிருந்து 476 வரை என்று ஏற்படுகிறது. ஆனால் அம்மடத்தைப்பற்றி எழுதும் நவீனர்கள் இது வெகு முந்தின காலமாகத் தோன்றுகிறதென்றும் கிறிஸ்துவுக்குமுன் முதல் நூற்றாண்டு என்று சொல்வதே உசிதமென்றும் சொல்கிறார்கள். இவ்விதம் வைத்துக் கொள்ளவேண்டுமானால் ஒவ்வொரு ஆசார்யருக்கும் பீடாதிபத்தியம் வஹித்ததாகச் சொல்லப்படும் காலத்தை சுருக்கவேண்டி வருகிறது; ஆகையால் ஆதியிலுள்ள ஆசார்யர்களுக்கு சராசரி 30 வருஷ காலம் கொடுக்கலாமென்று சொல்கிறார்கள். (N. ரமேசன் பக்கம் 15, ஆத்ரேய கிருஷ்ண சாஸ்திரி பக்கம் 13) ஆனால் இவ்விதம் சுருக்குவதற்கு வழியேயில்லையென்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். ஒவ்வொரு ஆசார்யரும் ஸித்தியடைந்த தினத்தை குறிப்பிடும்

**போது** வருஷப் பெயரும் கண்டிருப்பதினால் அதை **மாற்றுவதற்கு** முடியாது. புண்ய சுலோக மஞ்ஜரியில் **ஸ்ரீ சங்கரர்** தன்னுடைய 32-வது வயதில் கலியுகம் **2625ல்** ரக்தாக்ஷி வருஷத்தில் விருஷப மாஸத்தில் சுக்ல **பக்ஷத்தில்** ஏகாதசி திதியில் ஸித்தியடைந்தார் என்று **வியக்தமாய்** சொல்லியிருக்கையில் அதை எப்படி மாற்ற முடியும்?

महेशांशाज्जातो मधुरमुपदिष्टाद्वयनयो
महामोहध्वान्तप्रशमनरविः षण्मतगुरुः ।
फले (32) स्वस्मिन् स्वायुष्यपि शरचराब्दे (2625) ऽपिच कलेः
विलिल्ये रक्ताक्षिण्यधिवृषसितैकादशिपरे ॥

அப்படியே அவருக்குப் பின் வந்ததாகச் சொல்லும் ஒவ்வொரு ஆசார்யர்களுக்கும் பீடாதிபத்திய காலம் எவ்வளவு, ஸித்தி தினம் ஏது என்று புண்ய சுலோக மஞ்சரீ குறிப்பிட்டுச் சொல்வதால் அவைகளையும் மாற்றுவதற்கில்லை. மாற்றுவதாயிருந்தால் புண்ய சுலோக மஞ்ஜரிக்கும் அதையனுஸரித்த எல்லா "பிரமாண"ங்களுக்கும் பிராமாண்யம் கிடையாதென்றே ஏற்படும். மேலும் அம்மடத்தாரால் முக்கிய பிரமாணமாகச் சொல்லப்படும் சங்கராப்யுதயத்தில் ஸ்ரீ சங்கரர் பிறந்தது கலியுகம் 3889 (கிறிஸ்துவுக்குப் பின் 788) விபவ வருஷமென்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

नवाधिकाशीतियुताष्टशत्यां
युक्ते सहस्रत्रितये व्यतीते ।

कलेः समानां विभवाब्दराधे
सिते दशम्यामुदभून्महेशः ॥

இதில் மஹேசுவரர் அவதரித்தாரென்று சொல்வது ஸ்ரீ சங்கரருக்கே பொருத்த வேண்டியிருக்க, அம் மடத்தில் 38-வது ஆசார்யராக இருந்த "அபிநவ சங்கர" ரைப்பற்றினதுதான் இந்த தேதி என்றும், இரண்டு பேர்களும் சங்கரரானபடியால் தட்டுக்கிட்டு அதை ஆதி சங்கரருக்குச் சொல்லியிருப்பதாகவும் ஆத்மபோதேந்திரர் ஸமாதானம் சொல்கிறார். 508 கி. மு. தான் வாஸ்தவமென்று வற்புறுத்துகிறார். தட்டுக்கிடல் வரக் கூடிய ஒருவர் எழுதின கிரந்தத்திற்கு எவ்வளவு பிராமாண்யம் கொடுக்கலாமென்பதை வாசகர்கள் தீர்மானித்துக்கொள்ளலாம்.

ஸ்ரீ சங்கரர் குமாரிலபட்டருக்குப்பின் வந்தவரென்பது யாவரும் ஒப்புக்கொண்ட விஷயம். குமாரில பட்டர் தன்னுடைய தந்திர வார்த்திகத்தில் பர்த்ருஹரியின் வாக்யபதீயத்தை உதாஹரிக்கிறார்; சீன தேசத்து யாத்ரிகர் சுமார் 700 A. D.ல் இந்த தேசத்திற்கு வந்தபோது பர்த்ருஹரி இறந்து சுமார் 50 வருஷங்களாகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார். ஸ்ரீ சங்கருடைய உபதேசஸாஹஸ்ரீயில் தத்வமதி பிரகரணத்தில்

अभिन्नोऽपि हि बुद्ध्यात्मा विपर्यासितदर्शनैः ।
ग्राह्यग्राहकसंवित्तिभेदवानिव लक्ष्यते ॥

என்று ஒரு சுலோகம் இருக்கிறது. இதே சுலோகம் ஸுரேசுவரருடைய பிரஹதாரண்யக வார்த்திகத்தில் காணப்படுகிறது. ஆனந்தகிரியின் வியாக்யானத்தில் இந்த சுலோகம் பௌத்தாசார்யரான தர்மகீர்த்தியின் சுலோகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முன் ஒரு சுலோகத்தில் ஸுரேசுவரரே தர்மகீர்த்தியின் பெயரைக் குறிப்பிடுகிறார்

त्रिष्वेव त्वविनाभावादिति यद्धर्मकीर्तिना ।
प्रत्यज्ञायि प्रतिज्ञेयं हीयेतासौ न संशयः ॥

ஆகையால் தர்மகீர்த்தி என்ற பௌத்தர் ஸுரேசுவரருக்கும் ஸ்ரீ சங்கரருக்குமே முன்னால் இருந்தவரென்று தெரிகிறது. மற்றொரு சீன தேசத்து யாத்திரிகன் தர்மகீர்த்தி தன்காலத்தில் இருந்தவரென 695 A.D.ல் எழுதுகிறார். இதற்கு முன்னால் ஸ்ரீ சங்கரர் இருந்தாரென்று சொல்வது ஸாத்தியமில்லை. அப்படியிருக்க இதிலிருந்து 1200 வருஷங்கள் முன்னதாக 508 B. C. என்று சொல்வது யாரும் ஒப்புக்கொள்ளக்கூடியதில்லை. இவ்விதம் 8-வது நூற்றாண்டுதான் ஸ்ரீ சங்கருடைய காலமென்று ஏற்படும்போது, 508 B. C. யிலிருந்து 8-வது நூற்றாண்டுவரை கும்பகோண மடம் பரம்பரை பூராவையும் அடித்தே தீரவேண்டும்; அத்துடன் புண்ய சுலோக மஞ்சரிக்கும் மற்றும் அவ்வித குருபரம்பரை சொல்லக்கூடிய கிரந்தங்களுக்கும் கொஞ்சம்கூட பிரா மாண்யமில்லையென்பது நிச்சயமாகிறது. இவ்வித அப்பிரமாண கிரந்தங்களை பின்வந்த ஸம்பவங்கள் ஸம்பந்தமாகத்தான் எப்படி பிரமாணமென்று வைத்துக்கொள்ள முடியும் ?

ஸுரேசுவரர்தான் விசுவரூபர் என்று முன் காட்டினோம். அவர் யாக்ஞ்ய வல்க்ய ஸ்மிருதி வியாக்யானம் எழுதும்போது இருந்த ஒரு அரசனைக் குறிப்பிடுகிறார்

इति संभृतमण्डलः सुधामा
पुरुरुचिरो रमणः प्रतापशीलः ।
रविरिव नृपतिः समः प्रजानां
जगदखिलं व्यवहारतो बिभर्ति ॥
प्रथमोदयानुरक्तो
निखिलमलं मण्डलं निजं कृत्वा ।
पालयति सततमुर्वीं
अतिबलवानेष नृपसविता ॥

இவ்வரசர் கொங்குதேசத்தையும்தொண்டமண்டலத்தையும் ஜயித்து சோழராஜ்யத்தை ஏற்படுத்தி ஆண்டுவந்த முதலாவது ஆதித்யனாக இருக்க வேண்டுமென்று K. A. நீலகண்ட சாஸ்திரி அபிப்பிராயப் படுகிறார். அப்படியானால் ஸுரேசுவரர் 9-வது நூற்றாண்டில் இருந்தவர் என்று சொல்லும்படி ஏற்படும். எப்படியும் ஆத்மபோதேந்திரர் சொல்கிறபடி கலியுகம் 2695 பவ வருஷம் 406 B. C. யில் ஸித்தியடைந்தவராக இருக்க முடியாது. ஸுரேசுவரர் என்பது விசுவரூபர் இல்லையென்றும், அதினால் பாலக்ரீடை அவருடைய கிரந்தமில்லை யென்றும், அவ்வரசன் அந்த சோழராஜன் இல்லையென்றும் வைத்துக் கொண்டாலும்கூட மேலே கண்டபடி ஸுரே

**கவரர் தர்மகீர்த்தியின்** பெயரையே குறிப்பிட்டிருக்கிற **முறையில்** 8-வது நூற்ருண்டுக்கு முன் ஸுரேசுவரர் **இருந்த**தாக சொல்ல முடியாதென்பது நிச்சயம்.

ஆத்மபோதேந்திரர் கொடுக்கும் குருபரம்பரையில் **ஸ்ரீ** சங்கரரையும் ஸுரேசுவரரையும் கணக்கிடாமல் **ஸர்வக்ஞாத்மாவிடமிருந்தே** லக்கம் கொடுப்பதால் அப்படியே நாமும் வியவஹரிப்போம்.

ஸம்க்ஷேப சாரீரகம் என்ற பிரஸித்தமான அத்வைத கிரந்தத்தை எழுதின ஸர்வக்ஞாத்மாவே தங்கள் முதல் ஆசார்யார் என்கிருர். தன் 7-வது வயதிலேயே ஸ்ரீசங்கருடன் வாதம் செய்து அவரால் அப்பொழுதே ஸன்யாஸம் கொடுக்கப்பட்டு அம்மடத்திற்கு நியமனம் செய்யப்பட்டதாகவும் அவருக்கு ரக்ஷகராக ஸுரேசுவரரை நியமித்ததாகவும் சொல்கிருர்கள். அதிலிருந்து 70 வருஷ காலம் ஸுரேசுவரர் இருந்து விட்டபடியால், இவர் மடத்தில் ஆதிபத்யம் செய்யவாரம்பிக்கும் போது இவருக்கு வயது 77 என்றும் அதன்பின் 42 வருஷ காலம் இவர் மடத்திலிருந்ததாகவும் சொல்லப்படுகிறது

तत्पीठे ससुरेश्वरं समनयद्वर्षांश्च यः सप्ततिं
चत्वारिंशतमास्त सद्वयं असौ अब्दान् स्वयं तन्मठे ॥

இதில் ஒரு விசித்திரம். இவர் பாலபர்வத்தில் இருப்பதால் இவருக்கு ஒரு ரக்ஷகராக ஸுரேசுவரர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்; யௌவனம் வந்தவுடன் அவுர் விலகிக் கொண்டிருக்கலாம். ஆனல் அவர் இவருடைய பால்யத்தில் இவருடன் இல்லாமல் இவர் யௌவனம் அடைந்த பிறகே அவரிடம் வந்ததாகச் சொல்கிருர்கள்.

ஸ்ரீசங்கரர் ஸித்தியடைந்தது முதல் இவர் யௌவனம் அடையும் வரை ஸுரேசுவரர் சிருங்கேரியில் இருந்தாராம். இவர் எப்படி ரக்ஷகர் என்பது தெரியவில்லை. குரு ரத்னமாலிகை 34வது சுலோகத்தில் ஸுரேசுவரர் துங்க பத்ரா தீரத்தில் "சிரம்" (வெகுகாலம்) இருந்ததாகக் கண்டிருக்கிறதற்கு வியாக்யானம் செய்கையில் ஆத்ம போதேந்திரர்

चिरं आ गुरोः वियोगात् आ च महादेवयोगियौवनाप्ते-रित्यर्थः ।

"சிரம் என்பது குருவின் வியோகத்திலிருந்து மஹா தேவயோகி யௌவனம் அடையும் வரை என்று அர்த்தம்"

என்கிறார். மஹாதேவர் என்பது ஸர்வக்ஞாத்மாவின் பூர்வாசிரமப் பெயராம்.

இவர் கொஞ்சகாலம் துவாரகையில் இருந்து அங்குள்ள ஆசார்யரான பிரஹ்மஸ்வரூபருக்கு ஆத்ம வித்யை உபதேசித்து வந்தாராம். கடைசியில் காஞ்சியிலேயே கலி 2737 நளவருஷத்தில் ஸித்தியடைந்தாராம். இவர் ஸுரேசுவரருடைய சிஷ்யரென்பதற்கு ஆதாரமாக ஸம்க்ஷேப சாரீரகத்திலுள்ள ஒரு சுலோகம் உதாஹரிக்கப்படுகிறது. அவருக்கு நேரில் ஸன்யாஸம் கொடுத்த ஸ்ரீ சங்கரரை ஏன் காணவில்லை? இந்த ஸர்வக்ஞாத்மருக்கும் சிருங்கேரியில் இருந்ததாக அம்மடத்தார் சொல்லும் பிருத்வீதவருக்கும் இடம் கொடுக்காதது கருதி, அம்மடத்திலேயே பிரசுரித்திருக்கும் அஷ்டோத்தர சதநாமாவளியில் காணும்.

सुरेश्वराख्यसच्छिष्यसंन्यासाश्रमदायकः

என்ற நாமாவை

सुरेश्वरादिष्टशिष्यसंन्यासाश्रमदायकः

என்று திருத்த வேண்டுமென்று வெகு தைர்யமாக ஒருவர் சொல்கிறார்.

श्रीदेवेश्वरपादपङ्कजरजस्संपर्कपूताशयः
सर्वज्ञात्मगिराऽङ्कितो मुनिवरः संक्षेपशारीरकम् ।
चक्रे सज्जनबुद्धिमण्डितमिदं राजन्यवंशे नृपे
श्रीमत्यक्षतशासने मनुकुलादित्ये भुवं शासति ॥

இதில் "தேவேசுவரபாத"ருடைய சிஷ்யரென்று கண்டிருக்கிறது. இந்த பதம் ஸுரேசுவரரையே குறிக்கிறதென்கிறார்கள், விருத்தங்களின் அவசியத்தை உத்தேசித்து இவ்விதம் மாற்றிச்சொல்வது பிசகாகாது. ஆனால் கத்யமாயிருக்கும் வாக்கியத்திலேயே

इति श्रीदेवेश्वरपूज्यपादशिष्यश्रीसर्वज्ञात्ममहामुनेः कृतौ संक्षेपशारीरके

என்று இருப்பதால் "தேவேசுவர" என்பதுதான் பெயர் என்பது தெரிகிறது.

இந்த ஸர்வக்ஞாத்மா "பிரமாண லக்ஷணம்" என்று வேறொரு கிரந்தம் எழுதியிருக்கிறார் என்ற விஷயம் குரு பரம்பரை தயாரித்தவருக்கு தெரியாதென்று நினைக்க வேண்டியிருக்கிறது. அக்கிரந்தத்தில் தன்னை "தேவேசுவரபாத"ருடைய சிஷ்யர் என்றும், அவர் தேவாநந்த

பாதரின் சிஷ்யர் என்றும், அவர் சிரேஷ்டாநந்தபாதருடைய சிஷ்யர் என்றும், தன்னுடைய குருபரம்பரையை எடுத்துச் சொல்கிருர். இதிலிருந்து இவரை ஸுரேசுவரருடைய சிஷ்யரென்று சொல்வதற்கு இடமேயில்லையென்பது ஸ்பஷ்டமாகும். சென்னை பிராசீனலேக ஆராய்ச்சி அதிகாரியாயிருந்த T. A. கோபிநாத ராவ் இவ்விஷயத்தைப் பற்றி

"பிரமாண லக்ஷணத்தில் காணப்படும் குருபரம்பரையிலிருந்து சங்கராசார்யருக்காவது அவர் மடத்திற்காவது ஸம்பந்தமிருந்ததாகத் தெரியவில்லை. எங்கிருந்து ஆத்ம போதேந்திரருக்கு ஸர்வக்ஞாத்மாவின் விவரமான சரித்திரம் அகப்பட்டதென்று தெரியவில்லை. அது தெரியும்வரை அவர்வார்த்தைக்கு பிராமாண்யம் கொடுப்பதற்கில்லை" என்கிருர். இதிலிருந்து அவர் ஆத்ம போதேந்திரர் பிரமாணமாக காட்டும் குருரத்னமாலிகா, பிரஹத்சங்கர விஜயம், புண்ய சுலோக மஞ்ஜரி இவைகளுக்கும் பிராமாண்யம் கொடுக்கவில்லையென்பது நன்கு தெரிகிறது.

தவிரவும் மேலே கண்ட சுலோகத்தில் மனுகுலாதித்யன் என்ற அரசன் அரசாண்ட காலத்தில் எழுதப்பட்டதாக கண்டிருப்பதில் அவ்வரசன் சுமார் 978 A.D.ல் கேரள தேசத்தில் இருந்ததாக கோபிநாத ராவ் தீர்மானிக்கிருர். அதை நீலகண்ட சாஸ்திரியும் உறுதிப்படுத்துகிருர். இவ்விதமிருக்க, இவர் தங்கள் மடத்தில் 476 B. C. முதல் 364 B. C. வரை, அதாவது 1500 வருஷங்களுக்கு முன் இருந்ததாக அம்மடத்தார் கொண்டாடுகிருர்கள்.

ஸுரேசுவரருடைய நைஷ்கர்ம்ய ஸித்திக்கு ஞானோத்தமர் எழுதியிருக்கும் வியாக்யானத்தில் 'ஸத்ய போதர்' என்பவர் இதர மதவாதிகளைத் தன்னுடைய "பதகசதத்"தினால் விரட்டியடித்ததாக கண்டிருக்கிறது. அக்கிரந்தம் இப்பொழுது அகப்படவில்லை. இந்த ஸத்ய போதர் தங்கள் மடத்தின் 2-வது ஆசார்யார் என்றும் அவர் மூன்று பாஷ்யங்களுக்கும் வார்த்திகங்கள் எழுதியிருப்பதாகவும் ஆனால் அவைகள் அகப்படவில்லையென்றும் கல்பிக்கிறார்கள். அந்த ஞானோத்தமரை ஞானநந்தரென்ற பெயருடன் 3வது ஆசார்யராக சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். வாஸ்தவத்தில் அந்த வியாக்யானம் எழுதினது ஸன்யாஸியேயில்லை. அவர் பெயர் "மஹோபாத்யாய ஞானோத்தம மிச்ரர்". ஸன்யாஸியில்லாதவர்களுக்கு ஞானோத்தம என்று பெயர் வைப்பது வழக்கமில்லாததினால், தன்னுடைய தகப்பனாரின் குருவான, ஞானோத்தமருடைய பெயர் எனக்கு வைக்கப்பட்டதென்று அவரே ஸமாதானம் சொல்கிறார்.

चोलेषु मङ्गलमिति प्रथितार्थनाम्नि
ग्रामे वसन् पितृगुरोरभिधां दधानः ।
ज्ञानोत्तमः सकलदर्शनपारदृश्वा
नैष्कर्म्यसिद्धिविवृतिं कुरुते यथावत् ॥

इति श्रीमहोपाध्यायज्ञानोत्तममिश्रविरचितायां ... ...

இவர் வெகு பின் காலத்தில் இருந்தவர், 12-வது நூற்றாண்டு கடைசியில் இருந்திருக்கலாமென்று டாக்டர் V. ராகவன் அபிப்பிராயப் படுகிறார். கும்பகோண

மடத்தில் 268 B. C. முதல் 205 B. C. வரை இருந்தாகச் சொல்கிற "ஞானாநந்த"ராக இவர் இருக்கவே முடியாது.

வ்யாக்யானத்தின் கடைசியில்

वस्तुख्यातिविघातिवादितिमिरं नैष्कर्म्यसिद्धिस्फुट-
व्याख्याचन्द्रिकया विधूय सुधियां सद्दृष्टिमुन्मीलयन् ।
अन्तस्संभृतशान्तवेदनसुधोद्योतः समुद्योतते
सर्वज्ञाश्रमचन्द्रमास्त्रिजगतीसर्वज्ञचूडामणिः ॥

இதில் "ஸர்வக்ஞாசிரம"ராகிய சந்திரனிடமிருந்து வியாக்யானமான சந்திரிகை ஏற்பட்டிருப்பதாக சொல்லப் படுகிறது. இந்த வியாக்யானத்திற்கு சந்திரிகை என்றே பெயர். ஆகையால் ஸர்வக்ஞாசிரமராகிய சந்திரன் என்பது மஹோபாத்யாய ஞானோத்தம மிச்ரர்தான் என்பது நன்கு விளங்குகிறது. அவர் பின்னால் ஸன்யாஸம் பெற்று அந்த பெயருடன் விளங்கும் காலத்தில் யாரோ செய்திருக்கும் சாற்றுக்கவி இந்த சுலோகம் என்று தெரிகிறது. இதில் "ஸர்வக்ஞாத்மா"வை குறிக்கவில்லை என்பதும் ஞானானந்தர் என்ற ஸன்யாஸப் பெயர் ஞானோத்தம மிச்ரருக்கு இல்லையென்பதும் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. 'ஆசிரம' என்பதே பத்துவித ஸன்யாஸ நாமாக்களில் ஒன்று.

ஸ்ரீ சங்கரருடைய பாஷ்யங்களின் பேரில் டீகை எழுதியிருக்கும் ஆனந்தஞானர் என்ற ஆனந்தகிரி மிகவும் பிரஸித்தமானவர். அவருடைய குரு சுத்தாநந்தர் என்பதும் ஸித்தம். அப்படியிருக்க இவ்விருவர்

களையும் விட்டுவிடுவது நியாயமாகுமாவென்று நினைத்து இந்த குரு சிஷ்யர்களை அம்மடத்து 4-வது, 5-வது ஆசார்யர்களாகக் கண்டிருக்கிறார்கள். அம்மடத்திற்கு குருபரம்பரை தயாரித்துக்கொடுத்தவருக்கு இந்த ஆனந்தகிரி தன் ஐதரேய உபநிஷத் பாஷ்ய டீகையில் 14-வது நூற்றாண்டிலிருந்ததாக பிரஸித்தமான ஸ்ரீ வித்யாரண்யருடைய தீபிகையிலிருந்து வாக்கியம் அனுவாதம் செய்யப்பட்டிருக்கிறதென்ற விஷயம் தெரியாதென்று துலங்குகிறது. அம்மடத்தில் 124 முதல் 55 B. C. வரை ஆசார்யராக இருந்ததாகச் சொல்லப்படுகிறவராக எவ்விதத்திலும் இருக்க முடியாது. தவிரவும் தர்க்க ஸங்கிரஹம் என்று பரோடா ஸர்க்காரில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கும் புஸ்தகத்தின் பூமிகையில் மஹாமஹோபாத்யாய குப்புஸ்வாமி சாஸ்திரி இந்த ஆனந்தகிரி 14-வது நூற்றாண்டில் இருந்த ஸர்வக்ஞ விஷ்ணு என்பவரின் தகப்பனார் என்றும் அபிப்பிராயப் படுகிறார்; அம்மடத்தில் பிரஹ்மசர்யத்திலிருந்து ஸன்யாஸம் பெற்றவர்கள் தான் அதிபதியாகலாமென்று சொல்வதால் இவர் அம்மடாதிபதியாய் இருக்க முடியாதென்று ஸித்தமாகிறது.

"ஆனந்தஞான" ருக்குப்பின் கைவல்ய யோகி, கிருபாசங்கரர், விசுவரூப ஸுரேசுவரர், சித்கனர் என்பவர்கள் முறையே ஆசார்யர்களாக இருந்தவர்களாம். சிருங்கேரி மடத்திற்கும் இம்மடம் மேல்அதிகாரியென்று சொல்வதற்கென்று கைவல்ய யோகியின் ஆக்ஞையின் பேரில் கிருபாசங்கரர் சிருங்கேரியில் விசுவரூபர் என்றொருவரை நியமித்ததாகச் சொல்லப்படுகிறது,

இம்மடத்தில் கிருபாசங்கரரின் சிஷ்யரும் விசுவரூபர். இவ்விதம் ஒரே பெயர் இருவருக்கும் கொடுத்ததின் தாத்பர்யம் நன்கு தெரியவில்லை. கொஞ்சம் குழப்பம் ஏற்படுத்தவே இவ்விதம் செய்திருக்கலாம். இந்த கிருபாசங்கரர்தான் வாஸ்தவமாக ஷண்மத ஸ்தாபனு சார்யராக இருந்தவராம். பின்னுல் சில நாமாவளிக்குப் பிறகு 16-வது ஆசார்யர் "உஜ்ஜ்வல சங்கரர்" வருகிருர்; இவர் கேரள தேசத்து அரசன் குலசேகரரை அனுக்ரஹித்து கவியாக ஆக்கிருராம்; இவர் காச்மீரத்தில் கலியுகம் 3468 (367 A. D.)ல் ஸித்தியடைந்தவராம்; அவருடைய ஞாபகார்த்தமாக அங்கே "மஹாயதிபுரம்" என்று ஒரு ஊரும் இருக்கிறதாகச் சொல்கிருர்கள். இவருக்குப்பின் வந்த மூன்று ஆசார்யர்களும் அத்புதமான யோக்கியதை வாய்ந்தவர்களாம்.

காஞ்சீபுரம் காமாக்ஷியம்மனைப்பற்றி அழகாக 500 சுலோகங்கள் மூக பஞ்ச சதீ என்று பிரஸித்தியோடு இருப்பவைகளை இயற்றிய மூக கவி காஞ்சிக்கே ஸம்பந்தப்பட்டிருக்கையில் அவரையும் குரு பரம்பரையில் சேர்த்துத் தான் ஆகவேண்டுமென்று நினைத்து அவருக்கு ஸன்யாஸம் கொடுத்து "மூக சங்கரேந்திர ஸரஸ்வதி" என்று விஸ்தாரமாக யோக பட்டமளித்து 20-வது ஆசார்யராக காட்டப்படுகிருர். "மூககவி" என்றுதான் அவருக்கு பிரஸித்தி; அவர் ஊமையாயிருந்து காமாக்ஷி தேவியின் அனுக்ரஹத்தினுல் வாக்கு வல்லமை பெற்ருரென்றே பிரஸித்தம்; அப்படியிருக்க இவருடை முந்தின 'குரு'வான 'வித்யாகனர்' என்பவருடைய அனுக்ரஹத்தினுலேயே இவருக்கு

அந்த மஹிமை ஏற்பட்டது என்று நாம் நம்பவேண்டும் என்று சொல்கிறார்கள். இவர் எத்தனையோ அத்புதச் செயல்களைக் காச்மீரத்தில் செய்ததாகவும் குதிரைக் காஸாரியையும் யானைப் பாகனையும் பெரிய கவிகளாகச் செய்துவிட்டதாகவும் சொல்லி அக்கவிகளின் "கிரந்தங்" களிலிருந்து வாக்கியங்கள் உதாஹரிக்கப் படுகின்றன. துரதிருஷ்ட வசத்தினால் அக்'கிரந்தங்'கள் இப்பொழுது அகப்படவில்லையாம். இவரே "பிராசீன சங்கரவிஜயம்" என்ற கிரந்தம் எழுதினதாகச் சொல்லி அதிலிருந்து சில வாக்கியங்களை ஆத்ம போதேந்திரர் உதாஹரிக்கிறார். இதுவும் இப்பொழுது அகப்படவில்லை. இவரை காச்மீர அரசர்களாயிருந்த மாத்ரு குப்தர், பிரவரஸேனர், இவர்கள் ஸேவித்தார்களாம்.

மாத்ரு குப்தர் என்கிற பெயர் கல்ஹணர் எழுதிய ராஜதரங்கிணீ 3-வது தரங்கத்தில் காணப்படுகிறது. அவர் விக்ரமாதித்யனிடம் சில மாஸங்கள் இருந்ததாகவும் காச்மீர தேசத்து அரசனான பிரவரஸேனர் ஊரில் இல்லாத ஸமயம் இவரையே ஆண்டுவரச் சொன்னதாகவும் அவ்வரசன் திரும்பி வந்தவுடன் இவர் ராஜ்யத்தை அவரிடம் ஒப்புவித்துவிட்டு காசிக்குப் போய் ஸந்யாஸம் பெற்றதாகவும் சொல்லப்படுகிறது

अथ वाराणसीं गत्वा कृतकाषायसंग्रहः ।
सर्वं संन्यस्य सुकृती मातृगुप्तोऽभवद्यतिः ।। III, 320

அவர் நம் தேசத்தின் வடகோடியில் ராஜ்யபாரம் வஹித்தது காச்மீரத்தில், ஸன்யாஸியாக இருந்தது காசியில், எப்படியிருந்தால் என்ன? ஒரு சரித்திர ஸம்பந்தமான புஸ்தகத்தில் ஒரு ஸன்யாஸி அகப்பட்டுவிட்டார்.

அவர் இம்மடத்து ஆசார்யராக ஸ்வீகரிக்கப்படாவிட்டால் அசட்டுத்தனமாகாதா? ஆகையால் அவரே 27வது "ஆசார்யார்." மாத்ரு குப்தருடைய சரித்திரத்தை விஸ்தாரமாகச் சொல்லி அவர் காசியில் ஸன்யாஸியாக இருந்ததையும் சொன்ன கல்ஹண கவி இம்மடத்தைப் பற்றி பிரஸ்தாவிக்காதது ஏனோ? இவருடைய யோக பட்டம் "ஸார்வபௌம சந்திரசேகர இந்திர ஸரஸ்வதீ" என்று கம்பீரமாய் இருக்கையில் இதைப் பற்றியாவது இவருடைய பீடாதிபத்யத்தைப் பற்றியாவது இவருடைய குருவைப் பற்றியாவது கொஞ்சமேனும் காணமல் மறைத்ததுதான் ஏனோ? இந்த அபசாரத்தினலேயே தான் இந்த கல்ஹணருக்கு இந்த அத்புதமான குருபரம்பரையில் ஆத்ம போதேந்திரர் ஸ்தானம் கொடுக்கவில்லை போலும்.

இன்னம் சில பெயர் வரிசைக்குப் பின் 38-வது ஆசார்யர் "அபிநவ சங்கரர்" வருகிருர். இவர்தான் சிதம்பரத்தில் தகப்பனர் இறந்து மூன்று வருஷங்களுக்குப் பின் விசிஷ்டை என்ற தாயாருக்குப் பிறந்தவராம். இவருடைய சரித்திரத்தை வாக்பதி பட்டர் என்பவர் சங்கரேந்திர விலாஸம் என்ற கிரந்தத்தில் வர்ணித்திருப்பதாக சில வாக்கியங்களை ஆத்மபோதேந்திரர் உதாஹரிக்கிருர்; இக்கிரந்தமும் இப்பொழுது மறைந்துவிட்டது. இக்குழந்தை பிறந்தவுடன் தாயார் அபவாதத்திற்கு அஞ்சி இதை காட்டில் போட்டு விட்டாளாம்; அங்கே வியாக்ரபாத மஹர்ஷியின் ஸ்திரீகள் எடுத்து வளர்த்து வியாக்ர பாதரே உபநயனம் செய்வித்து சாஸ்திராப்யாஸம் செய்தாராம்; ஆதி ஸ்ரீசங்கர பகவத்பாதரே இவருக்கு உபதேசித்தாராம்; இம்மடத்திற்கு இவர்தான்

தகுந்தவரென்று பகவான் நடராஜரே வெளியிட்டாராம். மேலும் பிரஹ்மா இவருக்கு இரண்டு பாதுகைகள் கொடுத்தார்; அவைகளின் மஹிமையால் இவர் அந்நிய தேசங்களிலும் ஸஞ்சாரம் செய்து எல்லா தேசத்தார் களாலும் குருவாக ஒப்புக்கொள்ளப்பட்டார். இக்கதைக ளுக்கெல்லாம்ஆதாரம் குருரத்னமாலிகை, அதன்பேரில் ஆத்மபோதேந்திரர் செய்திருக்கும் வியாக்யானம், அவ் வியாக்யானத்தில் சொல்லப்படும் புண்ணிய சுலோக மஞ்ஜரீ, "சங்கரேந்திர விலாஸம்", "ஸத்குரு ஸந்தான பரிமளா" இவைகளேயாகும். இவர்தான் காச்மீரம் போய், ஸர்வக்ஞ பீடத்தில் ஏறி, பிறகு ஹிமாலயத்தில் தத்தாத்ரேய குஹையில் அந்தர்தானமானவராம். மற்ற கிரந்தங்களிலுள்ள எல்லா அம்சங்களையும் உபயோகித் துக் கொள்வதற்காக இந்த கல்பனை என்பது ஸ்பஷ்ட மாகத் தெரிகிறது.

இவ்வாசார்யர் ஸம்பந்தமாய் இன்னொரு அம்சம் முக்கியமாய் கவனிக்கத் தக்கது. இவருக்கு முந்தினவர் பிரபவ வருஷம் புஷ்யபகுள திரிதியையில் ஸித்தியடைந் தாராம். இவர் பிறந்ததே அடுத்த வருஷமான விபவ வருஷம் வைசாக சுக்ல தசமியிலாம். இவர் பீடத்திற்கு வந்தது உபநயனமாகி வித்யாப்யாஸம் எல்லாம் வியாக்ரபாதர் மூலமாய் நடந்த பிறகல்லவா இருக்க முடியும்? அப்படியானால் மத்தியில் அநேக வருஷங்கள் இம்மடத்தில் யாரும் ஆசார்யர் கிடையா தென்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது தங்கள் குரு பரம் பரையை "அவிச் சின்னம்" என்று சொல்வது வாஸ் தவமில்லையென்பது இதிலிருந்தே தெரிகிறது.

## அத்யாயம் — 10

# பிந்தின "ஆசார்யர்"கள்

கதாஸரித் ஸாகரம் என்று நாடோடிக் கதைகளை யெல்லாம் ஒருங்கு சேர்த்து காவ்யமாக இயற்றின ஸோமதேவர் பரத கண்டத்தின் வடகோடியிலுள்ள காச்மீரத்தில் இருந்தவர். இக்கதைகளைக் கோர்த்த இவர் பண்டிதராக இருந்திருக்கலாம்; ஆனாலும் ஸன்யாஸம் பெற யோக்யதை உள்ளவரா, ஸன்யாஸம் செய்துகொண்டாரா என்பது ஸந்தேஹம்தான். இவரையும் விடக்கூடாதென்று இவர்தான் அம்மடத்து 46-வது ஆசார்யரான போதேந்திரர் என்கிறார்கள். இவருக்கு தாராபதியான போஜராஜன் ஒரு முத்துப் பல்லக்கு கொடுத்ததாகவும், காச்மீர அரசனான கலசர் என்பவரின் ஸஹாயத்தினால் காஞ்சீ மடத்தை பாதித்த மிலேச்சர்கள் விரட்டப்பட்டார்களென்றும் சொல்கிறார்கள். அவ்வளவு தூரத்திலிருந்து ஸஹாயம் வேண்டியிருந்ததென்றால் விந்தையே! பக்கத்திலுள்ள அரசர்கள் கைவிட்டுவிட்டார்களா?

அவருக்கு அடுத்தவர் சந்திரசூடர் என்பவராம். இவர் சந்திராலோகம், பிரஸன்ன ராகவம் என்கிற கிரந்தங்கள் இயற்றிய ஜயதேவருக்கும், ஸ்ரீகண்ட சரிதம் எழுதின மங்ககருக்கும், பிரபோத சந்திரோதயம் எழுதின கிருஷ்ணமிச்ரருக்கும் குருவாம். பிரஸித்த கிரந்தங்களைத் தவிர, ஜயதேவர் "பக்தி கல்ப லதிகா" என்றும், கிருஷ்ண மிச்ரர் "குரு விஜயம்" என்றும்,

கிரந்தங்கள் எழுதியிருப்பதாகச் சொல்லி அவைகளி லிருந்து சில "வாக்கிய"ங்களை, ஆத்மபோதேந்திரர் உதாஹரிக்கிறார்; இந்த கிரந்தங்களும் இப்பொழு மறைந்துவிட்டன. இவர் ஹேமாசார்யரென்ற ஒரு ஜைன பண்டிதரை ஜயித்ததாகவும் ஒரு "பெரிய காச்மீர வைத்யர் ஸுஹலர்" என்பவரால் "வைத்யா பிதான சிந்தாமணி" என்ற கிரந்தத்தில் புகழப்பட்ட தாகவும் சொல்கிறார்கள்; ஆத்மபோதேந்திரருக்கு வாக் கியம் உதாஹரிக்க இப்புஸ்தகம் கிடைத்தபோதிலும் இப்பொழுது மறைந்துவிட்டது.

இவருக்கு அடுத்த "சித்விலாஸர்" அபிநவ குப்தர், ஸ்ரீ ஹர்ஷர், முதலானவர்களை வாதத்தில் ஜயித் தாராம். ஸ்ரீ ஹர்ஷர் எழுதி இப்பொழுது அகப்படாம லிருக்கிற "ஸ்தைர்ய விசாரண பிரகரணம்", "சிவசக்தி ஸித்தி" இவைகளில் இவ்வாசார்யரைப் போற்றியிருப்ப தாக ஆத்மபோதேந்திரருக்கு மாத்திரம் வாக்கியங்கள் கிடைத்தன. ஸ்ரீ ஹர்ஷருடைய நைஷதத்திலுள்ள வாக்யத்தில் திருத்தி அவர்கள் பிரமாணமாக கல்பித்துச் சொல்லும் ஆதாரத்தைப்பற்றித் தனியாக விசாரிக்கப் படும். குருரத்னமாலிகையில் இவர் பெயர் சித்விலாஸர் என்றே கண்டிருந்தபோதிலும் அதன் வியாக்யாதா ஆத்மபோதேந்திரர், பிரஹ்ம வித்யாபரணம் என்ற பிரஸித்த கிரந்தம் எழுதின அத்வைதாநந்தர் தான் இவர் என்று சொல்கிறார். அவர் பெயர் அத்வைதாநந்த போதேந்திர ஸரஸ்வதியாம். ஆனால் அவர் இப் பெயரையாவது சித்விலாஸர் என்ற பெயரையாவது தனக்கு சொல்லிக்கொள்ளாததுடன், தான் பிரஹ்ம ஸூத்ர பாஷ்யம் வாசித்தது ராமாநந்த தீர்த்தரிட

யிருந்து என்றும் ஸன்யாஸம் வாங்கிக்கொண்டது பூமாநந்த ஸரஸ்வதீயிடமிருந்து என்றும் ஸ்பஷ்டமாய்ச் சொல்கிறார். அம்மடத்தாருக்கு இது ஒரு பெரிய இடஞ்சலில்லை. ஏனென்றால் பூமாநந்த ஸரஸ்வதிதான் அம் மடத்து சந்திர சூடேந்திர ஸரஸ்வதியென்று காட்டி விட்டால் போதாதா என்று நினைத்து இந்த அத்வைதாநந்தர் எழுதினதாகவே பிரஸித்தியில்லாததும் இப்பொழுது அகப்படாததுமான "சாந்தி விவரணம்", "குருபிரதீபம்" என்கிற புஸ்தகங்களில் காண்கிறதாக "பிரமாண" வாக்கியங்கள் கொடுக்கிறார்கள். ஆத்மபோதேந்திரர் கூட இப் "பிரமாண"ங்களை கண்டுபிடிக்கவில்லை. இப்பால் வந்த ஆத்ரேய கிருஷ்ண சாஸ்திரிக்கு ஒரு சுலோகமும் N. வெங்கடராமனுக்கு இரண்டு சுலோகங்களும் இந்த அகப்படாத கிரந்தங்களிலிருந்து அகப்பட்டிருக்கின்றனவென்று உதாஹரிக்கிறார்கள்.

இவர் ஒரு சங்கர விஜயம் எழுதியிருப்பதாகவும் ஆத்ரேய கிருஷ்ண சாஸ்திரி சொல்கிறார். பிரஸித்தமாயிருக்கும் "சித்விலாஸீயம்" என்கிற சங்கர விஜயத்தைத்தானா சொல்கிறார் என்று தெரியவில்லை. அதில் காஞ்சியில் ஸர்வக்ஞ பீடம் இருந்ததாகச் சொன்னபோதிலும், சிருங்கேரி, பதரி, ஜகன்னாதம், துவாரகை ஆகிய நான்கு ஸ்தலங்களில் மடங்களை ஏற்படுத்தினது விவரமாகக் கண்டும்கூட காஞ்சியில் எவ்வித மடத்தையும் ஸ்தாபனம் செய்ததாகக் காணவில்லை; ஸ்ரீ சங்கரர் கடைசியில் ஹிமாலயத்தில் தத்தாத்ரேய குகையில் மறைந்ததாகவும் காணுகிறார்.

வித்யாரண்யருக்கு குருவாகவிருந்து சிருங்கேரியில் லம்பிகா யோக பலத்தால் மறைந்த வித்யா தீர்த்தர்கூட கும்பகோண மடத்து 49-வது ஆசார்யரே என்கிறார்கள். இதை சிறு குழந்தைகூட ஏற்றுக்கொள்ளாது. அந்த காலத்தில் சில்பத்தின் மஹிமையை நன்கு விளக்கக் கூடிய அத்புதமான ஆலயம் அவருடைய ஸமாதி ஸ்தலத்தில் இன்னம் சோபித்து வருகிறது. சிருங்கேரியிலிருந்தது வித்யாசங்கரர் என்றும் கும்பகோண மடத்தில் இருந்தவர்தான் வித்யாதீர்த்தர் என்றும் இந்த வித்யாதீர்த்தர்தான் வித்யாரண்யருடை குருவென்றும் சொல்கிறார்கள். அம்மடத்து ஆசார்யர்களெல்லாம் இந்திர ஸரஸ்வதி என்று சொல்லிக்கொண்டிருக்கையில் மத்தியில் "தீர்த்த"ருக்கு இடம் ஏது? ஸரஸ்வதீ, தீர்த்தர் இரண்டும் ஸன்யாஸப் பெயர்கள். இரண்டையும் எப்படி சேர்க்க முடியும் ?

மாதவருடைய ஸர்வ தர்சன ஸங்கிரஹம் என்ற கிரந்தத்தின் ஆரம்பத்தில் மாதவர் சாரங்கபாணியின் புத்திரரான ஸர்வக்ஞவிஷ்ணு என்பவருக்கு நமஸ்காரம் செய்துகொண்டு ஆரம்பிக்கிறார்

पारं गतं सकलदर्शनसागराणां
आत्मोचितार्थचरितार्थितसर्वलोकम् ।
श्रीशार्ङ्गपाणितनयं निखिलागमज्ञं
सर्वज्ञविष्णुगुरुमन्वहमाश्रयेऽहम् ॥

விஜயநகர ஸம்ஸ்தானத்தில் புக்கமஹாராஜனுக்கு குல குருவாயிருந்த மாதவாசார்யார்தான் இந்த மாதவர் என்று நினைத்துக்கொண்டு இம்மட பரம்பரை தயாரித்

தவர் வித்யாதீர்த்தருடைய பூர்வாசிரமப் பெயர்தான் ஸர்வக்ஞ விஷ்ணு என்பது என்று குறிப்பிட்டிருக்கிருர். வாஸ்தவத்தில் பிரஸித்த மாதவாசார்யார் ஸாயணுசார்யாரின் தமயன். இந்த மாதவர் ஸாயணுசார்யாரின் குமாரர். தன்னைப்பற்றி அவரே

श्रीमत्सायणदुग्धाब्धिकौस्तुभेन विपश्चिता।
क्रियते माधवार्येण सर्वदर्शनसंग्रहः॥

என்று, தான் ஸாயணருக்கு பிறந்தவராகவும் "மாதவார்யர்" என்றும் தெளிவாய் சொல்கிருர். இவர், இவரது புஸ்தகத்திலேயே ஸர்வக்ஞ விஷ்ணுவைக் குறிப்பிடுகிருர் .

तदुक्तं विवरणविवरणे सहजसर्वज्ञविष्णुभट्टोपाध्यायैः :–
"न चात्र हेतुदृष्टान्तयोः एकप्रकाशरूपान्वयः शङ्कनीयः, तमोविरोध्याकारो हि प्रकाशशब्दवाच्यः तेनाकारेण ऐक्यं उभयत्र अस्ति" इति॥

இங்கே ஸர்வக்ஞ விஷ்ணுவின் வாக்கியமாக உதாஹரிக்கப்பட்டிருப்பது அவர் பஞ்சபாதிகா விவரணத்தின் பேரில் எழுதின ரிஜு விவரணம் என்ற கிரந்தத்தில் இருக்கிறது. அந்த கிரந்தத்தில் அவர் ஸ்வாமி இந்திர பூர்ணருடைய சிஷ்யராகவும் ஜநார்த்தனருடைய புத்திரராகவும் சொல்லிக்கொள்கிருர்.

इति श्री स्वामीन्द्रपूर्णपूज्यपादशिष्य-सर्वशास्त्रविशारद–
जनार्दनात्मज–सर्वज्ञविष्णुभट्टोपाध्यायकृतौ … …

**ஜநார்தனர்** என்றும் சாரங்கபாணி என்றும் அவருடைய **தகப்பனார்** பெயர் இருந்திருக்கலாமென்று தெரிகிறது. **எப்படியும்** இந்த ஸர்வக்ஞ விஷ்ணு ஸன்யாஸியானதாக **எவ்வித** பிரமாணமும் இல்லை. மேலும் இவர் கிரஹஸ்தராயிருந்து இவருக்கு இரண்டு புத்திரர்களாவது இருந்ததாகத் தெரிகிறது. அவ்விருவரில் தர்க்க பாஷா பிரகாசிகை இயற்றிய சென்னு பட்டர் என்பவர் ஒருவர். அதில்

श्रीहरिहरमहाराजपरिपालितेन सहजसर्वज्ञविष्णुदेवाराध्यतनूजेन सर्वज्ञानुजेन चेन्नुभट्टेन विरचितायां … …

என்றும், ஸார்வபௌம கவியின் ராம ஸௌந்தர்ய லஹரீக்கு எழுதின வியாக்யானத்தில்

श्रीविष्णुदेवरायस्य चेन्नुभट्टोऽयमात्मजः ।
रामसौन्दर्यलहरीकां व्याख्यातुमिच्छति ॥

என்றும் தன் தகப்பனாரைக் குறிப்பிடுகிறார். இவரே நிருக்தி என்று இன்னொரு கிரந்தம் எழுதியிருப்பதற்கு விஷ்ணுபட்டர் என்பவர் வியாக்யானம் எழுதியிருக்கிறார்; அதின் ஆரம்பத்திலும் ஸர்வதர்சன ஸங்கிரஹத்தில் காணும்

पारं गतं सकलदर्शनसागराणां … … ॥

என்கிற சுலோகம் அப்படியே காணப்படுகிறது; அந்த காலத்திலும் ஸர்வக்ஞ விஷ்ணு என்றே பிரஸ்தாவித்திருப்பதால் அப்பொழுதும் அவர் கிரஹஸ்தர்தான் என்று தெரிகிறது. சென்னு பட்டர் குறிப்பிடும் ஹரிஹர மஹாராஜர் 1336 முதல் 1354 வரை ஆண்ட

முதலாவது ஹரிஹரரோ 1377 முதல் 1404 வரை ஆண்ட இரண்டாவது ஹரிஹரரோ, எப்படி வைத்துக்கொண்டாலும்கூட இந்த ஸர்வக்ஞ விஷ்ணு என்பவர் கும்பகோணம் மடத்தார் சொல்லும் வித்யாதீர்த்தராக இருக்க முடியாது. அவர்கள் ரீதியில் அவர் 1297லேயே ஸன்யாஸம்பெற்று மடாதிபதியாகிவிட்டார். இவ்விதமாக எந்த முறையில் கவனித்தாலும் ஸர்வக்ஞ விஷ்ணுதான் வித்யாதீர்த்தர் என்று சொல்ல முடியாதென்பது தெளிவாய்த் தெரிகிறது.

மேலும், அம்மடத்து அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளக் கருதி இந்த வித்யாதீர்த்தர் வெகு நூற்ருண்டுகளாக எடுபட்டுப் போயிருத்த சிருங்கேரி மடத்தை உயிர் பிழைக்க வைப்பதற்காக கும்பகோண மடத்திலிருந்து தன் சிஷ்யர்களில் சிலரை அனுப்பிஞராம். அவ்விதம் அனுப்பப்பட்ட சிஷ்யர்தான் "உஜ்ஜீவனம் செய்யப்பட்ட சிருங்கேரி மடத்தின் முதலாவது அதிபதியான" பாரதி தீர்த்தர் என்கிருர்கள். வேறு சில மடங்களையும் சிஷ்யர்கள் மூலம் ஸ்தாபித்தாராம்.

இந்த பாரதி தீர்த்தருக்கு அத்வைத பிரஹ்மாநந்தர் என்று ஒரு பெயரும் ஆனந்தாத்மா என்று மற்ருெரு பெயரும் இருந்ததாக ஆத்மபோதேந்திரர் குறிப்பிடுகிருர். இந்த மடத்து பரம்பரையிலேயே ஒரே பெயருள்ளவர்கள் மிகவும் குறைவு. சங்கராநந்தர் அநேக உபநிஷத் தீபிகைகள், கீதா தாத்பர்ய போதினீ, ஆத்ம புராணம் முதலிய அநேகம் கிரந்தங்களை இயற்றியிருக்கிருர். அவ்வெல்லா கிரந்தங்களிலும் தன் குரு "ஆனந்தாத்மா" என்றே குறிப்பிடுகிருர்.

நாத்மாவை கும்பகோண மடத்து சிஷ்யராக ஆக்கினல் தான் பரம்பரையில் சங்கரானந்தருக்கு இடம் கொடுக்க முடியும். ஆகையால் சங்கராநந்தர் வித்யாதீர்த்தரின் ஸாக்ஷாத் சிஷ்யரென்றும் அத்வைத பிரஹ்மாநந்தர் என்ற பாரதி தீர்த்தர் என்ற ஆனந்தாத்மரிடம் வேதாந்த சிரவணம் செய்ததாகவும் கல்பிக்க அவசியம் ஏற்பட்டது. இதற்கு ஆதாரமாக சங்கரானந்தருடைய பிரஹதாரண்ய உபநிஷத் தீபிகையில் காணப்படுவதாக மூன்று சுலோகங்களை உதாஹரிக்கிருர்கள்,

काञ्चीपीठजुषः कठोरधिषणानिर्धूत दुर्धूवह–

என்று ஆரம்பிப்பதாக. இந்த கிரந்தம் வெளியாகவில்லை யென்ற தைர்யத்தினுல் அதில் எந்த சுலோகங்களும் இருந்ததாகச் சொல்லலாமென்று ஆத்ம போதேந்திரர் எண்ணியிருப்பதாகத் தெரிகிறது. இது "இப்பொழுது அகப்படவில்லை" என்று N. வெங்கடராமனும் கண்டிருக் கிருர். ஆனுல் அக்கிரந்தம் வாஸ்தவத்தில் இருக்கிறது. எனக்குத் தெரிந்த இரண்டு பிரதிகளில் இந்த சுலோ கங்கள் இல்லவே இல்லை. இந்த சுலோகங்களை வாசித் துப் பார்த்தாலே வெறும் கல்பிதம் என்பது நன்கு துலங்கும். இந்த சங்கராநந்தருக்கு அபிநவ சங்கரர் என்ற பிருதும் உண்டென்கிருர் ஆத்மபோதேந்திரர்.

ஸதாசிவ பிரஹ்மம் என்று பிரஸித்தியடைந்திருக் கும் ஸதாசிவேந்திரருடைய குரு பரமசிவேந்திரர் இம் மடத்து 55-வது ஆசார்யர் என்கிருர்கள். அப்படியிருந் தால், அவருடைய குரு புண்யசுலோக மஞ்ஜரீ எழுதின தாகச் சொல்லும் ஸர்வக்ஞ ஸதாசிவ போதேந்திரராக இருக்க வேண்டும். ஆனுல் பரமசிவேந்திரர் எழுதியிருக்

கும் தஹர வித்யா பிரகாசிகையிலும் சிவகீதா வியாக்யானத்திலும் தன் குரு 'அபிநவ நாராயணேந்திர ஸரஸ்வதீ என்று குறிப்பிடுகிறார். இவர் கும்பகோண பரம்பரையில் இல்லையென்பதில் ஸந்தேஹமில்லை. மேலும் இந்த பரமசிவேந்திரர் அம்மடத்தில் 1539 முதல் 1586 வரை இருந்ததாகச் சொல்கிறார்கள். அவருடைய சிஷ்யராகச் சொல்லப்படும் ஸதாசிவேந்திரர் 1729 முதல் 1736 வரை தஞ்சாவூரில் அரசாண்ட துலஜாஜி மஹாராஜருக்கும், 1758 முதல் 1798 வரை திருவாங்கூரில் அரசாண்ட கார்த்திகை திருநாளுக்கும், புதுக்கோட்டையில் 1730 முதல் 1769 வரை அரசுபுரிந்த விஜயரகுநாத தொண்டமானுக்கும் ஸம காலத்தவர். மேலும் அவருடன் கூட வித்யாப்பியாஸம் செய்த கோபாலகிருஷ்ண சாஸ்திரி என்பவர் புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்தில் ராஜகுருவாக இருந்து 1739ல் சில கிராமங்களை சாஸனம் பெற்றிருக்கிறார். இதுதவிர பரமசிவேந்திரரே தஹர வித்யா பிரகாசிகையை எழுதினது த்ரியம்பக மகியின் வேண்டுகோளின் பேரில் எழுதினதாகச் சொல்லுகிறார். இந்த த்ரியம்பக மகி பால்யத்திலேயே தஞ்சாவூர் ஸஹஜி (1684—1711) மஹாராஜரிடமும் பின்னால் சரபோஜி (1711—1728) மஹாராஜரிடமும் மந்திரி பதவி வஹித்தவர்; இவர் ஸ்ரீமத்ராமாயணத்திற்கு தர்மாகூதம் என்ற ஒரு அத்புதமான வியாக்யானத்தை எழுதி அதை 1719 அக்டோபரில் முடித்திருக்கிறார்; அதன் பின் 1750 வரை ஜீவித்திருந்ததாகவும் தெரிகிறது. ஆகையால் பரமசிவேந்திரர் நிச்சயமாக 18-ஆவது நூற்றாண்டில்தான் இருந்தவரென்று ஸந்தேஹமன்னியில் தெரிகிறது. 1586 லேயே ஸித்தி

யடைந்துவிட்டதாக சொல்லும் கும்பகோண மடம் ஆசார்யராக இருந்திருக்க முடியாதென்பது ஸித்தம். இதே காரணங்களினுல் ஸதாஸிவேந்திரர், குருரத்ன மாலிகையை எழுதியிருக்க முடியாதென்பதும் தெளிவாகிறது. கும்பகோண மடம் பரமசிவேந்திரருக்கு சிஷ்யராயிருந்து அவருக்குப் பின் வந்த விசுவாதிகர் என்ற ஆத்மபோதருடைய வேண்டுதலின் பேரில் அதை எழுதினதாகச் சொல்கிருர்கள். அந்த விசுவாதிகருடைய பீடாதிபத்ய காலம் 1586 முதல் 1638 வரை என்றும் சொல்வதால் 18-வது நூற்ருண்டில் இருந்த ஸதாசிவர் எழுதியிருக்க முடியாதென்பதில் ஸந்தேஹமில்லை. இவர் மஹா ஸித்த புருஷராயிருந்தபடியால் ஏன் 16-வது நூற்ருண்டிலிருந்து 18-வது நூற்ருண்டு வரை இருந்திருக்க முடியாதென்கிருர் ஒருவர்; அவர் இன்னமும் இருக்கலாம். ஆனுல் அவருடைய பால்ய ஸ்நேஹிதர் கோபாலகிருஷ்ண சாஸ்திரி 1739 ல் தான சாஸனம் வாங்கியிருக்கிருரே? அவருமா 16-வது நூற்ருண்டு முதல் 18-வது நூற்ருண்டு வரை இருந்தார்? அவரும் ஸித்த புருஷரா? ஸித்த புருஷராயிருந்தால் தான சாஸனம் எதற்கு? ஆகையால் ஸதாசிவேந்திரர் குருரத்னமாலிகை எழுதினதாகச் சொல்வதும் அவருடைய குரு பரமசிவேந்திரர் இம் மடத்தில் இருந்ததாகச் சொல்வதும் கொஞ்சமேனும் வாஸ்தவமில்லையென்று நன்கு தெரிகிறது.

மேலே கண்ட விசுவாதிகர் என்ற ஆத்மபோதருக்கு அபிநவ சங்கராசார்யரென்று பெயர் உண்டென்றும் அவர் ஸ்ரீ ருத்திரத்திற்கு ஒரு பாஷ்யம் எழுதியிருப்ப

தாகவும் சொல்கிருர்கள். "அபிநவ சங்கராசார்யர்" என்ருெருவர் ஸ்ரீ ருத்ர பாஷ்யம் எழுதியிருப்பது வாஸ்தவம். ஆனுல் அவருக்கு விசுவாதிகர் என்ருவது ஆத்மபோதர் என்ருவது பெயர் கிடையாது. அவருடைய பெயர் ராம பிரஹ்மாநந்த தீர்த்தர். அவர் ஸரஸ்வதியுமில்லை, இந்திர ஸரஸ்வதியுமில்லை. அவர் பாஷண்ட கஜகேஸரீ என்று வேறு கிரந்தமும் எழுதியிருக்கிருர்; பகவத் கீதைக்கு வியாக்யானம் எழுதின வெங்கடநாதர் இவர் சிஷ்யர்; இவர் பெயரால்தான் அந்த வியாக்யானத்திற்கு பிரஹ்மாநந்தகிரி என்று பெயர் வைத்திருக்கிருர். இவருக்கும் கும்பகோண மடத்திற்கும் எவ்வித ஸம்பந்தமும் கிடையாது. "அபிநவ சங்கராசார்யர்" என்ற பிருதைக் கண்டு ஆத்மபோதேந்திரர் அம்மட பரம்பரையில் சேர்த்துவிட்டாரென்று தெரிகிறது.

பகவந்நாம மஹிமையை நன்கு எடுத்துச் சொல்லி பக்தி மார்க்கத்தை பரவச் செய்து கடைசியில் கும்பகோணத்திற்கு ஸமீபத்தில் ஸமாதியடைந்திருக்கும் போதேந்திர ஸரஸ்வதியும் அம்மடத்து 57-வது ஆசார்யார் என்கிருர்கள். அந்த ஸமாதி ஸ்தலம் கும்பகோண மடத்திற்கு எவ்வித ஸம்பந்தமுமில்லாமல் தனி ஸம்பிரதாயத்துடன் இருந்துவரும் ஸ்வதந்திர ஸ்தாபனமாகவே இருந்துவந்திருக்கிறது.

மேலே குறிப்பிட்ட விஷயங்களையெல்லாம் பக்ஷபாதமன்னியில் கவனிக்கும் எந்த வாசகருக்கும், 18-வது நூற்ருண்டு முடியும் வரை அம்மடத்தாரால் சொல்லப்படும் குருபரம்பரை பூராவும் ஆத்மபோதேந்திரருடைய

வெறும் கல்பனையென்பது ஸந்தேஹமன்னியில் புலப்படும். "ஆத்மபோதேந்திரர்" என்கிற பெயரே கல்பிதமாயிருக்கலாம். கும்பகோண மடத்திற்கு இக் குரு பரம்பரையை தயாரித்துக்கொடுத்து உதவின ஒரு பண்டிதர் இந்தப் பெயரால் வெளியிட்டிருக்கலாமென்று தோன்றுகிறது.

அஸாதாரணமான மஹிமை கொண்டாட உத்தேசிக்கிறவர்களுக்கு வெறும் குரு பரம்பரை மாத்திரம் போதுமா? மற்றவர்களுக்கு இல்லாத புது மடாம்நாயம், புது மஹாவாக்யம், புதுப்பட்டம், இவைகளையும் கல்பிக்க அவசியம் நேரிட்டது. இவ்விஷயங்களிலும் எவ்விதம் தடுமாறியிருக்கிறார்களென்பதைப்பற்றி இனி கவனிப்போம்.

அத்யாயம்—11

## ஐந்தாவது மஹா வாக்கியம்

ஸ்ரீ சங்கர பகவத்பாதருடைய ஸம்பிரதாயத்தில் சேர்ந்த எல்லா ஸன்யாஸிகளுக்குமே மஹாவாக்யோபதேசம் உண்டு என்பது யாரும் அறிந்த விஷயம் அம்மஹா வாக்கியங்கள் நான்கு என்று சுகரஹஸ்யோபநிஷத் வியக்தமாய்ச் சொல்கிறது.

**अथ महावाक्यानि चत्वारि। यथा, ओं प्रज्ञानं ब्रह्म, ओं अहं ब्रह्मास्मि, ओं तत् त्वमसि, ओं अयमात्मा ब्रह्म ॥**

ஸ்ரீ வித்யாரண்யர் இயற்றிய பஞ்சதசியில் 5-வது அத்யாயமான மஹாவாக்கிய விவேகம் என்ற பிரகரணத்திலும் இந்த நான்கு மஹா வாக்கியங்களுக்கே தாத்பர்யம் சொல்லியிருக்கிறார். சிலர் இதையும் சுகரஹஸ்யோபநிஷத்துடன் சேர்ந்ததாக அச்சிட்டுவிடுகிறார்கள்.

இந்த நான்கு மஹாவாக்கியங்களும் முறையே நான்கு வேதங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. ஜீவனுக்கும் பிரஹ்மத்திற்கும் அபேதம், ஜகத்திற்கும் பிரஹ்மத்திற்கும் அபேதம், முதலான விஷயங்களைச் சொல்லக்கூடிய வாக்கியங்கள் உபநிஷத்துக்களில் ஏராளமாய் இருக்கின்றன. எல்லாம் தியான ஆத்ம விசாராதிகளுக்கு உபயோகப்படக்கூடிய வாக்கியங்களாகையால் ஸன்யாஸிகளின் அனுஸந்தான ஸௌகரியத்தை உத்தேசித்து ஒருங்கு சேர்த்து மஹாவாக்கிய ரத்நாவளி முதலான ஸங்கிரஹங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

**இவைகள் யாவும்** கௌரவிக்கத் தக்க முறையில் மஹா **வாக்கியங்கள்** ஆகுமே தவிர மஹாவாக்கியம் என்கிற **பெயர்** மேலே சொன்ன நான்கு வாக்கியங்களுக்கே **குடியாய்** ஏற்பட்டது.

ஸ்காந்தம் ஸநத்குமார ஸம்ஹிதை மலயாசல கண்டமாகிற சிவதத்வ ஸுதாநிதி என்ற பாகத்தில் 9-வது அத்யாயத்தில் மஹாவாக்கியங்களைப்பற்றி விஸ்தாரமாக சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு பிரஸித்த பண்டிதரும் பிரஹ்ம வித்யா பத்திராதிபராயுமிருந்த பிரஹ்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் எழுதியிருக்கும் சிந்தாமணி என்ற வியாக்யானத்தில் மஹாவாக்கியம் என்ற பெயர் மற்ற வாக்கியங்களுக்கு உரித்தானதில்லை என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறார்.

प्रज्ञानं ब्रह्म चेत्यादि महावाक्यचतुष्टयम् ॥
महावाक्यचतुष्टयं-संख्याग्रहणं रूढ्या महावाक्यत्वं नान्येषां इति द्योतयितुम् ॥

நம் பரத கண்டமாகிய இப்புண்ணிய பூமியை யாக வேதியாக பாவித்து வேதியில் அக்னியின் முன்புக்கு ரித்விக்குகள் உட்காரும் முறையை அனுஸரித்து நான்கு திக்குகளுக்கும் நான்கு வேதங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஸ்ரீமத் ஆசார்யார் நான்கு திக்குகளிலும் மடங்களை ஏற்படுத்தினதும் அவைகளுக்கு மஹாவாக்கியங்களைக் குறிப்பிட்டதும் அந்த முறையை அனுஸரித்துத்தான். ஐந்தாவது வேதம் கிடையாதபடியால் ஐந்தாவது மஹாவாக்கியத்திற்கு இடமில்லை.

கிழக்கே ஜகன்னாத மடம், ரிக்வேதம், மஹாவாக்கியம் பிரஜ்ஞானம் பிரஹ்ம

தெற்கேசிருங்கேரிமடம், யஜுர்வேதம், மஹாவாக்கியம் அஹம் பிரஹ்மாஸ்மி

மேற்கே துவாரகாமடம், ஸாமவேதம், மஹாவாக்கியம் தத் த்வம் அஸி

வடக்கே பதரி மடம், அதர்வ வேதம், மஹாவாக்கியம் அயம் ஆத்மா பிரஹ்ம

ஸ்ரீ சங்கரரே எழுதினதாக பிராமாண்யமுள்ளதாக கும்பகோணம் மடத்தாரால் சொல்லப்படும் மடாம்நாய ஸேதுவில் இந்த நான்கு மடங்களுக்கும் வேதம் குறிப்பிடப்பட்டிருக்கிறது; அந்த மடத்திற்கு ஒரு வேதத்தையுமே சொல்லவில்லை, ஆகையால் மஹாவாக்கியமும் சொல்லப்படவில்லை. ஆத்மபோதேந்திரர் மாத்திரம் தன் குருரத்னமாலிகா வியாக்யானத்தில் அம்மடத்திற்கு வேதம் ரிக்வேதமென்றும், மஹாவாக்கியம் "ஓம் தத்ஸத்" என்றும் சொல்லுகிறார். ஸ்ரீ சங்கர பகவத்பாதருடைய வேதம் யஜுர் வேதமாயிருக்க அவ்வேதம் இந்த "ஸர்வோத்தம" மடத்திற்கு ஏற்படாதது விந்தையே. யஜுர் வேதத்தை சுக்ல யஜுஸ், கிருஷ்ண யஜுஸ் என்று பிரித்து ஐந்தாவது வேதத்திற்கு வழி செய்யலாமென்றால், சுக்லகிருஷ்ண வித்தியாஸமன்னியில் எல்லா யஜுர் வேதிகளுக்குமே சுக்லயஜுஸ்ஸிலுள்ள "அஹம்பிரஹ்மாஸ்மி" என்ற மஹாவாக்கியம் பிரதானமாய் உபதேசிக்கப்படுகிறபடியால் அதற்கும் இடமில்லை. இந்த மஹாவாக்கியத்தை எல்லா யஜுர் வேதிகளும் எடுத்துக்கொண்டு

விட்டபடியால் அதை தன்னைச் சேர்ந்ததென்று சொல்ல அம்மடத்திற்கு இடமில்லாமல் போய்விட்டது. சிருங்கேரியிலுள்ள யஜுர் வேத மடத்திற்கே அது சேர்ந்ததென்று ஒப்புக்கொள்ள வேண்டி வந்தது. தானும் யஜுர்வேதிதான் என்றால் தன்னை சிருங்கேரி மடத்தின் கிளைமடம் என்று சொல்லிவிடுவார்களே யென்ற பயம் ஒரு பக்கம். ஆகையால் எங்கள் வேதம் ரிக்வேதம் என்று ஆத்மபோதேந்திரர் சொல்லத் துணிந்தார். இப்படிச் சொல்வதினால் ஜகன்னாத மடத்திற்கு ரிக்வேதமில்லையென்றும் அதனுடைய வேதம் சுக்லயஜுஸ் என்றும், கிருஷ்ணயஜுஸ் சிருங்கேரிக்கு என்றும் என்கிறார். சிருங்கேரிக்கு கிருஷ்ண யஜுஸ்ஸை சொல்லிவிட்டு அதற்கு மஹாவாக்கியம் மாத்திரம் சுக்லயஜுஸ்ஸிலுள்ள "அஹம் பிரஹ்மாஸ்மி" என்றும், ஜகன்னாதத்திற்கு வேதம் சுக்ல யஜுஸ் என்று சொல்லிட்டு மஹாவாக்கியம் ரிக்வேதத்திலுள்ள "பிரஜ்ஞானம் பிரஹ்ம" என்றும் விருத்தமாகச் சொல்கிறோமே என்பதை கவனிக்கவில்லை. எப்படியும் ஸ்ரீ சங்கரபகவத்பாதருடைய கிருஷ்ண யஜுர் வேதமோ, ஸ்ரீ ஸுரேசுவரருடைய சுக்ல யஜுர் வேதமோ, இரண்டும் ஆசார்யரால் தனக்கென்று ஸ்தாபிக்கப்பட்டு ஸுரேசுவரரால் 70 வருஷம் பரிபாலிக்கப்பட்டதாய் சொல்லப்படுகிற இம்மடத்திற்கு இல்லாமல் போனது வியஸனிக்கத் தக்கதே. யஜுர் வேதத்தையும் யஜுர் வேத மஹாவாக்கியத்தையும் சிருங்கேரிக்கு விட்டதுடன் ரிக்வேத மஹாவாக்கியத்தையும் ஜகன்னாதத்திற்கு விட்டு, தனக்கு ரிக்வேதமென்று சொல்லிக்கொண்ட போதிலும் அதிலுள்ள மஹாவாக்

கியம் தனக்கில்லாத நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. யஜுர் வேதத்தை இரண்டாகப் பிரித்து ஐந்து வேதங்களாக்கியும்கூட, ஐந்தாவது மஹாவாக்கியம் இல்லாதபடியால், ஜகன்னாதத்திற்கு ஏற்பட்ட மஹாவாக்கியத்தை அதற்கே விட்டுவிட்டு, தனக்கு எவ்வேதத்திலிருந்தும் மஹாவாக்கியமில்லாமல் இருக்கும்படி ஏற்பட்டது. ஸ்ரீ சங்கரருடைய ஸ்நேஹிதரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்பட்டு உதாஹரிக்கப்படுகிற "பிரஹத் சங்கர விஜயத்"தில் இம்மடத்திற்கு பிரணவம் தான் உபதேச வாக்கியமென்று சொல்வதாய் காணப்படுகிறது.

शक्तिः कामकोट्येत्र प्रणवश्चोपदेश्यवाक् ।

ஆனால் ஆத்மபோதேந்திரர் கும்பகோணத்திற்கு வேதம் ரிக்வேதம் என்றும், மஹா வாக்கியம் "ஓம் தத் ஸத்" என்றும் சொல்கிருர். இந்த "மஹாவாக்கியம்" ரிக் வேதத்திலுமில்லை, எந்த வேதத்திலுமில்லை. ஸ்ரீமத் பகவத் கீதையில் பிரஹ்மத்தைக் குறிக்கும் பதங்களாக இவை சொல்லப்பட்டிருக்கின்றன.

ओं तत् सत् इति निर्देशो ब्रह्मणस्त्रिविधः स्मृतः ॥

நியாயமாயுள்ள நான்கு மஹா வாக்கியங்களை நியாயமான நான்கு மடங்கள் வைத்துக்கொண்டுவிட்டபடியால் ஐந்தாவது மடம் என்று கல்பிக்க நினைத்தவருக்கு "ஐந்தாவது வேத"த்திலிருந்தே "மஹா வாக்கியம்" தேடியெடுக்கவேண்டியிருந்தது போலும். பகவத்கீதை உள்ளடங்கிய மஹா பாரதத்தை ஐந்தாவது வேதம் என்று உபசாரமாகச் சொல்லி பிரஸித்தியேற்பட்டிருக்கிறதல்லவா? இந்த மஹாவாக்கியத்தை தேடி எடுத்

தவர் எங்கள் வேதம் மஹாபாரதம் என்று நேரடியாய்ச் சொல்லியிருந்தால் ஒழுங்காக இருந்திருக்கும். அதை விட்டு தன் வேதம் ரிக்வேதம் என்று சொல்லி தன் அசட்டுத்தனத்தை வெளிக்காட்டிவிட்டார்.

தவிரவும், ஒரு வாக்கியம் என்பது பெயர்ச்சொல், வினைச்சொல் முதலியவை அடங்கி ஒரு விஷயத்தைச் சொல்லும் பத ஸமுதாயமாகும். வெறும் பெயர்ச் சொற்கள் மாத்திரம் சேர்ந்தால் வாக்கியமாகாது. அதுவும் ஒரே அர்த்தத்தை சொல்லக்கூடிய பெயர்ச்சொற்கள் சேர்ந்து ஒருநாளும் வாக்கியமாகாது. அப்படியிருக்க பிரஹ்மத்தையே குறிக்கிற மூன்று பதங்களை சேர்த்துப் போட்டால் எப்படி வாக்கியமாகும் ? மேலும், மஹா வாக்கியம் என்ற பெயர் உபநிஷத்துக்களில் ஜீவப்ரஹ்ம ஐக்யத்தை போதிக்கும் உபதேச வாக்கியத்திற்கே ஏற்பட்டது. "ஓம் தத் ஸத்" எந்த உபநிஷத்திலும் இல்லை. அம்மூன்று பதங்களும் பிரஹ்மத்தையே குறிக்கின்றன ; ஜீவனைக் குறிக்கவே யில்லை. இவ்விதம் வாக்கிய லக்ஷணமே பொருந்தாத பதக்குவியலை மஹாவாக்கியமென்று சொல்வது பரிஹாஸத்திற்கே இடம் கொடுக்கிறது. உபநிஷத்துக்களில் காணப்படாமல் பகவத் கீதையில் காணப்படும், ஒரே அர்த்தத்தைக் குறிக்கிற, மூன்று வார்த்தைகள் சேர்ந்து மஹா வாக்கியமாகிறதென்பதும், பிரஸித்தமான நான்கு வேதங்களிலுள்ள மஹாவாக்கியங்களைவிட மேலானது என்பதும் இன்னும் பரிஹஸிக்கத் தக்கது. பிரஸித்தமான நான்கு ஸம்பிரதாயங்களில் சேராமல் இந்த ஐந்தாவது "மஹாவாக்கியம்"தான் தனக்கு உபதேசமென்று யாரேனும் சொல்லத் தலைப்பட்டால் அவர் ஸ்ரீ சங்கர பகவத்பாதரின்

ஸம்பிரதாயத்தைச் சேர்ந்த ஸன்யாஸியல்லவென்று ஸந்தேஹமன்னியில் சொல்லிவிடலாம்.

"ஓம் தத் ஸத்" என்பது நான்கு மஹாவாக்கியங்களுக்கும் "உபலக்ஷணம்" என்றும், ஸரஸ்வதீ ஸம்ப்ரதாயத்தை சேர்ந்த யாவருக்கும் எல்லா மஹாவாக்கியங்களும் உபதேசிக்கப் படுகின்றனவென்றும் இப்பால் சிலர் ஸமாதானம் சொல்கிருர்கள். ஆனால் ஒருவார்த்தை "உபலக்ஷணம்" ஆகவேண்டுமானால் தனக்கு ஸஜாதீயமான வஸ்துக்களையே குறிக்குமே தவிர விஜாதீயமான வஸ்துக்களைக் குறிக்காது. "தயிரை காகம் தின்னுமல் பார்த்துக்கொள்" என்ருல் பூனையும் குரங்கும் தின்னலாமென்று அர்த்தமில்லையாதலால் "காகம்" என்பது காக்கையை மாத்திரம் குறிப்பிடாமல் தயிரைத் தின்று விடக்கூடிய எல்லா ஜந்துக்களையும் குறிக்கும்; அதனால் "காகம்" என்ற வார்த்தையை "உபலக்ஷணம்" என்கிறோம். கத்தியைக் கொண்டுவா என்பதில் 'கத்தி' என்ற பதம் வஸ்திரத்திற்காவது குடைக்காவது உபலக்ஷணமாகாது. அப்படியே ப்ரகிருதத்தில் வாக்கியமே இல்லாத "ஓம் தத் ஸத்" வாக்கியமாயிருக்கிற மஹாவாக்கியங்களுக்கு ஒரு நாளும் உபலக்ஷணமாகாது. "ஸரஸ்வதீ" ஸம்பிரதாயத்தார்களுக்கு மாத்திரம் எல்லா மஹாவாக்கியங்களும் உபதேசம் செய்யப்படுவதாக சொல்வதும் சரியல்ல. ஸரஸ்வதி என்று தனி ஸம்பிரதாயமேயில்லை; அதுவெறும் யோகபட்டம். அதில் யாதொரு விசேஷமுமில்லை. வன, அரண்யாதி பத்துவித ஸன்யாஸிகளுக்குமே நான்கு மஹாவாக்கியங்களும் உண்டு. அவரவர் வேதத்திலுள்ள மஹாவாக்கி

**யத்தை முதலில்** உபதேசம் செய்துவிட்டு பின்னால்மற்ற **வேதங்களிலுள்ள** மஹாவாக்கியங்களை உபதேசம் செய் **வார்கள்.** இதைத் தவிர வேறு வித்தியாஸம் கிடை **யாது.**

ஆகையால் ஐந்தாவது மஹாவாக்கியமாக "ஓம் தத் ஸத்" என்று ஒன்று இருப்பது போல் கொண்டாடு வதற்கு எவ்வித நியாயமும் பிரமாணமும் கிடையாதென் பதுடன் அவ்விதம் கொண்டாடுவதே அசட்டுத்தனம் என்பது நன்கு தெரியவரும். நான்கு வேதங்களுக்கு மாத்திரமன்னியில் ஒவ்வொரு வேதத்திலுமுள்ள ஒவ் வொரு சாகைக்கும் ஒவ்வொரு மஹாவாக்கியமுண்டு என்று ஒரு புதிய யோசனை சொல்லப்படுகிறது. இது சாஸ்திரத்திற்கும், ஸம்பிரதாயத்திற்கும் நேர்விரோத மானது. முன் எடுத்துக்காட்டிய சுகரஹஸ்ய உபநிஷத் வாக்கியத்திற்கு முரணாகும். அப்படியும் ஒரு சாகையி லும் "ஓம் தத் ஸத்" என்பது கிடையாது, அது ஒரு நாளும் வாக்கியமாவது மஹாவாக்கியமாவது ஆகா தென்பது ஸித்தம். அதையும் மஹாவாக்கியமாக்கக் கருதி "ஸோऽஹம்" என்ற வாக்கியத்தில் ஸ், ஹ் என்ற மெய்யெழுத்துக்களை எடுத்துவிட்டால் அதுவே "ஓம்" ஆகிவிடும் என்று யுக்திசொல்ல இப்பால் தலைப் படுகிறார்கள். அப்படியானாலும் "ஓம்" என்பது எல்லா ஸன்யாஸிகளுக்குப் பொதுவே தவிர "ஸரஸ்வதீ" ஸம்பிரதாயத்திற்காவது கும்பகோண மடத்திற்காவது தனித்து ஏற்பட்டதில்லை. தவிரவும் பிரணவம் எல்லா த்விஜர்களுக்கும், "ஸோஹம்" எல்லா ஸாதகர்களுக்கும் பொது.

—o—

அத்யாயம் — 12

## இந்திர ஸரஸ்வதீ

கும்பகோண மடத்து ஆசார்யர்களுக்கு "இந்திர ஸரஸ்வதீ" என்ற பட்டம் அஸாதாரணமான லக்ஷணம் என்று சொல்கிருர்கள். இதற்கு ஆதாரம் அவர்களுடைய மடாம்நாய ஸேது வாக்கியம்.

कामकोटीमठे त्वस्मिन् गुरुः इन्द्रसरस्वती ।

"இந்த காமகோடி மடத்திலோ என்ருல் குரு இந்திர ஸரஸ்வதீ." இவ்விஷயத்தில் வெங்கடேசம் பந்துலு ஒரு கதை சொல்கிருர் :—

"இந்த இந்திர ஸரஸ்வதீ பட்ட விஷயமாக ஒரு ஸம்பிரதாயக் கதை உண்டு. அதிலிருந்தே காஞ்சீபுரத்தில் மத்ய மடத்தை ஸ்ரீ சங்கராசார்யார் ஸ்தாபித்தார் என்பது உறுதிப்படுகிறது ... ஒரு ஸமயம் ஸுரேசுவரர் பலமான வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தபோது அவருக்காக ஸ்ரீசங்கரர் அசுவிநீ தேவதைகளின் உதவியைக் கோரிஞர். இந்திரனுக்கு வெகுவாகக் கோபம் ஏற்பட்டு பூமிக்கு வந்து அந்த தேவதைகளின் பேரில் வஜ்ராயுதத்தை பிரயோகம் செய்தான். ஆனல் அது மேல் போகாமல் நின்றதைக் கண்டு, இது சங்கராசார்யாரின் பிரபாவம் என்று உணர்ந்து, தன் பெயரையே அவருக்கு கொடுத்துவிட்டான். அதுமுதல் இதுவரை காமகோடி பீடத்திலிருப்

> பவர்கள் அந்தப் பட்டத்தை வஹித்து வருகிறார்கள். ஸ்ரீ சங்கராசார்யார் ஸரஸவாணீ என்ற ஸரஸ்வதீயை ஜயித்தபடியால் மற்றொரு பாகமான ஸரஸ்வதீ என்ற பட்டத்தையும் அப் பீடாதிபதி வஹித்து வருகிறார்.''

இந்த அத்புதமான கதை அதில் ஸம்பந்தப்பட்ட மஹான்களின் பெருந்தன்மைக்கு எவ்விதத்திலும் ஒவ்வாது; வெறும் கல்பனை என்பதில் ஸந்தேஹமில்லை. இக்கதை ஒரு சங்கர விஜயத்திலும் கிடையாது. "வியாஸாசலீய"த்தில்கூட இல்லை. கும்பகோண மடத்தாரின் மற்ற "பிரமாண" கிரந்தங்களிலும் கிடையாது. தவிரவும் இதற்கு நேர் விருத்தமாகவே இருக்கிறது. ஸுரேசுவருக்கு எப்பொழுதும் வியாதி ஏற்பட்டதில்லை. ஆசார்யாருக்கு வியாதி ஏற்பட்ட ஸமயத்தில் இந்திரனுடைய அனுமதியின் பேரிலேயே அசுவினீ தேவதைகள் வந்ததாகவும் காணப்படுகிறது. இந்திரனை ஆசார்யார் ஜயிக்க ஸந்தர்ப்பமே ஏற்படவில்லை. ஸுரேசுவரரை வாதத்தில் ஜயித்து சிஷ்யராக்கிக்கொண்டபடியால் "ஸுரேசுவரர்" என்ற பெயரை மாற்றி அதே அர்த்தமுள்ள "இந்திர" என்ற பட்டத்தை ஆசார்யார் வைத்துக் கொண்டதாக மற்றொருவர் சொல்கிறார். அவரை ஜயிக்கும் போது அவருக்கு ஸுரேசுவரர் என்ற பெயர் கிடையாதென்பதை இவர் மறந்துவிட்டார் போலும்; அப்பொழுது மண்டனமிசிரர் அல்லது விசுவரூபர் என்றுதான் பெயர்; பின்னால் ஸன்யாஸம் பெற்றபிறகே ஸுரேசுவரர் என்ற பெயர் ஏற்பட்டது. தவிரவும் தன்னிடம் தோல்வியடைந்த இந்திரனோ, ஸுரேசுவரரோ, ஸரஸ்வதியோ,

இவர்கள் பெயரை தனக்கு வைத்துக்கொள்வது கௌரவம் என்று ஸ்ரீ சங்கரர் பாவித்தார் என்று சொல்வது மிகவும் அசட்டுத்தனம். இக்கதையையும் இதைப்போலுள்ள மற்ற விஷயங்களையும் மனம் போனபடி கல்பித்துச் சொல்லலாமென்று தைர்யம் ஏற்படுவதற்குக் காரணம், நூற்றுக் கணக்கான வருஷங்களுக்கு முன் நடந்ததாகச் சொல்வதை யாரால் பொய்யென்று ருசுச் செய்ய முடியுமென்ற எண்ணம்தான். ஆனாலும் மற்ற விஷயங்களில் போல இவ்விஷயத்திலும் இது வெறும் புது கல்பனை யென்றும் வாஸ்தவத்தில் எவ்வித ஆதாரமுமற்றதென்றும் எடுத்துக் காட்டுவதற்கு வேண்டிய பிரமாணங்கள் ஏராளமாய் இருந்து வருகின்றன.

ஆத்மபோதேந்திரர் அடிக்கடி பிரமாணமாய் உதாஹரிக்கிற "பிரஹத் சங்கர விஜய" வாக்கியத்திலேயே

शुद्धा सरस्वती चेन्द्रानन्दपूर्वा च भारती

என்றிருப்பதால், அதாவது சுத்தமான ஸரஸ்வதீயோ பாரதீயோ, இந்திர பதம் அல்லது ஆனந்த பதம் சேர்ந்தோ பட்டம் என்பதால், ஸரஸ்வதீ, பாரதீ, இந்திர ஸரஸ்வதீ, ஆனந்த ஸரஸ்வதீ, இந்திர பாரதீ, ஆனந்த பாரதீ, என்றெல்லாம் ஏற்படுவதால், இந்திர ஸரஸ்வதீ பட்டம் எங்களுக்கு உண்டு என்பதற்காவது எங்களுக்குத்தான் உண்டு என்பதற்காவது வழியில்லை.

தனித்த லக்ஷணமென்றால் குறிப்பிட உத்தேசிக்கும் எல்லா பதார்த்தங்களிலும் இருக்கவேண்டும். குறிப்பிட உத்தேசிக்காத பதார்த்தங்களில் இருக்கக் கூடாது. "மனிதர் தலைப்பாகை யுடையவர்" என்றால், எல்லா

மனிதர்களும் தலைப்பாகை உபயோகிக்காதபடியால், இந்தலக்ஷணம் சரியான லக்ஷணமாகாது ; அப்படியே "மனிதர் இரண்டுகால் பிராணி" என்றால், பக்ஷிகளுக்கும் இரண்டே கால்களிருப்பதால், இதுவும் சரியான லக்ஷணமாகாது. "இந்திர ஸரஸ்வதீ" பட்டம் கும்பகோண மடத்து ஆசார்யர்களென்று சொல்கிற அநேகம் பேர்கள் வஹிக்காமலிருந்தாலும், அவ்வாசார்யர்களைத் தவிர மற்ற பேர்கள் வஹித்திருந்தாலும், இப்பட்டம் அம்மடத்து தனிப் பட்டமாகாதென்பது தெளிவாகும். இந்த கௌரவப் பட்டத்தை ஸ்ரீசங்கரர் தன் பெயருடன் எப்பொழுதும் சேர்த்திருப்பதில்லை ; அவருடைய சிஷ்யர்களாவது, வியாக்யாதாக்களாவது, பக்தர்களாவது, வேறுயாரும், இப்பட்டத்தை அவருக்கு கொடுத்து வியவ்ஹரித்திருப்பதும் கிடையாது. கும்பகோண பரம்பரையில் சேர்த்துக் கொண்டிருக்கிற ஸர்வஜ்ஞாத்மா, ஞானோத்தமர், ஆனந்தகிரி, மூககவி, சங்கரானந்தர், அத்வைதாநந்தர், முதலிய பிரஸித்த கிரந்த கர்த்தாக்கள் அவர்கள் இருந்ததாகச் சொல்கிற இம்மடத்தைப் பற்றியாவது இந்த தனிப்பட்டமான இந்திர ஸரஸ்வதியைப் பற்றியாவது பிரஸ்தாவிக்காமலே இருந்து விட்டதற்குக் காரணம் என்ன ?

கும்பகோண மடத்து தாம்ர சாஸனங்களில் சிலதை குருரத்ன மாலிகா வியாக்யானத்துடன் வெகு காலத்திற்கு முன்னும், இப்பால் தங்கள் வசமுள்ள எல்லாவற்றையும், வெளியிட்டிருக்கிறார்கள். சாஸனம் வாங்கினவர் காணப்படும் சாஸனங்களில் "இந்திர" பட்டத்தைக் காணவில்லை. 10 வது சாஸனத்தில் மாத்திரம் "இந்திர ஸரஸ்வதி" காண்கிறது; ஆனால் அது விஷயமாய்

T.A. கோபீநாதராவ் "இது வெகு சமீபத்தில் ஏற்பட்ட நாகரிலிபியில் இருக்கிறது" என்றும், L. D. ஸ்வாமி கண்ணுப்பிள்ளை "இதில் கண்ட தினத்தில் அதில் கண்டபடி சந்திர கிரஹணம் ஏற்படவேயில்லை" என்றும் சொல்லிவிட்டபடியால் அதை நம்புவதற்கில்லை. இவ் விதம் மடத்து ஆதாரவுகளிலேயே இந்த விசேஷ கௌரவத்திற்கு இடமில்லை.

தவிரவும் ஸ்ரீசங்கரரே ஏற்படுத்தினதாகச் சொல்கிற மடாம்நாயஸேதுப்படி இப்பட்டம் இம்மடத்தார்களுக்கே உரியதென்று இருக்குமானால், இம்மடத்திற்கு ஸம்பந்தமேயில்லாத அநேகர்கள் இப்பட்டத்துடன் இருந்து வந்திருக்கிறார்களே, அதுவும் காஞ்சியிலும் கும்பகோணத்திற்கு வெகு ஸமீபத்திலுமேயே அவ்விதப் பட்டம் வஹித்திருக்கிறார்களே, அதற்கென்ன ஸமாதானம்? சிலர்களை மாத்திரம் இங்கு உதாஹரிக்கிறோம்.

1. அநேக உபநிஷத்துக்களுக்கு வியாக்யானம் எழுதி உபநிஷத் பிரஹ்ம யோகி என்று பிரஸித்தி அடைந்து, காஞ்சியிலேயே உபநிஷத் பிரஹ்மேந்திர மடத்தை ஸ்தாபித்த ராமசந்திர இந்திர ஸரஸ்வதீ

2. அவருடைய குரு வாஸுதேவ இந்திர ஸரஸ்வதீ

3. உபநிஷத் பிரஹ்மேந்திர மடாதிபதிகள் யாவரும் இந்திர ஸரஸ்வதீகளே. அப்பய்ய தீக்ஷிதர் கிராமமான விரிஞ்சிபுரத்திலுள்ள மார்க்கபந்து ஆலயத்தில் 1892ல் கும்பாபிஷேகம் செய்வித்து ஸ்ரீ சிருங்கேரிமடம் ஆசார்யாருடையவும் தீக்ஷிதருடைய

ஸந்ததியாருடையவும் ஸஹாயத்தில் அங்கே நித்திய பூஜைக்கு ஏற்பாடு செய்தவருமான மஹாதேவ இந்திர ஸரஸ்வதீ இவர்களில் குறிப்பிடவேண்டியதுண்டு.

4. அப்பய்ய தீக்ஷிதருக்கு ஸமகாலத்தவரும் பிரபஞ்சஸார ஸங்கிரஹம் முதலிய கிரந்தங்கள் இயற்றிய கீர்வாண இந்திர ஸரஸ்வதீ

5. நியாய போதம் எழுதிய பாலகிருஷ்ண இந்திர ஸரஸ்வதீ

6. அவருடைய குரு ரகுநாத அல்லது ராகவ இந்திர ஸரஸ்வதீ

7. யோகவாஸிஷ்ட வியாக்யானம் எழுதின ஆனந்தபோத இந்திர ஸரஸ்வதீ

8. அவருடைய குரு கங்காதர இந்திர ஸரஸ்வதீ. இவரே ஸ்வாராஜ்ய ஸித்தி எழுதின கங்காதர இந்திர ஸரஸ்வதீயாக இருக்கலாம்.

9. ஸ்மிருதி ரத்னம் எழுதின பரமாநந்தகன பிரஹ்மாநந்த ஸரஸ்வதீயின் குரு சிதாநந்த பிரஹ்ம இந்திரஸரஸ்வதீ

10. அவருடைய குருவும் சாந்தோக்ய பாஷ்ய டீகை எழுதினவருமான அபிநவ நாராயணேந்திர ஸரஸ்வதீ

11. அவருடைய குரு ஞானேந்திர ஸரஸ்வதீ. ஸித்தாந்த கௌமுதிக்கு வியாக்யானம் எழுதின ஞானேந்திர ஸரஸ்வதீயும் இவர்தானென்று தெரியவில்லை.

12. அவருடைய குரு கைவல்ய இந்திர ஸரஸ்வதீ

13. அத்வைத பூஷணம் எழுதின போதேந்திர ஸரஸ்வதீ.

14. அத்வைத பூஷண வியாக்யானம் எழுதின வாஸுதேவேந்திர ஸரஸ்வதீ.

15. சம்பூராமாயண வியாக்யானம் எழுதின வெங்கட நாராயணருடைய குரு கோபால இந்திர ஸரஸ்வதீ

16. நெரூரில் ஸித்தியடைந்திருக்கும் ஸதாசிவ இந்திர ஸரஸ்வதீ. இவரே குருரத்னமாலிகை எழுதினதாக கல்பிக்கிறார்கள்.

17. குருரத்ன மாலிகைக்கு வியாக்யானம் எழுதின ஆத்மபோத இந்திர ஸரஸ்வதீ. இவரையே அம்மடத்தின் அதிபதியாகச் சொல்லவில்லை.

18. ஸமீபகாலத்தில் தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து ஸித்தாந்த லேச தாத்பர்ய ஸங்கிரஹம் எழுதின வாஸுதேவ இந்திர ஸரஸ்வதீ.

19. தஞ்சாவூர் ஜில்லாவிலேயே ஸமீப காலத்தில் இருந்து அத்வைத ஸித்தாந்த குரு சந்திரிகை எழுதின ராமபிரஹ்ம இந்திர ஸரஸ்வதீ.

20. சேலம் ஜில்லா சேந்தமங்கலத்தில் இருந்து ஸமீபகாலத்தில் ஸித்தியடைந்த ஸ்வயம்பிரகாச இந்திர ஸரஸ்வதீ.

21. அவருடைய குரு ஸதாசிவ இந்திர ஸரஸ்வதீ

22. மாதவீய சங்கர விஜயத்திற்கு வியாக்யான மான அத்வைத ராஜ்ய லக்ஷ்மீ என்ற கிரந்தத்தை இயற்றிய அத்வைத ஸச்சிதாநந்த இந்திர ஸரஸ்வதி

கும்பகோண மடத்தாருக்கு இப் பட்டம் ஏற்பட்ட தென்று சொல்லும் வாதத்திற்கு அவர்களுடைய ஆதா ரங்களே ஆதரவு அளிக்கவில்லை யென்பதையும் அவர் களுக்கு மாத்திரம் பாத்யமென்று சொல்வதும் நிராதார மென்பதை மற்றவர் அப்பட்டத்தைக் வைத்துக் கொண் டிருப்பது ருசு படுத்துகிறதென்பதையும் தெளிவுபடுத்த மேலே கண்ட விஷயங்கள் போதுமானது.



அத்யாயம்—13

## யோக லிங்கம்

**ஆதி** ஆசார்யார் காஞ்சி மடம் ஸ்தாபித்தாரா என்ற **பிரச்னைக்கு** ஸம்பந்தமேயில்லாத அநேக விஷயங்களைக் **கலந்து** ஆதிமுதல் வெறும் குழப்பத்தை உண்டு பண்ணு **வதே** கும்பகோண மடத்தாரின் காரியமாக இருந்து வரு **கிறது**. காஞ்சீபுரத்தையும் அதிலுள்ள ஆலயங்களையும் **ஸ்ரீசங்கர** பகவத் பாதர் புதிப்பித்தார் என்பதை யாரும் ஆக்ஷேபிக்கவில்லை. இவ்விதம் உபகாரம் செய்த மஹானுக்கு ஞாபகார்த்தமாக ஏதேனும் சின்னங்கள் இருப்பதிலும் ஆச்சர்யமில்லை. இதனுல் அங்கே மடம் ஏற்படுத்தினரென்று ஏற்படாது. அவர் வைத்துக் கொண்டிருந்த ஒரு ஸ்படிக லிங்கம் தங்களிடமிருந்து வருவதாலும், அவர் காஞ்சீபுரத்தில் ஸர்வஜ்ஞ பீடம் ஏறினபடியாலும், அவர் அங்கேயே ஸித்தியடைந்த படி யாலும், மடம் ஸ்தாபித்தது ருசுவாகிறதென்கிருர்கள். இவ் விஷயங்களைத் தனித்தனியே பரிசீலனை செய்ய வேண்டியதுதான் நியாயம். ஆனுல் இவைகளுக்கு பிர மாணமாய்ச் சொல்லும் ஆதாரங்கள் இவ்விஷயங்களை கலந்தே விவஹரிக்கிறபடியால், நாமும் கலந்தே விமர் சனம் செய்ய வேண்டிவரும்.

**இந்த லிங்கம்** விஷயமாக சொல்லும் முக்கிய பிர **மாணம் சிவரஹஸ்யம்**. அதில் காசியில் விசுவேசுர **லிங்கத்திலிருந்து** பகவான் வெளிக்கிளம்பி ஸ்ரீசங்கர **ரிடம் ஐந்து லிங்கங்கள்** கொடுத்ததாகச் சொல்லப் **படுகிறது.**

एतत् प्रतिगृहाण त्वं पञ्चलिङ्गं सुपूजय ॥
संगृह्य लिङ्गानि जगाम वेगात्
भूमौ सुबुद्धार्हतजैनमुख्यान् ॥
तद्योगभोगवरमुक्तिसुमोक्षयोग-
लिङ्गार्चनाप्राप्तजयः "स्वकाश्रमम्" ।
तान् वै विजित्य तरसाऽक्षतशास्त्रजालैः
मिश्रान् "स काञ्च्यामथ सिद्धिमाप"॥

இவ்வாக்கியங்களில் ஜைனர் வேறு ஆர்ஹதர் வேறு போல் கண்டிருக்கிறது; முக்தி வேறு மோக்ஷம் வேறு போல் கண்டிக்கிறது; யோகம் என்ற வார்த்தை இரண்டு தடவை உபயோகிக்கப்பட்டிருக்கிறது; இவைகளுக்கு காரணம் தெரியவில்லை. "யோக, போக, வர, முக்தி, மோக்ஷ" எல்லாமே யோகலிங்கங்கள் தான் என்று தாத்பர்யமா? தவிரவும் "மிச்ரர்" களை ஜயித்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வார்த்தை வடதேசத்திலுள்ள பண்டிதர்களைத்தான் ஸாதாரணமாகக் குறிக்கும்; ஆகையால் வாதம் நடந்தவிடமும் வடதேசம் என்றே நினைக்க இடம் கொடுக்கிறது. மேலே கொடுத்திருப்பது கும்பகோணம் பாடம். இதர பாடங்களில் "स्वकाश्रमम्" என்பது "स कामम्" என்றும், स काञ्चयामथ सिद्धिमाप என்பது ततो नैजमवाप लोकम्, ततो लोकमवाप शैवम्, स काञ्चयामथ सिद्धिमवाप शैवम् என்றெல்லாம் காணப்படுகிறது. தவிரவும் அத்யாயமத்தியில் இரண்டரை சுலோகங்களையும் கடைசியில் 13 சுலோகங்களையும் கும்பகோண மடத்தார் விட்டுவிடுகிருர்கள்.

இப்புராண ஆதாரத்திற்கு சரித்திர முறையில் பிராமாண்யம் கொடுக்க முடியாதென்று முன்னமே சொன்னபடியால் இந்த பாடங்களில் எது சரியென்று தீர்மானிக்க அவசியமில்லை. ஆனால் கும்பகோண மடத்தாரால் விடப்பட்டிருக்கும் சுலோகங்கள் நவீன கல்பனையென்று முன் சொன்ன பண்டிதர் சொல்ல முன் வருவதால் அவர் வாதம் ஆதாரமற்றதென்று காட்ட வேண்டியிருக்கிறது.

तद्भेदगिरिविज्ञस्त्वं संजातोऽसि मदंशतः ।
द्वात्रिंशत् परमायुस्ते शीघ्रं कैलासमावस ॥

என்ற சுலோகத்தைப் பிளந்து மத்தியில்

दुर्वासश्शापतो भूमौ जातां वाणीं विजित्य ताम् ।
अगस्त्यचरिते देशे तुङ्गातीरे सुनिर्मले ॥
पुण्यक्षेत्रे द्विजवर स्थापयित्वा सुपूजय ।
यत्रास्ते ऋष्यशृङ्गस्य महर्षेराश्रमो महान् ॥
कलावपि ततोऽद्वैतमार्गः ख्यातो भविष्यति ।

என்று இரண்டரை சுலோகங்களை கல்பித்து "அச்சிட்டி" ருக்கிறார்களென்றும் சிவரஹஸ்யத்தில் கூட சிருங்கேரியைப்பற்றி சொல்லியிருப்பதாக கௌரவம் கொண்டாடுவதற்காக இவ்விதம் செய்யப்பட்டிருப்பதாயும் சொல்லிருர். கும்பகோணமடத்தார் உள்பட யாவராலும் சிருங்கேரியில் ஸ்ரீசாரதாலயம் ஏற்பட்ட விஷயம் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமே; அதற்காக புதிதாக பிரமாணம் கல்பிக்க அவசியமே கிடையாது. மேலும் 'நம் தேசத்திற்கு அச்சு வருவதற்கு முன்னமேயே வெகு காலத்திற்குமுன்

இந்த சுலோகங்கள் பிரசாரத்தில் இருந்திருப்பதால் புதி
தாக அச்சிடுபவர்களால் கல்பிப்பது ஸாத்தியமுமில்லை.
குருரத்ன மாலிகா வியாக்யானம் எழுதின ஆத்மபோ
தேந்திரர் காலம் 1720 ஆனால் அந்த வியாக்யாதா கும்ப
கோண மடத்தில் ஆசார்யராகவிருந்து 1704ல் ஸித்திய
டைந்ததாகச் சொல்கிற ஆத்ம பிரகாசேந்திரருடைய
சிஷ்யரென்று தன்னைச் சொல்லிக் கொள்வதால் அவர்
காலம் 17 வது நூற்றாண்டு என்றுதான் சொல்ல வேண்
டும்; எப்படியும் 18வது நூற்றாண்டு ஆரம்பம் என்ரு
வது இருக்க வேண்டும். அவரே தன் வியாக்யானம்
33ம் பக்கத்தில்

ये तु अभिनवोद्दण्डविद्यारण्यस्वामिभिरारचिते विद्या-
शंकरविजये शिवरहस्यवचनत्वेन प्रतिपादिताः "दुर्वासश्शापतो
भूमौ जातां वाणीं" इत्यादयः श्लोकाः ते न क्वापि शिवरहस्य-
प्राचीनमातृकासु उपलभ्यन्ते इत्यप्रमाणिकमेव

" அபிநவ உத்தண்ட வித்யாரண்ய ஸ்வாமிகளால் இயற்
றப்பட்ட வித்யாசங்கர விஜயத்தில் சிவரஹஸ்ய வசன
மாகச் சொல்லப்படுகிற दुर्वासश्शापतो भूमौ जातां वाणीं என்று
ஆரம்பிக்கும் சுலோகங்கள் சிவரஹஸ்ய பிராசீன ஏடு
களில் எங்கேயும் அகப்படாதபடியால் பிரமாணமில்லை."
இவர் குறிப்பிடும் வித்தியாசங்கர விஜயம் நமக்கு கிடைக்
கவில்லை. எப்படியும் ஆத்ம போதருக்கு முன்னால்
இருந்திருக்கவேண்டும். அந்த கிரந்தத்தில் இந்த
சுலோகங்கள் இருக்கின்றனவென்று எடுத்துச்சொல்லி
ஆத்மபோதேந்திரர் ஆக்ஷேபித்திருக்கையில் அவைகள்
அச்சுப் புஸ்தகங்களில் புதிதாக சேர்க்கப்பட்டவை

யென்றால் என்ன அர்த்தம்? வாஸ்தவத்தில், இந்த சுலோகங்கள் சிருங்கேரிக்கு பிராதான்யம் கொடுப்பதாக தோன்றுவதால் அவைகளை எடுத்து விடவேண்டு மென்று ஆத்ம போதர் கருதினார் என்றே ஏற்படுகிறது.

கடைசியிலுள்ள மற்ற சுலோகங்கள் வாஸ்தவமான சுலோகங்கள் என்பதற்கு ஆத்ம போதேந்திரரே பிரமாணமாவார். கும்பகோண பாடத்தின் பிரகாரம் ஸ்ரீசங்கரர் மண்டன மிச்ரரையாவது ஸரஸ்வதியையா வது ஜயித்ததாக வாக்யமில்லை. ஸ்ரீசங்கரர் ஸரஸ்வதியை ஜயித்தது ஸர்வஜ்ஞ பீடாரோஹண ஸமயத்திலே தவிர மண்டனமிச்ர ஸம்வாத ஸமயத்தில் இல்லை யென்றும் அப்படியேதான் சிவரஹஸ்யம், பிரஹத் சங்கர விஜயம், கேரளிய சங்கர விஜயம், பிராசீன சங்கர விஜயம், வியாஸாசலீயம், முதலான கிரந்தங்களில் சொல்லப் பட்டிருப்பதாகவும் சொல்கிறார். மற்ற கிரந்தங்கள் இங்கே பிரகிருதமில்லை. கும்பகோணம் சிவரஹஸ் யத்தில் ஸர்வஜ்ஞ பீடத்தைப் பற்றி பிரஸ்தாவமே கிடையாது; ஸ்ரீசங்கரர் அதையேறப் பிரவிருத்தி செய்த தாகவாவது, ஸரஸ்வதியுடன் வாதம் செய்ததாகவாவது அவளை ஜயித்ததாகவாவது பிரஸ்தாவத்திற்கு இடமே யில்லை.

सर्वज्ञपीठाधिरोहणसमय एव तद्विजयस्य शिवरहस्य-बृहच्छंकरविजय केरलीयशङ्करविजय प्राचीनशङ्करविजयव्यासा-चलीयादिषु निरूपितत्वात्

ஸர்வஜ்ஞபீடாதிரோஹண ஸமயத்தில் ஸ்ரீசங்கரர் ஸரஸ்வதியை ஜயித்ததாக சிவரஹஸ்யத்தில் காணப்

படுகிறதென்று ஆத்ம போதேந்திரர் வியக்தமாய்ச் சொல்வதால், இப்பால் கும்பகோண மடத்தாருக்கு அஸௌகர்யமென்று தோன்றியிருக்கிற 13 சுலோகங்கள் உள்ள பாடமே அவர் பாடம் என்று நன்கு தெரிகிறது. அவைகளில்தான் இவ்விஷயங்கள் காணப்படுகின்றன. அந்த சுலோகங்களாவன—

काञ्च्यां तपस्सिद्धिमवाप्य दण्डी
चण्डीशरूपो जगदाकलय्य ।
ब्रह्मैक्यविद्यां रचयन् स भाष्यं
शारीरकं नाम जगाद मोदात् ॥

व्यासेन संभाष्य समेत्य काशीं
तन्मण्डनार्थं परिखण्ड्य वाणीम् ।
जेतुं शरीरान्तरमेत्य काम-
कलां जगाहे प्रमदावराभ्यः ॥

पुनः स्वकं देहमवाप्य तूर्णं
पूर्णं निजं काममथाकलय्य ।
वाणीं स जित्वैव तु तां मठे स्वे
शृङ्गेरिकाख्ये प्रणिवेश्य तुष्टः ॥

कापालिकं तं क्रकचं महोग्रं
कर्णाटदेशे निखिलं विजित्य ।
गोकर्णमासाद्य तमीशमीड्यं
स्तुत्वा महाराष्ट्रपदं प्रपेदे ॥

तत्र स्थितान् भास्करभट्टमुख्यान्
तं नीलकण्ठं च तृणीकरिष्यन् ।
काश्मीरमासद्य स शारदायाः
सर्वज्ञपीठं पदमारुरुक्षन् ॥

तत्र स्थितान् संप्रति सर्वपण्डितान्
चार्वाकमुख्यान् विपुलान् विजित्य ।
स दक्षिणद्वारस्थकवाटभेदं
कृत्वा स देव्या विनिशङ्क्यमानः ॥

शङ्कां निराकृत्य निविश्य पीठे
ततो बदर्याश्रममाप दण्डी ।
नारायणं तत्र तपज्जलौघं
कुण्डं प्रशीतस्य निवारणाय ॥

ध्यात्वा शिवं तत्र निविश्य तस्थौ
कैलासदेशाद्वृषभश्च देवाः ।
तमेत्य संस्तुत्य यदायुषस्ते
कालोऽगमत् त्वं वृषभेऽधिरोह ॥

इति प्रचीर्णः प्रभुरात्मनि स्वे
विचिन्त्य शिष्यान् निजगाद मोदात् ।
यूयं चतुर्दिक्षु मठेषु लिङ्गैः
साकं वसन्त्वित्युपदिश्य हर्षात् ॥

विवेश पृष्ठं वृषभस्य हस्तं
संगृह्य वैरिञ्चमथास्य दत्तम् ।
सर्वैश्च देवैरभिनन्द्यमानः
स शंकरस्तन्निजधाम देवः ॥

विवेश कैलासनिवेशमन्तः
सच्छन्दवृन्दारकवृन्दपूर्णम् ।
तदादि तच्छंकरभाष्यमेतद्-
भूमौ जनं मुक्तिपदं दधाति ॥

एतत्तेऽभिहितं देवि मुख्यं मुक्तिपदावहम् ।
शांकरं चरितं लोके भविष्यति न संशयः ॥

इति श्रुत्वा महेशानाच्चरितं शंकरस्य सा ।
पुलकाङ्कुरसंहृष्टा प्रणनाम महेश्वरम् ॥

इति श्रीशिवरहस्ये नवमांशे शंकरप्रादुर्भावो नाम
षोडशोऽध्यायः ॥

இந்த பாடத்தில் அத்யாயம் எவ்வளவு கிரமமாய் முடிகிறதென்பதையும் கும்பகோணப் பதிப்பில் திடீரென்று நிறுத்தப் படுகிறதென்பதையும் வாசகர்கள் நன்கு கவனிக்கலாம். இந்த சுலோகங்களில்தான் மண்டனமிச்ரரின் பார்யையான ஸரஸ்வதியுடனே ஸர்வஜ்ஞ பீடதேவதையான ஸரஸ்வதியுடனே வாதம் காணப்படுகிறது. கும்பகோண சிவரஹஸ்யத்தில் இந்த வாத

பிரஸ்தாவமேயில்லை. ஸர்வஞ்ஞபீடாரோஹண ஸமயத்தில் விவாதம் ஏற்பட்டதாக ஆத்ம போதேந்திரர் சிவரஹஸ்யத்தை ஆதாரமாகக் குறிப்பிடுவதிலிருந்து இப்பால் அம்மடத்தாரால் மறைக்கப்படும் சுலோகங்கள் ஆத்ம போதேந்திரரால் பிரமாணமாக பாவிக்கப்பட்டவையென்று தெளிவாகத் தெரிகிறது. இந்த சுலோகங்கள் இல்லையென்றாலும் இந்தவாதத்தைக் கண்டிருக்கும் வேறு சுலோகங்களாவது இருந்திருந்தால்தானே ஆத்ம போதேந்திரர் அவ்விதம் சொல்லியிருக்கமுடியும்? அந்த சுலோகங்கள் இப்பொழுது எங்கே? ஆகையால் சிவரஹஸ்யம் சிலர் கையில் அகப்பட்டுக்கொண்டு அவர்கள் இஷ்டம் போல் கத்தரிக்கப்பட்டும் மாற்றப்பட்டும் வந்திருக்கிறதென்று தெரிகிறது.

இந்த சுலோகங்களில் நம் தேசத்தின் நான்கு திக்குகளிலும் ஸ்தாபித்த நான்கு மடங்களிலேயே லிங்கங்களை பூஜித்து வரும்படி சிஷ்யர்களைப் பார்த்து ஆசார்யார் ஆக்ஞை செய்ததாகக் காண்கிறது. ஒரு லிங்கம் சிதம்பர க்ஷேத்திரத்தில் வைக்கப்பட்டு இன்னமும் ஆராதிக்கப்பட்டு வருகிற விஷயத்தில் விவாதமில்லை. தேசத்தின் நான்கு திக்குகளிலும் நான்கு மடங்கள் ஏற்படுத்தி தன் நான்கு சிஷ்யர்களான ஸுரேசுவரர், பத்மபாதர் தோடகர், ஹஸ்தாமலகர், இவர்களை அங்கு நியமிக்கும் போது அவர்களிடத்தில் மற்ற நான்கு லிங்கங்களையும் கொடுத்தாரென்பதுதான் உசிதமாகும். காசியில் விசுவேசுவரர் இந்த லிங்கங்களை ஸ்ரீசங்கரரிடம் கொடுக்கும் போது நான்கு சிஷ்யர்களும் கூடவே இருந்தார்களென்று சிவரஹஸ்யத்தில் சொல்லப் பட்டிருக்கிற முறையில் அந்த சிஷ்யர்

களுக்குள் சிலருக்கு லிங்கம் கொடுத்து சிலருக்குக் கொடுக்கவில்லையென்ற பக்ஷபாத தோஷத்தை ஆசார்யாருக்கு கல்பிக்கிறது என்ன நியாயம்? இந்த சுலோகங்களில் வியக்தமாகவே

यूयं चतुर्दिक्षु मठेषु लिङ्गैः
साकं वसन्त्वित्युपदिश्य हर्षात् ।

"நீங்கள் நான்கு திக்குகளிலும் மடங்களில் லிங்கங்களோடு இருந்து வாருங்கள் என்று ஸந்தோஷமாய் சொல்லி விட்டு"

என்று கண்டிருக்கும் சுலோகங்கள் அம் மடத்தாருக்கு அஸௌகர்யமாயிருக்கின்றன. சிவரஹஸ்யம் பிரமாணம் என்ற விஷயத்தில் சிருங்கேரி மடம் ஸர்வாதிகாரி ஸ்ரீகண்டசாஸ்திரிகளை உதாஹரிப்பவர்கள் அவர் சிதம்பரத்தில் ஒரு லிங்கமும் மற்ற நான்கு மடங்களில் நான்கு லிங்கங்களும் என்று சொன்ன அடுத்த வாக்கியத்தை உதரிவிடுகிறார்கள். ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் மேலே கண்ட சுலோகங்களின் ஆதாரத்தை வைத்து தான் சொல்லியிருக்க வேண்டும். அந்த சுலோகங்களை மாத்திரம் நிராகரிப்பது நியாயமில்லை.

சிவரஹஸ்யத்தின் படி இந்த லிங்கங்கள் பரமசிவனால் காசியில் கொடுக்கப்பட்டன. ஆனால் ஆசார்யாருடைய அஷ்டோத்தரசதநாமாவளியில் சொல்லியிருப்பது வேறு விதம். அந்த நாமாவளியிலும் கும்பகோணம் மடத்தார் பல மாறுதல் செய்திருந்தும்

कैलासयात्रासंप्राप्तचन्द्रमौलिप्रपूजकः ।

"கைலாஸ யாத்திரையின் போது கிடைத்த சந்திரமௌளீசுவரரைப் பூஜிப்பவர்"

என்ற நாமாவைத் திருத்தவில்லை. காசியிலேயே லிங்கங்கள் கிடைத்து விட்டால் கைலாஸத்தில் மறுபடியும் எப்படி வாங்குகிறது? ஏன் வாங்கவேண்டும்? கைலாஸத்தில் லிங்கங்கள் வாங்கும் போது ஸுரேசுவரரும் கூடவே இருந்ததாக ஸ்ரீகும்பகோணமடம் தற்கால ஆசார்யார் சொல்கிறார்! (அவருடைய உபன்யாஸங்கள் 2ம் பாகம் பக்கம் 232) இரண்டு வித கதைகளும் வாஸ்தவமாக இருக்க முடியாது. கைலாஸ யாத்திரையில் கிடைத்ததாகவே ஆனந்தகிரியில் வேண்டிய திருத்தல்களை செய்திருக்கிறார்கள். அப்படியே இதர அம்சங்களுக்கும் உபயோகப்படும்படி திருத்தியிருக்கிறார்கள். கல்கத்தா பதிப்பையும் அம்மடத்தார் பரிஷ்கரித்து அச்சிட்டிருக்கும் பதிப்பையும் சேர்த்துப் பார்த்தால் அவர்கள் விஷமம் நன்கு விளங்கும். கல்கத்தா பதிப்பில் கைலாஸத்திற்கு போனதாகவாவது, லிங்கங்களைப் பெற்றதாகவாவது, கேதாரம், நீலகண்டம், சிருங்கேரி காஞ்சி, சிதம்பரம், இவ்விடங்களில் அவைகளை வைத்ததாகவாவது பிரஸ்தாவமே கிடையாது. இவ்வம்சங்கள் பரிஷ்காரப் பதிப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சிருங்கேரியிலும் சிதம்பரத்திலுமுள்ள லிங்கங்களைப் பற்றி ஆக்ஷேபிக்க வழியில்லை. இதர மூன்று மடங்கள் வெகு தூரத்தில் இருப்பதால் அவைகளுக்கு சந்திர மௌளிசுவர லிங்கம் கிடையாதென்றால் யார் கவனித்து ஆக்ஷேபிக்கப் போகிறார்களென்ற தைர்யத்தின்பேரில் அம் மடங்களைப் பற்றி பிரஸ்தாவமே யில்லாமலும் அவைகளுக்கு லிங்கங்கள் இல்லை போலும் திருத்திக் கொண்டார்கள். சிருங்கேரிக்கு ஸமான அந்தஸ்துள்ள அம் மடத்தார்கள் இதை ஒப்புக்கொள்வார்களா?

**துவாரகா மடத்திலிருந்து** வந்து இன்னமும் பூஜிக்கப் **பட்டுவருகிற** ஸ்ரீசந்திரமௌளீசுவர லிங்கத்திற்கு **என்ன** போக்கு?

| கல்கத்தா பதிப்பு | பரிஷ்காரப் பதிப்பு |
|---|---|
| பக்கம் 179 | |
| तस्मादुदङ्.मार्गमवलम्ब्य अमरलिङ्गं केदारलिङ्गं दृष्ट्वा कुरुक्षेत्रमार्गात् बदरीनारायणदर्शनं कृत्वा तत्र शीतलोदक ... ... | तस्मा दुदङ्.मार्गमवलम्ब्य योगविद्याप्राप्तवियत्संचारः कैलासं अधिगम्य पार्वतीसमेतं परमेश्वरं प्राणमत्। स्वात्मतया अनुसंधानशीलस्य च परमगुरोः अग्रतः परमेश्वरः पञ्च स्फाटिकलिङ्गानि प्रकाशयामास। जगदनुग्रहाय अम्बास्तवसारेण सह तानि आदाय पुनः अवनितलमासाद्य केदारक्षेत्रे एकं मुक्तिलिङ्गाख्यं तत्र प्रतिष्ठाप्य तत्क्षेत्रपूजकान् पूजार्थं नियोजयामास। ततः कुरुक्षेत्रमार्गात् बदरीनारायणदर्शनं कृत्वा तत्र शीतलोदक ... |

| கல்கத்தா பதிப்பு | பரிஷ்காரப் பதிப்பு |
| --- | --- |
| அங்கிருந்து வடக்கு திக்காகச் சென்று அமர லிங்கம் கேதார லிங்கம் தர்சனம் செய்துக் கொண்டு குரு க்ஷேத்திர வழியாக பதரீ நாராயணரை தர்சித்துக் கொண்டு அங்கே குளிர் ஜல ... ... ... | அங்கிருந்து வடக்கு திக்காக சென்று யோக வித்யையினால் கிடைத்துள்ள ஆகாச ஸஞ்சாரத்தினால் கைலாஸம் போய் பார்வதீ ஸமேதரான பரமேசுவரரை நமஸ்கரித்தார். தன் ஆத்மாவாகவே அனுஸந்தானம் செய்ய வல்லமையுள்ள பரம குருவின் முன்னால் பரமேசுவரர் ஐந்து ஸ்படிக லிங்கங்களைக் காட்டினார். உலகத்தின் அனுக்கிரஹத்திற்காக தேவீ ஸ்தோத்திர ஸாரத்துடன் அவைகளை பெற்றுக் கொண்டு கேதார க்ஷேத்திரத்தில் முக்தி லிங்கம் என்ற ஒரு லிங்கத்தை பிரதிஷ்டை செய்துவிட்டு அந்த க்ஷேத்திர பூஜகர்களையே பூஜைக்காக ஏற்படுத்தினார். பிறகு குரு க்ஷேத்திரம் வழியாக பதரீ நாராயணரை தர்சித்துக் கொண்டு அங்கே குளிர் ஜல ... |

| கல்கத்தா பதிப்பு<br>பக்கம் 180 | பரிஷ்காரப் பதிப்பு |
| --- | --- |
| तस्मात् द्वारिकादिदिव्यस्थलविलोकनात् प्रादक्षिण्यं अयोध्यां प्राप | तस्मात् द्वारकादिदिव्यस्थलविलोकनवशात् प्रादक्षिण्येन नीलकण्ठेश्वरं नत्वा तत्र शिष्यैः पूज्यमानः परमगुरुः वरनामकं लिङ्गं प्रतिष्ठाप्य तत्रस्थान् पूजार्थं नियुज्य ततः क्रमात् अयोध्यां अवाप |
| அங்கிருந்து துவாரிகை முதலான திவ்ய ஸ்தலங்களை பார்த்துகொண்டு பிரதக்ஷிணமாக அயோத்யை அடைந்தார். | அங்கிருந்து துவாரகை முதலான திவ்ய ஸ்தலங்களை தர்சித்துக்கொண்டு பிரதக்ஷிணமாக நீலகண்டேசுவரரை நமஸ்கரித்து அங்கு சிஷ்யர்களால் பூஜிக்கபட்ட பரம குருவானவர் பர என்ற லிங்கத்தை பிரதிஷ்டை செய்து அங்குள்ளவர்களை பூஜைக்காக ஏற்பாடு செய்து அங்கிருந்து கிரமமாக அயோத்யை அடைந்தார். |

| கல்கத்தா பதிப்பு<br>பக்கம் 191 | பரிஷ்காரப் பதிப்பு |
|---|---|
| तदनन्तरं कंचित् शिष्यं सुरेश्वराख्यं पीठाध्यक्षं कृत्वा स्वयं निश्चक्राम। | तदनन्तरं पद्मपादाख्य कंचित् शिष्यं पीठाध्यक्षं कृत्वा भोगनामकलिङ्गं एतस्मिन् पीठे निक्षिप्य स्वयं निश्चक्राम। |
| அதன் பிறகு ஸுரேசுவரர் என்ற ஒரு சிஷ்யரை பீடாதிபதியாகச் செய்து, தான் வெளிக் கிளம்பினர். | அதன் பிறகு பத்மபாதர் என்ற ஒரு சிஷ்யரை பீடாதிபதியாகச் செய்து இந்த பீடத்தில் போகம் என்ற பெயருடைய லிங்கத்தை வைத்து விட்டு, தான் வெளிக் கிளம்பினர். |

ஆனந்தகிரி சங்கர விஜயம் 65வது பிரகரணம் காஞ்சியைப்பற்றியது; அந்த பிரகரணத்திற்கு "ஸ்ரீசக்கிர நிர்மாணம்" என்று பெயர். முதல் பிரகரணத்தில் கிரந்தத்தில் அடங்கிய பிரகரணங்களைச் சொல்லும் போது இந்த பெயரே கொடுக்கப்பட்டிருக்கிறது. பரிஷ்காரம் செய்தவர் லிங்கப் பிரதிஷ்டையையும் சேர்த்துவிட்டபடியால் அந்தப்பிரகரணத்தின் கடைசியில் பெயர் கொடுக்கும் போது "ஸ்ரீசக்கிர நிர்மாணம்— யோகலிங்க ஸ்தாபனம்" என்று மாற்றிக்கொண்டார்; முதல் அத்யாயத்தில் சொல்லியிருக்கும் பெயரை மாற்ற மறந்துவிட்டார் என்று தெரிகிறது.

கல்கத்தா பதிப்பு

பக்கம் 196

तस्मात् सर्वेषां मोक्षफलप्राप्तये दर्शनादेव श्रीचक्रं भगवद्भिः आचार्यैः निर्मितम् ॥

इति आनन्दगिरिकृतौ श्री-चक्रनिर्माणं नाम पञ्चषष्ठि-प्रकरणम् ॥

பரிஷ்காரப் பதிப்பு

अतः सर्वेषां मोक्षफल-प्राप्तये दर्शनादेव श्रीचक्रं प्रभवतीति भगवद्भिः आचार्यैः तत्र निर्मितम् ।

तस्मात् मुक्तिकांक्षिभिः सर्वैः श्रीचक्रपूजा कर्तव्या इति निश्चित्य ... तत्रैव निजावासयोग्यं मठमपि परिकल्प्य तत्र निजसिद्धान्तं अद्वैतं प्रकाशयितुं अन्ते-वासिनं सुरेश्वरं आहूय योगनामकलिङ्गं पूजय इति तस्मै दत्वा त्वं अत्र कामकोटिपीठं अधिवस इति अवस्थाप्य शिष्यजनैः परिपूज्यमानः श्रीपरमगुरुः सुखमास ॥

इति आनन्दगिरिकृतौ श्रीचक्रनिर्माण-योगलिङ्ग-स्थापनं नाम पञ्चषष्ठि-प्रकरणम् ॥

### கல்கத்தா பதிப்பு

ஆகையால் எல்லாரும் தர்சனத்திலேயே மோக்ஷபலன் அடைய வேண்டியதற்காக பகவான் ஆசார்யரால் ஸ்ரீ சக்கிரம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இவ்விதம் ஆனந்தகிரியின் கிரந்தத்தில் ஸ்ரீ சக்கிர நிர்மாணமென்ற 65வது பிரகரணம்

### பரிஷ்காரப் பதிப்பு

ஆகையால் எல்லோரும் தர்சனத்திலேயே மோக்ஷ பலனை அடைய வேண்டியதற்காக ஸ்ரீ சக்கிரம் சக்தியுள்ளதென்று பகவான் ஆசார்யரால் அங்கே நிர்மாணம் செய்யப்பட்டது. ஆகையால் மோக்ஷத்தில் ஆசையுள்ள எல்லோராலும் ஸ்ரீ சக்கிர பூஜை செய்ய வேண்டியது என்று நிச்சயித்து ...... **அங்கேயே தனக்கு தங்குவதற்கு யோக்கியமான மடத்தையும் கட்டிக் கொண்டு அங்கே தன்னுடைய ஸித்தாந்தமான அத்வைதத்தை பிரசாரம் செய்வதற்காக சிஷ்யரான ஸுரேசுவரரை அழைத்து யோக லிங்கத்தை பூஜை செய் என்று அவரிடம் கொடுத்து இங்கே காம கோடி பீடத்தில் இரு**

| கல்கத்தா பதிப்பு | பரிஷ்காரப் பதிப்பு |
|---|---|
| | என்று ஏற்பாடு செய்து விட்டு சிஷ்ய ஜனங்களால் நன்கு பூஜிக்கப் பட்டவராய் பரம குரு ஸுகமாய் வஸித்தார். இவ்விதம் ஆனந்தகிரியின் கிரந்தத்தில் ஸ்ரீ சக்கிர நிர்மாணம் யோக லிங்க ஸ்தாபனம் என்ற 65 வது பிரகரணம். |

ஸுரேசுவரர் கிரஹஸ்தராயிருந்து ஸன்யாஸியானவர், பந்தயத்தின் பேரில் ஸன்யாஸியானவர் ஆகையால் பிரஹ்மசாரியாயிருந்து ஸன்யாஸியானவரே தொடக்கூடியயோகலிங்கத்தைத் தொடுவதற்காவது, பீடாதிபத்யம் வஹிக்கவாவது, அர்ஹர் இல்லையென்ற கக்ஷியை இந்த பரிஷ்காரம் செய்தவர் ஒப்புக் கொள்ளவில்லையென்று தெரிகிறது. ஸுரேசுவரர் பரமஹம்ஸரேயல்லவென்று ஆத்ம போதேந்திரரும் கும்பகோணம் மடத்தாரும் வற்புறுத்துகிருர்கள். இந்த வாக்கியத்திலோ அவரையே யோகலிங்கத்தை பூஜை செய்யும் படிக்கும் பீடாதிபத்யத்தை வஹிக்கும்படிக்கும் ஸ்பஷ்டமாக சொல்லப்பட் டிருக்கிறது.

| கல்கத்தா பதிப்பு | பரிஷ்காரப் பதிப்பு |
|---|---|
| பக்கம் 216 | |
| विषयेषु प्रेषयित्वा स्वयं | विषयेषु प्रेषयित्वा |

| கல்கத்தா பதிப்பு | பரிஷ்காரப் பதிப்பு |
| --- | --- |
| **स्वेच्छया स्वलोकं गन्तुमिच्छुः...** | **तदनन्तरं समीपस्थं इन्द्रसंप्रदायानुवर्तिनं सुरेश्वराचार्यं आहूय भो शिष्य इदं मोक्षलिङ्गं चिदम्बरस्थले प्रेषय इत्युक्त्वा स्वयं स्वलोकं गन्तुमिच्छुः ...** |
| அங்கங்கு தேசங்களுக்கு அனுப்பிவிட்டு, தான் தன் இஷ்டப்படி தன் லோகத்திற்குப் போக விரும்பி ... | அங்கங்கு தேசங்களுக்கு அனுப்பிவிட்டு அதன் பிறகு ஸமீபத்திலிருந்த இந்திர ஸம்பிரதாயத்தை சேர்ந்த ஸுரேசுவராசார்யரைக் கூப்பிட்டு "ஹே சிஷ்யா! இந்த மோக்ஷ லிங்கத்தை சிதம்பர க்ஷேத்திரத்திற்கு அனுப்பி விடு" என்று சொல்லி விட்டு, தான் தன் லோகத்திற்கு போக விரும்பி ... ... ... |

ஸுரேசுவரரையும் இந்திர ஸரஸ்வதீயாக ஆக்கியிருப்பதும் கவனிக்கத்தக்கது. சிதம்பரத்தில் லிங்கம் ஸ்ரீமத் ஆசார்யார் நேரில் பிரதிஷ்டை செய்யவில்லை என்றும் அப்பொறுப்பை ஸுரேசுவரருக்கு விட்டதாகவும் காண்கிறது.

மார்க்கண்டேயஸம்ஹிதையின் அப்பிராமாண்யத்தை பற்றி முன்னமேயே சொல்லியிருக்கிறோம். அதில், லிங்கப் பிரதிஷ்டை வரிசைக் கிரமம் வேறுவிதம். திருத்திய ஆனந்தகிரிப்படி கேதாரம், நீலகண்டம், சிருங்கேரி, காஞ்சி, பிறகு சிதம்பரம் என்பது கிரமம். சிதம்பரம் பிரதிஷ்டை ஆசார்யாருக்குப்பின் ஏற்பட்டதில்லையென்றும் அதுவே முதல் பிரதிஷ்டை என்பதும் அந்த ஸம்ஹிதையின் போக்கு. அதன்படி சிதம்பரம், கேதாரம், நீலகண்டம் காஞ்சி, பிறகு சிருங்கேரி என்பதே கிரமம். அதிலும் ஸுரேசுவரரை அர்ஹரில்லை யென்று சொல்லாமல் அவரையே லிங்கத்தை பூஜை செய்யவும் மடாதிபத்யம் வஹிக்கவும் ஏற்பாடு செய்ததாக காண்கிறது.

शिवलिङ्गं प्रतिष्ठाप्य चिदम्बरसभातले ।
मोक्षदं सर्वजन्तूनां भुवनत्रयसुन्दरम् ॥

वैदिकान् दीक्षितान् शुद्धान् शैवसिद्धान्तपारगान् ।
पूजार्थं युयुजे शिष्यान् पुण्यारण्यविहारिणः ॥

मुक्तिलिङ्गं तु केदारे नीलकण्ठे वरेश्वरम् ।
प्रतिष्ठाप्य महायोगी परां प्रीतिमवाप सः ॥

काञ्च्यां श्रीकामकोटौ तु योगलिङ्गमनुत्तमम् ।
प्रतिष्ठाप्य सुरेशार्यं पूजार्थं युयुजे गुरुः ॥

श्रीशंकराचार्ययोगी शृङ्गगिरिस्थानमगमदखिलेशः ।
श्रीशारदाख्यपीठे शिवलिङ्गं भोगनामकं चक्रे ॥

सुरेश्वराचार्यवरं स्वशिष्यं
काञ्चीपुरीसुन्दरकामकोटौ ।
श्रीचन्द्रमौलीश्वरपूजनार्थं
नियोज्य चक्रेऽस्य धराधिपत्यम् ॥

காஞ்சியில் லிங்கம் பிரதிஷ்டை செய்ததாக சிவரஹஸ்யத்திலும் கிடையாது. கோவிந்தநாதர், சித்விலாஸர், "வியாஸாசலர்" முதலிய எந்த சங்கர விஜயத்திலும் இவ்விஷயம் கிடையாது "பதஞ்ஜலிசரிதம்" ஸ்ரீசங்கரரைப்பற்றி பிரதானமாக சொல்லவராததினுல் அதில் இவ்விஷயம் சொல்ல அவசியமில்லையென்று சொல்லலாம்; அவர் சரித்திரத்தையே சொல்ல ஏற்பட்ட "சங்கராப்யுதய" த்திலும் காஞ்சியில் லிங்கப் பிரதிஷ்டை சொல்லப்படவில்லையே? இப்படியிருக்க ஆனந்தகிரியில் நுழைத்திருக்கும் வாக்கியங்களையும் கக்ஷிக்காக தயார் செய்யப்பட்டிருக்கும் மார்க்கண்ட ஸம்ஹிதா வாக்கியங்களையும் எப்படி நம்ப முடியும்? இவைகளை அனுஸரித்து இப்பால் வெளியிடும் புஸ்தகங்கள் எப்படி ஆதாரமாகும்?

ஆனந்தகிரியின் "சுத்த"ப் பிரதியில் ஆசார்யாருடைய ஜன்மஸ்தலம் காலடி என்றுதான் இருந்ததென்றும் அதை யாரோ வேண்டுமென்று மாற்றி 1881ல் கல்கத்தாவில் அச்சிட்டிருப்பதாகவும் கூசாமல் முன் சொன்ன பண்டிதர் இப்பொழுது சொல்கிருர். அது 1881ல் அச்சானது வாஸ்தவமாயிருந்தாலும் அதற்கு மூலம் ஆக்ஸ்போர்டு புஸ்தக கோசத்திலிருக்கிறதென்பதையும் அது வெகு பழய பிரதியே என்பதையும் அவர்

அறியாதவரென்று தெரிகிறது. கும்பகோணம் மடம் சார்பாக 1867ல் அச்சிட்டிருக்கும் பரிஷ்காரப்பதிப்புக் காலத்தில் இந்த "சுத்த" ப்பிரதி எங்கே போயிருந்தது? அந்தப் பதிப்பில்

आसेतुशीताचलान्तर्धरणीतलवासिनां सुजनानां अत्यन्तोपकाराय नानादेशस्थितपण्डितजनसकाशात् आनीतान् श्रीशंकरविजयग्रन्थान् अनेकान् आलोच्य क–शिवरामशास्त्रि कौ-सुब्बाशास्त्रि, प्रमुखपण्डितैः साकं परिष्कृत्य श्रीमद्रामचन्द्रचरणारविन्दभजनासक्तहृदयेन ने–वेङ्कटसुब्बाशास्त्रिणा स्वकीयसरस्वतीविलासमुद्राक्षरशालायां मुद्रितोऽभूत् ॥

> ஸேது முதல் ஹிமாசலம் வரையுள்ள பூமியில் வஸிக்கும் ஸாது ஜனங்களுக்கு அத்யந்த உபகாரமேற்படும் பொருட்டு, பல தேசங்களிலிருக்கும் பண்டித ஜனங்களிடமிருந்து கொண்டு வரப்பட்ட அநேக சங்கர விஜய கிரந்தங்களை ஆலோசித்து க. சிவராம சாஸ்திரி, கௌ. சுப்பா சாஸ்திரி, முதலான பண்டிதர்களுடன் பரிஷ்காரம் செய்து ஸ்ரீராம சந்திரருடைய சரணாரவிந்த பஜனத்தில் ஈடுபட்ட ஹ்ருதயத்தோடு கூடின நெ. வெங்கடசுப்பா சாஸ்திரியால் தன்னுடைய ஸரஸ்வதீவிலாஸ முத்ராக்ஷர சாலையில் அச்சிடப்பட்டது.

இவ்வளவு ஜாக்கிரதையாய் பிரசுரிக்கப்பட்ட பதிப்பில் ஆசார்யார் ஜன்ம பூமி சிதம்பரம் என்றே காணப்

படுகிறது. இனிமேல் காலடியென்று கண்டு ஒரு ஆனந்தகிரி ச்ங்கர விஜயம் இருப்பதாகச் சொல்ல இடமில்லை. அப்படி யேதேனும் பிரதி அகப்பட்டாலும் அது நவீன கல்பனையாகவே இருக்க வேண்டும். அவ்விதப்பிரதி ராஜகீய கோசங்களிலோ வேறு எங்கேயோ யாரிடமோ இருந்தாலும்அது நம்பத்தக்கதாகாது. 1867 பரிஷ்காரப் பதிப்பு கும்பகோண அபிமானிகளாலேயே ஏற்பட்டதென்பது அதே புஸ்தகத்தில் மேலே கண்ட "மார்க்கண்ட ஸம்ஹிதை" முதலிய அம்மடத்து "ஆதார"ங்களும் காணப்படுவதிலிருந்தே நன்கு தெரிகிறது.

ஆத்ம போதேந்திரர் 25ம் பக்கத்தில் கேரளீய சங்கர விஜயத்திலுள்ள வாஸ்தவமான வாக்கியத்தை உதாஹரித்துவிட்டு, 39ம் பக்கத்தில் ஸ்ரீமத் ஆசார்யார் ஸர்வக்ஞாத்மாவை நியமித்து யோக லிங்கத்தை பூஜிக்கும்படி ஸுரேசுவரருக்கு கட்டளையிட்டுவிட்டு ஸ்ரீகாமாக்ஷீ தேவியின் முன்பு மறைந்தாரென்பதற்கு ஆதாரமாக கேரள சங்கர விஜயத்திலிருப்பது போல் ஆறு சுலோகங்கள் உதாஹரிக்கிருர். அவைகள் அந்த கிரந்தத்தில் கிடையாதென்பதுடன் அதன்படி திருச்சூரில் ஆசார்யார் மறைந்தாரென்று இருக்கிறபடியால் நேர் விருத்தமுமாகும். ஆத்ம போதேந்திரரும் அவரை சேர்ந்தவர்களும் அஸத்தியத்திற்கு அஞ்சாதவர்கள் என்பதற்கு இதுவும் ஒரு அத்தாக்ஷியாகும்.

## அத்யாயம் 14

## நைஷத ஆதாரம்

கும்பகோண மடத்தாரிடமுள்ள "யோக லிங்க"த்திற்கு மிகவும் பிரமாணமாக ஸ்ரீ ஹர்ஷர் இயற்றிய நைஷத காவ்யம் 12-வது ஸர்க்கம் 38-வது சுலோகத்தைச் சொல்கிறார்கள்.

सिन्धोर्जैत्रमयं पवित्रमसृजत् तत्कीर्तिपूर्ताद्भुतं
यत्र स्नान्ति जगन्ति सन्ति कवयः के वा न वाचंयमाः ।
यद्बिन्दुश्रियमिन्दुरञ्चति जलं चाविश्य दृश्येतरो
यस्यासौ जलदेवता स्फटिकभूर्जागर्ति यागेश्वरः ॥

தமயந்தீ ஸ்வயம்வர ஸமயத்தில் அவளை அபேக்ஷித்து வந்திருக்கும் பல அரசர்களை ஸரஸ்வதீ வர்ணித்து வருகையில் காஞ்சீ அரசனை இந்த சுலோகத்தில் குறிப்பிடுகிறான். காஞ்சி என்ற பெயரே கும்பகோண மடத்தாரை இழுத்தது. "ஸ்படிகம்" என்கிற வார்த்தை வேறு காண்கிறது. ஒரு சின்ன கோடு இழுத்துவிட்டால் யாகேசுவரரை யோகேசுவரர் என்று ஸுலபமாய் மாற்றி தங்களிடமுள்ள "யோக லிங்க"த்தைப் பற்றித் தான் சொல்லி யிருக்கிறதென்று சொல்லி விடலாமல்லவா? இது வேண்டுமென்று மாற்றப் பட்டதென்று யாரும் அறியக் கூடியதால் இவ்விஷயத்தை விஸ்தரிக்க அவசியமே யில்லை. ஆனாலும் அம்மடத்து ஆசார்யரே இதை ஒரு பெரிய பிரமாண வாக்கியமாகக் கொண்டு தனக்கு தோன்றினபடி அர்த்தம் சொல்லி வருவதால்

அதைப் பற்றி விசாரிக்க வேண்டியிருக்கிறது. காஞ்சி ராஜா ஒரு குளம் வெட்டினதாகவும் அந்தக் குளத்து ஜலத்தைக் கொண்டு "யோக லிங்க"த்திற்குப் பிரதி தினம் அபிஷேகம் நடப்பதாகவும் சொல்கிருர். இந்தப் புது அர்த்தத்திற்கு பலம் கொடுக்கக்கருதி முன்சொன்ன பண்டிதரும் தன் வைதுஷ்யத்தை உபயோகித்துப் பார்க்கிருர்; தனக்கே தான் செய்வது நியாயமில்லை யென்று தெரிந்திருந்தும் "குரு பக்தி"யினுலேயே அவ்விதம் செய்கிருரென்று தோன்றுகிறது.

இந்த சுலோகத்திற்கு 'இவ்வரசர் தன் கீர்த்தியாகிற ஒரு பெரிய தடாகம் ஏற்படுத்தியிருக்கிருர். அது ஸமுத்திரத்தை ஜயிக்கத் தக்கது. எல்லா உலகங்களும் அதில் மூழ்கின்றன. அதை வர்ணிக்க ஆரம்பிக்கும் போது எல்லா கவிகளும் ஊமையாகி விடுகிருர்கள். சந்திரனே அதின் திவலையாகத் தோன்றுகிருர், ஜல தேவதையானபடியால் தனித்து தெரியாமல் ஸ்படிகத்தினுல் செய்த யாகேசுவரர் மாதிரி விளங்குகிருர்' என்று தான் நேர் அர்த்தம். இவ்வரசன் அவ்வூரில் ஒரு குளம் வெட்டினுர் என்பதற்கு மூல சுலோகத்திலாவது வியாக்யானங்களிலாவது எவ்வித ஆதாரமும் கிடையாது. அவ்வாசார்யரும் அப்பண்டிதரும் எவ்வளவு பெரியவர்களாக இருந்தபோதிலும் வாக்கியத்திற்கு அர்த்தம் சொல்லும் போது தன் அந்தஸ்தை சொல்லிக் கொண்டு, தான் சொல்வதை யாரும் ஆக்ஷேபிக்கக் கூடாது, என்று நினைப்பது உசிதமில்லை.

வாஸ்தவமாகவே ஒரு குளத்தையும் 'யோகலிங்க'த்தையுமே இந்த சுலோகத்தில் ஸ்ரீ ஹர்ஷர் சொல்கிரு

**றென்றால்** கொஞ்சமேனும் ஸங்கதமாகாது. நளமஹா **ராஜா ஸ்ரீ** ராமருக்கும் வெகுகாலத்திற்கு முன் இருந்த **வர்.** அவருடைய சரித்திரத்தில் கலியுகம் பிறந்து ஆயி **ரக்கணக்கான** வருஷங்களுக்குப் பின் ஸ்ரீ சங்கருக்குக் **கிடைத்த** ஒரு லிங்கத்தைப் பற்றி ஸ்ரீ ஹர்ஷர் பிரஸ்தா **பிப்பது** உசிதமாகுமா? ஸ்ரீ ராமர் ஸீதையைத் தேடிக் கொண்டு தக்ஷிண தேசத்தில் ஸஞ்சரிக்கும் போது மைஸூருக்கு ஸமீபத்திலுள்ள கிருஷ்ணராஜ ஸாகர அணைக்கட்டிலுள்ள அழகான நீர்வீழ்ச்சிகளைப் பார்த்து ஆனந்தித்தாரென்று சொன்னால் போலவேதானாகும். பின் நடந்த ஸங்கதிகளை காவ்யங்களில் சொல்வது ஸஹஜம்தான் என்பதற்கு ஆதாரமாக பின்னால் நளமஹாராஜனே கிருஷ்ணன், கர்ணன், அர்ஜுனர் இவர்களைப் பற்றிச் சொல்லவில்லையா என்று கேட்கிறார்கள். நளன் பகவானுடைய பத்து அவதாரங்களையும் வர்ணிக்கும் கட்டத்தில் அது வருகிறது, புராண ஸம்பவங்களுக்குள் முன்பின் நியமம் கிடையாது, அவைகள் பிரதி கல்பத்திலும் உண்டு, என்பதை அவர்கள் மறந்திருக்கிறார்கள் சரித்திர ஸம்பந்தமான ஸ்ாமான்ய ஸம்பவங்களுக்கு அந்த நியாயம் பொருந்தாது. மேலும் காஞ்சியில் புராணப் பிரஸித்தமாக ஸ்திரமான ஆலயங்களிலுள்ள தேவதைகளையெல்லாம் விட்டுவிட்டு ஒரு ஸன்யாஸியின் கையிலுள்ள சரமான லிங்கத்தைக் குறிப்பிட்டார் ஸ்ரீ ஹர்ஷர் என்பதே அஸம்பாவிதம். வாஸ்தவத்தில் அவர் எந்த மடத்தையாவது, ஸன்யாஸியையாவது, லிங்கத்தையாவது, குறிப்பிடவேயில்லை. யாகேசுவரர் என்பது காஞ்சியின் அதிதேவதையான ஏகாம்பரநாதர் என்று சொன்னாலும் கொஞ்சம் பொருந்தும். பரமசிவன்

யக்ஞேசுவரன் என்பதுடன் காஞ்சீ க்ஷேத்திரத்தில் பிரஹ்மா அசுவமேத யாகம் செய்ததால் அந்த பூமியே யக்ஞபூமியாகும். காஞ்சீ மாஹாத்ம்யத்தில்

**तत्र काञ्चीति विख्याता पुरी पुण्यविवर्धिनी।**
**विधातुरश्वमेधार्थे निर्मिता विश्वकर्मणा॥** அத்யாயம் 4
**अश्वमेधस्य शालायां ब्रह्मणः परमेष्ठिनः।**
**स्थानान्येतानि राजेन्द्र प्रोक्तान्यष्टादशात्र हि॥** அத்யாயம் 30

என்று காஞ்சியை யாக பூமியாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது

ஸ்ரீ ஹர்ஷர் தீவிரமான அத்வைதியென்பதிலாவது ஆசார்யாரிடத்தில் விசேஷ பக்தியுள்ளவரென்பதிலாவது அவர் சிவபக்தர் என்பதிலாவது யாரும் ஆக்ஷேபிக்கவில்லை. இதிலிருந்து காஞ்சியில் ஸ்ரீ சங்கரர் தன் கடைசி காலத்தைக் கழித்தார் என்றாவது இம்மடத்தாரால் சொல்லப்படும் "யோக லிங்க"த்தை ஸ்ரீ ஹர்ஷர் அறிவார் என்றாவது எப்படி ஏற்படும்? இவ்விதம் அனுமானம் செய்யக்கூடிய பண்டிதரின் போக்கு ஸாமான்ய மனிதர்கூட ஒப்புக்கொள்ளக் கூடியதில்லை. ஸ்ரீ ஹர்ஷர் வட இந்தியாவிலிருந்தவரானபடியால் ஹிமயமலையில் கைலாஸ பர்வதத்திற்குப் போகும் வழியிலுள்ள யாகேசுவர் ஆலயத்தையே குறிப்பிட்டிருக்கலாமென்றும் தோன்றுகிறது.

தவிரவும் ஸ்ரீஹர்ஷர் சிலேஷைக்குப் பெயர்போனவர். யாகேசுவரர் என்பது எல்லா ஸ்படிக லிங்கங்களுக்கும் ஏற்பட்ட பொதுப்பெயர் என்று வியாக்யாதாக்கள் காட்டிவிட்டு, "யாகேசுவர:" என்ற பதத்தை "யா" என்றும் "அகேசுவரர்" என்றும் இரண்டு பதங்களா

**ஸ் பிரித்து கீர்த்தி** தடாகத்தில், மூழ்கி கண்ணுக்குத் **தெரியாமல்** போவது மலைகளுக்கு அரசனான கைலாஸ **மலை** என்றும் அர்த்தம் செய்திருக்கிறார்கள். "யோகேசு**வரர்**" என்று பதமிருந்தால் இவ்விதம் பிரிக்க முடியாது. ஆகையால் "யாகேசுவர:" என்பது கைதவறுதல் என்று மன்றாடுவதற்கு இடமேயில்லை. "யா" என்பது ஸ்திரீ லிங்கமாகவும் "அகேசுவர:" என்பது புல்லிங்க மாகவும் இருப்பதால், இவ்விதம் பிரித்தது சரியல்ல வென்று சொல்கிறவர் காளிதாஸனுடைய மேகஸந்தே சம் முதல் சுலோகத்தில் "கச்சித் கா'ந்தா" என்று ஆரம்பித்தது தவறுதல் என்று கண்டுபிடித்த மேதா வையே ஒத்தவராவர். இதற்குமுன் அந்த சுலோகத்தில் "ஜல தேவதா" என்று ஸ்திரீ லிங்கத்தில் இருப்பதை மறந்தாரோ, மறைக்கிறாரோ, தெரியவில்லை. அதை அனுஸரித்தே "யா" ஏற்பட்டிருக்கிறது.

அப்பண்டிதர் இந்த சுலோகத்தை உதாஹரிக்கும் போது வெகு தைர்யமாக மூல கிரந்தத்திலும் வியாக்யா னத்திலும் 'யோகேசுவரர்' என்றே திருத்தி எழுதியிருக் கிறார். விசாலமான நம்தேசத்தில் இதுவரை பிரசுரமா யிருக்கும் எந்த லிபியிலுள்ள பிரசுரத்திலோ சுவடி களிலோ இந்தப் பாடம் கிடையாது. இப்பொழுது வேண்டுமானால் ஏதாவது ஏட்டில் திருத்தி வைத்துக் கொண்டு எங்கள் மடத்திற்கு ஆதாரம் இது என்று சொல்லத் தலைப்படலாம். நாராயணருடைய வியாக் யானத்தை அவர் உதாஹரிக்கும் போது அதில் "யாகே சுவரர்"தான் பாடமென்று வியக்தமாக காட்டக்கூடிய பாகங்களை விட்டுவிடுகிறார். நாராயண வியாக்யானத்தில்

**असौ जलदेवता जागर्ति। असौ का? या स्फटिकभूः अगेश्वरः कैलासो जागर्तीति वा॥**

***லக்தேஹமன்னிவில் ஸ்திரீலிங்கம் "யா" காணப்படுகிறது.***

**மேலும் இந்த சுலோகத்தின் மூன்ருவது** பாதத்தில் **மல்லிநாதரும் நாராயணரும்** தங்கள் வியாக்யானத்தில் **'த்ருஸ்யேதர:'** என்ற பும்லிங்க பதத்தைக் கண்டிருந்த **போதிலும்,** இவர்களுக்கு முன் வியாக்யானம் செய்திருக்கிற வித்யாதரர், சண்டு பண்டிதர், ஈசானதேவர் இவர்களும் ஜினராஜர் என்ற ஒரு ஜைன வியாக்யாதாவும் "த்ருஸ்யேதரா" என்று ஸ்திரீலிங்க பாடத்தையே குறிப்பிடுகிருர்கள்.

यस्य कीर्तितडागस्य असौ एष स्फटिकभूः कैलासगिरिरेव या अगेश्वरो जलदेवता जागर्ति स्फुरति। कीदृशी जलदेवता इत्याह-जलं उदकं चाविश्य प्रविश्य दृश्येतरा अदृश्या इत्यर्थः। (வித்யாதரர்)

यस्य पूर्तस्य जलं चाविश्य दृश्यात् इतरा अदृश्या असौ जलदेवता जागर्ति। या स्फटिकभूः कैलासः अगानां पर्वतानामीश्वरः। (சண்டு பண்டிதர்)

यस्य कीर्तितडागस्य असौ स्फटिकभूः कैलासगिरिरेव यागेश्वरो महेश्वरो जलदेवता जागर्ति स्फुरति। कीदृशी? जलं चाविश्य दृश्येतरा अदृश्या इत्यर्थः। (ஈசான தேவர்)

**यस्य कीर्तिपूर्तस्य जलमाविश्य प्रविश्य दृश्येतरा अदृश्या सती जागर्ति स्फुरति ।** (ஜினராஜர்)

மல்லிநாதருடைய வியாக்யானத்தில்

**स्फुटिकलिङ्ग यागेश्वर : इति प्रसिद्धि :**

என்றும் நாராயணருடைய வியாக்யானத்தில்

**यागेश्वरः स्फटिकः इति प्रसिद्धिः**

என்றும் சொல்லியிருப்பதில் "யோகேசுவரர்" என்று திருத்திக் கொண்டு தங்களுக்கு பிரமாணம்போல் சொல்கிருர்கள். கும்பகோணம் மடத்தாரிடமுள்ள ஸ்படிக லிங்கத்திற்குத் தான் அந்தப் பெயர் உண்டு என்ருல் அம்மடத்தை குறிப்பிட்டிருக்க வேண்டியதில்லையா? ஆகையால் இவ்வாக்கியங்களுக்கு, பொதுவாய் எந்த ஸ்படிக லிங்கமாளுலும் "யாகேசுவரர்" என்று சொல்வது வழக்கம் என்றேதான் அர்த்தமாகும். இதை ஜினராஜருடைய வியாக்யானத்தில் இன்னம் தெளிவாகத் தெரிகிறது.

**यागेश्वरशब्देन स्फटिकनिर्मितशिवलिङ्ग इति प्रसिद्धिः।**

பரமசிவனை யக்ஞேசுவரன் என்று வேதத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறதை ஒப்புக் கொண்டு அப்பெயர் காஞ்சியிலுள்ள ஏகாம்பரநாதருக்கு கிடையாதென்றும் அதிஞல் இந்த சுலோகத்தில் கண்ட யாகேசுவரர் அவராக இருக்க முடியாதென்றும் மேல்வாதம் செய்கிருர் அப்பண்டிதர். ஏகாம்பரசுவரரும் சிவஞயிருப்பதால் ஏன் அந்தப் பெயர் அவருக்கு கிடையாதோ தெரியவில்லை. எப்படியும் எது வாஸ்தவமான பாடம் என்பது தான் பிருகிருத விஷயம். 13வது நூற்ருண்டிலிருந்த

சண்டு பண்டிதர் 'யாகேசுவரர்' என்ற பதத்திற்கு வியக்தமாகீ 'யக்ஞ புருஷர்' என்று அர்த்தம் சொல்லியிருப்பதால் ஒருக்காலும் 'யோகேசுவரர்' என்ற பாடம் கிடையாதென்பது மிகவும் தெளிவாய்த் தெரிகிறது. 'யோகேசுவரர்' என்றிருந்தால் 'யக்ஞ புருஷர்' என்ற அர்த்தம் சொல்லவே முடியாது.

तत्रापि जलदेवता यागानां ईश्वरः यज्ञपुरुषः अदृश्यः।

மேலே கண்ட விஷயங்களை பக்ஷபாதமன்னியில் கவனிக்கும் எந்த வாசகருக்கும் 'யோகேசுவரர்' என்ற பாடம் வேண்டுமென்று திருத்திச் சொல்லப்படுகிறது தான் என்பதும் எங்கும் பிரசாரத்திலிருக்கிற 'யாகேசுவர:' என்ற பாடம் கைதவறுதலென்று சொல்லும் வாதம் ஆதாரமற்றதென்பதும் ஸ்பஷ்டமாகத் தெரிய வரும். இதிலிருந்து ஏதேனும் பிரஸித்தமான ஒரு கிரந்தத்தில் தங்களுக்கு ஆதாரமிருப்பதாய்ச் சொல்லிக் கொள்வதற்கிருந்த அவசியத்தினாலேயே இவ்வித கல்பனை செய்யத் தோன்றுகிறது. இவ்விதம் வாதம் செய்யும் பண்டிதரே வித்யாப்யாஸம் செய்த காலத்தில் 'யாகேசுவர:' என்ற பாடத்தையே தான் கற்றிருப்பாரென்பதில் ஸந்தேஹமில்லை. இப்பொழுது கும்பகோண மடத்து ஆசிரயத்திற்கு வந்து அவர்களுடைய புதிய வெளியீடுகளைப் பார்த்த பிறகு தான் 'யோகேசுவர:' என்ற பாடம் கேள்விப்பட்டிருப்பாரென்பதிலும் ஸந்தேஹமில்லை.

இவ்வித கல்பித 'ஆதார'ங்களைக் கொண்டு பலப்படுத்த நினைக்கும் 'யோகலிங்க' விஷயமும் பிரமாணமற்றதென்று நன்கு தெரிகிறது.

## அத்யாயம் 15

# ஸர்வக்ஞ பீடம்

ஸ்ரீசங்கர பகவத்பாதர் காச்மீரத்தில் ஸர்வக்ஞ பீடாரோஹணம் செய்துவிட்டு ஹிமாசலத்தில் மறைந்தாரென்றவிஷயம் நம் பரதகண்டம் பூராவும் பிரஸித்தமாய் தெரிந்த விஷயம். கும்பகோண மடத்தார் மாத்திரம் ஆசார்யார் ஸர்வக்ஞ பீடம் ஏறினதும் காஞ்சீபுரம், அவர் மறைந்ததும் காஞ்சீபுரத்தில், என்கிறார்கள். கேரள சங்கர விஜயம் எழுதின கோவிந்த நாதருக்கு ஆசார்யார் கேரள தேசத்தில் பிறந்தாரென்பது போதாதென்று நினைத்து அவர் ஸித்தியடைந்ததும் கேரள தேசத்திலுள்ள திருச்சூரில் என்கிறார். ஆனந்தகிரி ஆசார்யாரின் பிறந்தவிடம் சிதம்பரம் என்றும் ஸித்தி ஸ்தலம் காஞ்சி என்றும் சொல்கிறார். சிதம்பரத்தில் ஒரு சந்திர மௌளீச்வர லிங்கமிருப்பதைக் கொண்டு ஜன்ம ஸ்தலம் ஸித்தி ஸ்தலம் இரண்டுமே சிதம்பரம் என்று சிதம்பரம் தீக்ஷிதர்கள் சொல்கிறார்கள். ஸ்ரீசங்கரர் எவ்வித பற்றுதலுமற்ற மஹானுபாவராக இருந்தபடியால் அவருக்கு நம் தேசத்திலுள்ள எவ்விடமும் அவருடையதே; அவர் தன் கடைசிக் காலத்தில் எங்கேயும் தன் ஸ்தலமென்று பாவித்திருக்க முடியாது; ஆகையால் அவர் மறைந்த இடம் எது என்று கவனிக்கவே அவசியமில்லை. இருந்தாலும் ஸாமான்ய ஜனங்களுக்கு தேசாபிமானம் இருக்குமாதலால் என் தேசத்தில்தான் அவர் ஸித்தியடைந்தார் என்று சொல்லிக் கொண்டால் தனக்கு ஏதோ ஸ்ரீசங்கரரிடம் தொடர்பு ஏற்பட்டுவிட்டதாக நினைக்கக் கூடும். இவ்வித எண்ணத்தினால் தான்

காஞ்சியை ஸித்தி ஸ்தலமென்று சொல்லத் தலைப்பட்டிருக்கிறார்களென்று தோன்றுகிறது! ஆனாலும் ஸ்ரீகாமாக்ஷியம்மன் கோவிலுக்குள் ஒரு விக்ரஹத்தைக் காட்டி அதுதான் ஸித்தி ஸ்தலமென்று காட்டுவது மிகவும் அபசாரமாகும். தவிரவும் இதுவே காஞ்சியில் மடம் ஏற்பட்டதற்கு ருசு என்று சொல்கிறார்கள்.

ஸர்வக்ஞ பீடம் ஏறினதற்கு ஸமீப காலத்திலேயே ஆசார்யார் மறைந்தாரென்ற பிரஸித்தியை மாற்றமுடியாததினால், காஞ்சியில் ஸித்தியென்று சொல்லும்போது ஸர்வக்ஞ பீடத்தையும் காஞ்சியில் கல்பிக்க அவசியமேற்பட்டது. ஆனால், காச்மீரத்தில் ஸர்வக்ஞ பீடம் இருக்கிறதென்ற பிரஸித்தியையும் மாற்ற முடியாததினால், காஞ்சியில் ஒரு புது பீடம் கல்பிக்க வேண்டியதாயிற்று. மேலும் காச்மீரத்திலுள்ள ஸர்வக்ஞ பீடத்தை ஸ்ரீ சங்கரர் ஏறினார் என்ற பிரஸித்தியும் இருந்துவந்தபடியால் அதைக் கும்பகோண மடத்தாருக்கு மறுக்கவும் முடியவில்லை; ஒப்புக்கொண்டாலோ, காஞ்சியில் ஸர்வக்ஞ பீடம் ஏறினாரென்பது பொய்யாகிவிடும். இந்த சிரமத்தை உத்தேசித்து ஸ்ரீசங்கரரையே இரண்டாகப் பிரித்து ஆதிசங்கரர் காஞ்சீ ஸர்வக்ஞ பீடம் ஏறினதாகவும் அவர் பரம்பரையில் வந்த இன்னொரு சங்கரர் காச்மீர ஸர்வக்ஞ பீடத்தை ஏறினதாகவும் பின்னால் வந்தவர் செய்ததைத் தவறுதலாக ஆதிசங்கரர் செய்ததாக சொல்கிறார்களென்றும் கல்பித்திருக்கிறார்கள். இவ்வித கல்பனையினால் காச்மீரத்தில் அசல் ஸர்வக்ஞ பீடமிருக்கையில் ஆதி ஆசார்யார் புது பீடத்திலேயே ஏறினாரென்று சொல்வது அவருடைய மஹிமையைக் குறைப்பதாகாதா? இப்

யுறு பீடமும் ஆசார்யாராலேயே ஏற்படுத்தப்பட்ட தென்று வேறே சொல்கிறபடியால் அவர்களுடைய அசட்டுத்தனம் இன்னம் வெளியாகிறது. ஒருவர் தன் சொந்த சிலவில் மெத்தை தைய்த்து அழகான ஒரு நாற் காலி செய்து தைத்துக்கொண்டு அதில் தானாகவே ஏறி உட்கார்ந்துகொண்டால் கவர்னர் அல்லது ஹைகோர்ட் ஜட்ஜாக ஆகிவிட முடியுமா ? அவரே அந்த காஞ்சி ஸர்வக்ஞ பீடத்தை ஏற்படுத்தினர் என்றும் அவரே அதில் ஏறினரென்றும் சொல்வது மிகவும் அசட்டுத் தனம். அப்படியிருந்தும் இதுதான் வாஸ்தவமென்று அம்மடத்தார் வற்புறுத்துகிருர்கள். இப்பால் ஸ்ரீசங்கரர் இரண்டு ஸர்வக்ஞ பீடங்களிலும் ஏறினரென்றும் சொல்ல ஆரம்பித்திருக்கிருர்கள் !

மாதவரும் ஸதானந்தரும் காச்மீரத்தில் ஸர்வக்ஞ பீடம் ஏறின பிறகு ஹிமாசலம்போய் கைலாஸம் போன தாகவே சொல்கிருர்கள். "வியாஸாசலீய"த்திலும் ஸர்வக்ஞ பீடம் காச்மீரத்தில்தான் என்று வியக்தமாய் சொல்லப்பட்டிருக்கிறது.

काश्मीराख्यं मण्डलं तत्र शस्तम्
यत्रास्ते सा शारदा वागधीशा ।
द्वारैर्युक्तं मण्डपैः सचतुर्भिः
देव्या गेहं यत्र सर्वज्ञपीठम् ॥XII, 30—31

இப்படியே மாதவீய சுலோகம் XVI, 55—56. ஆனல் அம்பிகையின் ஆக்ஷேபணைகளுக்கு ஸமாதானம் சொல்லிவிட்டு ஸர்வக்ஞ பீடம் ஏறின பிறகு ஸ்ரீ சங்கரர் போன இடத்தை வியக்தமாகச் சொல்லவில்லை.

एवं निरुत्तरपदां स विधाय देवीं
सर्वज्ञपीठमधिरुह्य ननन्द सभ्यः ।
मात्रा गिरामपि तथा पुरुषैश्च सभ्यैः
संभावितो रुचितदेशमथ जगाम ॥XII, 82

இவ்விதம் தேவியை பதில் சொல்ல முடியாமல் செய்து ஸர்வக்ஞ பீடத்தில் ஏறி ஸதஸ்ஸில் இருந்து ஸந்தோஷப்பட்டார். வாக்தேவியினாலும் அங்கு ஸதஸ்ஸிலிருந்த புருஷர்களாலும் போற்றப்பட்டார். இவர் பிரகாசமான (அல்லது இஷ்டமான) இடத்திற்குப் போனார்.

அவ்விடம் கைலாஸமாகத்தான் இருக்கவேண்டும். காவ்யமே இத்துடன் முடிந்துவிடுகிறபடியால் வேறுவிதம் சொல்ல வழியில்லை. மாதவீயம் பாடம் 3, 4 பாதங்களில் கொஞ்சம் வித்யாஸப்படுகிறது. அந்த வித்யாஸம் பிரகிருதத்திற்கு ஸம்பந்தமில்லை.

ஆனால் ஆத்மபோதேந்திரருக்கு காஞ்சியில்தான் ஸர்வக்ஞ பீடம், அப்பீடமும் ஸ்ரீசங்கரரால் ஏற்படுத்திய மடத்திலேயேதான், என்ற எண்ணமிருந்ததால் வியாஸாசலீயத்தை தனக்கு ஆதாரம் போல் இந்த சுலோகத்தையே திருத்திச் சொல்கிறார்

एवं निरुत्तरपदां स विधाय देवीं
सर्वज्ञपीठमधिरुह्य मठे स्वकृते ।
मात्रा गिरामपि तथोपगतश्च मिश्रैः
संभावितः कमपि कालमुवास काञ्च्याम् ॥

இவ்விதம் தேவியை பதில் சொல்ல முடியாமல் செய்து தன்னால் ஏற்படுத்தப்பட்ட மடத்தில் ஸர்வக்ஞ பீடம் ஏறி வாக்தேவியினாலும் "அப்படியே அங்குவந்துள்ள பண்டிதர்களாலும் போற்றப்பட்டு கொஞ்ச காலம் காஞ்சியில் வஸித்தார்.

இவ்விதம் "வியாஸாசலீயத்"தின்படி ஸர்வக்ஞ பீடம் தேவியின் கோவிலுக்குஉள்ளே இருப்பதாகவும் ஆத்ம-போதருடைய திருத்தல்படி ஸ்ரீசங்கரர் கட்டின மடத்திற்குள் இருப்பதாகவும், ஏற்படுவதினால் திருத்தல் என்பது நன்கு விளங்குகிறது. காச்மீர தேசத்தைக் குறிப்பிடும் முன் சுலோகத்தை ஆத்மபோதர் காட்டாமலே இருந்துவிட்டபடியால் இவ்வித விரோதத்திற்கு அவர் ஸமாதானம் சொல்லாமலே விட்டுவிட்டார். இதற்கும் ஸமாதானம் சொல்ல வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்படும்போது முன்சொன்ன பண்டிதர் வெகு தைர்யமாக காச்மீரம் என்று முந்தின சுலோகத்தில் சொன்னதற்கு காஞ்சீபுரம் என்று அர்த்தமென்று வாய்கூசாமல் சொல்கிறார். காச்மீரத்திலுள்ள ஸர்வக்ஞ பீடம் வெகு பிராசீனம் என்பதையும் அதில் நம் தேசத்து வடக்கு கிழக்கு மேற்கிலுள்ள வித்வான்கள் அதை ஏறியிருந்தும் தென் தேசத்திலிருந்து யாரும் ஏறினதில்லை யென்பதைக் கேட்டு அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காக ஸ்ரீசங்கரர் அங்கே போனார் என்றும் அந்த வியாஸாசலீயத்திலுள்ள கதையையே இப்பண்டிதர் மறந்துவிடுகிறார். இந்த அபவாதத்தைக் கேட்டே ஆசார்யார் அங்கே போனாரென்றால் அந்த பீடம் அவர் ஏற்படுத்

தினதாகவும் இருக்க முடியாது அவருடைய மடத்திலு மிருந்திருக்கமுடியாது என்பது ஸித்தம். தவிரவும் காஞ்சீ ஒரு ஊர். காச்மீரம் என்பது ஒரு தேசம். வியாஸாசலர் காச்மீரத்தை தேசமென்றே வியக்தமாய் சொல்கிறார்; அதை காஞ்சீபுரம்தான் என்று சொல்ல இடமேயில்லை.

वार्तामुपश्रुत्य स दाक्षिणात्यो
मानं तदीयं परिपातुमिच्छन् ।
काश्मीरदेशाय जगाम हृष्टः
श्रीशंकरो द्वारमपावरीतुम् ॥ XII 33
[மாதவீயம் XVI, 58]

द्वारं पिनद्धं किल दाक्षिणात्या
न सन्ति विद्वांस इतीह दक्षाः ।
तां किंवदन्तीं विफलां विधातुं
जगाम देवीनिलयाय हृष्यन् ॥ XII 34
[மாதவீயம் XVI, 59]

காச்மீர தேசமென்றால் காஞ்சீபுரம் என்று அர்த்தம் சொல்லத் தலைப்படுவது முன் ஒரு ஸந்தர்ப்பத்தில் ஸ்வர்க்கமென்றால் ஹிமாசலமென்று அர்த்தம் சொல்லி யிருப்பதாகக் காட்டின சமத்தையே ஒட்டினது. காஞ்சி யில் மடம்தான் புதிதாக ஏற்பட்டதென்றும் ஸர்வக்ஞ பீடம் பிராசீனமென்றும் இப்பால் அப்பண்டிதர் சொல் கிறார். இதற்கு பிரமாணம் வியாஸாசலீயத்தில் இருப்ப தாக கல்பிக்கும் சுலோகத்திற்கு இப்பண்டிதர் கொடுக் கும் துரர்த்தம்தான். இதுவிஷயமாய் N. K. வெங்க டேசன் பத்துலு வியக்தமாய் சொல்லியிருப்பதாவது :—

"முன் காச்மீரத்தில் ஸஞ்சாரம் செய்யும்போது அவர் அங்கு பிராசீனமாயுள்ள ஸர்வக்ஞ பீடம் ஏறினார் ... ... இப்பொழுது காஞ்சீபுரத்தில் ஒரு ஸர்வக்ஞ பீடத்தை ஏற்படுத்தி, அங்கு தாம்ரபர்ணீ தீரத்திலிருந்து வந்த சிலர்களை ஜயித்து அவர்களை தன்மதத்தை ஒப்புக்கொள்ளச் செய்து அந்த மஹத்தான ஸர்வக்ஞ பீடத்தில் ஏறினார்."

நான்கு பிரஸித்த மடங்களும் காச்மீரத்தில் ஸர்வக்ஞ பீடாரோஹணமென்ற விஷயத்திலும் அதை ஏறினது ஆதிசங்கரர் என்ற விஷயத்திலும் அபிப்பிராய பேதமன்னியில் சொல்கிறார்கள். காஞ்சியில் ஸர்வக்ஞ பீடம் என்று ஒப்புக்கொண்டு விட்டால் காஞ்சிக்கும் காஞ்சி மடத்திற்கும் பிராதான்யம் ஏற்பட்டுவிடுமென்று பயந்து அவர்கள் அவ்விதம் சொல்லலாமென்று நினைக்கலாம். அவர்கள் யாருமே காஞ்சியிலுள்ள காமாக்ஷியம்மனின் மஹிமையைக் குறைக்க இஷ்டப்பட மாட்டார்கள். "காமகோடி பீட நிலயா" என்று காமாக்ஷி தேவியை நன்கு ஒப்புக் கொள்வார்கள். அப் பீடத்திற்கு அதிபதி அம்பிகையாய் இருக்கையில் வேறு யாரும் காமகோடி பீடாதிபதி என்று சொன்னால் ஸம்மதிக்கமாட்டார்கள். அவ்விதம் தன்னை சொல்லிக்கொள்வதே பெரும் அபசாரமென்றே நல்ல பக்தர்கள் எண்ணுவார்கள். நம் தேசத்தில் பலவிடங்களில் தோன்றியிருக்கும் சக்தி பீடங்களில் காஞ்சியும் ஒன்று என்பதிலும் அங்குள்ள அம்பிகையின் க்ரூரமான கலையை ஆகர்ஷணம் செய்து ஸ்ரீசக்கிரம் ஒன்றை ஸ்ரீசங்கரர் பிரதிஷ்டை

செய்தார் என்பதிலும் யாரும் ஆக்ஷேபிக்கிறது கிடையாது. அவருடைய அஷ்டோத்தரசதநாமாவளியில் காஞ்சியில் ஸ்ரீ சக்கிரப் பிரதிஷ்டை செய்ததை குறிப்பிட்டிருக்கிறது.

**काञ्च्यां श्रीचक्रराजाख्ययन्त्रस्थापनदीक्षितः।**

காஞ்சியில் ஸர்வக்ஞ பீடம் ஏறினதாகக் காணவில்லை. காஞ்சியைப் பற்றியும் அங்கே செய்த ஸ்ரீ சக்கிர பிரதிஷ்டையைப் பற்றியும் கண்டிருக்கும் போது ஸர்வக்ஞ பீடத்தைப் பற்றியாவது மடத்தைப் பற்றியாவது பிரஸ்தாவமே காணப்படாததினுல் வாஸ்தவமில்லையென்று நன்ருய்த் தெரிகிறது.

"வியாஸாசலீ"யத்தில் ஸ்ரீசங்கரர் காஞ்சிபுரத்திற்குப் போனதாகவாவது அங்கே ஸ்ரீசக்கிரம் பிரதிஷ்டை செய்ததாகவாவது காணப்படவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது. ஆனல் காஞ்சீபுரத்தைப் பற்றியும் அதன் மாஹாத்மியத்தைப் பற்றியும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது; பத்மபாதர் தக்ஷிண தேசத்தில் யாத்திரை செய்த ஸந்தர்ப்பத்தில் இந்த வர்ணனை; ஸ்ரீசங்கரருக்கு ஸம்பந்தமேயில்லை. இக் குறையை நிவர்த்தி செய்யக் கருதி மேலே கண்டபடி ஸ்ரீசங்கரர் தனக்கென்று ஒரு மடம் ஏற்படுத்திக் கொண்டு, அதில் ஸர்வக்ஞ பீடம் ஏறி, அங்கே கொஞ்சகாலம் வஸித்ததாக முன்கண்ட சுலோகத்தில் ஆத்மபோதேந்திரர் திருத்தம் செய்து கொண்டார் போலும்? மூலகிரந்தத்தின் அர்த்தத்தை மாற்றி மூலத்திலேயே முன்னுல் சொல்லப் பட்டிருப்பதற்கு விரோதமாக இம் மாறுதலை செய்ததுடன் இன்னம்

நான்கு சுலோகங்களையும் "வியாஸாசலீய"த்தில் இருப்பதாக கல்பித்துச் சொல்கிறார். இக்கல்பித சுலோகங்களில்தான் ஸ்ரீசங்கரர் தனக்குப் பின் ஸர்வாஜ்ஞாத்மரை நியமித்ததாகவும், ஸுரேசுவரரை அவருக்கு மேல்பார்வையாளராக நியமித்ததாகவும், ஸ்ரீசங்கரர் காஞ்சியில் ஸித்தியடைந்ததாகவும் கும்பகோண மடத்தாருக்கு உள்ள விசேஷவாதங்கள் காணப்படுகின்றன; இவைகளில் 3 வது சுலோகம் அச்சாயிருக்கும் "வியாஸாசலிய" 83 வது சுலோகத்தின் கருத்தைச் சொல்கிறது; 4 வது சுலோகம் "எவருடைய ஆக்ஞையை நேபாளம் முதலிய தேசத்து அரசர்கள் தலையால் தாங்குகிறார்களோ அப்பேர்பட்ட விபுலானந்தராகிய ஜகத்குரு சங்கரரை" புகழ்கிறது. இந்த சுலோகங்கள் புஸ்தகம் அச்சிடுவதற்கு உபயோகித்த கும்பகோணம் இரண்டு பிரதிகள் உள்பட ஆறுபிரதிகளிலும் காணவில்லை யென்பதை பிரசுரித்தவரே குறிப்பிடுகிறார். இவ்'விபுலானந்தர்' அம் மடத்தில் 1417 முதல் 1498 வரை 81 வருஷ காலம் பீடாதிபத்யம் வஹித்த "பூர்ணாநந்த ஸதாசிவர்" தான் என்றும், அவருக்கு பின் பட்டத்திற்கு வந்த "மஹாதேவர்" தான் "வியாஸாசலர்" என்றும் சொல்கிறார்கள். இவ்விதம் ஆத்ம போதேந்திரர் கூட சொல்லவில்லை, ஆத்ரேயகிருஷ்ண சாஸ்திரி என்ற ஒருவரே இதற்கு பிரமாணம். இவருக்கு அம் மடத்திலிருந்த அபிமானத்தினால் மனம் போன படிக்கெல்லாம் கற்பனை செய்து பலவித மாஹாத்மியங்களை அம் மடத்திற்கு ஏற்று கிறார். நேபாள அரசரால் இந்த "விபுலாநந்தர்" ஆராதிக்கப் பட்டாரென்று ஆத்ம போதேந்திரரும் அவரால் கல்பிக்கப்பட்ட ஆதாரங்களும் கல்பித்திருப்

பதை'வைத்துக்கொண்டு இந்த கிருஷ்ண சாஸ்திரி அவ் விஷயத்திற்கு மெருகு கொடுத்து தன் புஸ்தகம் 49ம் பக்கத்தில்

> "மேலும் நம் நாட்டின் வட கோடியில் உள்ள இமயமலேயில் அன்னிய நாட்டாரால் கீழ்ப் படுத்தப் படாமல் ஸர்வாதிகாரத்துடன் ஸ்வ ராஜ்யம் செய்கிற நேபாள மகாராஜா அவர்கள் காஞ்சீ காமகோடி பீடாதிபர்களேத் தங்களது குருவாகக் கொண்டிருத்தலுமல்லாமல் தமது நாட்டு வருமானத்திலோர் பகுதியை காணிக் கையாக செலுத்தி வருகிருர்"

என்று வெகு தைர்யமாய் எழுதியிருக்கிருர். இப் புஸ்தகம் அம் மடத்து பத்திரிகையான "ஆர்யதர்ம" த்தில் அம் மடத்து ஏஜென்டினுல் விளம்பரம் செய்யப் பட்டு அம் மடத்திலேயே விற்கப்பட்டு வந்த தென்பதை இங்கு குறிப்பிடத்தக்கது. தென்தேசத்தில் ஒரு மூலேயில் இருந்து கொண்டு வட கோடியிலிருக்கும் ஒரு அரசனேப் பற்றி என்ன வேண்டுமானுலும் சொல்லலாம், இதை யார் சரிபார்க்கப் போகிருர்கள், என்ற அசட்டு தைர்யத் திலேயே இவ்விதம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனுல் இதன் உண்மையைத் தெரியக்கருதி நேபாள மஹாராஜ ருக்கு எழுதிக் கேட்டதில் அவருடைய அந்தரங்க காரியதர்சி 1940 மே 13 ல் வியக்தமாய் பதில் கொடுத் திருக்கிருர்.

> "தாங்கள் தமிழிலிருந்து மொழி பெயர்த்து ஜகத் குரு ஸ்ரீசங்கர குருபரம்பரை என்ற புஸ்தகத்தில் ஆத்ரேய கிருஷ்ணசாஸ்திரி யென்ற பண்டிதர் எழுதியிருப்பதாக காண்கிற

> படி, நேபாள ஸர்க்கார் எக்காலத்திலும் காஞ்சி காமகோடி பீடாதிபதியை குருவாக ஒப்புக் கொண்டிருப்பதும் கிடையாது, வரும்படியின் எந்த பாகத்தையும் வருஷ காணிக்கையாகக் கொடுப்பதும் கிடையாது என்பதை தங்களுக்குத் தெரிவிக்கிறேன்."

என்று எழுதியிருக்கிறார். இவ்விதமே அந்த சாஸ்திரி கொஞ்சமேனும் பொறுப்பற்று அஸத்தியத்தில் கூச்சமில்லாமல் சொல்லும் அநேக மற்ற விஷயங்களை இங்கு பிரஸ்தாவிக்க அவசியமில்லை.

ஸமீபத்தில் N. ரமேசன் ஸ்ரீசங்கராசார்யரைப் பற்றி பிரசுரித்திருக்கும் புஸ்தகத்தில் காச்மீரத்திலுள்ளது சாரதா பீடமென்றும் காஞ்சியிலுள்ளது ஸர்வக்ஞ பீடமென்றும் ஒரு வித்யாஸத்தை கல்பித்துக் கொண்டு ஸ்ரீ சங்கரர் இரண்டையும் ஏறினார் என்று சொல்கிறார். காச்மீரத்தைப் பற்றி 84வது பக்கத்தில் அவர் சொல்வதாவது :—

> "ஆசார்யார் அங்கே போவதற்கு முன் அம் மண்டபத்து தென் பக்கம் வாசல் எப்பொழுதுமே சாற்றப்பட்டிருந்ததாகவும், ஆசார்யார் அந்த மண்டப ஸமீபத்தில் போனவுடன் தென் கதவு தானாகவே திறந்து கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. ஸ்ரீ சங்கரர் இவ்விதம் சாரதா பீடத்தை (சில கிரந்தங்களில் ஸர்வக்ஞ பீடமென்று காண்கிறது) ஏறி அந்த இடத்திலிருந்த வித்வான்களை வாதத்தில் ஜயித்து அங்கே அத்வைதத்தின் பெருமையை நிலை நாட்டினார்."

இது மற்ற வரலாறுகளுக்கு விரோதமாயிருப்பதுடன், வித்வான்களை ஜயித்த பிறகல்லவா பீடத்தில் ஏற வேண்டும்? ஏறியான பிறகு ஜயிக்க என்ன அவசியம்? இந்த நியாயத்தை கவனிக்காமலே சொல்லப்பட்டிருக்கிறதாக தோன்றுகிறது. சித்விலாஸீயத்தில் காஞ்சியில் ஸர்வக்ஞ பீடமென்று சொன்னது தேசாபிமானத்தினால் இருக்கலாம்; ஆத்மபோதேந்திரர் சொல்கிறபடி சித்விலாஸர் என்பது அம்மடத்து 48வது ஆசார்யராக சொல்லப்படுகிற அத்வைதாநந்த போதேந்திரராக விருந்து ஆத்ரேய கிருஷ்ண சாஸ்திரி சொல்கிறபடி அவரே சங்கரவிஜயம் எழுதினவராக இருந்தால் இவ்விதம் காஞ்சிக்கு ஸர்வக்ஞ பீடத்தைக் கொண்டுவர பிரயத்தினம் செய்தது உசிதமேயாகும்.

கோவிந்தநாதர் கேரள சங்கர விஜயத்தில் காஞ்சிபுரமே காச்மீர தேசத்திலிருப்பது போல் பேசுகிறார். அப்படியும் இருந்திருக்கலாம், அவர் விவரம் தெரியாமல் தட்டுக்கிடலாம். எப்படியும் வாக்தேவியான ஸரஸ்வதியை அவர் காமாக்ஷி என்று சொல்லியிருப்பது பிசகு.

ततो यतिकुलाचार्यः सशिष्यः शास्त्रवित्तमः ।
भूमिं प्रदक्षिणीकृत्य भूयः काञ्चीपुरं गतः ॥ IX 1
जम्बूद्वीपस्य कुर्वाणे शोभां भारतमण्डले।
शस्तं काश्मीरनामानं देशं विद्योतयत् भृशम् ॥ IX, 2
कामाक्ष्या नाम वाग्देव्या स्थानं सत्पुरमाप्तवान् ।
तत्रत्यसर्वविद्वद्भिः पूज्यमानं दिने दिने ॥ IX, 3
सर्वज्ञपीठमारोढुमियेष यतिपुङ्गवः । IX, 4

இந்த கிரந்தத்திற்கு மூலமான மாதவீயம் XVI, 55—58 (வியாஸாசலீயம் XII, 50—33) சுலோகங்களில் எவ்வித தட்டுக்கிடலுக்கும் இடமேயில்லை. முன்சொன்ன நவீன பண்டிதர் காஞ்சீபுரத்திற்கே முன்காலத்தில் காச்மீரம் என்ற பெயர் இருந்திருக்குமென்று போக்கற்று ஒரு ஸமாதானம் சொல்கிறார். அம்மடத்தார்களே காச்மீரத்தில் ஒரு ஸர்வக்ஞபீடம் உண்டென்றும் அதை தங்கள் பரம்பரையில் ஒருவர் ஏறினதாகவும் சொல்லுகையில் இவ்வளவு சிரமப்பட்டு ஆதாரமற்ற ஸமாதானங்களைச் சொல்ல அவசியம் தெரியவில்லை. குருரத்னமாலிகா 64-வது சுலோகத்தின் வியாக்யானத்தில் ஆத்மபோதேந்திரர்

"अशेषविदासनाधिरूढं"—भट्टोद्भटादिविबुधयूथविजयपूर्वं अधिकाश्मीरमण्डलं अनुष्ठितसर्वज्ञपीठाधिरोहणं इत्यर्थः

என்று காச்மீரத்தில் ஸர்வக்ஞ பீடமுண்டென்று ஒப்புக்கொண்டு ஆனால் அதை ஏறினது பின்னால் வந்த ஒருவர் என்று சொல்லி ஸ்ரீமத் ஆதி ஆசார்யார் ஏறினது அவராலேயே கல்பிக்கப்பட்ட ஸர்வக்ஞ பீடம் போல் சொல்கிறார். இவ்விதம் சொல்வதிலுள்ள அனுசிதத் தன்மையை அதிகம் விஸ்தரிக்க வேண்டியதில்லை.

ஸ்ரீ ராமானுஜாசார்யார் காஞ்சியிலேயே இருந்தவரென்பதும் அவர் முதலில் யாதவப் பிரகாசர் என்ற ஒரு அத்வைத பண்டிதரிடம் வாசித்தார் என்பதும் பிரஸித்தமான விஷயம். அவருடைய சரித்திரம் பூராவிலும் காஞ்சியில் ஒரு அத்வைத மடமிருந்ததாக பிரஸ்தாவமே கிடையாது, ஸர்வக்ஞபீடம் இருந்ததாகவும் பிரஸ்தாவமில்லை. அவ்விதம் ஒரு பீடம் இருந்திருக்குமேயானால் அங்கே

உள்ள வித்வான்களை ஜயித்து ஸ்ரீ ராமானுஜரும் அப் பீடத்தில் ஏறினர் என்றோ ஏறப் பிரயத்தினம் செய்தா ரென்றோ அவருடைய சரித்திரம் எழுதினவர்கள் சொல் லாமல் இருந்திருக்க மாட்டார்கள். அவர்கள் சொல்லா ததிலிருந்தே காஞ்சியில் அவ்விதம் ஒன்றுமில்லையென் பது நன்கு ருசுவாகிறது. மேலும், ஸ்ரீ ராமானுஜர் ஸ்ரீபாஷ்யம் எழுதுவதற்கு முன் போதாயன விருத்தியை பார்க்க நினைத்து மிகவும் சிரமப்பட்டு ஸ்ரீ வத்ஸாங்க ரென்ற தன் சிஷ்யருடன் காச்மீரதேசத்திலுள்ள சாரதா பீடத்திற்குப் போனாரென்றும், அவர்கள் அங்கேபோய்ச் சேர மூன்று மாஸகாலம் பிடித்ததென்றும், சாரதா தேவியின் அனுக்கிரஹத்தினால் புஸ்தகம் கிடைத்தும் பின்னால் தவறிவிட்டதென்றும், அவர் சரித்திரத்தில் காணப்படுகிறது. இது வாஸ்தவமாக நடந்த ஸம்பவமா, அல்லது ஸ்ரீபாஷ்யத்திற்கு போதாயனரை போல் ஒரு மஹரிஷியினுடைய ஆதாரமிருக்கிறதென்று சொல்வதற்காக கல்பிக்கப்பட்ட கதையா என்பது இங்கு பிரகிருதமில்லை. ஸ்ரீராமானுஜருடைய சிஷ்யர்கள்கூட காச்மீரத்தில் சாரதாபீடம் உண்டென்ற பிரஸித்தியை ஒப்புக்கொண்டவர்கள் என்பது போதும். ஸ்ரீராமானுஜர் ஸ்ரீபாஷ்யம் எழுதி முடித்த பிறகும் வடதேசத்தில் காச்மீரத்திலுள்ள சாரதா பீடத்திற்குப் போனதாகவும் இவருடைய பாஷ்யத்தைக் கண்டு தேவியே மிகவும் சிலாகித்து இவருக்கு "பாஷ்யகாரர்" என்ற பிருதையும் கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. காஞ்சியிலேயே, அதாவது அவர் சொந்த ஊரிலேயே, அவ்விதம் ஒரு பீடம் இருக்குமானால் போதாயன விருத்தியைத் தேடி யாவது தேவியின் அனுக்கிரஹத்தைப் பெறுவதற் காவது காச்மீரம் வரை சிரமப்பட்டுப் போயிருக்க வேண்டாமே?

ஆனந்தகிரியின் சங்கர விஜயத்திற்கு பலம் கொடுக்கக் கருதி H. H. வில்ஸன் என்பவருடைய வாக்கியத்தை மேலும் கீழும் கத்தரித்து பிரமாணமாக N. ரமேசன் காட்டியிருக்கிறுரென்ற விஷயம் முன் சொல்லப்பட்டது. எப்படியும் அவருடைய வாக்குக்கு மதிப்புக் கொடுக்கிற முறையில் இவ் விஷயத்தில் அவர் என்ன சொல்கிருர் என்பதையும் பார்ப்போம். அவர் முதலில் எழுதினது 1828, 1832 ல்; பின்ஞல் புஸ்தகரூபமாக கல்கத்தாவில் 1846 லும் லண்டனில் 1862 லும் பிரசுரமாயிருக்கிறது. அவர் சொல்வதாவது:—

> " அவருடைய ஆயுள் கடைசியில் அவர் காச்மீரம் வரை போய் அங்குள்ள பலவித வாதிகளை ஜயித்து ஸரஸ்வதீ பீடத்தில் அமர்ந்து கொண்டார்... அவருடைய கடைசி கால ஸம்பவங்கள் அந்த பிரதேசத்திலுள்ள பிரஸித்தியிஞல் உறுதிப்படுத்தப்படுகின்றன. அவர் அமர்ந்த பீடம், ஸரஸ்வதீயின் ஸிம்ஹாஸனம், இப்போழுதும் காச்மீரத்தில் காட்டப்படுகிறது ".

அவர் நிகழ் காலத்தையே உபயோகித்திருக்கையில் அவருடைய வார்த்தையில் ஸந்தேஹத்திற்கு இடமேயில்லை. நூறு வருஷங்களுக்கு முன் ஒரு அன்னிய தேசத்தவர் சொல்லும் வார்த்தைக்கு, ஸமீபத்தில் தன் நலத்தைக் கருதி கல்பித்து சொல்லப்படும் வார்த்தைகளை விட, பிராமாண்யமுண்டு என்பதில் ஸந்தேஹமில்லை.

இந்த ஸந்தர்ப்பத்தில் இன்னெரு விஷயம் குறிப்பிட வேண்டியதுண்டு. காச்மீரத்தில் ஸர்வக்ஞபீடமிருந்தாலும் அதை ஸ்ரீசங்கரர் ஏறவில்லை யென்றும் பின்ஞல்

ஒருவர் தான் ஏறினார் என்றும் அவர் தான் சிதம்பரத்தில் ஜனித்து ஹிமயமலையில் மறைந்தவர் என்றும் இவர் காலத்தில் நடந்த ஸம்பவங்களை தவறுதலாக சிலர்கள் ஆதி ஆசார்யரிடம் ஆரோபணம் செய்து விடுகிறார்களென்றும் கும்பகோண மடத்தார் சொல்கிறார்கள். அவ்விதம் தவறுதலாகச் சொல்லுகிறவர்களில் "ஸம்க்ஷேப சங்கர விஜயகார"ரையும் ஆத்ம போதேந்திரர் சேர்த்திருக்கிறார். 68-வது பக்கத்தில்

**इदमेव अधिकाश्मीरं अस्य अखिलवित्पीठाधिरोहणं आदिमाचार्याणां इति प्रेमुः विद्याशंकरविजयसंक्षेपशंकर-विजयकारादयः ॥**

என்கிறார் மாதவீயத்தில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு இவ்வாக்கியம் ஆச்சர்யத்தைக் கொடுக்கும். ஆத்ம போதேந்திரர் "வியாஸாசலீயம்" என்றால் மாதவீயத்தைத்தான் குறிக்கிறாரென்ற விஷயம் முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. மாதவீயத்திற்குத்தான் "ஸம்க்ஷேப சங்கர விஜயம்" என்ற பெயர் என்பதை யாரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதில் காச்மீரத்தில் ஸர்வக்ஞ பீடாரோஹணம் ஆதி ஆசார்யார் செய்ததாக காண்கிறதென்பதிலும் ஸந்தேஹமில்லை. ஆகையால் மாதவீய சங்கர விஜயம் ஆத்மபோதேந்திரருக்கு வெகு நாள் முன்பட்டதென்றும் அதை புதிதாக ஏற்பட்டது போல் சொல்லும் வாதத்திற்கு ஆதாரமில்லையென்பதும் நன்கு விளங்கும்.

அத்யாயம் 16

# மறைந்த ஸ்தலம்

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் காச்மீரத்தில் ஸர்வக்ஞ பீடா ரோஹணம் செய்த பிறகு ஹிமாலயத்திற்குச் சென்று அப்படியே மறைந்து கைலாஸத்திற்குத் திரும்பிவிட்ட தாக மாதவரும் ஸதானந்தரும் சொல்கிருர்கள். காஞ்சி யில் ஸர்வக்ஞபீடம் என்று சொல்லும் சித்விலாஸீயமும் ஆசார்யார் ஹிமாலயம் போய் தத்தாத்ரேய குஹையில் மறைந்தார் என்று சொல்கிறது. புது "வியாஸாசலீய"த் தின்படி காச்மீரத்தில் ஸர்வக்ஞ பீடம் ஏறின பிறகு "பிரகாசமுள்ள (அல்லது இஷ்டமான) தேச"த்திற்குப் போனதாகக் காண்கிறது; இது வெள்ளி மலையான கைலாஸமாகத்தான் இருக்க வேண்டுமென்று முன்பே சொன்னேம். ஆசார்யார் தன் ஸ்தூல சரீரத்தை விட்டு விட்டுப்போய் அதற்கு சடங்குகள் நடந்ததாக அவ ருடைய பக்தர்கள் ஒப்புக் கொள்ள இஷ்டப் படுகிற தில்லை. ஆனந்தகிரி மாத்திரம் அவர் ஸ்தூல சரீரத்தை ஸூக்ஷ்ம சரீரத்திலும் ஸூக்ஷ்ம சரீரத்தை காரண சரீ ரத்திலும் பிறகு காரணசரீரத்தையும் கட்டைவிரல் பரும னுள்ள ஆத்மாவிலும் ஒடுக்கினதாகவும் அவருக்கு எல்லா சடங்குகளும் நடந்தன போலவும் வர்ணிக்கிருர். இவ்விதம் ஒடுங்கும் முறை நம் மதத்திலேயே கிடை யாது, அத்வைதத்தில் எவ்விதத்திலும் கிடையாது. இவ் விதம் சொல்வதினலேயே அக்கிரந்தம் எழுதினவருக்கு நம் மதத்தின் தத்வங்கள் தெரியாதென்று தெரிகிறது.

**பதஞ்ஜலி** சரிதம், சங்காரப்யுதயம், இவைகளின் **பிராமாண்யத்தைப்** பற்றி முன்னமேயே விசாரித்திருக் **கிறோம்.** ராமபத்திர தீக்ஷிதரிடமும் ராஜ சூடாமணி தீக்ஷிதரிடமும் கௌரவ புத்தியில்லாமலில்லை. ஆனால் **அவர்கள்** எழுதினதாகச் சொல்லப்படுவதை யெல்லாம் **நாம்** ஒப்புக்கொள்ள அவசியமில்லை. மற்ற ஆதாரங்கள் **விஷயமாகவும்** கும்பகோண மடத்தார் எவ்வளவு மாறு **தல்கள்** தங்கள் இஷ்டப்படி செய்திருக்கிறார்கள் என்ப தைக் கவனிக்கும்போது அவர்கள் வார்த்தையை நம்பு வது உசிதமில்லை யென்று நன்கு தெரிகிறது. இவ் விரண்டு காவ்யங்களும் பிரமாணமென்றே வைத்துக் கொண்டாலும் அதில் என்ன சொல்லியிருக்கிறதென்று பார்ப்போம். பதஞ்ஜலி சரிதத்தில்

> गोविन्ददेशिकमुपास्य चिराय भक्त्या
> तस्मिन् स्थिते निगमसीम्नि विदेहमुक्त्या ।
> अद्वैतभाष्यमवकल्प्य दिशो विजित्य
> काञ्चीपुरे स्थितिमवाप स शंकरार्यः ॥

> கோவிந்த தேசிகரை பக்தியுடன் வெகு நாள் உபாஸித்து விட்டு, அவர் விதேஹ முக்தி யடைந்து உபநிஷத் எல்லை நிலையில் இருந்து விட்ட பிறகு, அத்வைத பாஷ்யத்தை செய்து, திக்குகளை ஜயித்து, அந்த சங்கரர் காஞ்சியில் ஸ்திதியை அடைந்தார்.

இதிலிருந்து பாஷ்யம் எழுதினதே கோவிந்த பாதர் விதேஹ முக்தியடைந்த பிறகு என்று தெரிகிறது. கோவிந்த பாதருடைய விதேஹ முக்தியைப் பற்றி வேறு

எங்கேயும் சொல்லியிருப்பதாக தெரியவில்லை, சங்கரர் பாஷ்யம் எழுதுவதற்கு முன்னமேயே அவர் ஸித்தியாயிருந்தால், சங்கரர் பாஷ்யம் எழுதின பிறகு திக் விஜயம் தன் அவதார காரியங்கள் எல்லாம் முடிந்த பிறகு ஹிமாலயத்திற்குப் போகும் ஸமயம் கோவிந்த பாதரை ஸந்தித்திருக்க முடியாது. பதரீ க்ஷேத்திரத்தில் தபஸ் செய்து கொண்டிருந்த கோவிந்த பகவத்பாதாசார்யரையும் அவர் குருவான கௌட பாதாசார்யரையும் ஸ்ரீசங்கரர் ஸந்தித்தார் என்று N. ரமேசன் அவர் புஸ்தகம் 84 ம் பக்கத்திலும் அம் மடத்து ஆசார்யரே தன் உபன்யாஸம் 2-ம் பாகம் 233-ம் பக்கத்திலும் சொல்கிறார்கள். இவ்விரண்டு வரலாறுகளும் வாஸ்தவமாக இருக்கமுடியாது.

சங்கராப்யுதயம் கடைசி சுலோகத்தில்

कम्पातीरनिवासिनीमनुदिनं कामेश्वरीमर्चयन्
ब्रह्मानन्दमविन्ददत्र जगतां क्षेमंकरः शंकरः ॥

ஜகத்திற்கெல்லாம் க்ஷேமம் செய்கிற சங்கரர் இங்கே கம்பாதீரத்தில் வஸிக்கும் காமேசுவரியை பிரதிதினமும் அர்ச்சித்துக் கொண்டு பிரஹ்மாநந்தத்தை அடைந்தார்.

இதிலிருந்து அவர் அங்கேயே ஸித்தியடைந்துவிட்டார் என்று எவ்விதத்திலும் ஏற்படாது. சிவரஹஸ்ய வாக்கியங்கள் எவ்விதம் மாறுதல்களை அடைந்திருக்கின்றன என்பதை முன்னமே காட்டியிருக்கிறோம். கோவிந்தருடைய கேரளீய சங்கர விஜயத்தில் ஆசார்யார் திருச்சூரில் ஸித்தியடைந்ததாக காண்கிற தென்பதையும் முன் சொன்னோம். ஆனால் ஆத்மபோதேந்திரர் தன் 25வது

பக்கத்தில் கேரளீயவிஜயத்தில் உள்ள III 5 சுலோகத்தை அப்படியே அனுவதித்தவர், 39-வது பக்கத்தில் இவ்விஷயமாக அக்கிரந்தத்தில் இல்லாத சுலோகங்களையே உதாஹரிக்கிறார்.

इति निश्चित्य मनसा श्रीमान् शंकरदेशिकः।
मठे श्रीशारदाभिख्ये सर्वज्ञं निदधन्मुनिम् ॥
सुरेश्वरं वृत्तिकृतमन्तिकस्थं तदाऽऽदरात्।
समं संस्थाप्य तस्मै स्वं वक्तुं भाष्यं समन्वशात् ॥
स्वशिष्यपारम्पर्येण लिङ्गं स्वं योगनामकम्।
सेवयेनं कामकोटिपीठे साधं वसेति च ॥
इत्याज्ञां संप्रदायास्मै त्यक्तपीठमठस्पृहः ॥
कामाक्ष्या निकटे जातु संनिविश्य जगद्गुरुः ॥
देहिभिर्दुर्भजं भेजे देहं तत्रैव संत्यजन्।
अखण्डज्योतिरानन्दमक्षरं परमं पदम् ॥
स एव शंकराचार्यो गुरुर्मुक्तिप्रदः सताम्।
अद्यापि मूर्तं चैतन्यमिव तत्रैव तिष्ठति ॥

1926-ல் கேரளத்தில் அச்சிட்ட பதிப்பில் இந்த சுலோகங்கள் இல்லவேயில்லை. தஞ்சாவூர் ஸரஸ்வதீ மஹாலிலுள்ள கையெழுத்துப் பிரதியிலும் கிடையாது. அவைகளில் திருச்சூரில் ஸித்தியென்றிருப்பதால் இருக்கவும் முடியாது. இப்புஸ்தகம் எங்கே வெளியில் வரப்போகிற தென்ற தைர்யத்தில் அதில் இல்லாத சுலோகங்களை இருப்பதாக ஆத்மபோதேந்திரர் சொல்லத் துணிந்தார்

**என்று** தெரிகிறது. இந்த சுலோகங்களில்தான் ஸுரேசு**வரருடைய** மேல்பார்வையில் ஸர்வக்ஞரை பீடத்திற்கு **நியமித்த** விஷயம், ஸ்ரீகாஞ்சியில் ஸ்ரீ சங்கரர் ஸித்தி**யடைந்த** விஷயம் முதலியன நுழைக்கப்பட்டிருக்கின்றன. 'வியாஸாசலீய'த்திலும் அப்படியே நுழைக்கப்பட்டதை முன்னால் குறிப்பிட்டோம். இதில் 'யோகலிங்க' விஷயத்தையும் சேர்த்தது விசேஷம். இவ்விதம் மூல கிரந்தங்களையே தன்னிஷ்டப்படி மாற்றிக் கொண்டு பிரமாண வாக்கியங்களாகச் சொல்லத் தலைப்படுவதிலிருந்தே அவர்கள் கொண்டாடும் பாத்தியதைகள் ஆதார மற்றதென்று நன்கு விளங்குகிறது.

N. ரமேசன் தன் புஸ்தகம் அனுபந்தத்தில் இரண்டு வைஷ்ணவ 'பரிசீலகர்'களுடைய அபிப்பிராயத்தைக் கண்டிருக்கிறார். ஸ்ரீ சங்கரர் கடைசி காலத்தில் காஞ்சியில்தான் இருந்தாரென்றும் அங்கேயே ஸித்தியடைந்தாரென்றும் அவர்கள் அபிப்பிராயம். ஆனால் அவர்களே "ஆசார்யார் பூமியில் கடைசியில் எங்கே இருந்து பிரசாரம் செய்தாரென்பதும் எங்கே ஸித்தியடைந்தாரென்பதும் இன்னம் அறியமுடியாமலிருக்கிறது" என்றும் சொல்கிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு முக்கிய பிரமாணம் சிவரஹஸ்யமும் ஆத்மபோதேந்திரர் திருத்திச் சொல்லும் வியாஸாசலீயமும். இவைகளுடன் ஆதாரமாக டாக்டர் ஹல்ட்ஷ் கையெழுத்துப் பிரதி 2246 (2) நம்பருள்ளதென்றும் சொல்கிறார்கள். அதிலுள்ள

आगच्छत् स्वेच्छया काञ्चीं पर्यटन् पृथिवीतले ।
तत्र संस्थाप्य कामाक्षीं जगाम परमं पदम् ॥

பூமியில் ஸஞ்சாரம் செய்துகொண்டு தன்னிஷ்டப்படி காஞ்சிக்கு வந்தார்கள். அங்கே காமாக்ஷியை ஸ்தாபித்துவிட்டு பரமபதம் அடைந்தார்.

என்ற சுலோகத்தையும் கூடலி சிருங்கேரி குருபரம்பரா ஸ்தோத்திரத்தில் காணப்படுவதாக

स्वेच्छया पर्यटन् भूमौ ययौ काञ्चीपुरं ततः।
तत्र संस्थाप्य कामाक्षीदेवीं परमगात् पदम्॥

என்ற சுலோகத்தையும் சொல்கிறார்கள். இரண்டும் குருபரம்பரா ஸ்தோத்திரம் எனப்படுவதாலும் அர்த்தமும் வார்த்தைகளும் அநேகமாய் அப்படியே இருப்பதாலும் இரண்டும் ஒன்றுதான் என்று தோன்றுகிறது. கூடலீமடம் சிருங்கேரி மடத்திலிருந்து வித்யாரண்யருக்கு வெகுகாலத்திற்குப்பின் ஏற்பட்டதென்பது யாரும் அறிந்த விஷயம். அப்படியிருந்தும் வித்யாரண்யருக்கு முன்னால் கூட இக்குரு பரம்பரை சிருங்கேரி குரு பரம்பரையைத் தழுவினதாக இல்லை. இந்த பிரதி "தஞ்சாவூர் மன்னம் பட்டரென்றவரின் மூத்த புத்திரனை ஜம்புநாதபட்டரென்ற ஒரு மஹாராஷ்டிர பிராஹ்மண"ரிடமிருந்து கிடைத்ததாக அந்த டாக்டர் சொல்கிறார். இதற்கு சரித்திர ரீதியாய் பிராமாண்யம் கொடுக்க அவசியமேயில்லை. இது பிரமாணமென்று வைத்துக்கொண்டாலும் காமாக்ஷியை காஞ்சியில் பிரதிஷ்டை செய்தாரென்று ஏற்படுமே தவிர அவர் ஸித்தியடைந்ததும் காஞ்சி என்று ஏற்படாது. "அங்கே" என்கிற பதம் காமாக்ஷிப் பிரதிஷ்டைக்குத்தான் அன்வயிக்கும்.

இவ் விஷயத்தைப் பற்றி N. ரமேசன் தன் புஸ்தகம் பக்கம் 123 ல் பிரஸ்தாபிக்கும் போது

> "டாக்டர் ஹல்டஷ் பிரசுரித்திருக்கும் சிருங்கேரி ஆசார்ய குருபரம்பரா ஸ்தோத்திரத்தில் ஸ்ரீசங்கரர் பிருத்வீதரரை சிருங்கேரி சாரதா பீடத்திற்கு நியமம் செய்துவிட்டு காஞ்சிக்கு சென்றார். காமாக்ஷியை பிரதிஷ்டை செய்து தன்னுடைய சொந்த ஆசிரமத்திலிருந்து அத்வைதத்தைப் பரவச் செய்ய விசுவரூபரை நியமஞ் செய்து விட்டு ஸ்ரீசங்கரர் பரம பதம் அடைந்தார்"

என்று சொல்லி இதற்கு ஆதாரமாக அதிலுள்ள இவ் வாக்கியத்தை உதாஹரிக்கிறார்.

तत्र संस्थाप्य कामाक्षीं जगाम परमं पदम् ।
विश्वरूपयतिं स्थाप्य स्वाश्रमस्य प्रचारणे ॥

இவ்விதம் செய்வதின் உத்தேசம் "தன் ஆசிரமம்" என்பது "காஞ்சி" என்று அர்த்தம் செய்து கொள்ளட்டுமென்று. ஆனால் அவ்விதம் அர்த்தம் செய்து கொள்ள இடமேயில்லை. இந்தப் பிரகரணத்திலுள்ள முன் சுலோகங்களையும் பின் சுலோகங்களையும் சேர்த்துப் பார்த்தால் "தன் ஆசிரமம்" என்பது "சிருங்கேரி" என்று நன்றாகத் தெரியவரும்.

संस्थाप्य स्वमठं कृत्वा तुङ्गभद्रानदीतटे ।
तत्र स्थित्वा द्वादशाब्दं यतिं पृथ्वीधराभिधम् ॥
विद्यापीठाधिपं कृत्वा भारतीसंज्ञया गुरुः ।

आगच्छत् स्वेच्छया काञ्चीं पर्यटन् पृथिवीतले ॥
तत्र संस्थाप्य कामाक्षीं जगाम परमं पदम् ।
विश्वरूपयतिं स्थाप्य स्वाश्रमस्य प्रचारणे ॥
स्वयं काञ्चीमगात् तूर्णं श्रीपृथ्वीधरभारती ।
तद्वृत्तान्तं समाकर्ण्य तपसः सिद्धये तदा ॥
श्रीविश्वरूपयोगीन्द्रात् जातश्चिद्रूपभारती ।
ततो गङ्गाधरयतिः ततश्चिज्ज्ञानभारती ॥

"துங்கபத்திரா நதீ தீரத்தில் தன்னுடைய மடத்தை ஏற்படுத்திவிட்டு அங்கே 12 வருஷ காலம் தங்கிவிட்டு, பிருத்வீதரரென்ற யதியை பாரதீ என்ற பெயருடன் வித்யா பீடாதிபதியாகச் செய்து, பூமியில் ஸஞ்சாரம் செய்து கொண்டு தன்னிஷ்டப்படி காஞ்சிக்கு வந்தார். அங்கே காமாக்ஷியை ஸ்தாபித்து விட்டு பரம பதம் அடைந்தார். பிருத்வீதர பாரதீ இந்த விஷயம் கேட்டு தன்னுடைய தபஸ் ஸித்திக்காக, தன்னுடைய ஆசிரமத்தை நடத்த விசுவரூபயதியை ஏற்படுத்திவிட்டு, தான் சீக்கிரமாக காஞ்சிக்குச் சென்றார். விசுவரூப யதீந்திரரிடமிருந்து ஏற்பட்டவர் சித்ரூபபாரதீ, அவருக்குப் பிறகு கங்காதரயதி, அவருக்குப் பிறகு சித்ஞான பாரதீ"

இப்பொழுது தன்மடம் தன் ஆசிரமம் என்பது சிருங்கேரி தான் என்பது ஸ்பஷ்டமாகத் தெரியவரும். விசுவரூபரை ஏற்படுத்தினதும் பிருத்வீதரரே தவிர சங்கரர்

இல்லையென்பதும் விளங்குகிறது. பிருத்வீதரர் யார், அவரை சிருங்கேரியில் ஆசார்யார் நியமித்தாரா, என்பதெல்லாம் வேறு விஷயம். இங்கே பிரகிருதமில்லை. பின்னால் அன்வயிக்கும் ஒரு பாதியை முன் சுலோகத்துடன் அன்வயிக்கச் செய்வது எவ்வளவு தூரம் நியாயமென்பதை வாசகர்களே உணர்வார்கள்.

மேலே கண்ட பரிசீலகர்கள் மேலே காட்டியபடி கத்தரிக்கப்பட்ட H H. வில்ஸன் வாக்கிய பலத்தினால் ஆனந்தகிரிக்கு பிராமாண்யம் கொடுத்து காஞ்சியில் தான் ஸித்தி என்ற முடிவிற்கு வருகிறார்கள். வாஸ்தவத்தில் வில்ஸன் ஆனந்தகிரிக்கு "லஜ்ஜையன்னியில் பொய் சொல்கிறவர்" என்ற பிருதைக் கொடுத்திருக்கிறார் என்பதை எடுத்துச் சொன்னோம். தவிரவும் ஓரிடத்திலாவது காஞ்சியில் ஸித்தியென்று நினைக்கும்படி வில்ஸன் சொல்லவேயில்லை. அவருடைய அபிப்பிராயம் ஸந்தேஹத்திற்கே இடமன்னியில் அவர் புஸ்தகம் 127-வது பக்கத்தில் காணப்படுகிறது

> "He next went to Badarikasrama and finally to Kedarnath in the Himalayas where he died at the early age of thirty-two. The events of his last days are confirmed by local tradition"
>
> பிறகு அவர் பதரிகாசிரமம் சென்றார். கடைசியாக ஹிமாலயத்திலுள்ள கேதாரநாதம் போய் 32 வயதான இளம்பிராயத்தில் இறந்துவிட்டார். அவருடைய கடைசி காலத்திய ஸம்பவங்கள் அந்தப் பிராந்திய பிரஸித்தியினால் உறுதிப் படுத்தப்படுகின்றன.

இதைத் தவிர அவரே எழுதின கிளாஸரி என்ற பிரதான பிரசுரத்தில் ஸ்ரீ சங்கரரைப் பற்றி

> "அவர் திருவாங்கூர் ராஜ்யத்தில் கிராங்கனூருக்குத் தென்கிழக்கே இருபது மைல் சுமார் தூரத்திலுள்ள, பெரியாறு கரையில் உள்ள, காலடி என்ற கிராமத்தில் பிறந்தவர் ... ... ... ஆயுள் அந்த்ய காலத்தில் காச்மீரம் போனார்"

என்று சொல்வதுடன் பக்கம் 810ல் காஞ்சியைப் பற்றிச் சொல்லும்போது

> whether he was more than a passing pilgrim at Conjeevaram is doubtful
>
> "அவர் காஞ்சீபுரத்திற்கு வந்துபோன யாத்திரிகர் என்பதற்கு மேல் இருந்தாரா என்பது ஸந்தேஹம்"

என்கிறார். அவர் எழுதின 1855ல் கும்பகோணத்தில் ஒரு மடம் இருந்திருக்கிறது. அதைப்பற்றி

> **Combakonam ; A branch mutt of Shankara**charya founder of the Advaita philosophy is presided over by a chief gooroo of smarta Brahmans
>
> "கும்பகோணம் அத்வைத ஸித்தாந்த ஸ்தாபகரான சங்கராசார்யருடைய கிளை மடம் ஸ்மார்த்த பிராஹ்மணர்களில் ஒரு முக்கிய குருவினால் ஆளப்பட்டு வருகிறது"

இந்த ஸந்தர்ப்பத்தில் இந்த வில்ஸன் வேடிக்கை பார்க்க ஊர் சுற்ற வந்தவர் இல்லை, பத்திரிக்கைக்காரருமில்லை, அவருடைய வாக்கியங்கள் பொருப்பற்றது என்று சொல்லவும் முடியாதென்பதை வற்புறுத்துகிறோம். இவரைப்பற்றி 1942ல் சீமையிலுள்ள ப்ரிவீ கௌன்ஸில் என்ற உத்தம நீதிஸ்தலம்

> "பிரோபஸர் வில்ஸன் ஆக்ஸ்போர்டில் ஸமஸ்கிருத அத்யாபகர், ஈஸ்ட் இந்தியா கம்பனியாரிடம் லைப்ரேரியனாக இருந்தார். அக்கம்பனி டைரக்டர்களின் தீர்மானத்தை அனுஸரித்து இந்தியாவிலுள்ள எல்லா பாகங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களிலிருந்தும் தன்னுடைய மஹத்தான வைதுஷ்ய பொக்கிஷத்திலிருந்தும் கிளாஸரி எழுதப்பட்டது"

என்று மதித்திருக்கிறது. அவர் வியக்தமாய் என்ன சொல்கிருரென்பதை பார்க்காமல் அவருடைய அபிப்பிராயம் இவ்விதமென்று இப்பரிசீலகர்கள் ஊஹித்துச் சொல்லத் தலைப்பட்டது எவ்விதத்திலும் ஒழுங்கில்லை.

இப்பால் பக்ஷபாதிகள் என்று சொல்வதற்கு இடமில்லாத அநேகம் அறிஞர்களும் ஸ்ரீசங்கரர் மறைந்தது கேதாரத்தில் என்று ஸந்தேஹமன்னியில் சொல்கிருர்கள். உதாஹரணமாக, பண்டித ஜவஹர்லால் நெஹ்ரு தன் "Discovery of India" என்ற புஸ்தகத்தில் 152ம் பக்கத்தில் சொல்வதாவது :—

> At age of thirty two, this Brahmin from the tropical south died at Kedarnath in the upper snow-covered reaches of the Himalayas
>
> முப்பத்திரண்டு வயதில் உஷ்ணமான தென்திசையிலிருந்து வந்த இந்த பிராஹ்மணர் ஹிமாலயம் மேல் பாகத்தில் பனியினல் மூடப்பட்ட பிரதேசத்தில் உள்ள கேதாரநாத்தில் இறந்தார்.

கேதாரநாதத்தில் ஆசார்யார் மறைந்தாரே தவிர ஸமாதி ஏற்படுத்தும்படி ஸ்தூல சரீரத்தை இங்கே விட்டு விட்டுப் போகவில்லை யென்ற பிரஸித்தியை ஏற்றுக் கொண்டு அங்கு ஏற்பட்டிருக்கும் கட்டிடம் ஞாபகஸ்தலமே தவிர ஸமாதி ஸ்தலமல்ல வென்று டாக்டர் ஸம்பூர்ணநந்தர் சொல்கிருர். இதை ஒப்புக் கொள்வது போல் ஒருவர் இதற்கு விபரீத அர்த்தம் கல்பித்து கேதாரம் ஆசார்யாரின் ஸமாதி ஸ்தலமில்லை யென்றும், அங்கே அவர் மறைந்து அப்படியே கைலாஸம் போய் ஐந்து ஸ்படிக லிங்கங்களையும் ஸௌந்தர்ய லஹிரியில் ஒரு பாகத்தையும் வாங்கிக் கொண்டு தென் தேசம் போய் காஞ்சியில் ஸித்தியடைந்தாரென்ற பிரஸித்தி யிருப்பதாகவும் சேர்க்கிருர். இந்த அபிப்பிராயத்தையும் பிரமாணம் போல் N. ரமேசன் தன் புஸ்தகம் அனுபந்தத்தில் காட்டியிருக்கிருர்.

அமெரிக்கா டாக்டர் தியாஸ் பெர்நார்டு என்பவர் தன் "Hindu Philosophy" என்ற புஸ்தகம் 21 ம் பக்கத்தில் சொல்வதாவது

"அவர் ஹிமாலய கிராமமான கேதாரத்தில் இறந்ததாக நம்பப்படுகிறது"

இவ்விதமாக பிராசீனர்களோ நவீனர்களோ பக்ஷபாத மில்லாதவர்கள் யாவரும் கேதாரத்தில்தான் ஆசார்யார் மறைந்தாரென்பதை சொல்லுகிருர்கள். கக்ஷி கட்டிக் கொண்டு சொல்லும் வார்த்தையையாவது கட்சிக்காக கல்பிக்கப் பட்டிருக்கும் வாக்கியங்களையாவது நாம் கொஞ்சமேனும் நம்புவதற்கில்லை

அத்யாயம் 17

## ஐந்தாவது மடம்

ஸ்ரீ சங்கர பகவத் பாதர் நம் தேசத்தின் நான்கு திக்குகளிலும் நான்கு மடங்கள் ஸ்தாபித்தார் என்பது யாரும் ஒப்புக் கொண்ட விஷயம். கும்பகோணம் மடத்தில் ஆசார்யராகவிருந்த ஒருவரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிற "வியாஸாசலீயத்தில்" அம்மடத்தை ஏற்படுத்தினதாக காணவேயில்லை. இதிலிருந்தே அவ்விதம் மடம் யாதொன்றும் கிடையாதென்றும் அவ்விதம் ஏற்பட்டிருந்தாலும் அந்த கிரந்த கர்த்தாவிற்கு அவ்விஷயம் தெரியாதென்பதையே காட்டுகிறது. ஸ்ரீ சங்கரருடைய அஷ்டோத்தர சதநாமாவளியில் கும்பகோணம் மடத்தார் சில மாறுதல்கள் செய்திருந்த போதிலும் நான்கு திக்குகளிலும் நான்கு ஆசார்ய பீடங்களை ஸ்தாபித்தாரென்பதைக் குறிக்கும் நாமாவை மாற்றி விடவில்லை. காஞ்சியில் ஸ்ரீசக்கிரப் பிரதிஷ்டை செய்ததாகவும் நாமா இருக்கிறது. ஐந்தாவது ஆம்நாயம் ஏற்படுத்தியிருந்தால் அவசியம் கண்டிருக்க வேண்டும். அவ்விதம் இல்லாததினாலேயே ஐந்தாவது மடம் கிடையாதென்று வியக்தமாய் தெரிகிறது. ஏற்கனவே எடுத்துக் காட்டினபடி, ஆனந்தகிரி சங்கர விஜயத்தில் கூட காஞ்சியில் மடம் ஸ்தாபித்ததாக கிடையாது. இக்குறையை நிவர்த்திக்க அதில் 65 வது பிரகரணத்தில் காஞ்சியில் மடம் கட்டினதாகவும் அதில் ஸுரேசுவரரை இருக்கச் சொன்னதாகவும் சிலவாக்கியங்களை நுழைக்கப் பார்க்கிறார்கள். இதன் காரணமாக சிருங்கேரியை தன்

மடம் என்று சொல்லும் வாக்கியத்தை எடுக்கும்படிக்கும் காஞ்சியைப் பற்றி வாக்கியம் கல்பிக்கவும் அவசியமேற்பட்டது. ஆனந்தகிரி கல்கத்தா பதிப்புக்கும் கும்பகோண பரிஷ்கார பதிப்புக்குமுள்ள சில வித்யாஸங்களை முன்பு காட்டினோம். பிரகிருதத்தில் வேறு வித்யாஸங்களையும் குறிப்பிடுகிறோம்.

| கல்கத்தா பதிப்பு<br>பக்கம் 190 | பரிஷ்காரப் பதிப்பு |
|---|---|
| **ततः परं सरसवाणीं मन्त्रबद्धां कृत्वा गगनमार्गादेव शृङ्गपुरसमीपे तुङ्गभद्रातीरे चक्रं निर्माय तदग्रे सरसवाणीं निधाय "एवं आकल्पं स्थिरा भव मदाश्रमे" इति आज्ञाप्य निजमठं कृत्वा तत्र विद्यापीठनिर्माणं कृत्वा भारतीसंप्रदायं निजशिष्यं चकार। तदारभ्य ... ...** | ततः परं सरसवाणीं मन्त्रबद्धां कृत्वा गगनविद्यां पीठं निर्माणं कृत्वा भारतीसंप्रदायं निजशिष्येषु आचकार। तदारभ्य ... ... ... |
| *அதன் பிறகு ஸரஸவாணியை மந்திரத்தினால் கட்டி ஆகாச மார்க்கமாக சிருங்கபுரத்தின் அருகே துங்கபத்ராக் கரையில் சக்கிரத்தை நிர்மாணம் செய்து அதன்முன் ஸரஸவாணியை ஸ்தாபித்து* | *அதன் பிறகு ஸரஸவாணியை மந்திரத்தினால்கட்டி ககன(?) வித்யாபீடத்தை நிர்மாணம் செய்து பாரதீ ஸம்பிரதாயத்தை தன் சிஷ்யர்களுக்குள் செய்தார். அதில் ஆரம்பித்து.........* |

“ இப்படியே கல்பம் முடியும் வரை என் ஆசிரமத்தில் ஸ்திரமாக இரு” என்று உத்திரவிட்டு தன் மடத்தை ஏற்படுத்தி அதில் வித்யா பீடத்தை நிர்மாணம் செய்து பாரதீ ஸம்பிரதாயமான தன் சிஷ்யனை செய்தார். அதில் ஆரம்பித்து ... ... ... ...

பக்கம் 203

निजशिष्यपरम्परां आकल्पं शृङ्गगिरिस्थानस्थां कृत्वा सकलशिष्येभ्यो मोक्षमार्गोपदेशं कृत्वा ... ...

निजशिष्यपरम्परां आकल्पं काञ्चीपीठादितत्परस्थायिनीं कृत्वा तन्मुखादेव सकल शिष्येभ्यो मोक्षमार्गोपदेशं कृत्वा ... ...

இந்த திருத்தங்களோடு சிவரஹஸ்யத்தில் स कामम् என்பதை स्वकाश्रमे என்னும் திருத்தும்படி ஏற்பட்டது. “மார்க்கண்டேய ஸம்ஹிதை” யில் மற்ற மூன்று மடங்களைப் பற்றிப் பிரஸ்தாவமே செய்யாமல் சிருங்கேரியையும் காஞ்சியையும் பற்றி மாத்திரம் குறிப்பிடுவதிலிருந்தே காஞ்சிக்கு ஒரு அந்தஸ்து ஏற்படுத்த வேண்டுமென்பதே நோக்கமென்று வெளியாகிறது.

சித்விலாஸ சங்கர விஜயமும் அம்மடத்திலிருந்த 46-வது ஆசார்யரால் எழுதப்பட்டதாக சொல்லப்படுகிறது. அதில் காஞ்சியில் ஸர்வக்ஞ பீடமிருப்பதாகக் கண்டபோதிலும் மடம் ஸ்தாபித்ததாகக் காணவே

யில்லை. ஆனாலும் பிரஸித்தமான நான்கு மடங்களையும் ஸ்தாபித்ததாகக் கண்டிருக்கிறார்.

சிருங்கேரியைப் பற்றி

श्रीमठं तत्र निर्माय विद्यापीठमचीक्लृपत् ।
चतुर्ष्वेकं वावदूकं सुरेशार्यमग्रिमम् ॥
ब्रह्मविद्यावरिष्ठं तं तत्पीठे विनिवेश्य सः ॥
ஸர்க்கம் 24 (30, 31)

ஜகன்னாதத்தைப் பற்றி

ऐन्द्र्यां ककुभि तत्रैकं भोगवर्धननामकम् ।
जगन्नाथस्य चाभ्यर्णे मठमेकमचीक्लृपत् ॥
पद्मपादाचार्यवर्यं तन्मठाधीशमातनोत् ॥ ஸர்க்கம் 30(10, 11)

துவாரகையைப் பற்றி

पश्चिमस्यां हरित्येष मठमेकं विनिर्ममे ।
हस्तामलकनामानं तदध्यक्षं ततान सः ॥ ஸர்க்கம் 31 (5, 6)

பதரியைப் பற்றி

कौबेर्यां दिशि तत्रैकं मठं दिव्यमकारयत् ।
तन्मठेऽतोटकाचार्यवर्यं छायानुवर्तिनम् ॥ ஸர்க்கம் 31 (28)

என்று நான்கு திக்குகளிலும் ஸ்தாபித்த மடங்களையும் அதற்கு நியமிக்கப்பட்ட ஆசார்யர்களையும் குறிப்பிட்டிருக்கிறார். காஞ்சியில் ஆலயங்களை பரிஷ்காரம் செய்ததையும் விஸ்தாரமாக வர்ணிக்கிறார். அவ்விதமிருக்க காஞ்சியில் மடம் ஏற்படுத்தி யிருந்தால் அதைப் பற்றி பிரஸ்தாவிக்காமல் விட்டிருப்பாரா?

நம் தேசத்தில் பிரசாரத்திலிருக்கிற சில மடாம்நாயங்களில் இவ்வுலகிலுள்ள முன்சொன்ன நான்கு ஆம்நாயங்களைத் தவிர அத்யாத்ம நிலையில் மூன்று ஆம்நாயங்கள் இருப்பதாகக் கண்டு மொத்தம் ஏழு ஆம்நாயங்கள் சொல்லப் படுகின்றன. கும்பகோண மடத்து ஆம்நாய ஸேதுவில் தனக்காக ஒரு ஆம்நாயத்தையும் கல்பித்துக் கொண்டு ஆம்நாயங்கள் எட்டு என்கிறார்கள். ஆனால் இஹலோக நான்கு ஆம்நாயங்களுக்கும் அத்யாத்ம மூன்று ஆம்நாயங்களுக்கும் மத்தியில் தன் ஆம்நாயத்தை நுழைத்துக் கொண்ட போதிலும் அதற்கு ஒரு எண்ணிக்கை கொடுக்காமல் ஆத்யாத்மிக ஆம்நாயங்களை 5-வது 6-வது 7-வது என்றே சொல்கிறார்கள். இந்த "ஸேது"வில் கண்ட விஷயங்களை யார் பார்த்தாலும் ஸந்தேஹமன்னியில் கல்பிதமென்று நன்றாகத் துலங்கும். நான்கு பூலோக ஆம்நாயங்களுக்குள் நம் தேசத்தைப் பிரிக்கும் போது தக்ஷிண பாகத்திற்கு சிருங்கேரி என்றும், மேற்குக்கு துவாரகை என்றும், கிழக்குக்கு ஜகன்னாதமென்றும், வடக்குக்கு பதரி என்றும் ஒப்புக்கொள்ளப் படுகிறது. சிருங்கேரிக்கு

आन्ध्रौड्रलाटकर्णाटकोङ्कणाष्टेङ्कणा अपि ।
शृङ्गेर्यधीना देशास्ते संस्थिता दक्षिणापथम् ॥

> ஆந்திர, ஓட்ர, லாட, கர்னாட, கோங்கண, டெங்கண, இவைகளும் தக்ஷிணத்திலுள்ள தேசங்களும் சிருங்கேரிக்கு உள்பட்டன.

இதில் வடதேசத்தவரான ஓட்ரரையும் லாடரையும் சேர்த்து திராவிடரைக் குறிப்பிடாததற்குக் காரணம் தெரியவில்லை. எப்படியும் இந்த "ஸேது"வில் கும்ப

கோண மடத்திற்கு ஒரு தேசமும் சொல்லப்படவில்லை. அப்படியிருக்கையில் எந்த தேசத்தின் பேரிலாவது அம் மடத்தார் அதிகாரம் கொண்டாடினால், அது அவர்களுடைய "ஸேது"விற்கே விருத்தமாகும். இவ்விதம் தக்ஷிண திக்குக்கு சிருங்கேரி என்றிருந்தால் காஞ்சீ கும்பகோணம் உள்பட எல்லா பிரதேசங்களும் அதற்கு உள்பட்டதே யாகும். "ஸேது"வின் ஆதாரத்தைக் கொண்டு இதை மறுக்க வழியே யில்லை. "ஸேது"வில்

उक्ताश्चत्वार आम्नाया यतीनां हि पृथक् पृथक् ।
ते सर्वे मत्पदाचार्यनियोगेन यथाविधि ॥
प्रयोक्तव्याः स्वधर्मेषु शासनीयास्ततोऽन्यथा ।
कुर्वन्त एव सततं अटनं धरणीतले ॥
विरुद्धाचारसंप्राप्तौ मत्पदस्थसमाज्ञया ।
लोकान् संशीलयन्त्वेते स्वधर्माप्रतिरोधतः ॥

... ... ... ... ... ... ...

तान् सर्वान् शासयन्त्वेते आचार्या मत्पदे स्थिताः ।
स्वस्वराष्ट्रप्रतिष्ठित्यै संचारः सुविधीयताम् ।
तैरन्यतो न गम्येत मन्मठस्थाः सर्वतश्चराः ॥

... ... ... ... ... ... ...

कामकोटीमठे त्वस्मिन् गुरुरिन्द्रसरस्वती ।
सर्वोत्तरः सर्वसेव्यः सार्वभौमो जगद्गुरुः ॥
अन्ये गुरवः प्रोक्ताः जगद्गुरुरयं परः ।

... ... ... ... ... ... ...

अन्ये मठास्तु चत्वारः आचार्यं मत्पदे स्थितम् ।
संप्रदायैश्चतुर्भिः स्वैः समर्चन्तु यथाविधि ॥

ஸன்யாஸிகள் ஸம்பந்தமாக தனித் தனியாக நான்கு ஆம்நாயங்கள் சொல்லப்பட்டன. அவர்கள் எல்லாரும் என் ஸ்தானத்திலுள்ள ஆசார்யருடைய ஆக்ஞையின் பேரில் அவரவர்கள் ஸ்வதர்மத்தில் விதிப்படி ஏவப்பட வேண்டும். வேறுவிதமாயிருந்தால் கண்டிக்கப்பட வேண்டும். உலகத்தில் எப்பொழுதும் ஸஞ்சாரம் செய்ய வேண்டும். விருத்தமான ஆசாரம் இருந்தால் என் ஸ்தானத்திலுள்ளவரின் ஆக்ஞையை அனுஸரித்து ஜனங்களை அவரவர்கள் தர்மத்திற்கு விரோதமன்னியில் இவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும்......... என் ஸ்தானத்திலிருக்கிற ஆசார்யர்கள் எல்லாரையும் ஆளட்டும். அந்தந்த தேசத்தின் பிரதிஷ்டையை உத்தேசித்து நன்கு ஸஞ்சாரம் செய்யவேண்டும். அவர்கள் வேறு இடங்களுக்குப் போகக் கூடாது. என் மடத்தார் மாத்திரம் எங்கேயும் ஸஞ்சரிக்கலாம். ... ... ... ... இந்த காமகோடி மடத்திலுள்ள குரு இந்திர ஸரஸ்வதீ ; எல்லாரையும் விட மேலானவர், எல்லாராலேயும் ஸேவிக்கத் தகுந்தவர், உலகம் பூராவும் அதிகாரமுள்ளவர், ஜகத்குரு ... ... ... மற்றவர்கள் குரு என்று சொல்லப்படுவார்கள், இவர் மாத்திரம் மேலான ஜகத்குரு ... ... இதர நான்கு மடங்களும் என் ஸ்தானத்திலுள்ள ஆசார்யாரைத் தங்கள் நான்கு ஸம்பிரதாயங்களால் விதிப்படி அர்ச்சிக்க வேண்டும்.

இந்த மாதிரியுள்ள சுலோகங்களிலிருந்தே இந்த கிரந்தம் அம்மடத்தின் மேன்மையை ஸ்தாபித்துக் கொள்வதற்காக கல்பிக்கப்பட்டதென்பது ஸந்தேஹத்திற்கு இடமன்னியில் துலங்குகிறது. இந்த "ஸேது" வின்படிக்கே கும்பகோண மடத்திற்கு ஏதேனும் அதிகாரம் உண்டு என்றால் பிரஸித்த நான்கு மடங்களின்பேரிலேயே தவிர அம்மடத்து சிஷ்யர்களின் பேரில் இல்லை. அவ்விதம் அம்மடத்தாரிடம் தன் மேன்மையை ஒப்புக் கொள்ளச் செய்வதையும் அவர்கள் பேரில் அதிகாரம் செலுத்திப் பார்ப்பதையும் விட்டுவிட்டு, தன் புத்தி, சக்தி, செல்வாக்கு முதலியதை ஸாமான்ய ஜனங்களிடம் குழப்பம் ஏற்படுத்தி அவர்களுக்கு ஏற்பட்ட ஆசார்யர்களிடமிருந்து பிரிப்பதிலேயே உபயோகப்படுத்துவது கொஞ்சமேனும் நியாயமில்லை. எல்லாவற்றிற்கும் மேலான ஸ்தானம் கொண்டாடினால் பிரஸித்த நான்கு மடங்களுக்கு ஸமான அந்தஸ்தாவது கிடைக்காதா என்று இந்த பிரவிருத்தி என்று தோன்றுகிறது. தங்கள் மேன்மையை ஸ்தாபித்துக் கொள்ள, சிலபெரியோர்கள் அங்கே இங்கே சொல்லியிருக்கக் கூடிய வார்த்தைகளை பிரமாணமாகக் காட்டுகிறார்கள். C. P. ராமஸ்வாமி அய்யர்

> "இந்தியாவின் வடக்கே, தெற்கே, கிழக்கே, மேற்கே மதவிஷயமான வித்யையும் அனுஷ்டானமும் ஏற்படக்கூடிய மடங்களை ஸ்தாபித்தார். ஸ்ரீநகரம், துவாரகை, பூரி, சிருங்கேரி, காஞ்சீ இவைகள் அவருடைய தாரதூரத்தில் உள்ள தார்மிக ராஜதானிகள்"

என்று சொல்லியிருக்கிறாரென்பது வாஸ்தவம். இதில் பிரஸித்தமான பதரிகாசிரமத்தை விட்டுவிட்டு ஸ்ரீநகரத்

தையும் காஞ்சீயையும் சேர்த்திருப்பதினால் இது பிரமாண ரீதியில் சொன்ன வார்த்தை யில்லையென்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. "Homage to Sri Sankara" என்கிறவிடத்தில் அவரே வியக்தமாக

> "திருவாங்கூரிலுள்ள காலடியில் பிறந்து ஆச்சர்யமான பௌதிக ஆத்யாத்மிக சக்திகளைக் காட்டினார். அவர் ஹிமாலயத்திலும், வங்காளக் குடாக்கடல் கரையிலும், அரபிக் கடல் கரையிலும், கர்னாடக தேசத்தில் ரிஷ்யசிருங்கருடன் ஸம்பந்தப்பட்டு துங்கா நதிக்கரையில் அதன் சேர்க்கையுள்ள பத்ரைக்கு அப்புறமாக சிருங்கேரியிலும், மடங்கள் ஏற்படுத்தினார்"

என்று சொல்லியிருக்கிறார்.

டாக்டர் கங்காநாதஜா என்பவர் "காஞ்சீ, சிருங்கேரி முதலானவிடங்களில் பூஜா ஸ்தானங்கள் ஏற்படுத்தினார்" என்றது மடஸ்தாபனம் செய்தாரென்று சொன்னதாக ஆகாது. மேலும் C. P. ராமஸ்வாமி அய்யர் ஸ்ரீ சங்கரர் கேதாரத்தில் மறைந்ததாகவும் சிருங்கேரியில் ஸுரேசுவரரை நியமித்ததாகவும் அதே ஸந்தர்ப்பத்தில் சொல்லியிருப்பதெல்லாம் கும்பகோண மடத்தாருக்கு விருத்தமேயாகும்.

டாக்டர் C. P. ராமஸ்வாமி அய்யர் சேர்மனாயிருந்த ஹிந்து ரிலீஜியஸ் எண்டௌமெண்ட் கமிஷன் ரிப்போர்ட்டில் கும்பகோணம் மடத்தார் இடைவிடாமல் தீவிரமாக செய்துவரும் பிரசாரத்தின் பலனாக, அம்மடம் ஆதி ஸ்ரீ சங்கராசார்யரால் காஞ்சியில் ஏற்பட்டது

போலவும், காஞ்சியில் ஸர்வக்ஞ பீடாதிபத்யத்தை அவர் வஹித்தது போலவும், அப்பீடமே பின்னால் தஞ்சாவூருக்கும் அங்கிருந்து கும்பகோணத்திற்கும் மாற்றப்பட்டது போலவும், கண்டிருக்கிறது. ஆனால் இவ்விஷயங்களைக் காணும் போது "என்று வதந்தி", "என்று சொல்லப் படுகிறது" என்று ஜாக்கிரதையாய் அடைமொழிகள் போட்டிருப்பதினால் எவ்வித ருஜுவையும் ஆதாரமாகக் கொள்ளாத இவ்வாசகங்கள் அக் கமிஷனின் தீர்மான மாகவாவது அக்கமிஷன் அங்கத்தினர் எவருடைய அபிப்ராயமாகவாவது எவ்விதத்திலும் ஆகாதென்பதை தெளிவுபடுத்துகிறது.

சென்னை ஹைக்கோர்ட்டில் சிதம்பரம் கோவில் விஷயமாகவும் சிரூர் மாத்வ மடம் விஷயமாகவும் ஏற்பட்ட ஒரு விவாதத்தில் அந்த விவாதத்திற்கு எவ்வித ஸம்பந்தமுமில்லாமல் தானாகவே ஜட்ஜ் ஸூர்யநாரயண சொல்லியிருப்பதற்கும் மதிப்பு கொடுப்பதற்கில்லை. பிரஸித்த நான்கு மடங்களில் ஒன்றான பூரி ஜகன்னாத மட விஷயமாய் பாட்னா ஹைக்கோர்ட்டில் ஸ்ரீ பாரதீ கிருஷ்ண தீர்த்தர் பேரில் நடந்த வியவஹாரத்தில் ஏற்பட்ட தீர்ப்பு பிரகிருதத்திற்கு உசிதமாயிருக்கும். தீர்ப்புச் சொன்னது வெள்ளைக்காரரான ஸர் கோர்ட்னி டேர்ரல் என்பவரும் மஹமதியரான ஸெய்யது பஸூல் ஆலீ என்பவரும்.

"தாவாவில் இருக்கும் தர்மம் புரியிலுள்ள கோவர்த்தன மடம். இது வெகு காலத்திற்கு முன் ஒரு பெரிய ஹிந்து மதாசார்யரால் ஏற்படுத்தப்பட்ட நான்கில் ஒன்று.. புத்த மதம்

பரவுதலைத் தடுக்கவே முக்கியமாய் இவை ஸ்தாபிக்கப்பட்டன. ஆதி சங்கராசார்யார் இந்தியாவை நான்கு பாகமாகப் பிரித்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மடத்தின் ஆளுகையில் வைத்தார். தத்காலம் பம்பாய் ராஜதானி என்று சொல்கிற பிரதேசத்திற்கு அநேகமாக சரியான மேற்கு திக்கு அதிகாரத்தை துவாரகை சாரதாமடத்தில் கொடுக்கப்பட்டது. வட இந்தியா இப்பொழுது நஷ்டமாயிருக்கிற ஜ்யோதிர் மடத்திற்குக் கொடுக்கப்பட்டது. கிழக்கு இந்தியா இந்த விவாத விஷயமான கோவர்த்தன மடத்திற்குக் கொடுக்கப்பட்டது. தென் இந்தியா மைசூரிலுள்ள சிருங்கேரி மடத்தின் ஆளுகையில் வைக்கப்பட்டது. ... ... ... இம்மடங்களின் அதிபதிகள் ஜகத்குரு என்ற பட்டத்தினால் அழைக்கப்படுகிறார்கள்"

பண்டித ஜவஹர்லால் நெஹ்ரு தன் "Discovery of India" வில்

"அவர் இந்தியாவின் நான்கு மூலைகளென்றே சொல்லக் கூடிய இடங்களில் ஒன்றுக்கொன்று வெகு தூரத்தில் நான்கு பெரிய மடங்களை ஸ்தாபித்தார். அவைகளில் ஒன்று மைசூரில் உள்ள சிருங்கேரியில், மற்றொன்று கீழ் ஸமுத்திரக் கரையிலுள்ள புரியில், மூன்றாவது மேல் ஸமுத்திரக் கரை கதியவாடிலுள்ள துவாரகையில், நான்காவது ஹிமாலய மத்தியிலுள்ள பதரீநாதத்தில். உஷ்ணமான தென்தேசத்தில்

> இருந்து இப் பிராஹ்மணர் 32 வயதில் ஹிமாலயத்தில் பனியினால் மூடப்பட்ட உயர் பிரதேசங்களிலுள்ள கேதாரத்தில் இறந்தார். ... ... ... இவ்விதம் இந்தியாவின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று தன்னுடைய மஹத்தான நான்கு மடங்களையும் ஏற்படுத்தினதனால் இந்தியா பூராவும் ஒரே பண்பாடு என்பதை உறுதிப்படுத்துவதே அவர் உத்தேசமென்று தெரிகிறது."

முன் பிரஸ்தாபித்த வில்ஸன் என்பவர் காஞ்சி மடத்தைப் பற்றி பிரஸ்தாபிக்கவேயில்லை. காஞ்சியில் ஸ்ரீ சங்கரர் யாத்ரிகராகத்தான் வந்திருப்பதாக அவர் அபிப்ராயப்படுகிறாரென்ற விஷயம் முன்னமேயே சொன்னோம். அவர் சிருங்கேரியைப் பற்றி சொல்லும் போது

> "most important of mutts founded by Shankara" சங்கரர் ஸ்தாபித்த மடங்களுக்குள் ஸர்வ பிரதானமானது"

என்று சொல்கிறார். கும்பகோணத்தைப்பற்றி அது ஒரு கிளை மடமென்று சொல்லியிருக்கிறாரென்பதை முன்னமேயே சொன்னோம். அவர் காலத்தில் இது கிளை மடம் என்றே பாவிக்கப்பட்டதென்பது நன்கு தெரிகிறது. தஞ்சாவூர் ஜில்லா ஜட்ஜாயிருந்த டாக்டர் பர்னல் கும்பகோணத்திற்கு வெகு ஸமீபத்திலிருந்தவர் 'சங்கராசார்யருடைய நியாயமான சிஷ்ய பரம்பரையிலிருந்து பிரிந்து ஸ்வாதந்திரியம் கொண்டாடுகிற சோழ மண்டலத்திலுள்ள மடங்கள் " என்று சொல்கிறார் என்பதை

**யும் காட்டினோம். இவர்களுக்கெல்லாம் எவ்வித பக்ஷபாதமாவது புத்திமோகமாவது உண்டென்று சொல்ல முடியாது.**

அப்படியே K. M. பணிக்கர் "A Survey of Indian History" பக்கம் 101-ல்

"The main organisational work that Sankara undertook was the establishment of the four great mutts, at Badari in the north high up in the Himalayas, at Puri in the east, at Dwaraka in the west coast off Jamnagar and at Sringeri in the south ...... It is undeniable that these great monasteries, with their subsidiary institutions also under religious teachers sometimes assuming the title of Sankaracharya, have helped to maintain the orthodoxy of Sankara's teachings and the hold of Hinduism on the people"

*ஸ்ரீ சங்கரர் முக்கியமாக செய்த கட்டுப்பாடான ஏற்பாடு வடக்கே ஹிமய மலையின் மேலே பதரியிலும், கிழக்கே புரியிலும், மேற்கே ஜாம்நகருக்கு அப்புறம் மேல்ஸமுத்திரக் கரையிலுள்ள துவாரகையிலும், தெற்கே சிருங்கேரியிலும், ஆக நான்கு பெரிய மடங்களை ஸ்தாபனம் செய்ததேயாகும் .......... இந்தப் பெரிய மடங்களும், அவைகளுக்கு உள்பட்டு சில ஸமயம் அவர்களும் சங்கராசார்யரென்று பெயரை*

வைத்துக் கொள்கிற மதபோதகர்களின் ஸ்தாபனங்களும், ஸ்ரீ சங்கரரால் உபதேசிக்கப்பட்ட ஸித்தாந்தத்தைக் காப்பாற்றவும் ஜனங்களிடம் ஹிந்து மதத்திலுள்ள பிடிமானத்தைக் காப்பாற்றவும் உபயோகப்பட்டு வந்திருக்கின்றன வென்பதை மறுக்க முடியாது" என்கிறார்.

அமெரிக்கா டாக்டர் தியாஸ் பெர்னார்டு :

"அவர் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். அவைகளில் பிரதானமாயுள்ளது தென்னிந்தியாவில் மைஸூர் மாகாணத்தில் சிருங்கேரியில் இருக்கிறது. மற்றவைகள் கிழக்கே புரியிலும், மேற்கே துவாரகையிலும், வடக்கே ஹிமாலயத்தில் பதரியிலும் இருக்கின்றன. அவர் ஹிமாலய கிராமமான கேதார்நாத்தில் இறந்ததாக நம்பப்படுகிறது" என்கிறார்.

K. A. அப்பாஸ் என்ற மஹமதிய எழுத்தாளர் :

இந்தியா ஒரே நாடு என்கிற எண்ணம் சங்கராச்சார்யார் காலத்திலேயே இருந்ததென்பதில் ஸந்தேஹமில்லை. கேரள தேசத்திலிருந்து வந்த இந்த பெரியார் தன்னுடைய நான்கு ஸ்தானங்களையும் தெற்கே சிருங்கேரியிலும், கீழ் ஸமுத்திரக் கரையில் புரியிலும், மேல் ஸமுத்திரக் கரையில் துவாரகையிலும், வடக்கே ஹிமாலய மத்தியில் பதரீநாத்திலும், ஏற்படுத்தினதிலேயே அவர் இந்தியா பூராவையும் வியக்தமாக ஒன்றாக பார்த்தாரென்று

தெரிகிறது ...... ... ... தென்கோடியிலிருந்து வந்த சங்கராச்சார்யார் தேசத்தின் வடகோடியிலுள்ள பதரிநாத்தில் இறந்ததினால் இந்தியா ஒரே நாடென்று முத்திரை போட்டுக் கொடுத்திருக்கிறார்.

டாக்டர் ராதா குமுத முகர்ஜீ:

சங்கராசார்யார் இந்தியாவின் நான்கு மூலைகளிலும் நான்கு மடங்களை ஸ்தாபித்தார், அதாவது வடக்கே ஜ்யோதிர் மடத்தையும், மேற்கே சாரதா மடத்தையும், தெற்கே சிருங்கேரி மடத்தையும், கிழக்கே கோவர்த்தன மடத்தையும். இந்தியா முழுவதும் அதிகாரம் செலுத்தி வந்த அவருடைய அத்யாத்ம ராஜ்யத்தின் ராஜதானிகளாகவும் அவருடைய திக்விஜய ஸ்தம்பங்களாகவும் ஏற்பட்டன இவைகள்.

இந்தியா கவர்ன்மெண்டார் பிரசுரமான "Cultural Unity of India" என்ற வெளியீட்டில் கெர்ட்ருட் எமர்ஸன் ஸென் பக்கம் 31ல் சொல்வதாவது:—

முப்பத்திரண்டு வயதான இளம்பிராயத்தில் இறக்கும் முன்பு இந்தியாவின் நான்கு பக்கங்களிலும் ஹிந்து ஸன்னியாஸிகளுக்காக நான்கு மடங்களை ஸ்தாபித்தார் — புரி, துவாரகா, சிருங்கேரி, பதரீநாத் — இவ்விதம் தேசத்தின் அத்யாத்ம ஒற்றுமையை வளர்த்தார்.

இவ்விதம் உலகப் பிரஸித்தியுள்ளவர்களும், பற்பல தேசங்களிலும் பற்பல மதங்களிலும் இருப்பவர்களும், ஆக்ஷேபணையின்றியில் நம்பக்கூடியவர்களும், ஒருவித

பக்ஷபாதமு மில்லாதவர்களுமாயிருக்கிற இவர்களுடைய வாக்கியத்திற்கு பிராமாண்யம் கொடுக்கிறதா? அல்லது பலவித காரணங்களைக் கொண்டு முகஸ்துதி செய்யும் ஒருதலைக்காரர்களுடையவும் அவர்களைச் சேர்ந்தவர்களுடையவும் வாக்கியத்திற்கு பிராமாண்யம் கொடுக்க முடியுமா? பின் சொன்னவர்கள் விஷயமாக ஆத்ரேய கிருஷ்ண சாஸ்திரியின் சில அபத்த வார்த்தைகளை உதாஹரிப்போம். அவர் புஸ்தகம் 89-வது பக்கத்தில், "1797 பிங்கள வருஷத்தில் சிருங்கேரி பீடாதிபர்களான அபிநவோத்தண்ட வித்யாரண்ய பாரதீ ஸ்வாமிகள் ராமேசுவரம் வரையில் திக்விஜயம் செய்து திரும்புகையில் ஜம்புகேசுவரம் முதலிய பிராந்தியங்களில் பாத பூஜை முதலியன ஏற்றுக் கொண்ட குற்றத்தை ஒப்புக் கொண்டதுமல்லாமல் இனி அவ்வாறு செய்வதில்லை யென மேற்குறித்த வருஷம் ஆச்வின பகுள தசமியில் ஓர் உடன்படிக்கையும் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்" என்கிறார். அவ்வித பெயருள்ள ஆசார்யரே சிருங்கேரி பீடத்தில் இருந்திருப்பதில்லை.

மறுபடியும் 90வது பக்கத்தில் "சிருங்கேரி ஸ்ரீஸ்வாமிகளுக்கும் காமகோடி பீடாதிபர்களுக்கும் திரிசிரபுரம் அதாலத் கோர்ட்டார்முன் ஒரு வழக்கு நடைபெற்றது. சிருங்கேரி மடத்தார் கொணர்ந்த ஆதாரங்கள் அனைத்தும் பயனற்றன. காமகோடி பீடாதிபர் ஒருவரே ஆதி சங்கரர் அமைத்த தாடங்கத்தைச் செப்பனிட உரியார் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீ சக்ரபிரதிஷ்டாபகர் என்ற விருது காமகோடி பீடத்தாருக்கன்றே உரியது!"

**என்கிறார்.** இவ்வழக்கு விவரம் அம்மடத்தார் பிரசுரித் **திருக்கிறபடியே** வைத்துக் கொண்டாலும் ஸதர் அமீன் **தீர்ப்பில்**


> "பிராதை ஸ்தாபிக்க வேண்டியது வாதியுடைய காரியமாயிருந்ததினுலேயும் மேலெழுதிய காரணங்களால் ருசுவாகாமலிருக்கிறதனுலேயும் முதல் பிரதிவாதியுடைய ஆதரவுகளையும் சாக்ஷிகளுடைய ருசுக்களையும் விவரிக்க அவஸரம் காணப்படவில்லை."

இவ்விதம் வியக்தமாக சொல்லியிருந்தும் ஏதோ அம்மடத்து பாத்தியதை தீர்மானிக்கப்பட்டதாக சொல்வது யோக்கியருக்கு அழகில்லை.

மேலும் அதே பக்கத்தில் "ராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதியவர்களும், புதுக்கோட்டை ராமசந்திர மஹாராஜா அவர்களும், மேலும் விஜயநகரம், கேரளம் முதலிய ஸ்வதேச ராஜ்யங்களைப் பரிபாலனம் செய்கிற ராஜாக்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபர்களைப் போற்றியதுமல்லாமல் இப்பரம்பரையே ஆதிசங்கரர் முதல் பின்னமற்று விளங்குவது எனத் தீர்மானம் செய்தார்களென்று கூறப்படுகின்றது" என்கிறார். இது வெறும் பொறுப்பற்ற பேச்சு என்பதை எடுத்துக் காட்ட அவசியமில்லை. பொதுவாகவே அம்மடத்து பிரசுரங்களில் இவ்வித ஆதாரம் அற்ற வாஸ்தவமில்லாத விஷயங்களே நிரம்பியிருக்கின்றன. அவைகளை தனித்தனியாக எடுத்து நிராகரணம் செய்வதற்கு அவசியமில்லை. அவைகள் விஷய

மாய் உதாஸீனமாயிருப்பதே நியாயமாகும். ஆனால் இவ்வித புஸ்தகங்களை அம்மடத்தாரே பிரசாரம் செய்தும், விற்பனை செய்தும், இனாமாகக் கொடுத்தும் ஜனங்களிடம் பரப்பி வருவதால் உதாஸீனமாயிருக்க முடியவில்லை.

இந்த ஸந்தர்ப்பத்தில் இவ்விஸ்தாரமான இந்திய தேசத்தில் பல பல கணக்கிலடங்காத அத்வைத மடங்கள் இருக்கவில்லையா என்பது பிரகிருதமில்லை. ஸ்ரீ சங்கர பகவத்பாதரோ அவர் பரம்பரையைச் சேர்த்த யாரோ கால் மிதித்த இடமெல்லாம் மடங்களாக இருக்கலாம். அவரால் ஸ்தாபிக்கப்பட்டதாக எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்படுகிற நான்கு ஆம்நாய மடங்களைத் தவிர வேறு ஆம்நாய மடம் உண்டாயிருக்க முடியுமா என்பது தான் நாம் கவனிக்க வேண்டிய விஷயம். மேலே சொல்லியிருப்பதிலிருந்து அவ்விதம் இருக்க முடியாதென்று நன்கு ஸ்பஷ்டமாகிறது.



## அத்யாயம் 18

# சித்திர கல்பனை

கும்பகோணமடம் ஒரு கிளை மடம் என்று டாக்டர் பர்னல், வில்ஸன், பணிக்கர் முதலியவர்கள் சொல்வது வெறும் பொறுப்பற்ற அபிப்பிராயம் என்று சொல்வதற்கில்லை. அவர்கள் சொல்வதை ஸ்திரப்படுத்திக் கொடுக்க பல நிர்விவாதமான அம்சங்கள் இருந்து வருகின்றன. கும்பகோணம் தஞ்சாவூர் அரசர்கள் சில்காலம் ஆண்டு வந்த தஞ்சாவூர் ஜில்லாவின் மத்தியிலிருக்கிறது; இவ்வரசர்களின் ஏற்பாட்டின் பேரில் 18-வது நூற்றாண்டு கடைசியிலோ 19-வது நூற்றாண்டு ஆரம்பத்திலோ, கர்ணாடகப் பிராந்தியத்திலுள்ள சிருங்கேரி மடத்திற்கு உள்ளூர் பிரதிநிதியாக இம்மடம் ஏற்பட்டிருக்கலாம். இம்மடத்தாருக்கு கன்னட பாஷைப் பெயரான 'சிக்க (சிறிய) உடையார் ஸ்வாமி' என்ற பட்டமிருந்து வந்திருப்பது இதை உறுதிப்படுத்துவதுடன் 'தொட்ட (பெரிய) உடையார் ஸ்வாமி' ஒருவர் உண்டென்பதையும் ருசுப்படுத்துகிறது. ஞாபகத்திற்கு எட்டின வரை இம்மடத்திலிருந்த ஆசார்யர்கள் யாவருமே கர்ணாடகர்கள்; இம்மடத்து முத்திரையே கன்னடத்தில் இருக்கிறது. இப்பொழுது கர்ணாடகரல்லாத ஒருவருக்கு பட்டம் கொடுக்க நினைத்திருப்பது இம்மடத்தை விஸ்தரிக்கும் நோக்கத்துடன் என்பதும் தெரிகிறது. தஞ்சாவூர் அரசர்களுக்கும் மைஸூர் அரசர்களுக்கும் அடிக்கடி போட்டியும் வியவஹாரமும் ஏற்பட்டு வந்த ஸமயத்தில் கும்பகோணமடம் ஸ்வதந்திர மடமாக மாறியிருக்கக் கூடியது. தஞ்சாவூர் ஜில்லாவைச் சுற்றி, தெற்கே திருநெல்வேலி, மதுரை

ஜில்லாக்களிலும், மேற்கே கோயமுத்தூர் ஜில்லாவிலும் வடக்கே சென்னை, செங்கல்பட்டு, திருப்பதி, காஞ்சீபுரம் முதலிய இடங்களிலும் சிருங்கேரி மடத்திற்கு ஞாபகத்திற்கெட்டாத காலம் முதல் சொத்துக்கள் இருந்துவருகின்றன. இந்த எல்லைக்குள்பட்ட பிரதேசத்திலுள்ள பிரஜைகளின் அத்யாத்ம சிரேயஸ்ஸை கவனித்துக் கொள்வதற்காக சிருங்கேரி மடத்தின் பிரதிநிதி ஒருவர் இருந்துவந்து நாளடைவில் கவனக் குறையினாலோ வேறு காரணத்தினாலோ மேல் அதிகாரப் பிடிப்பு குறைந்ததுடன் தானே ஸ்வதந்திரராயிருக்கலாம். விஜயநகரம் ஸம்ஸ்தானம் பலஹீனப்பட்டு கடைசியில் இல்லாமலே போனவுடன் வரிவசூலித்தவர்களெல்லாம் ஜமீந்தாராகவும் அந்தந்தப் பிராந்திய அதிகாரிகள் மஹா ராஜாக்களாகவும் மாறிவிட்டார்களல்லவா? சிருங்கேரி மடத்திற்கு இம்மடம் முன்னொரு காலத்தில் உள்பட்டு இருந்ததென்பதற்கு இதுவும், தன்னை "சாரதா மடம்" என்று சொல்லிக் கொள்வதும் முக்கிய ருசுவாகும். காஞ்சியில் ஆராதிக்கப்படும் தேவதை காமாக்ஷியம்மன்; மடத்தில் உபாஸிக்கப்படுவது திரிபுர ஸுந்தரீ. இவ்விரண்டும் ஜகந்மாதாவின் தனித்தனி அம்சங்கள்; இவைகள் சாரதாவோடு ஒன்றாகாது. சிருங்கேரியில் சாரதா தேவிக்கு ஆலயமிருக்கிறது. காஞ்சியிலாவது கும்பகோணத்திலாவது கிடையாது. "சாரதா மடம்" என்று சொல்லி கும்பகோண மடத்தாரிடம் ஏதேனும் சாஸனமோ, ஆதாரவோ, சொத்தோ, இருந்ததேயானால் அது ஆதியில் சிருங்கேரிக்கே ஏற்பட்டதென்பது நிச்சயம். தவிரவும் காஞ்சீபுரத்தில் உள்ள சிருங்கேரி மடம் வெகு பிராசீனம்; கும்பகோணம்

மடத்தார் வைத்துக் கொண்டிருப்பது ஸமீபத்தில் வாங்கப்பட்டது. கும்பகோணம் மடத்தின் கட்டிடமே 1821-ல் தான் கட்டினதாகத் தெரிகிறது. அம்மடம் அதுமுதலே பிரஸித்திக்கு வந்திருக்கலாம். ஆனால் தனக்கு ஒரு பிராசீனத் தன்மை கல்பித்துக் கொள்ளக் கருதி ஏதோ முன்னால் காஞ்சீபுரத்தில் இருந்ததாகவும் அங்கிருந்து ராஜ்ய க்ஷோபத்தின் காரணமாக தென் பக்கம் வரவேண்டி யிருந்ததாகவும் சொல்லும்படி ஏற்பட்டிருக்கும். சரித்திர விமர்சகர்களும் இக்கல்பனைகள் வாஸ்தவமில்லையென்றே தீர்மானிப்பார்களென்று நம்புகிறேன்.

காஞ்சீபுரத்தை விட்டு தஞ்சாவூர் பக்கம் வந்தது எப்பொழுது என்று இன்னம் அம்மடத்தார் ஒரு முடிவுக்கு வந்தாகவில்லை. மைஸூரில் ராஜ்ய நிர்வாகம் செய்த திப்பு ஸுல்தான் காஞ்சீபுரத்திற்கு 1791-ல் வந்திருக்கிறார். அவர் தகப்பனார் ஹைதர் அலியால் ஆரம்பிக்கப்பட்ட கோவில் கோபுரம் பூர்த்தியாகாமல் இருந்ததால் அதை உடனே தன் செலவில் பூர்த்தி செய்யும்படி உத்திரவிட்டு ரதோத்ஸவத்தை தானே கூடவிருந்து நடத்தினதுடன் தனக்கு யுத்தத்தில் வெற்றியேற்படுவதற்காக அநேகம் பிராஹ்மணர்களைக் கொண்டு வைதிக கார்யங்கள் செய்யும்படி ஏற்பாடு செய்து இவைகள் சரிவர நடப்பதை மேல் பார்ப்பதற்கு சிருங்கேரி சங்கராசார்யாரை அழைத்ததாக சரித்திர மூலமாக தெரிகிறது (G. S. Sardesi's New History of the Mahrattas III p. 190). காஞ்சியில் வேறு ஒரு சங்கராசார்யரோ காஞ்சியில் செல்வாக்குள்ள ஒரு

சங்கராசார்யர் கும்பகோணத்திலோ இருந்தால் இந்த ஸம்பவம் ஏற்பட்டிருக்கக் கூடியதா? எப்படியும் காஞ்சியில் வைதிக கார்யம் மேல்பார்க்க சிருங்கேரி ஆசார்யரே உரியவர் என்று திப்பு ஸுல்தான் மதித்தார் என்பது ஸ்பஷ்டமாகிறது.

காஞ்சியிலோ காஞ்சிக்கு ஸமீபத்திலோ, பேரிச் செட்டிகளுக்கும் கோமட்டி செட்டிகளுக்கும் 1763ல் ஒரு பெரிய சச்சரவு ஏற்பட்டு அப்பொழுதுள்ள வாலாஜா பாத் நவாப்பிடம் விசாரணைக்கு வந்தபோது அவ்விருவர்களுள் உள்ள விவாதத்தில் சாஸ்திர ஸம்பிரதாய விஷயமான அம்சங்கள் இருந்தபடியால் அதை முடிவு செய்ய வேண்டியது சிருங்கேரி ஆசார்யார் தான் என்று சிருங்கேரிக்கு தெரிவித்துக் கேட்டு அங்கிருந்து வந்த உத்தரவை அனுஸரித்து அந்த நவாப் பேரி செட்டிகளுக்கு அபராதம் போட்டதாகத் தெரிகிறது. இவ்விஷயம் மதுரை ஜில்லாக் கோர்ட்டில் ஜட்ஜ் F. A. கோல்ரிட்ஜ் 1915 செய்திருக்கும் தீர்ப்பு மூலமாக நன்கு தெரிகிறது. காஞ்சியில் அதிகாரமுள்ள வேறு சங்கராசார்யார் இருந்திருந்தால் சிருங்கேரிக்கு தெரிவிக்க அவசியமென்ன? இதிலிருந்தும் காஞ்சியிலேயோ வேறு இடத்திலேயோ காஞ்சி விஷயமாய் அதிகாரமுள்ள யாதொரு மடமும் கிடையாதென்றும் அந்த அதிகாரம் சிருங்கேரியைச் சேர்ந்ததென்றும் நன்கு தெரிகிறது.

ஸ்ரீ ராமானுஜர் காஞ்சியிலேயே இருந்தவர்; அங்கே யாதவப் பிரகாசரிடம் வித்யாப்யாஸம் செய்கையில் அவரிடம் அதிருப்திப்பட்டவர். காஞ்சியிலேயே ஒரு அத்வைத மடாதிபதி இருந்திருந்தால் ஸ்ரீராமானுஜரோ

அவர் குருவோ அவரிடம் போய் ஸந்தேஹத்தை நிவிருத்தித்துக் கொள்ள பிரயத்தினம் செய்திருக்கலாமே? ஸ்ரீ ராமானுஜர் பின்னால் திக்விஜயத்திற்கு புறப்பட்டவர் முதலில் தன்னூரிலிருக்கிற அத்வைத மடாதிபதியிடம் வாதத்திற்கு ஆரம்பித்திருக்கலாமே? இவையொன்றும் நடக்காததினால் அவர் காலத்தில் அங்கே அவ்வித மடமோ சங்கராசார்யரோ கிடையாதென்பது நன்கு விளங்குகிறது. மத்வ மதத்தைச் சேர்ந்த அக்ஷோப்ய முனியானவர் திருவனந்தபுரத்தில் வித்யாரண்யரோடு விவாதம் செய்ததாக சொல்லப்படுகிறது. இவ்விருவர்களில் யார் ஜயித்தார் என்பது பிரகிருதமில்லை. மாத்வர்கள் சொல்வதுபோல்

विद्यारण्यमहारण्यं अक्षोभ्यमुनिरच्छिनत् ।

என்றிருந்தாலும் சரி, அத்வைதிகள் சொல்வது போல்

अक्षोभ्यं क्षोभयामास विद्यारण्यमहामुनिः ।

என்றிருந்தாலும் சரி. "பிரதானம்" என்று சொல்லிக் கொள்கிற காஞ்சி ஆசார்யரிடம் ஏன் விவாதத்திற்கு அவர் போகவில்லை? இதற்கு பதில், அம்மடம் ஏதொன்றும் கிடையாது என்பதுதான்.

காஞ்சியில் மடம் இருந்ததென்று ருசுப்படுத்துவதற்கு வேதாந்த தேசிகருடைய கீதா தாத்பர்ய சந்திரிகையிலிருந்து ஒரு வாக்கியத்தை உதாஹரிக்கிறார்கள்

कुमतिमठपतिपरम्परायाः शिष्यान्नकुक्षिंभरेः शिष्याभावे प्रायोपवेशनं प्रसज्येतेति भावः ॥

சிஷ்யர்களுடைய அன்னத்தைக்கொண்டு வயிற்றை வளர்க்கிற துர்புத்தியுள்ள மடாதிபதி பரம்பரைக்கு சிஷ்யரில்லாமல் போனால் பிராயோபவேசனம் (பட்டினி) தான் ஏற்படும் என்று தாத்பர்யம்

இவ்வாக்யத்தை தனக்கு பிரமாணமாக சொல்லிக் கொள்ளும் நிலை வந்ததே யென்று மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயம். வேதாந்த தேசிகர் விசிஷ்டாத்வைதியானதினால் இவ்விதம் வைதிருக்கிறார் என்றும், அந்த வசவு அத்வைத மடாதிபதிகளையே சேரும் என்றும், காஞ்சீபுரமே அதற்கு ஸமீபத்தில் இருப்பதால் இந்த வசவு காஞ்சீ மடாதிபதிக்கே ஏற்பட்டதென்றும், இதிலிருந்து காஞ்சியில் அத்வைத மடம் இருந்ததாக ருசுவாகிறதென்றும் சொல்கிறார்கள். வேதாந்த தேசிகர் வித்யாரண்யருடைய காலத்தில் இருந்தவர் என்பது யாரும் அறிந்த விஷயம். அந்த ஸமயம் கும்பகோணம் மடத்தார் சொல்கிறபடி அம்மடத்தில் இருந்த ஆசார்யர் வித்யாரண்யருடைய குருவான "வித்யா தீர்த்தர்" அவர் எவ்வகையிலும் பெரியவராயிருக்க அவரைப்பற்றி வேதாந்த தேசிகர் இவ்வளவு துச்ச பாஷையில் பேசியிருப்பாரா என்பதையே முதலில் கவனிக்கவேண்டும். இந்த தூஷணை அத்வைத மடத்திற்கென்று எப்படித் தெரிகிறது? அதிலும் காஞ்சியிலுள்ள அத்வைத மடத்திற்கென்று சொல்ல என்ன ஆதாரம்? இதை ஒரு பிரமாணமாகக் காட்டும் பரிதாப நிலை ஏற்பட்டால் எப்படியேனும் ஒரு பிரமாணம் கண்டுபிடிக்க வேண்டும் என்ற அம்மடத்தாரின் ஆவலையே காட்டுகிறது.

**காஞ்சிக்கு** வெகு ஸமீபத்திலிருந்த அப்பய்ய தீக்ஷி**தர் காஞ்சியைப்** பற்றியோ அங்கு ஒரு ஆசார்யரைப் **பற்றியோ** பிரஸ்தாவிக்கவே யில்லை. அவருடைய **அநேகமாய்** ஸமகாலத்தவரான ஸமரபுங்கவ தீக்ஷிதர் தன் யாத்ரா பிரபந்தம் என்ற கிரந்தத்தில் இம்மடத்தை பற்றியும் இம்மடத்து ஆசார்யரைப் பற்றியும் சொல்லி யிருப்பதாக ஒரு ஆதாரம் காட்டுகிருர்கள். அவர் காஞ்சீபுரத்தை வர்ணிக்கையில் ஒரு யாத்திரிகன் அங்கு உள்ள ஸர்வ தீர்த்தக் குளத்தில் ஸ்நானம் செய்து அதன் கரையிலிருந்த சில ஸன்யாஸிகளுக்கு நமஸ்காரம் செய்ததாகச் சொல்கிருர். அதில் 'ஸன்யாஸிகள்' என்று பன்மை உபயோகித்திருந்தாலும் அது கௌரவத்தை உத்தேசித்து உபயோகப்படுத்தின தாகவும் வாஸ்தவத்தில் ஒருவரையே குறிக்கும் என்றும் அந்த ஒருவரும் காஞ்சியிலுள்ள மடாதிபதி என்றே வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் சொல்கிருர்கள். இவ்வளவு சிரமப்பட்டு இக்காலத்தியவர் அர்த்தம் செய்யும்படி வைக்காமல் அந்த தீக்ஷிதர் வியக்தமாக "காஞ்சி மடாதிபதி" என்று சொல்லியிருக்கக் கூடாதா? மேலும் அவருடைய வாக்கியங்களை பூராவாக கவனிக்கும் விஷயத்தில் பன்மை பன்மைதான் என்றும் எவ்வித மடாதிபதிக்கும் ஸம்பந்தமில்லை என்பதும் நன்கு தெரியவரும். வீடு வீடாய்ப் போய் தேனீ மாதிரி "மாதுாகர" விருத்தியினல் ஜீவிப்பவர்கள் என்றும், "தங்குவதற்கு இடமில்லாதவர்கள்" என்றும் வர்ணித்திருப்பதால் அவர் வர்ணனை மடமும் சொத்துமுள்ள எந்த மடாதிபதியையும் குறிப்பிடாது என்பதில் ஸந்தேஹமில்லை.

अपि माधुकरीं वृत्तिमश्नतो भ्रमरर्जितान् ।

.... ... .... ... ... .... ...

तत्र कुत्रचन स्थास्नूनवनीपात्रनाकृतीन् ।

இதிலிருந்து அவர் ஸாமான்யமான ஸன்யாஸிகளையே குறித்திருக்கிருரென்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. தவிரவும் காஞ்சீபுரத்திலுள்ள மற்ற விசேஷ அம்சங்களையெல்லாம் வர்ணித்த தீக்ஷிதர் அங்கு ஒரு அத்வைதி மடமும் அங்கே ஒரு ஆசார்யரும் இருந்திருந்தால் வர்ணிக்கத் தவறியிருப்பாரா என்பதையும் கவனிக்க வேண்டும். அவ்விதம் வர்ணிக்காததினுலேயே அவ்விரண்டும் அங்கே கிடையாதென்றுதான் தெரிகிறது.

எப்படியும் இக்கும்பகோண மடம் சுமார் 150 வருஷங்களாக இருந்து வந்திருக்கிறதென்பது தெரிகிறது. இக்காலம் தென் இந்தியாவில் பிரிட்டிஷர்கள் ஆளுகை செலுத்தின காலத்திற்கு ஸமானமாயிருப்பதால் இதை வைத்தே அம்மடம் பிராசீனம் என்று சொல்லிக்கொள்ளலாம். நம் மத ஸம்பிரதாயங்களுக்கும் அனுஷ்டானங்களுக்கும் பல விதத்தில் மாறுபட்ட அநேக ஸ்தாபனங்கள் நமது தேசத்தில் புதிது புதிதாய் கிளம்பி வருகின்றன. அவைகளை யெல்லாம் விட இம்மடம் பிராசீனமென்பதில் ஸந்தேஹமில்லை. இதிலும் அபிமானமும் பக்தியும் ஏற்பட்டிருக்கிற ஜனங்கள் இருந்து வருகிருர்கள். இந்த மட்டில் திருப்தியடையாமல் அனுவசியமாக, இல்லாத பரம்பரையைக் கல்பித்துக்கொண்டு, பழமை கொண்டாட வேண்டியதே யில்லை. பிரஸித்த நான்கு மடங்களில் பிரசாரம் செய்யப்படும் தர்மமே இம்மடத்திற்கும் லக்ஷ்யமாயிருக்கிறது. இந்த தார்மிக நாட்டில் நாஸ்திகம் தலைதூக்கி வருவதை தடுக்கவேண்டிய அவ

**சியமான கார்யத்தில்** எல்லாரும் ஈடுபட்டு ஒத்துழைக்க **வேண்டிய** காலமாயிருக்கிறது. பிராசீனமாய் இருந்த **ராஜ்யங்கள்** எல்லாம் போய் எல்லாரும் மனுஷ்யர்களே என்ற நிலைமைக்குக் கொண்டுவர தீவிரப் பிரயத்தினம் நடந்துகொண்டிருக்கிற ஸந்தர்ப்பத்தில், கும்பகோண மடத்தார் கல்பித்து வற்புறுத்தும் "பாத்திய"ங்களைக் கொண்டாடுவது அர்த்தமேயில்லாத கார்யம். இந்தியா பூராவும் ஸஞ்சரித்த ஸ்ரீ சங்கர பகவத் பாதர் தென் திசைக்காக சிருங்கேரியில் மடம் ஸ்தாபித்தவர் அதற்கும் தெற்கே காஞ்சியில் மத்ய மடத்தை ஸ்தாபித்தாரென்றால் அவர் தேசத்திலுள்ள ஸன்னிவேசங்களை அறியாதவரா? இது மாதிரி அம்மடத்தார் சொல்லும் விஷயங்களும் அவர்கள் உதாஹரிக்கும் ஆதாரங்களும் கொஞ்சமேனும் நியாயமற்றவை, பிரமாணமற்றவை என்பதை இதை வாசிக்கும் பக்ஷபாதமில்லாத எந்த வாசகருக்கும் நன்கு மனதில் பட்டிருக்கும். இவ்வித வியவஹாரங்களை நிறுத்திக்கொண்டு தர்ம பிரசாரத்தில் மாத்திரம் அவர்கள் தொண்டு செய்வார்களேயானால் அம்மடத்தின் கௌரவம் உயரும் என்பதில் ஸந்தேஹமில்லை. தன்னுடைய அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள நினைத்து தர்ம பிரசாரத்தில் இறங்கினால் இரண்டும் கைகூடாது. இனிமேலாவது அம்மடத்தாரும் அம்மடத்து அபிமானிகளும் வீண் வியவஹாரங்களை கிளப்பாமலும் அவைகளுக்கு இடம் கொடுக்காமலும் இருந்துகொண்டு, தத்காலத்தில் நம் ஜன ஸமூகத்தினுடையதும் பிரதி ஜனங்களுடையதும் க்ஷேமத்திற்கு இன்றியமையாத ஸாதனமாயிருக்கிற தர்ம ரக்ஷணையில் தங்களுடைய சக்தியையும் செல்வாக்கையும் காலத்தையும் செலவழிக்கும்படியான மனோபாவத்தைக் கொடுக்கும்படி பகவானைப் பிரார்த்திக்கிறோம்.

முதல் பாகம் முற்றிற்று

பாகம்—2

கும்பகோணம் மடத்தைப்பற்றிய

# வேறு சில உண்மைகள்

K. R. வெங்கட்ராமன்

பாகம்—2

# கும்பகோணம் மடத்தைப் பற்றிய வேறு சில உண்மைகள்

## அத்யாயம்—1

சென்ற நூற்றாண்டில் கும்பகோண மடத்துத் தலைவர், 'ஜகத்குரு சங்கராச்சாரியர்' என்ற பட்டத்தைத் தாமே சூட்டிக் கொண்டு, ஜகத்குரு என்ற மரியாதைக்குத் தாம் ஒருவரே உரியவர் என்றும், வெகுகாலத்துக்கு முன்பே நிறுவப்பட்ட துவாரகை, பத்ரி, பூரி, சிருங்ககிரி மடாதிபதிகள் வெறும் குருக்கள்தாம் ஜகத்குரு அல்லர் என்றும் உரிமை கொண்டாடினர். காஞ்சியில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீகாமாட்சி தேவியின் கோயில் (டிரஸ்டி) தர்மகர்த்தா உத்தியோகத்துக்காக அரசாங்கத்தாரிடம் மனுச் செய்துகொண்டு, அதைப்பெற்று, சுமார் ஒரு நூற்றாண்டு காலமாக அதை அவர் நிர்வகித்து வருவதும் அவர் தம்மைக் 'காஞ்சி காமகோடி பீடாதிபதி' என்று சொல்லிக் கொள்வதற்கு ஓர் ஆதாரம் ஆயிற்று.

இந்த மடாதிபதி அவர்களுக்குப் பலவகையில் கடமைப் பட்டிருந்த பண்டிதர்கள் இந்த மடஸ்தாபனம் சம்பந்தமான புராண ஆதாரங்களைப் புதிதாகக் 'கண்டு பிடித்துக்' கொடுத்துப் பிரபலப்படுத்தினார்கள். பழங் காலத்தில் ஒருவரை அரசர் முதலிய பதவிகளுக்கு உயர்த்துவதற்காகப் பண்டிதர்கள் இப்படி ஆதாரங்களை கண்டு பிடித்துக் கொடுப்பது சர்வ சாதாரணம். சம்பந்தமாகவோ ஒரு குரு சம்பந்தமாகவோ ஒருகுலம் ஒரு மட சம்பந்தமாகவோ தக்க 'பாரம்பரிய

வரிசை ஒன்றைச் 'சிருஷ்டிப்பது' ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல. இந்த மடசம்பந்தமாக அது ஒரு 'ஸ்தவம்' அல்லது ஸ்தோத்திர ரூபத்தைப் பெற்றது; அதற்கு ஒரு வியாக்கியானமும் ஏற்பட்டது. புராணங்கள், காவியங்கள், நாடகங்கள் இவைகளிலிருந்தும் தக்க ஆதாரங்கள் வரிசையாக வெகுவிரைவில் 'கண்டு பிடிக்கப்' பட்டன. இவற்றுள் சிலவற்றை முதல் பாகத்தில் ஆராய்ந்து உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறோம். மடாம்னுயசேது, புண்ய சுலோக மஞ்சரி, சுஷமா என்னும் கிரந்தங்களும் இத்தகையவை ஆகும்.

சுஷமாவுக்கு ஆசிரியர் என்று கூறப்படும் ஆத்மபோதர், தம் நூலில் வேறு சில கிரந்தங்களைப் பற்றிக் குறிப்பிடுகிருர். இந்தக் கிரந்தங்களைப் பற்றி ஒன்றும் யாருக்கும் தெரியவில்லை அல்லது அவைகள் இப்பொழுது கிடைக்கவில்லை. புதிதாக விஷயங்கள் சேர்க்கப்பட்ட ஆனந்தகிரி சங்கர விஜயம், சிவ ரஹஸ்யம், மார்க்கண்டேய ஸம்ஹிதை இவைகள் தயார் செய்யப்பட்டன. மாதவீய சங்கர விஜயம் சரியானதல்ல என்று நிரூபிப்பதற்கு வேண்டிய முயற்சிகளெல்லாம் தடைபெற்றன. பல மொழிகளில் மிகப் பல புத்தகங்களும் வேறு பிரசுரங்களும் தயார் செய்து வெளியிடப் பெற்றன. ஒவ்வொரு மடத்திலும் வழக்கத்திலிருக்கும் முத்திரைகளின் அளவை ஆதாரமாகக் கொண்டு, மடங்களின் சிறுமை, பெருமைகளை நிர்ணயிப்பதாகப் பாசாங்கு செய்த ஓர் அபூர்வப் பிரசுரமும் இந்த வெளியீடுகளுள் ஒன்ருகும்.

ஓர் ஆந்திர பண்டிதரும் ஒரு வைஷ்ணவ பண்டிதரும்* சேர்ந்து 'காஞ்சி மடந்தான் முதன்மை பெற்ற மடம்' என்ற தீர்மானம் ஒன்றை ஒரு கூட்டத்தில் நிறைவேற்றி இதைச் சித்தாந்தப் பத்திரிகை ஒன்றில் வெளியிடவும் வெளியிட்டார்கள். இந்தப் பிரசாரத்திற்காகப் பல பண்டிதர்களின் சேனை ஒன்று தயாராயிற்று. சமீப காலத்தில் இந்தச் சேனையில் சேர்ந்தவர் சாஸ்திர ரத்னாகர போலகம் ராமா சாஸ்திரிகள் ஆவர். 'காமகோடி' என்ற பத்திரிகை இந்த மடத்தின் நிகழ்ச்சிகளை வெளியிடும் பணியைச் செய்து வந்தது. இந்த மடத்தின் கௌரவத்தை நிலை நாட்டுவதையே தன் நோக்கமாகக் கொண்ட, 'காமகோடி பிரதீபம்' என்ற பத்திரிகை ஒன்று இப்போது தொடங்கப் பெற்றிருக்கிறது. ஒரே விஷமப் பிரசாரம் நிறைந்ததாக இருக்கிறது இந்தப் பத்திரிகை.

சென்னை வாரப் பத்திரிகையுள் ஒன்றான, காமகோடி மடத் தலைவர் சொன்னதற்கெல்லாம் ஒத்துப் பாடும் இயல்புள்ள கல்கியும், சில சமயங்களில் பம்பாய்ப் பத்திரிகையான 'பவன்ஸ் ஜர்னல்' என்ற பத்திரிகையும் கூட* இந்தப் பிரசார வேலைக்கு ஆதரவு அளிக்கின்றன. ஸ்ரீ. N. ராமேசம், ஐ. சி. எஸ். அவர்கள் 'ஸ்ரீ சங்கராசார்யர்' (1959) என்றும், 'காமகோடிபீடம்' (1962) என்றும் இரண்டு புத்தகங்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்; மூன்றாவது புத்தகம் ஒன்றும் விரைவில் வெளிவர இருக்கிறது. இந்த மடம் கொண்டாடும் உரிமைகள் என்ன என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புவோர் இந்தப் புத்தகங்களைப் படித்தால் போதும்.

ஏறக்குறைய 1876-ம் வருஷம் கொக்கொண்ட வெங்கட்ரத்னம் பந்துலு என்பவர் இந்த மடத்தார் கொண்டாடும் உரிமைகளை எல்லாம் மறுத்து ஒரு புத்தகம் எழுதினார். இதே காரியத்தைச் செய்த இன்னொரு பெரிய படிப்பாளி நடுக்காவேரி பட்ட ஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் ஆவர். 'இந்த மடம் ஆதி சங்கரர் ஸ்தாபித்த மடம்' என்று இவர்கள் கொண்டாடும் உரிமையை மறுத்து, 1934-ல் வாரணசிப் பண்டிதர்கள் கூடி ஒரு தீர்மானம் செய்து வெளியிட்டார்கள்.

'கும்பகோண மடத்தின் உரிமைகள்!' என்ற காலம் கடந்த வெகு தாமதமான பிரசுரம் ஒன்று இந்த மடத்தின் உரிமைகள் பலவற்றைக் கண்டிப்பதற்காகச் சில மாதங்களுக்கு முன்—கடைசியாக எழுந்த நூலாகும். இதைப் படித்து ஒரு சிலர் இந்நூலாசிரியரைத் திட்டுவதோடு சமாதானம் அடைந்து விட்டனர்; ஆனால் யாருமே இதற்குத் தக்க சரியான பதில் தர முன்வரவில்லை. இந்த மடத்தார் ஒரு நூற்றாண்டு காலமாகச் செய்துவந்த பல பிரசார வெளியீடுகளுக்குப் பதிலாக எழுந்ததுதான் இந்த வெளியீடு என்பதை இந்த மடச் சீடர்கள் யாருமே உணர்ந்து கொண்டதாகவே தெரியவில்லை. இந்த நூல் பிரசுரமானது முதல் இந்த மடத்தின் பிரசாரம் வெகு தீவிரமாகத் தொடங்கிவிட்டது. எனவே 'கும்பகோணம் மடத்தின் உரிமைகள்!' என்ற நூலை இன்னும் விரிவாக எழுதும் அவசியம் நேர்ந்துவிட்டது. இந்த மடத்துச் சீடர்கள் பலர் செய்துவரும், 'மெய்போலத் தோன்றும் பொய்ப் பிரசாரங்களை' வெளிப்படுத்தவும், முக்கியமாகத் தம்மை 'உண்மைக்கு வக்கீலாகப்' பாவித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ போலகம்

சாமா சாஸ்திரி அவர்களின் பிரசாரத்தில் உள்ள பொய்மை அம்பலப்படுத்தவும் இந்த முயற்சி அவசியமாகிவிட்டது.

கியாதி வாய்ந்த கோவிந்த தீக்ஷிதரவர்களின் வழி வந்த அறிஞர்களாலும் தஞ்சாவூர் சமஸ்தானத்தின் ஆதரவாலும் இந்த மடத்தாருக்குச் சாதகமான புராண, இதிஹாஸ ஆதாரங்களும், தாமிரசாஸனங்கள் ருபமான பத்திரங்களும் 'கண்டுபிடிக்க'ப்பட்டிருக்கின்றன. இந்த மடத்தின் செல்வாக்குக் காரணமாக இவைகள் மேற்காட்டியவர்களால் 'கண்டுபிடிக்கப்' பட்டனவே ஒழிய, இந்த மடத்தின் செல்வாக்குக்கு இவைகள் காரணம் அல்ல.

அபல்லோனியஸ் (Appallonyas—ஸம்ஸ்கிருதம்—அபலூன்ய) என்பவரின் குருவான இயார்க்கஸ் (Iarches—ஸம்ஸ்கிருதம்—அயுர்ச்ய) என்ற பெரியார் கௌடபாதரைப் பூஜித்து வணங்கியதாக ஒரு செய்தி 'ஜகத்குருரத்னமாலா' என்ற கிரந்தம் ஒன்றில் காணப்படுகிறது. இதை எழுதியவர் ஸ்ரீ சதாசிவேந்திரர் என்ற பொய் வேறு சொல்லப்படுகிறது. அப்போலினயஸ் இந்தியாவுக்கு வந்து இயார்க்கஸ் என்பவரைச் சந்தித்தார் என்ற கதையே சந்தேகத்துக்கு இடமானது. அப்போலினயஸ் பற்றிய கிரேக்க வரலாற்றில் கௌடபாதர் பற்றிய குறிப்பே இல்லை. இவர்கள் இருவரையும் தொடர்பு படுத்தும் குறிப்பு 'குருரத்ன மாலா'வில் மட்டும் தான் காணப்படுகிறது.

டாக்டர் T. M. P. மகாதேவன் பின்வருமாறு சொல்கிருர்: "இந்தக் 'குருரத்னமாலை'யின் ஆசிரியர் சதாசிவப் பிரசம்மேந்திரர்தாளு என்பதே சந்தேகத்தில் இருக்கிறது. இதற்கு வியாக்யானம் எழுதிய ஆத்மபோதர் அப்போலினஸ் பற்றிய குறிப்பு வரும் சுலோகத்துக்கு ஆதாரம் காட்டும்போது ஹரிமிஸ்ரர் எழுதிய 'கௌடபாதோல்லாஸம்' என்ற கிரந்தத்திலும், பதஞ்சலி சரித்திரத்திலும் இருந்து மேற்கோள் கொடுக்கிருர். மேற்சொன்ன கிரந்தம் இப்போது கிடைக்கவில்லை. ராமபத்திர தீக்ஷிதர் எழுதிய பதஞ்சலி சரித்திரத்தில் (இதுவும் 'விஜயா'வும் ஒன்றேதான்) அப்பலோனியஸ் கதையைப் பற்றிய குறிப்பே காணப்படவில்லை." (—கௌடபாத: பக். 12-13)

வியாசாசல சங்கர விஜயத்தை 1954-இல் வெளியிட்ட அரசாங்கக் கையெழுத்துப் பிரதி வாசகசாலை அதிபரான ஸ்ரீ T. சந்திரசேகரன் அவர்கள் அதற்குத் தாம் எழுதிய முகவுரைக்குப் பின்சேர்க்கையாக இவ்வாறு கூறுகிருர்: "இந்த நூல் அச்சாகி பைண்டிங்கும் முடிந்தபிறகு போலகம் ராமசாஸ்திரிகள், ஜகத்குருரத்னமாலா என்ற கிரந்தத்தின் வியாக்கியானத்திலிருந்து கிடைத்ததாகவும் இந்த நூலுக்குச் சம்பந்தப்பட்டதென்றும் சொல்லி நான்கு புது சுலோகங்களை என்னிடம் கொடுத்தார். ஆனல் இந்த நூலை (வியாசாசல சாஸ்த்ர விஜயம்) வெளியிட நான் பயன்படுத்திய எந்த ஏட்டுச் சுவடியிலும் இந்தச் சுலோகங்கள் காணப்படவில்லை."

வேதாந்த சம்பந்தமான கிரந்தங்கள் எழுதும் திறமை பெற்றவர் ஸ்ரீ போலகம் ராமசாஸ்திரிகள் என்

பதில் ஆட்சேபம் இல்லை. ஆனால் அவர் எழுதியுள்ள 'கீதார்த்த சங்கிரகம்' என்ற சிறிய புத்தகம் படிப்பவர் களுக்கு ஏமாற்றத்தையே உண்டுபண்ணுகிறது. "மிகப் பெரிய படிப்பாளியாகிய இவர் எழுதியுள்ள இந்த நூல் கீதையைப் புரிந்து கொள்ளக் காரணமான ஒரு பேருப காரம் ஆகும்" என்று இந்த நூலின் முன்னுரை புகழ் கிறது. முன்னுரை எழுதியவர் இப்படிச் சொல்கிறார் : (Skt. Mss. Page 6)

இந்த நூல் இவருடைய சொந்தமான முயற்சிதானு (நூதன)புது முயற்சிதானு என்பதைப் பின்வரும் குறிப்பு களைக் கொண்டு நீங்களே தீர்மானம் செய்து கொள்ளுங் கள். (skt. pages 7&8, 9&10)

மேலேகாட்டியுள்ள சுலோகங்களே சாஸ்திரிகளின் கீதார்த்தசங்கிரகத்தின் உயிர்நாடி. இவைகள் போலகம் ராமசாஸ்திரிகளின் சொந்த கவிகள் என்று வழங்குகின் றன. இவற்றுள் எட்டுச் சுலோகங்கள் மதுசூதனரின் கூடார்த்த தீபிகையிலிருந்தும் ஸ்ரீதர சுவாமிகளின் வியாக்யானத்திலிருந்தும் அப்படியே எழுத்துப்பிசகாமல் எடுத்தவை. மற்றவைகள் ஏதோ சில மாறுதல்களோடு சேர்க்கப்பட்டவை.

மற்றவர்கள் கிரந்தச் சுலோகங்களைக் கூசாமல் தனது என்று சொல்லிப் பிரசுரித்துக் கொள்ளும் மனப் பாங்குடைய ஸ்ரீ போலகம் ராமா சாஸ்திரிகள், மாதவா சாரியாரும் மற்றவர்களும் எழுதிய நூல்களுக்குள்ளும் தமது கருத்துக்களைப் புகுத்த பின் வாங்குவாரா என்ன?

வேறு நூல்களிலிருந்து கடன் வாங்கும்படியோ, சிலவற்றை அப்படியே எடுத்து உபயோகிக்கும்படியோ நேரிட்டால் அவை இன்னாருடையவை என்பதை ஒப்புக் கொள்வது அவசியம் (குறிப்பெழுதுவது அவசியம்) என்பது இவர் கவனத்துக்கு எட்டவேயில்லை போலிருக்கிறது, பல வருஷங்களுக்குப் பிறகு யாராவது விகடகவி ஒருவர், "வேறு மடத்துச் சிஷ்யர்கள் யாரோ போலகம் ராமா சாஸ்திரி அவர்களின் சுலோகங்களைத் திருடி 'கூடார்த்த தீபிகா' விலும் 'ஸ்ரீதரீயத்' திலும் புகுத்தி விட்டார்கள்" என்று கூட சொல்லி விடலாம் அல்லவா.

கீதார்த்த சங்கிரகத்தைப் பற்றிய சர்ச்சை இங்கே பொருத்தமில்லை என்று தோன்றலாம். காமகோடி மட சம்பந்தமான ஆதாரங்களைப் புராணங்களிலிருந்தும் வேறு கிரந்தங்களிலிருந்தும் காட்டுவதற்கு அனுகூலமாக, பல வருஷங்களாகப் பண்டிதர் பலர் செய்து வரும் பலவகை கிருத்திருமங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே இதை நாம் இங்கே சொல்கிறோம்.

"சில பண்டிதர்கள் கிரந்தங்களை உருமாற்றி விடுகிறார்கள். இது மிகத் தவறு" என்று சுவாமி விவேகானந்தர் ஒரு முறை கண்டித்தார். 'புதிதாக கிரந்தங்களைச் சிருஷ்டிப்பது' 'ஒரு கிரந்தத்திலுள்ள சுலோகங்களை அப்படியே திருடி வேறொன்றில் புகுத்துவது' ஆகிய திரிசமன்களைப் பற்றியும், அவர் சொல்லியிருந்தால் எவ்வளவு நல்லது!

இந்த மடாசாரியரிடம் உள்ள ஏதோ பகை காரணமாகவோ, இவ்வாசாரியர் செய்துவரும் தருமப் பிரசா

ரத்தைச் சரியாக மதிப்பிட்டுப் பாராட்டத் தெரியாததாலோ இந்த நூல் எழுந்ததாக யாரும் நினைத்துவிடக் கூடாது. நமது ஹிந்து தர்ம ஸ்தாபனங்களுக்குத் தலைமை வகிக்கும் மகான்களெல்லாம் ஒருமனப்பட்டு உழைத்து இந்தத் தர்மத்தைக் காக்க வேண்டிய அவசியம் நிறைய இருக்கும் இந்தக் காலத்தில் இந்த மடத்தார் பழமையும் பெருமையும் உயர்வும் தமக்கே உள்ள உரிமைகள் என்று செய்துவரும் பொய்ப் பிரசாரம் மிகத் தவறு என்பதை எடுத்துக் காட்டுவதே எங்கள் நோக்கமாகும்.

## அத்தியாயம்—2

**ஆங்கிலத்**தில் இந்த மடத்தின் வரலாறு முழுவதை**யும்** தொகுத்து எழுதிய நூல் ஸ்ரீ N. வேங்கடராமன் **அவர்கள்** எழுதியுள்ள "மகான் சங்கராசாரியரும் காஞ்சி**யில்** அவருக்குப் பின் வந்த பீடாதிபதிகளும்" (Sankaracharya the Great and His successors in Kanchi) என்பதுதான். இந்த மட வரலாறுகளுள் மிக மிக முக்கியமானது இதுதான் என்று சொல்லிவிடலாம். நாம் எழுதும் இந்த நூலில் கொடுக்கப்படும் வருஷக் கணக்கு, வேறுவகை மேற்கோள்கள் எல்லாம் இந்த நூலில் கண்டவைதாம்.

'சங்கரர், இயேசுநாதருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இருந்தவர்' என்று ஸ்தாபிக்க வேண்டும் என்ற ஆவல்தான் பல வரலாற்றாசிரியர்கள் கையாண்டுள்ள பொய்ப் பரம்பரைச் செய்திகளுக்குக் காரணமாகும். S. V. விஸ்வநாதன், S. V. வேங்கடேச்வரன் என்ற இருவர் இந்த மடத்தின் பரமபக்தர்கள். குருரத்னமாலா என்ற கிரந்தத்தின் ஆசிரியர் தம் காலத்துக்கு பல ஆண்டுகள் முற்பட்ட குருபரம்பரையை பற்றிச் சொல்லியிருக்கிறார் என்றால் அதை ஆதார பூர்வமானதாகக் கொள்ள முடியாது" என்பதை இந்த இரண்டு பரம பக்தர்களும் ஒப்புக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்பதைக் கவனிக்க வேண்டும் (E. I. XIV) 'இந்த மடத்தின் தொடக்கம், வளர்ச்சி பற்றிய பழைய காலக் குறிப்புகள் உண்மைதானா என்பது நிச்சயிக்கப் படவில்லை. இதுசம்பந்தமாகக் கிடைத்துள்ள பழைய சுலோகங்கள் உண்மையானவையா அந்த அந்தக் காலத்திலேயே எழுந்தவைதாமா என்பதையும்

நிச்சயப்படுத்த முடியவில்லை" என்று ஸ்ரீ வேங்கடராமன் அவர்களே கூறுகிறார். கவனமாக ஆராய்ந்தால் பழங் கால வரலாறு மட்டும் அல்ல, பிற்கால வரலாறுகூடப் பெரும்பகுதி கற்பனைப் பெரியோர், கற்பனை நிகழ்ச்சிகள் தவறான முடிவுகள் இவைகள் நிறையக் கலந்து குழம்பி கிடக்கின்றது என்பது தெரியவரும்.

ஆதி சங்கரரின் நேர்ச்சீடன் என்று உரிமை கொண்டாடப்பட்டு கி. மு. 4—5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கூறப்படும் ஸர்வஞ்ஞாத்மன் என்பவர் ஆதி சங்கரருக்கோ, சுரேச்வரருக்கோ நேர்ச்சீடர் அல்ல; இவர் கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் தென்கேர ளத்தில் இருந்த ஒருவர். இவருக்கும் காஞ்சி மடத்துக் கும் தொடர்பு கொஞ்சங்கூட இல்லை என்பதை முதல் பாகத்தின் 8-ஆம் அத்தியாயத்தில் காட்டியிருக்கிறோம்.

இந்த மடத்தின் ஐந்தாவது குரு (கி. மு. 124-55) என்று உரிமை கொண்டாடப்படும் ஆனந்தஞானர் அல் லது ஆனந்தகிரி என்பவரும் கி. பி. 14-ஆம் நூற்றாண் டுக்கு முன் இருந்திருக்க முடியாது என்பதையும் காட்டி யிருக்கிறோம். "அவர் (ஆனந்த ஞானர்) தத்வாலோகம் என்ற கிரந்தத்தை எழுதினார். இதை எழுத இவருக்கு துணை புரிந்தவர் அனுபூதிஸ்வரூபர். ஆனந்தஞானர் பிறகு சுத்தானந்தரின் சீடரானார். இவர் கி. பி. 14-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்" (பிரம்ம வித்யாக் கப்பலின் ஞானிகளான மாலுமிகள். Saintly Steerers of the Ship of Brahma-Vidhya, P. 28) என்று இந்த மடத்தைச் சார்ந்தவர் ஒருவரான ஸ்ரீ அனந்தாநந்தேந்தர்

**ஸரஸ்வதி** என்ற பெரியவரே கூறுகிறார் என்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும். இப்போது இந்த மடத்தின் **ஆசார்ய** பீடத்தை வகிப்பவரின் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவ சம்பந்தமாகக் 'காமகோடி கோசஸ்தானம்' வெளியிட்ட 'பிரம்ம சூத்ர பாஷ்யம்' என்ற கிரந்தத்தின் முகவுரையிலும் (பக். 9) இதற்கு அநுசரணையான செய்தி ஒன்று வருகிறது. (Skt. here P. 13)

சுத்தானந்தரும் ஆனந்தகிரியும் இந்த மடத்து ஆசார்யர்கள் அல்ல என்பது இப்போது நன்கு விளங்கியிருக்கும். 'ஞானானந்தருக்கும் சுத்தானந்தருக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய செய்தியை அவ்வளவு நிச்சயமாகக் கொள்வதற்கில்லை' என்று ஸ்ரீ வேங்கடராமன் அவர்களே ஒப்புக்கொள்கிறார். (பக்.53).

சித்கணர் (9-ஆவது பீடாதிபதி கி. பி. 127—172): அல்லது சிவானந்தர் சிவாத்வைதக் கொள்கைக்கு மதிப்புக் கொடுத்தவர் என்று சொல்கிறார்கள். சிவாத்வைதக் கொள்கையும் சமயமும்—லாகுலீச அல்லது பாசுபத சமயத்துக்கு எதிர்ப்பாக—8-ஆம் நூற்றாண்டில்தான் தோன்றியது என்பதை மறக்கக் கூடாது.

சச்சித்கணர் (11ஆவது பீடாதிபதி கி.பி. 235-72): இவர் விதேஹமுக்தி அடைந்த பிறகு இவருடைய தேகம் ஒரு லிங்கமாக மாறிவிட்டதாகவும், காஞ்சி காயாரோஹண க்ஷேத்திர லிங்கந்தான் அது என்றும் இந்த மடத்து வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். 'காயாரோஹணம்' என்ற சொல் மேற்கு இந்தியாவில் லகுலீசர் மறைந்த புகழ்பெற்ற க்ஷேத்திரத்தையே நினைப்

பூட்டுகிறது. தங்கள் சமயத்தைத் தோற்றுவித்த ஆசாரியரிடம் இருந்த மதிப்பும் பக்தியும் காரணமாக லகுலீசரின் சீடர்கள் தெற்கிலும் காயாரோஹணம் என்றபெயருடன் நிர்மாணித்தனர் பல நூற்றாண்டுக் காலம் காஞ்சியில் உள்ள இந்தக் கோயில் இந்தச் சமயத்தாரின் ஒரு முக்கிய கேந்திரமாக இருந்திருக்கிறது. காஞ்சியில் உள்ள இந்தக் கோயில் கி. பி. 9-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்க முடியாது.

உஜ்வல சங்கரர் (14-ஆம் பீடாதிபதி கி. பி. 329—67): இவரை ஆரம்பமாகக் கொண்டுதான் இந்த மட வரலாற்றின் "காஷ்மீர காலம்" தொடங்குகிறது எனலாம். ஏற்கெனவே இவர்கள் 'கற்பனை' செய்து வைத்திருந்த செய்திகளை ஆதாரமாகக் கொண்டு, கண்டவர் மயங்கும்படியான ஒரு பொய்ச் சிருஷ்டியை இந்த மடத்து வரலாற்றாசிரியர்கள் உண்டாக்கியதற்குக் கல்ஹணரின் ராஜதரங்கிணி என்ற கிரந்தம் ஒரு வகையில் துணை செய்திருக்கிறது. உஜ்வல சங்கரர் என்பவர் ஒரு மகாராஷ்டிரர். இவர் கேரளத் தலைவர் ஒருவருக்கு அருள் செய்து அவனைக் கவிஞனாக்கிவிட்டாராம்! பிறகு இவன் பின்தொடர இவர் நாட்டின் தென்கோடியான கேரளத்திலிருந்து, வடகோடியிலுள்ள காச்மீரத்துக்கு விஜய யாத்திரை செய்தாராம்! இது மட்டுமா? 'ஜைன மதத்தைத் தழுவிய ஒரு பிராம்மணனின் சீடர்களான சக, யவன, சில்ஹக மக்களை இந்தப் பெரியவர் சிந்துநதிக்கு அப்பால் வேறு துரத்தி விட்டாராம்!' இவருக்குப்பின் பட்டம் ஏற்ற கௌட சதாசிவரோ தம் குருவையும் மீறி, "பல பால்ஹிக (Balhika) புத்தர்களை தம் நாட்டை விட்டே துரத்திவிட்

டாராம்!" இவர்கள் விஜயச் செயல்களாகச் சொல்லப் படும் இந்த நிகழ்ச்சிகளுக்குப் பின் பல நூற்றுண்டுகள் வரை காச்மீரமும் வடமேற்கு இந்தியாவும் இந்த அவைதிக மதங்களின் கேந்திரஸ்தானங்களாக இருந் திருப்பதோடு, இந்த மதங்கள் இங்கே நன்கு செழித்து வளர்ந்தும் வந்திருக்கின்றனவே! பல நூறு பௌத்த மடங்களும் தோன்றியிருக்கின்றன. திபேத்துக்கும் சீனு வுக்கும் சென்று பௌத்த மதத்தைப் பரப்பிய பெருமை கொண்ட குமார ஜீவரைப் போன்ற பல பௌத்தப் பெரியார்களும் தோன்றியிருக்கின்றனர். இது எப்படிச் சாத்தியமாகும் என்பதுதான் விளங்கவில்லே. ஒன்று இவர்கள் செயல் பொய்யாக இருக்க வேண்டும் அல்லது இவர்களுக்குப் பிற்காலத்தில், வடக்கே காணப்பட்ட புத்தமதச் செழிப்புப் பொய்யாக இருக்க வேண்டும். ஒரு வேளை இப்படித் துரத்தப்பட்டவர்கள் திரும்பவும் உள்ளே புகுந்துவிட்டார்களோ? இந்த ஆசாரியரின் பெயரால் கலாபுரி என்ற ஊரே உஜ்வலபுரி என்று மாறி விட்டதாகவும் இந்த மட வரலாற்றுசிரியர்கள் கூறு கிருர்கள். இவ்வளவு பெரிய உண்மை ஒன்றைச் சொல் லாமல் விட்டது கல்ஹணர் செய்த பெரிய அபசாரம் அல்லவா?

உஜ்வல சங்கரருக்கு அடுத்தபடியாகப் பட்டம் பெற்ற சதாசிவரின் தந்தை ஒரு பிராம்மண மந்திரி; இவர் ஜைனராக மதம் மாறி விட்டார். சிறு வயதிலேயே சதாசிவருக்கு வேதாந்தக் கொள்கையில் பற்று இருப்பது தெரிய வந்தது. இதனுல் கோபம் கொண்ட தந்தை இவரை ஒரு பெட்டியில் போட்டுப் பூட்டி சிந்து நதியில் எறிந்துவிட்டார். வேங்கடேசன் எழுதிய வர

லாற்றுப்படி புஷ்பபுரத்தையும் வேங்கடராமன் எழுதிய வரலாற்றுப்படி பாடலிபுத்ரத்தையும் தன்னிருப்பிடமாகக் கொண்ட பூரிவாசு என்ற பிராம்மணர் இந்தப் பெட்டியைக் கண்டெடுத்து பையனை மீட்டு வளர்த்து வந்தார். சிந்துநதியில் எறியப்பட்ட பெட்டி கங்கைக் கரையில் உள்ள பாடலிபுத்ரத்துக்கு மிதந்து வந்த ஆச்சரியம் தான் விளங்கவில்லை! தக்க பருவத்தில் உஜ்வல சங்கரர் இவரைத் தம் பிரதம சீடராக ஏற்றார். கௌட சதாசிவர் மீட்சி, அவர் சீடரானது ஆகிய (அபூர்வ) வரலாறு, பின்னால் சதாசிவர் செய்ததாகக் கூறப்படும் விஜய யாத்திரை வரலாறு இரண்டும் ஒன்றுக்கு ஒன்று சேர்ந்து கற்பனைக் காவியத்துக்கு நல்ல விஷயங்கள் இவை. இந்தக் கற்பனை பின்னும் தொடர்கிறது. சுநேந்திரர் (16-ஆம் பீடாதிபதி; கி. பி. 375-385) சார்வாகன் ஒருவனோடு சமயவாதம் புரிந்தாராம். இந்தச் சார்வாகனுக்குத் துணையாகப் பிரகஸ்பதியே நின்றாராம். என்றாலும் இந்தச் சார்வாகனைச் சுநேந்திரர் தோற்கடித்து விட்டாராம்!

இப்போது மூக சங்கரரைப் (18-ம் பட்டம் கி. பி. 399—437) பற்றிக் கவனிப்போம். அவர் செய்த புகழ் பெற்ற கிரந்தமான மூக பஞ்சசதி 16-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்கமுடியாது என்பதுதான் சிறந்த ஆராய்ச்சியாளர்களின் முடிவு. இவருடைய அருளைப் பெற்ற மெண்டன் (Mentha) என்பவனுடைய காலம் கி. பி. ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியாகத்தான் இருக்கமுடியும் என்று கீத், நீலகண்ட சாஸ்திரி என்ற இரண்டு திறமை பெற்ற வரலாற்றாராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

"மூக சங்கருடைய கால நிர்ணயம் செய்யக் காச்மீரத்தின் அரசியல் வரலாறு பயன்படுகிறது" என்று ஸ்ரீ ராமேசன் அடித்துச் சொல்கிறார். (பவன்ஸ் ஜர்னல் வால். VIII No 20 P. 55). ஆதாரபூர்வமான எந்தக் காச்மீர வரலாற்றில் மூக சங்கரரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது? அதுதான் போகட்டும். ராஜதரங்கிணியிலாவது எங்காவது காணப்படுகிறதா? என்று நாம் கேட்கலாம் அல்லவா? மூக சங்கரரின் 'பெருமை பெற்ற மடப் பீடாதிபதி ஸ்தானம்' பற்றிய கதையும் மாத்ரி குப்தர் என்பவர் கதையும் நெருங்கிய தொடர்புள்ளவை. மாத்ரி குப்தர் கி. பி. ஆறும் நூற்றுண்டைச் சேர்ந்தவர் என்பது சிறந்த வரலாற்றுசிரியர்களின் முடிவாகும். பல நூற்றுண்டுகள் பின்னுல் வாழ்ந்த ஒரு சாதாரணக் கவியை மடாதிபதியாக்கி ஐந்தாம் நூற்றுண்டுக்கு இழுத்துச் சென்றதோடு அமையாமல் ஆரும் நூற்றுண்டின் பிற்பகுதியில் வசித்தவர்களையும் இவருக்குச் சீடர்கள் ஆக்கிவிட்டார்கள்! மூக சங்கரர் காச்மீரத்தில் மடாதிபதியாக ஆதிக்கம் செலுத்தி வந்த அதே காலத்தில் அவருடைய சிஷ்யர் வாரணுசியில் மடாதிபதியாக (கி. பி. 447 வரை) ஆதிக்கம் செலுத்தினராம்! சரி; இந்தக் காலத்தில் காஞ்சியின் நிலை என்ன? காஞ்சி மடத்தின் தலைநகரம் வட இந்தியாவுக்குத் தர்த்காலிகமாக மாறிவிட்டதோ?

சச்சிதானந்தகணர், என்ற சித்தகுரு (23-ஆவது பட்டம்: கி. பி. 527—48) வின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் மந்த பட்டர் என்பவர் என்றும், அவர் எழுதிய சித்தி விஜய மகா காவ்யமே இந்த வரலாறு

என்றும் சொல்கிறார்கள். ஸம்ஸ்க்ருத காவ்ய வரலாற்றில் மூகன் இடம் பெறுவது உண்மையே. ஆனால் இந்தக் காவியத்தின் பெயரைத்தான் அங்கே காணவில்லை. 'இப்போது கிடைக்காத காவியங்களுள்' இதுவும் ஒன்று!

ஸ்ரீ வேங்கடராமன் சொல்லும் ஓர் உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. 11 காஞ்சி மடாதிபதிகள் (12 ஆம்-பட்டம் முதல் 22 வரை) காஞ்சிக்கு வெளியிலேயே பெரும்பாலும் வட இந்தியாவிலேயே வாழ்ந்ததாகத்தான் அவர் கூறுவதிலிருந்து தெரிய வருகிறது. இவர்கள் மடாதிபத்ய காலம் ஏறக் குறைய 300 வருஷங்கள். இவர்களுள் யாருமே சில வருஷங்களாவது காஞ்சியில் இருந்து ஆதிக்கம் செலுத்தியதாகத் தெரியவில்லை. இதற்கு வியாக்கியானம் நாம் தர முடியும். அந்தக் காலத் தென்னிந்திய புகழ்மிக்க வரலாறுகள் அடங்கிய காவ்யங்களோ வேறு நூல்களோ இல்லாததால் இந்த மடத்து வரலாற்று ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்கும், குருமார்களைச் சிருஷ்டிக்கவும் முடியாமல் போனதே இந்த ஒவ்வாத நிகழ்ச்சிக்குக் காரணமாதலாம்.

பிரம்மானந்தகனர் (29-ஆம் பட்டம் கி. பி. 655-68) என்ற மடாதிபதிக்கு காச்மீரத்தின் அரசனான லலிதாதித்தன் சிறந்த பக்தனாகவும் சீடனாகவும் இருந்தான் என்று சொல்லப்படுகிறது. இந்த அரசன் ஆண்ட காலம் கி. பி. 733—769. காலக்கணக்கில் காணப்படும் தவறு ஒரு புறமிருக்க, நம்பவே முடியாத ஒரு நிகழ்ச்சியையும் வரலாறு கூறுகிறது. ராணி ரட்டா என்பவளின்

மகனை கர்னாடக இளவரசன் ஒருவனை லலிதாதித்தன் அரச உரிமையிலிருந்து விலக்கியதாகவும், அடுத்த மடாதிபதியாகிய சிதானந்தகனர் (30-ஆம் பட்டம் கி. பி. 668—72) இவனைத் திரும்பவும் அரசனுக்கியதாக வும் வரலாறு கூறுகிறது. கங்கைக் கரையில் உள்ள கனோஜ் வரையிலும் தான் (640) லலிதாதித்தனுடைய வெற்றி பரவியிருந்தது. இதற்குத் தெற்கே ஓர் அங்குலம் கூட இல்லை. கனோஜ் எங்கே! கர்நாடகம் எங்கே! தக்காணத்தை அப்போது ஆண்டு வந்தவர்கள் சாளுக்கியர்கள். புகழ் பெற்ற மகாஹர்ஷன் கூட நர்மதையைத் தாண்டிக் கால் வைக்க முடியாதபடி தடுத்த பெருமை இந்தச் சாளுக்கியர்களுடையது. எங்கோ வடக்கே கிடக்கும் காச்மீர அரசன் ஒருவனுக்கு சாளுக்கியர் வசமிருக்கும் இந்தச் சாம்ராஜ்ய விவகாரங்களில் தலையிடும் உரிமை எப்படித்தான் வந்ததோ தெரியவில்லை. மற்றொரு விஷயம். ரட்டா என்பது ராஷ்ட்ர கூடர் என்பதன் சுருக்கமே ஒழிய ஓர் ஆளின் பெயர் அல்ல.

**இரண்டாம் சந்திர சேகரர் (32-ம் பட்டம் ; கி. பி. 692—710):** "காச்மீர அரசனை லலிதாதித்தனின் மந்திரிகளுள் ஒருவனும் புகழ் மிக்க பௌத்த சமயவாதியுமான சங்குனன் (Chankuna) என்பவனை இவர் வாதத்தில் வென்றார்." சங்குனன் (சீன மொழியில் தளபதி) என்பவன் மேல் ஆக்ஸஸ் நதிக் கரையில் உள்ள தோகாரிஸ்தான் (Tokharistan) என்ற பிரதேசத்தைச் சேர்ந்தவன். இவன் காச்மீரத்தில் பல ஸ்தூபங்களை எழுப்பினான், புத்த விஹாரங்களையும் கட்டினான்.

கல்ஹணர், தம் காச்மீர வரலாற்றில் இந்தச் சங்குனன் யாரிடமும் வாதத்தில் தோல்வியடைந்ததாகக் கூருத தோடு மட்டும் அல்லாமல் இவன் பல அற்புதங்களைச் செய்ததாகவும் அதனுல் லலிதாதித்தனின் மதிப்பைப் பெற்றதாகவும், லலிதாதித்தன் இவனிடம் இருந்த மதிப்புக் காரணமாகப் பல பௌத்த ஸ்தாபனங்களுக்கு நிபந்தங்கள் அளித்ததாகவும், மகத நாட்டிலிருந்து விசேஷமாக கொண்டு வரப்பட்ட சுகத(புத்த)ரின் விக்கிரகத்தையும் இவ்வரசன் பிரதிஷ்டை செய்து கோயில் கட்டியதாகவுமே கூறுகிருர். (R. T. IV. 246).

மூன்றும் வித்யா கணர் (35-ம் பட்டம், கி. பி. 758—88): என்பவர் "நாடு முஸ்லிம்களின் படையெடுப்புக்கு உள்ளானதால் ஹிந்து தர்மம் அழியாமல் வெகு சிரமப்பட்டுக் காப்பாற்றினுர்." இதைப்பற்றி வேங்கடராமன் அவர்களே பின்வருமாறு சொல்கிருர்: "இந்தச் சமயத்தில் அரேபிய நாட்டு முஸ்லிம்கள் மேற்கு இந்தியாவில் குஜராத் வரை படையெடுத்ததாக தெரிகிறது. ஆனுல் இது காஞ்சியை எந்த வகையில் பாதித்திருக்க முடியும்?" அவர் எழுப்பிய சந்தேகத்தையே நாமும் எழுப்புகிறோம்.

அபிநவர் அல்லது தீரசங்கரர் (36-ஆம் பட்டம் கி. பி. 788—840) இருந்ததாகச் சொல்லப்படும் காலம் கிட்டத்தட்ட ஆதிசங்கரர் சரியான காலத்துக்கு நெருக்கமாக இருக்கிறது. இவரது வாழ்க்கை வரலாற்றில் கண்ட சில நிகழ்ச்சிகளும் ஆதிசங்கரர் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் சிலவும் ஒன்ருகவே இருக்கின்றன. தந்தை இறந்த மூன்று வருஷங்களுக்குப் பிறகு தம் ஆசாரியர்

அவதரித்ததாகவும், வியாக்ர பாதரின் மனைவியான ஒரு பெண்புலி இவரை வளர்த்ததாகவும் கதை கட்டிச் சொல்வது வரலாற்றாசிரியர்கள் புத்தி கௌரவத்தையோ, இவர்களுக்குத் தங்கள் மடத்தினிடம் இருக்கும் பக்தி கௌரவத்தையோ காட்டுவதாகச் சொல்ல முடியாது. இரண்டு வகையிலும் சிறுமையைத்தான் இந்த இயல்பு காட்டுகிறது. ஆதிசங்கரரின் சீடர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களே இத்தகைய இழிவான, பொய்க்கதைகளை உண்மை என்று காட்டக் கூசவில்லையானால் மத்வர்களின் கிரந்தங்களான மணிமஞ்சரி முதலியவற்றை நாம் எப்படிக் குறைகூற முடியும்?

சிதம்பரத்தில் பிறந்த தீர சங்கரரையும் காச்மீர யாத்திரை ஆசை விட்டபாடில்லை. வாக்பதி பட்டர் முதலிய பண்டிதர்களை வெல்வதற்காக அவர் அங்கே சென்றாராம். இந்தபண்டிதர்களின் பெயர்கள் கல்ஹணர் கிரந்தத்திலிருந்து (R. T IV 490—7) எடுக்கப்பட்டவை. இந்தக் கட்டுக் கதைக்கு ஆதாரமாக இதுவரையில் யாருக்கும் தெரியாத ஸத்குரு சந்தான பரிமளம் என்ற ஒரு கிரந்தத்திலிருந்து இரண்டு தனி சுலோகங்களைக் காட்டுகிறார்கள். வாக்பதி என்பவர் எழுதிய ஒரு பிராக்ருத கிரந்தத்தையும், மனோரதர் எழுதிய சில தனி சுலோகங்களையும் (இந்தச் சுலோகங்களுக்கும் இந்த மடத்து ஆசாரியர் எவருக்கும் யாதொரு தொடர்பும் இல்லை) தவிர இந்த ஆசாரியர்கள் எழுதிய கிரந்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் பெயர் மட்டுமே தெரிய வருகிறது. அடுத்த மடாதிபதியான சத்சித்விலாசரைப் (கி. பி. 840—73) பூஜித்த பரம பக்தர்கள் என்று ஆனந்த வர்த்தனர், ரத்னாகரர் என்ற இருவர்

பெயர் காணப்படுகிறது. இந்தப் பெயர்கள் ராஜதரங்கிணி யின் 5-ஆம் காண்டத் (canto V) திலிருந்து தேடி எடுக்கப்பட்டவை ஆகும்.

**பின்வரும் ஐந்து ஆசாரியர்களும் கர்ளுடகர்கள் :**

**இரண்டாம் போதர் (44-ஆம் பட்டம் கி. பி. 1061—98):** கதாசரித் சாகரம் என்பது ஒரு ரசமான கதைத் தொகுதி. வெகு அழகான பல நிகழ்ச்சிகளை இதில் காணலாம். பல பிரதேசங்களின் நாடோடிக் கதைகளுக்கு இதிலிருந்து நிறைய விஷயம் கிடைத்து இருக்கிறது. இந்தக் கிரந்த ஆசிரியரான சோமதேவர் என்பவர் படிப்பவர் மனத்தைக் களிப்பிக்கும் ஒரு நகைச்சுவைக் கவி என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த மடத்து வரலாற்றுசிரியர்கள் இவர் பெயரையும் ஆசாரிய பரம்பரையில் சேர்த்து இவருக்கு இரண்டாம் ஸாந்திரானந்த போதர் என்ற பட்டப் பெயரையும் சூட்டியிருக்கிருர்கள். இந்தக் குருவைக் கௌரவிக்க அரசர் ஒருவரையும் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது. தாரா நாட்டுப் போஜராஜனைவிட இதற்குத் தகுந்தவர் வேறு யாராக இருக்கமுடியும்? இந்த ஆசாரியரின் தென்னுட்டு விஜயயாத்திரைக்காகப் போஜன் இவருக்கு ஒரு முத்துப் பல்லக்கைக் கொடுத்தானும். வேங்கடராமனுடைய கணக்குப்படி போதரின் மடாதிபத்ய காலம் கி. பி. 1061-லிருந்து 1098 வரை. சரித்திரப் பேராசிரியரான நீலகண்ட சாஸ்திரிகள் போஜனுக்குக் கூறும் ஆட்சிக் காலம் கி. பி. 1018 முதல் 1061 வரையில்தான். வியாக்கியானம் தேவையில்லை. படிப்பவர்களின் சிரத்தை இங்கேயே நின்று விடுவதில்லை. "போதர் என்ற ஆசாரியர்

காச்மீர அரசனை கலசன் என்பவனது உதவியைக் கொண்டு காஞ்சியின் சுற்றுப்புறங்களிலிருந்த முஸ்லீம்களை அப்புறப்படுத்தினர்." கலசன் காஞ்சிக்கு எப்படி வந்தான் என்பது நமக்குத் தெரியவில்லை. இந்தக் கலசன் யார்? இவன் ஒரு தூர்த்தன். கெட்ட குணங்களுக்கெல்லாம் இருப்பிடமானவன். இவனது அதிகாரிகள் இவனை வெறும்பொம்மையாகச் செய்துவிட்டார்கள் என்று கல்ஹணர் சொல்கிருர். (R. T. VII) புகழ் மிக்க சோழராஜ்யத்தின் தலைநகரங்களில் ஒன்ருகியகாஞ்சியை காப்பற்றப் பல நூறுமைல் தூரத்திலுள்ள காச்மீரத்தில் இருந்து தூர்த்த அரசன் ஒருவன் வரவேண்டிய நிலை வந்துவிட்டதா? 11-ஆம் நூற்ருண்டில் ஆண்ட சோழ அரசர்கள் இரண்டாம் ராஜேந்திரன், வீரராஜேந்திரன், அதிராஜேந்திரன், முதல் குலோத்துங்கன் என்ற புகழ் பெற்ற சக்ரவர்த்திகள் ஆவர். இவர்கள் வெற்றி வடக்கே வெங்கியிலிருந்து தெற்கே இலங்கை வரையில் பரவியிருந்தது. சோழ ராஜ்யங்களில் அப்போதிருந்த முஸ்லீம்கள் அமைதிமிக்க அரபியப் பக்ரிகளும் வியாபாரிகளுமே ஆவர். வேங்கடேசனுடைய வரலாற்றில் இவ்வளவு ஆடம்பரம் இல்லை; இந்தக் காலத்தில் முஸ்லீம்களால் இந்த மடத்துக்குச் சில தொல்லைகள் ஏற்பட்டன. கலசேச்வரன் என்ற அரசனின் மந்திரியாகிய புஷ்யத்கடனுடைய உதவியால் இது சமாளிக்கப்பட்டது" என்கிருர் ஸ்ரீ வேங்கடேசன். தங்கள் மாகாணத் தலைநகரம் ஒன்றில் ஸ்தாபிதமாகி இருந்தது என்ற சொல்லப்படும். ஒரு மடத்துக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்கும் அளவுக்குப் புகழ் மிக்க சோழ சக்ரவர்த்திகளுக்கோ அவர்கள் மண்டலாதிபதிகளுக்கோ

வேண்டிய சக்தி இல்லையா? இக்கட்டுக் கதையை ஜோடித்தவர்கள் தமிழ் நாட்டு சரித்திரத்தைப் படிக்கவில்லை போலும்?

**மூன்றாம் சந்திர சேகரர் (45-ஆம் பட்டம் கி. பி. 1098—1166):** இவரது சீடர்களாகப் பணிபுரிந்த பண்டிதர்கள் மங்கன், க்ருஷ்ணமிச்ரர், ஜயதேவர், ஸாஹவர் என்கிறது வரலாறு. இவர் நாடகமான பிரபோத சந்திரோதயம், சந்தேல் வம்ச (Chandel dynasty) அரசனான கீர்த்திவர்மனது சபையில், 1065ல், நடிக்கப்பெற்றது. சந்திரசேகரர் பட்டம் பெறும் வரையில் இந்தப் பண்டிதர் ஜீவித்திருந்தாரா என்பதே சந்தேகத்துக்கு இடமாகிறது.

**சித்விலாசரைப் (அத்வைதானந்தபோதர் கி. பி. 1166—1200)** பற்றி ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயர் சொல்லும் விவரத்தோடு ஒரே ஒரு குறிப்பை மட்டும் இங்கே கொடுக்கலாம்: 1957-ல் கும்பகோணம் மடத்தைச் சேர்ந்த ஸ்ரீ அனந்தானந்தேந்திர ஸரஸ்வதி என்பவர் எழுதியுள்ளபடி ஸ்ரீ அத்வைதானந்தருக்கும் இந்த மடத்துக்கும் தொடர்பு இருந்ததாக அவர் கூறவே இல்லை. புத்திசாலித்தனமாக அவர் இந்த விஷயத்தில் மௌனமாகவே இருந்துவிட்டார். ஹர்ஷர் 11-ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்று ஸ்ரீ அனந்தானந்தேந்திரர் சொல்வது சரிதான். அபிநவகுப்தர் புகழோடு இருந்த காலம் ஏறக்குறைய கி. பி. 1000. 12-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் வாழ்ந்த அத்வைதானந்தரோடு ஹர்ஷரையும் அபிநவகுப்தரையும் தொடர்பு படுத்திக் கூறுவது தவறாகத்தானே இருக்க முடியும்? அத்வைதானந்தரின் தீக்ஷாகுரு பூமானந்தர்; இவரது

(அத்வைதானந்தர்) சீடர் பூர்ணானந்தர். சித்விலாசருடைய குரு மூன்றும் சந்திரசேகரன், சீடர் மூன்றும் மகாதேவர் என்று இந்த மடத்துக் குருபாரம்பரியம் சொல்வதும் மேற்கண்ட விஷயங்களும் எப்படி ஒத்து வரும்? எந்தச் சந்நியாசிக்கும் ஒரு தீக்ஷா குருவுக்கு மேல் இருக்க முடியாது. ஒரு தீக்ஷா நாமத்துக்கு மேல் இருக்க முடியாது.

கல்ஹணரின் ராஜதரங்கிணியில் காஷ்மீரின் வரலாறு 12-ஆம் நூற்றாண்டு வரையில்தான் காணப்படுகிறது. மடாதிபதியாகும் தகுதியுள்ள யாரைப் பற்றியும் கதாசரித்சாகரம் குறிப்பிடவில்லை. எனவே இதன் ஆசிரியரையே மடாதிபதி ஆக்கிக் குரு பரம்பரையில் சேர்த்துவிட்டார்கள். இந்த மடத்து வரலாற்று ஆசிரியர்கள் தங்கள் மடத்தின் இருப்பிடத்துக்குப் பக்கத்தில் உள்ள ஊர்களையும் கிரந்தங்களையும் குறிப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் இப்போது நேர்ந்து விட்டது. எனவே சிருங்ககிரி மடத்தைச் சேர்ந்த ஸ்ரீ வித்யா தீர்த்தரை இந்த மடத்துப் பரம்பரைக்குள் இழுத்துப் போட்டு விட்டார்கள்.

**வித்யா தீர்த்தர் (49-ஆம் பட்டம் என்று சொல்லப் படுபவர். கி. பி. 1286—1385)** இம்மடத்து வரலாற்றில் கண்டபடி வித்யா தீர்த்தர் பில்வாரண்ய வாசியான சாரங்கபாணியின் புத்திரர் அல்ல. இவரது பூர்வநாமம் சர்வக்ஞ விஷ்ணுவும் அல்ல. சர்வக்ஞ விஷ்ணு (C.1400) என்பவர் சாரங்கபாணியின் புத்திரர். புகழ்மிக்க சாயனரின் இருமக்களுள் ஒருவரான மாதவர் அல்லது மாயனரின் குரு.

வேதாந்த தேசிகர் வித்யா தீர்த்தரின் சீடனுக இருந்தார் என்று சொல்வதை வைஷ்ணவர் யாரும் ஒப்பவேமாட்டார்கள். (வேங்கடராமன் தம்முடைய வரலாற்றில் இப்படி எழுதியிருக்கிருர். பக். 94)

வேங்கடராமன் நம்பமுடியாத பல கஜப்புளுகுகளைச் சொல்லியிருக்கிருர். (1) சிருங்ககிரி மடம் இடையில் வெகுநாள் இல்லாமலே இருந்தது. பிறகு வித்யா தீர்த்தரின் கட்டளைப்படி இது புத்துயிர் பெற்றது. பாரதீ தீர்த்த கிருஷ்ணர் சிருங்ககிரி மடாதிபதியாக அமர்த்தப் பட்டார். (2) மத்வ சமயம் என்ற தனிச் சமயம் பரவத் தொடங்கியதாலும், போர்ச்சுகீசியர் வசம் இருந்த இந்தியாவில் சில காலம் கத்தோலிக்கர்களின் பயங்கர ஆட்சி நடைபெற்றதாலும், வித்யாதீர்த்தர் இவற்றைச் சமாளிக்க எட்டுப் புதிய மடங்களை ஸ்தாபித்தார். இவருடைய சீடர்கள் எட்டுப் பேர் இவற்றுக்குத் தலைமை தாங்கினர். இந்த எண்மருள் ஒருவரான வித்யாரண்யர் விருபாக்ஷி மடத் தலைவர் ஆனுர். (வித்யாரண்யருக்கும் சிருங்ககிரிக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்று காட்ட இது ஒரு தந்திரம்) (3) வித்யாதீர்த்தர் காஞ்சி மடாதிபதியாக 73 வருஷங்கள் ஆதிக்கம் செலுத்திஞர். பிறகு சங்கரானந்தர் என்ற ஒரே ஒரு சீடரோடு இமாலயத்துக்குச் சென்ருர். 15 வருஷம் தவம் செய்வதற்காக.

இந்தப் பொய்களுக்கெல்லாம் ஸ்ரீ R. ராமராவ் என்பவர் 'இந்தியன் ஹிஸ்டாரிகல் குவார்ட்டர்லி' என்ற பத்திரிகையில் ஆறு ஏழாம் தொகுதிகளில்-முக்கியமாக தொகுதி 7, பக். 83—87—நல்ல பதில் கொடுத்திருக்

கிருர். அந்தப் பதிலின் சில பகுதிகளை நாம் இங்கே கொடுக்கலாம்.

"அக்காலத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளைத் தவிர மற்ற விஷயங்களில் காஞ்சி வரலாற்றை நம்ப இடமில்லை ... ...... வித்யாதீர்த்தர் காஞ்சி மடத்தைச் சேர்ந்தவர் என்பதற்கு ஆதாரம் ஒன்றும் இல்லை. வாகீச்வரி கணபதி கோயிலில் காணப்படும் 1356-ஆம் வருஷச் சிலாசாசனம் ஒன்று புக்கராஜன் வித்யாதீர்த்தரைத் தரிசித்து வணங்கச் சிருங்ககிரிக்கு வந்தான் என்று குறிப்பிடுகிறது ... ... ... வித்யா தீர்த்தருக்கும் புக்கராஜனுக்கும் உள்ள தொடர்பை வானளாவப் புகழும் தாமிர சாசனங்கள் சிருங்ககிரியையோ, சுற்று வட்டாரத்தையோ சேர்ந்தவைகள் ஆகும். காஞ்சியில் இருந்தோ சுற்று வட்டாரத்திலிருந்தோ வித்தியா தீர்த்தரைக் காஞ்சியோடு தொடர்புபடுத்தும் சிலாசாசனமோ தாமிர சாசனமோ எதுவுமே கிடைக்கவில்லை இந்த மடத்தின் வரலாற்றுக் குறிப்புகளான புண்ய சுலோக மஞ்சரியிலும் வேறு குறிப்புக்களிலும் காணப்படும் வித்தியா தீர்த்தருக்கு முற்பட்ட குருபரம்பரைப் பெயர்கள் பல காச்மீர அரசர்கள், மந்திரிகள் இவர்களின் பெயர்களாகவே தோன்றுகின்றனர். இவைகள் கல்ஹணரின் ராஜதரங்கிணியிலிருந்து எடுத்தவை. (12-ஆம் நூற்ருண்டு). 'இந்த மடாதிபதிகளுக்கும் காச்மீர மன்னர்களுக்கும் தொடர்பு இருந்தது; இந்த மடாதிபதிகளின் செல்வாக்கு வடக்கே அவ்வளவு தூரம் பரவியிருந்தது' என்பதை நம்பவே முடியவில்லை. சுஷாமாவின் விஷயமோ என்ருல், காஞ்சி மடத்தின் பெருமையை அளவுக்கு மீறிப் புகழ்ந்து சிருங்ககிரி முதலிய வேறு

தென்னிந்திய மடங்களை மட்டந் தட்டுவது ஒன்றையே இது நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இயற்கையாகவே இதன் ஆசிரியர் சொல்லியிருக்கும் பல செய்திகள் தவருகவும் பொருத்தம் அற்றவைகளாகவும் இருக்கின்றன. வித்யாதீர்த்தரும் வித்யாசங்கரரும் ஒருவரே என்று கூறுவது சரியல்ல' என்று கூறுவது சரியல்ல' என்று ஓரிடத்தில் சுஷாமாவின் ஆசிரியர் கூறுகிருர். இன்னோர் இடத்தில் சிருங்ககிரி மடத்தில் காணப்பட்ட வித்யா சங்கரரின் முத்திரைக்கும் (Seal) வித்யாதீர்த்தருக்கும் தொடர்பு காட்டவந்த இவரே, வித்யாசங்கரர், வித்யாதீர்த்தர், வித்யாநாதர் மூவரும் ஒருவரே என்றும் சொல்லக்கூசவில்லை".

கி. பி. 1333-ல் சிருங்ககிரியில் கட்டப்பட்ட பெருமை மிகுந்த ஸ்ரீவித்யாசங்கரரின் கோயிலே இவர் சிருங்ககிரி மடத்துத் தலைவராக இருந்தார் என்பதற்கு அசைக்க முடியாத ஆதாரமாகும். இந்த ஆசாரியர் தம் ஆயுள்காலம் முடியச் சிருங்ககிரியிலேயே வாழ்ந்தார் என்பதைக் காட்ட வேறுபல எழுத்தாதாரங்களும் இருக்கின்றன. வித்யாதீர்த்தர் தம் உடலைப் போட்ட இடம் ஹிமாலயம் அல்ல; லம்பிகா யோக முறைப்படி இவர் தம் கட்டளைப்படி துங்கா நதியின் வடகரையில் தோண்டி அமைக்கச் சொன்ன நிலவறைக்குள் புகுந்துவிட்டார். இந்த இடத்துக்கு மேலேதான் சிறப்புமிக்க கோயில் எழுந்தது. இவர் ஸ்ரீ சிருங்ககிரி பீடாதிபதியாக இருந்த காலம் கி. பி. 1228 முதல் 1333 வரை. பாரதி தீர்த்தரும் ஸ்ரீ வித்யாரண்யரும் இவரது சீடர்கள் ஆவர். கி. பி.

1328ல் சந்நியாச ஆசிரமம் பெற்ற பாரதி தீர்த்தர் 1333 முதல் 1380 வரை ஸ்ரீ சிருங்ககிரி பீடத்தை அலங்கரித்தார். 1331-ல் சந்நியாச ஆசிரமம் பெற்ற ஸ்ரீ வித்யாரண்யர் 1380 வரை இளைய பட்டத்தை வகித்தார். பிறகு 1380 முதல் 1386 வரை இவரே ஸ்ரீ சிருங்ககிரி பீடாதிபதியாக இருந்தார். முன்னால் சிருங்ககிரி மடத்துக்குத் தானமாக இருந்த எல்லாக் கொடைகளையும் ஒன்றுபடுத்தியும் வேறுசில புதுக் கிராமங்களைச் சேர்த்தும் இரண்டாம் ஹரிஹர சக்கரவர்த்தி கி. பி. 1380ல் வித்யாரண்யருக்கு ஒரு தான சாஸனம் செய்து கொடுத்தான். மறுபடியும் ஸ்ரீ வித்யாரண்யர் விதேஹ முக்தி பெற்ற பிறகு 1387-ல் அவர் ஞாபகார்த்தமாக இன்னொரு தானமும் செய்தான். இவர்கள் ஞாபகார்த்தமாகச் சிருங்ககிரியில் இரண்டு கோயில்கள் இருக்கின்றன. சிருங்ககிரியில் உள்ள வித்யாரண்யபுரம் என்ற அக்கிரஹாரமும் அரசர்கள் செய்த வேறுபல தானங்களும், வித்யாரண்யர் இந்த மடத்துக்குத் தலைமை வகித்தார் என்பதற்கு ஆதாரமாக நிற்கின்றன. விஜய நகர ராஜ்யத்தின் தலைநகரான விஜய நகரத்தில் பல வருஷங்கள் இவர் தங்கினார். விருபாக்ஷி மடத்தில் சில வருஷங்கள் இவர் தங்கிய ஞாபகார்த்தமாக இங்கே இன்னும் விழாக்கள் நடைபெறுகின்றன. என்றாலும் இவர் சிருங்ககிரி மடாதிபர் ஸ்தானத்தைதான் வகித்தார். புகழ்மிக்க வரலாற்று ஆசிரியன் எவனும் (இந்தியனாயினும் சரி, அந்நியனாயினும்சரி) இவர் சிருங்ககிரி மடத்தலைவர் என்பதையும் விஜயநகர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் என்பதையும் சொல்லத் தவறியதில்லை.

ஸ்ரீமத்வர் (ஆனந்ததீர்த்தர்) வித்யாதீர்த்தர் காலத்தில் இருந்தவர். இவர் வித்யாதீர்த்தரோடு சமயவாதம் செய்து தோற்றதாகத் தெரிகிறது. சிருங்ககிரியில் இருந்த அத்வைதிகளுக்கு ஆபத்து ஏற்படும் நிலைக்கு அன்று ஸ்ரீமத்வரின் த்வைத சமயம் பரவியிருக்கவில்லை.

போர்த்துக்கீசிய இந்தியாவில் கத்தோலிக்க சமயம் காரணமான பயம் இருந்தது என்ற சொல்லைக் குறித்து ஒரே ஒரு கேள்வி கேட்கலாம். பதின்மூன்று பதினான்காம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கீசிய இந்தியா என்று ஒன்று இருந்ததா? வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டையில் வந்து இறங்கிய வருஷம் கி. பி. 1498 என்பதைப் பள்ளிமாணவர்கள்கூட அறிவர். இது வித்யாதீர்த்தரின் மடாதிபத்தியத்துக்கு 150 வருஷங்களுக்குப் பிறகு இந்தியாவில் முதல் போர்த்துக்கீசியக் குடியேற்றம் கி. பி. 1509-ல் அல்மெய்டா (Almeida) என்பவனால் ஏற்பட்டது. வேங்கடராமனும் இப்படிச் சொல்வது ஆச்சரியமாகவே இருக்கிறது!

வேங்கடேசன் (பக்கம். 29) வேறொரு காரணம் கற்பித்திருக்கிறார். லிங்காயதர்களின் செல்வாக்குக் காரணமாக சிருங்ககிரி மடத்தின் செல்வாக்கு மங்கி விட்டது. இங்கே அனுப்பப்பட்ட வித்யாரண்யர் இதன் புகழைத் திரும்ப நிலை நாட்டினார் என்பது இவர்கூற்று. மாருகெரெ விஷயம் (Marugere Vishaya) என்ற பகுதியில் அடங்கிய சிருங்ககிரியையும் சுற்றுப் புறத்தையும் அப்போது வீரசைவ சமயம் பாதிக்கவே இல்லை. சிலாசாஸனம் இதற்கு ஆதாரம். இங்கே இருந்த அக்கிரஹாரங்கள் எல்லாம் வேத சமய

கேந்திரங்களாக இருந்தன. அங்குள்ள குருமார்களின் சமாதிகளையும் வித்யாதீர்த்தர் காலத்துக்கு முன்பே தோன்றிய ஜனார்த்தனர் கோயிலைப் போன்ற கோயில் களையும் பார்த்தாலே சிருங்ககிரி மடாதிபதிகளின் ஆதிக்கம் இடையீடின்றி நடந்து வந்தது என்பதும் அவர்கள் செல்வாக்கு, சுற்றுவட்டத்தில் நன்கு பரவி இருந்தது என்பதும் நன்கு தெரியவரும்.

சங்கரானந்தர் (ஐம்பதாம் பட்டம் கி. பி. 1385 முதல் 1417 வரை): இவர் எழுதிய கிரந்தங்களிலிருந்து இவரது தீக்ஷா குரு ஆனந்தாத்மன் (Anandatman) என்பதும் வித்யா குரு வித்யாதீர்த்தர் என்பதும் தெரிய வருகிறது. சங்கரானந்தர் எந்த மட அதிபதியும் அல்ல. ஒரு வகையில் இவர் வித்யாரண்யரின் வித்யா குரு எனலாம்; வித்யாரண்யர், வித்யாதீர்த்தரோடு இவருக்கும் குரு வணக்கம் கூறியிருக்கிறார்.

கும்பகோணம் மடத்தைச் சேர்ந்த அனந்தானந் தேந்திரர் பின்வருமாறு கூறுகிறார் (Saintly steerers p. 25 (சிருங்ககிரி மடத்தோடு தொடர்பு கொண்ட சில புது மடங்களை ஸ்தாபிப்பதில் வித்யாரண்யருக்குச் சங்கரானந்தர் துணை புரிந்தார் என்று. ஆனால் சங்கரானந்தருக்கும் கும்பகோணம் ஆசாரிய பரம் பரைக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைப்பற்றிக் கம்மென்று இருந்துவிட்டார் இவர்.

ஸ்ரீ சங்கரானந்தர் கி. பி.1385க்குப் பல ஆண்டு களுக்கு முன்பே விதேஹமுக்தி அடைந்திருக்கிறார்.

ஆனால் இவர் சந்நியாசம் பெற்றுக் கொண்ட வருஷம் கி. பி. 1385 என்று கும்பகோண மட வரலாறு கூறுகிறது! இவர் விதேஹமுக்தி அடைந்த காலம் கி. பி. 1417 என்று சொல்வது கொஞ்சமும் பொருத்தமில்லாததாகும். இந்த வரலாற்று ஆசிரியர்கள் பின்னால் தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு விட்டதாகத் தெரிகிறது. பிரம்ம சூத்ர பாஷ்யத்தின் முகவுரையில் (இப்போதைய காமகோடி ஆசாரியர் அவர்களின் அறுபதாண்டு முடிவு விழாக் கொண்டாட்ட மலர்) சங்கரானந்தரின் காலம் கி. பி. 1350 என்று கண்டிருக்கிறது. இதுதான் சரி.

வேங்கடராமனுடைய புத்தகத்தின் 90-ஆம் பக்கத்தில் கண்ட சுலோக சம்பந்தமான கண்டனத்தை இந்த நூலின் முதல் பாகத்தில் காணலாம்.

வட இந்தியா முஸ்லீம் ஆட்சிக்கு உட்பட்டுள்ளது. முஸ்லீம் செல்வாக்கு நன்கு ஊடுருவாத பகுதி நேபாளம் ஒன்றுதான். எனவே ஊர் பெயர் ஒன்றும் தெரியாத நேபாள அரசன் ஒருவன் இந்த (கும்பகோண) மடத்து சீடன் என்று வரலாற்று ஆசிரியர்கள் புகுத்திவிட்டார்கள். இவன் பூர்ணானந்த சரஸ்வதியவர்களின் (51-ம் பட்டம் கி. பி. 1419—98) சீடனும்!

வியாஸாசலீயம் என்று வழங்கப்படும் ஒரு சங்கர விஜயத்துக்கு வியாஸாசலர் (52-ஆம் பட்டம் கி. பி. 1498—1507) என்ற பெயர் கொண்ட நான்காம் மாதவரை ஆசிரியராக சொல்கிறார்கள். இதைக் குறித்து எழுதும் சென்னை அரசாங்கக் கைஎழுத்துப் பிரதி

**நூல் நிலைய (Curator)** நிர்வாகி ஸ்ரீ டி. சந்திரசேகரன் **அவர்கள்** "காஞ்சி காமகோடி பீடத்துக்குத் தலைவர் **என்று** சொல்லும் வியாஸசலரே இந்தச் சங்கர **விஜயத்தில்** காஞ்சி காமகோடி பீடத்தைப் பற்றியே **சொல்லவில்லையே**" என்று ஆச்சரியப்படுகிறார். (வியாஸாசலர் எழுதிய சங்கர விஜய முகவுரை—1954)

சர்வக்ஞ சதாசிவ போதரின் (54-ம் பட்டம் கி. பி. 1524—39) சிறந்த பக்தனை ப்ரவீரன் என்ற ராமனாத புர அரசன் இருந்தான் என்று சொல்லப்படுகிறது. 'ப்ரவீரன்' என்பது ஒரு பட்டம் போல் தொனிக்கவில்லையா? இது ஒருவனுடைய பெயராக இருக்க முடியாது. பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்தில் ராமனாதபுரம் ஒரு தனி அரசாக இருக்கவில்லை.

முதல் பாகத்தில் ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயரின் வாதத்தை நன்கு கவனித்தால் பின்கண்ட விஷயங்கள் தெளிவாகிவிடும். இரண்டாம் பரமசிவேந்திரர் (1539-86) என்பவர் பிரசித்தி பெற்ற சதாசிவேந்திரரின் குருவாக இருக்கமுடியாது; ஆத்மபோத விச்வாதிரிகர் (கி. பி. 1586—1638) என்பவர் ருத்ரபாஷ்யத்தின் ஆசிரியரான அபிநவ சங்கரர் அல்ல; சதாசிவேந்திரர் குருரத்ன மாலையை எழுதியிருக்க முடியாது.

18-ம் நூற்றாண்டைச் சேர்ந்த கண்டீரமாணிக்கம் நல்லா தீக்ஷிதர் என்பவர் சதாசிவரின் காலடி பணிந்து வேதாந்த சாஸ்திரம் கற்றவர். இவர் தம் குருநாதரான சதாசிவரை வானளாவப் புகழ்கிறார். பரமசிவர் தம் பரமகுரு என்று கூறி அவரையும் மிகப் புகழ்ந்து

பேசுகிருர். ஸ்ரீதர வெங்கடேசர் என்பவர் சதாசிவர் காலத்தவர், சதாசிவரின் குருநாதரான பரமசிவேந்திரர் 17—18-ஆம் நூற்ருண்டைச் சேர்ந்தவர் என்பதைக் காட்ட இவைகள் அதிகப்படியான ஆதாரங்கள் ஆகும். எனவே கும்பகோணம் மடத்துப் பரம்பரையில் காட்டப் பட்டவரும் இந்தப் பரமசிவானந்தரும் ஒருவராகஇருக்க முடியாது.

அத்வைத சபையின் பத்திரிகை 'பிரம்ம வித்யா' என்பது. இந்தச் சபை இப்போது கும்பகோணம் மடத்தோடு இணைந்துவிட்டது. பிரம்ம வித்யா என்ற பத்திரிகையில் 1962-ஆம் வருஷத் தொடக்கத்தில் (நான்காவது வால்யூம் நம்பர் 1—1960—61) பரம சிவேந்திரரான தம்குருவைச் சதாசிவர் புகழ்ந்து பாடிய ஸ்தோத்திரங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பரமசிவேந்திரர்தான் மடத்துப் பரம்பரையைச் சேர்ந்தவர் என்ற பல்லவியை இந்தப் பத்திரிகாசிரியர் இந்த ஸ்தோத்திர முகவுரையிலும் பாடியிருக்கிருர். இங்கே நாஸிகளின் விளம்பர தத்துவம்தான் நினைவுக்கு வருகிறது; "பொய்ச் செய்தி ஒன்றைப் பலமுறை திருப்பித் திருப்பிச் சொன்னல் அதற்கு உண்மையின் பலம் வந்துவிடும்." என்பதுதான் அது. 1962ல் பிரசுர மான காவேரி ரஹஸ்யம் என்ற ஒரு கிரந்தம், 'சதாசிவர் 1630-ல் விதேஹ முக்தி அடைந்தார்' என்றுகூறுகிறது. கும்பகோணம் மடத்துப் பரம்பரையைச் சேர்ந்த பரமசிவரது காலத்துக்கு நெருக்கமாகச் சதாசிவர் காலத்தைக் கொண்டுவருவதற்கான ஒரு விஷம

முயற்சியேஇது. இந்தப் பயனற்ற செய்தி, வரலாற்றோடு தொடர்பற்றது; நன்கு தெரிந்த வரலாற்றுக் காலக் கணக்கோடு இது பொருந்தாது. எனவே இந்தச் செய்தியை லட்சியமே செய்யாமல் ஒதுக்கிவிடுவதுதான் நியாயம்.

> [“கும்பகோணம் மடத்துப் பொய்ப் பிரசாரத்தை நம்பி, ‘சதாசிவேந்திரர்’ ‘இந்த மடத்துச் சீடர்’ என்பதை நம்பும் அளவுக்கு இந்த நூலாசிரியர் முன்பு ஏமாந்து விட்டார். இது போன்ற பொய்ப்பிரசாரங்களின் குட்டு வெளிப்பட தீவிர ஆராய்ச்சி செய்யவேண்டி நேர்ந்தது.”]

சந்திரசேகரேந்திர சரஸ்வதி அவர்கள் (வேங்கடராமன் வரலாற்றுப்படி 60-ஆம் பட்டம் கி. பி. 1746—63; வேங்கடேசன் வரலாற்றுப்படி 62-ஆம் பட்டம், பட்டம் பெற்ற ஆண்டு கி. பி. 1729) ‘ஆங்கிலேயர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் நிகழ்ந்துவந்த போர்கள் காரணமாகக் காஞ்சி பாதுகாப்புக் குறைந்தது என்று எண்ணினார் எனவே இவர் காமாக்ஷியின் தங்க விக்கிரகத்தை எடுத்துக்கொண்டு உடையார் பாளையத்துக்குப் போனார். பிறகு மராத்திய அரசரின் வேண்டுகோளுக்கு இணங்கித் தஞ்சைக்குச் சென்றார். இங்கே காமாக்ஷியின் தங்க விக்கிரகம் ஒரு கோயிலில் வைக்கப்பட்டது. பிறகு ஆசாரியர் கும்பகோணத்தைத் தம் வாசஸ்தலமாகக் கொண்டார்.

இந்தச் செய்தியை நன்கு ஆராய வேண்டும்: ஒருகாலத்தில் இப்போது தென் ஆற்காடு, செங்கல்பட்டு

ஜில்லாக்களில் அடங்கியிருக்கும் சில பகுதிகள் செஞ்சிக் கோட்டையின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. 1693 ஜனவரியில் இந்தக் கோட்டையை மொகல் தளபதியான ஜுல்பிகருல்லாகான் பிடித்துக் கொண்டான். பிறகு சில வருஷ காலம் இங்கே போர் முயற்சிகள் நடந்த வண்ணம் இருந்தன. மொகல் அரசரின் பிரதிநிதி என்ற முறையில் தாவூத்கான் என்பவன் கர்நாடகத்தை ஆண்டுவந்தான். காஞ்சியில் இருந்த பணக்காரக் கோயில்களின் மேல் மொகலாயர்கள் மட்டும் அல்ல; வெளிநாட்டுக் கொள்ளைக்கூட்டத்தார் சிலர் கண்களும் விழுந்தன. மூன்று பெரிய கோயில்களின் (ஏகாம்பரேஸ்வரர், காமாக்ஷி, வரதராஜர்) அதிகாரிகளும் விரைமிக்க தங்கள் கோயில் உத்ஸவ மூர்த்திகளை இந்த மத வெறியர்களிடமிருந்து காப்பாற்ற முனைந்தனர்.

எனவே இந்த விக்கிரகங்களைப் பாடைகளில் வைத்து சவங்கள் போல் தோன்றச் செய்து, சவ ஊர்வலங்கள் பின் தொடரத் திருச்சி ஜில்லாவில் இருக்கும் உடையார்பாளையம் காடுகளுக்கு எடுத்துச் சென்று விட்டார்கள். காமாக்ஷியின் விக்கிரகம் தங்கத்தால் ஆனது. இதைத் தஞ்சாவூர் அரசன் எடுத்துக் கொண்டான் என்று சொல்லப்படுகிறது; சென்னை ஸிவில் ஸர்விஸைச் சேர்ந்த சார்லஸ் ஸ்டுவர்ட் கோல் (1876) என்பவர் எழுதியுள்ள இந்தச் செய்தி பின்பு ஓர் அரசாங்க ஆணையில் இடம் பெற்றது. இந்த விக்கிரகங்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை இங்கே சுருக்கமாகச் சொல்கிறோம்.

சக வருஷம் 1632, விரோதி (கி. பி.* 1709—10) பங்குனி (ba Di, 30) பாத்ரபத, ஸ்ரீனிவாஸர் என்ற அத்தன் திருவேங்கட ராமானுஜ ஜீயரது கட்டளைப்படி அவர் சீடனை ராஜா தோடர் மல்லன் என்ற தலைவன், உடையார் பாளையத்திலிருந்து ஸ்ரீ வரதராஜர் உபய நாச்சியார் உத்ஸவ விக்கிரகங்களைக் கொண்டு வந்து காஞ்சிக் கோயிலில் பிரதிஷ்டை செய்தான் (A. R. E. 639 of 19). சிவன் கோயில் விக்கிரகங்கள் ஸ்ரீ செல்லம் பட்டர் அவர்களால் திருப்பிக் கொண்டு வரப்பட்டன. கனக காமாக்ஷி விக்கிரகத்துக்கு உடையார் பாளையத்திலேயே பூஜை முதலிய சிறப்புகள் நடந்துவந்தன. அங்கிருந்து அது திருவாரூருக்கும் பிறகு தஞ்சாவூருக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. கி. பி. 1784-ஆம் வருஷத்தில் உடையார் பாளையம் மன்னன் தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரி என்பவருக்கு கனக காமாக்ஷி விக்கிரகத்தின் அர்த்த ஜாமபூஜைக்காகக் கொடுத்த தானத்தைப் பற்றிய சாஸனம் ஒன்று இருக்கிறது. இந்த விக்கிரகம் தஞ்சாவூர்க் கோயிலுக்கு முடிவாக 1781-ல் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிகிறது. இந்த விக்கிரகம் இருந்த கோயிலில் குருக்களாகப் பணிபுரிய தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகளின் இரண்டாவது புத்திரன் தஞ்சாவூருக்குச் சென்றதாகத் தெரிகிறது. கும்பகோணம் மடத்து ஆசாரியர் யாருக்கும் இந்த வரலாற்றில் தொடர்பிருந்ததாகவே தெரியவில்லை.

ஆத்ரேய கிருஷ்ண சாஸ்திரி (பக் 89—1930-ஆம் வருஷப் பதிப்பு) ஓர் அழகான கதை சொல்கிறார். சக வருஷம் 1719 (கி. பி. 1797 பிங்கள வருஷம்) அபிநவ

வோத்தண்ட வித்யாரண்ய பாரதி என்ற சிருங்ககிரி மடாதிபதி ராமேச்வர யாத்திரை சென்றார். திரும்பு காலில் அவர் அப்போதைய கும்பகோணம் மடாதிபதியாகிய ஆரும் மஹாதேவரிடம் பின்கண்டபடி மன்னிப்பு வேண்டினார்: "திருவானைக்காவல் முதலிய இடங்களில் பாதபூஜை முதலிய உபசாரங்களை நான் ஏற்றுக்கொண்டது தவறுதான்". இவ்வாறு மன்னிப்பு வேண்டிய இவர் "இனி இவ்வாறு நடக்காது" என்று எழுதியும் கொடுத்தாராம்! பாவம்! சாஸ்திரி! இந்தப் பெயர் கொண்ட யாருமே சிருங்ககிரி மடாதிபதியாக இருந்ததில்லை.


ஆத்ரேய சாஸ்திரியார் அவர்களின் விளம்பர வேட்டுக்களுள் இன்னொன்றும் இது போன்றதே ஆகும். (Ibid. P. 90) "தென் இந்திய அரசர்களும் ஜமீன்தார்களும் (இவர் கணக்குக் கொடுத்திருக்கிறார்) ஒரு கூட்டம் கூடி காமகோடி ஆசாரியர்களைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்தும், இந்த மடத்துப் பரம்பரை ஒன்றுதான் ஆதிசங்கரரின் இடையறாத நேர்ப் பரம்பரை என்று உறுதிப்படுத்தியும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றினார்கள்."

"**சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி** (62-ஆம் பட்டம் **கி. பி. 1814—51**) யவர்கள் காலத்தில்" காஞ்சிக்காமாக்ஷி **அம்மன் கோயிலைப்** பழுது பார்க்க வேண்டியிருந்தது. **இந்தக் கோயிலில்** பூஜா சக்கரங்களைப் புதுப்பித்தல் **முதலிய அதிகாரங்கள்** கும்பகோணம் மடத்து ஆசாரியர்களுக்கே உரியவை. எனவே பொதுமக்களும் அரசாங்கமும் கும்பகோணம் ஆசாரியர் அவர்கள் காஞ்சிக்கு வந்து

இருந்து இந்தப் புனருத்தாரண வேலையை நிறை வேற்றித் தர வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். இவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கிக் கும்பகோணத்திலிருந்த ஆசாரியர் காஞ்சிக்கு வந்திருந்து இந்தப் பணிகளை நிறைவேற்றித் தந்தார்" என்பதை நாமெல்லாம் நம்பவேண்டும் என்பது ஸ்ரீ வேங்கடேசன் (பக். 32) அவர்கள் கருத்து. ஆனால் அரசாங்க தஸ்தாவேஜுகள் கூறும் கதையே வேறு; இந்த ஆசாரியர் தாமாகவே முன்வந்து புனருத்தாரண வேலையைச் செய்வதாகவும் அனுமதிக்க வேண்டும் என்றும் அரசாங்கத்துக்கு மனுச் செய்து கொண்டார். அரசாங்க அனுமதியோடு அந்தப் பணிக்காக அரசாங்க மானியமும் பெற்று அதைச் செய்து முடித்தார். இது முடிந்தபிறகு கோயில் கும்பாபிஷேகத்தையும் அதில் தமக்கிருந்த பங்கையும் பற்றிய கல்வெட்டு ஒன்று (339 of 54—5) கோயிலில் ஏற்பட இவர்முயன்று முடித்துக் கொண்டார்.

**ஏழாம் சுதர்ஸன மகா தேவேந்திர சரஸ்வதி (63-ஆம் பட்டம்: கி. பி. 1851—91)** அவர்களைப் பற்றி எழுதும்போது வேங்கடேசன் அவர்கள் (பக். 33) "புதுக்கோட்டை அரசர் இவருக்கு நன்கொடையாகப் பணம் கொடுத்தார்" என்று எழுதியிருக்கிறார். 1878 முதல் 1894 வரை முதலில் திவானாகவும் பிறகு திவான் ரீஜண்டாகவும் இந்தச் சமஸ்தானத்தில் அதிகாரம் செலுத்திய ஸ்ரீ சேஷைய சாஸ்திரியார் அவர்கள், இந்தச் சமஸ்தானத்தில் கும்பகோணம் ஆசாரியர் களுக்குச் சிறப்பான மரியாதை கிடைப்பதற்கு வேண்டிய

ஏற்பாடுகளைச் செய்தார். இன்றுவரை அந்தஉரிமையை இவர்கள் அனுபவித்து வருகிறார்கள். சேஷைய சாஸ்திரியாரின் அதிகார காலத்துக்கு முன் இந்த மடத்துக்குப் புதுக்கோட்டை சமஸ்தான மரியாதையோ, தானமோ கிடைத்ததாகக் காட்டும் தஸ்தாவேஜு ஒன்றுமே இல்லை. ஆனால் வேறுபல மதஸ்தாபனங்களுக்கும் கோயில்களுக்கும் (சமஸ்தானத்துக்கும் உள்ளேயும் வெளியேயும்) பலவகைத் தானங்கள் செய்த தஸ்தாவேஜுகள் காணப்படுகின்றன.



# அத்தியாயம்—3

## தாமிர ஸாஸனங்களும்—தானங்களும்

இந்த மடத்தார் வசம் உள்ள 10 தாமிர சாஸனங்களை கோபிநாத ராவ் மொழிபெயர்த்து குறிப்புகளுடன் வெளியிட்டிருக்கிறார்.

விஜயகண்ட கோபால தேவன் என்ற சிற்றரசன் அம்பிகாபுரம் என்ற கிராமத்தை யாரோ சங்கர யோகி அல்லது சங்கர குரு என்ற ஒருவருக்குத் தானமாக வழங்கியதைச் சொல்கிறது. முதல் சாஸனம் கர, கர்க்கடக, திங்கள் கிழமை சு-10 அனுராதா என்று அந்தச் சாஸனத்தில் கண்ட விவரங்கள் கி. பி. 1231, 1291 இவைகளுக்குச் சரியான கர வருஷங்கள் இரண்டுக்கும் முற்றும் பொருத்தமாக இல்லை. சாஸன அக்ஷரங்களின் வடிவங்களைக் கொண்டு பார்த்தால் இந்தச் சாஸனம் 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக வேண்டும். இதன் காலம் கி. பி. 1351 ஆக இருக்கலாம் என்று எச். கிருஷ்ண சாஸ்திரியார் அபிப்பிராயப் படுகிறார். இந்தச் சாஸனத்தைப் பொருத்த மட்டும் இந்தக் காலம் எல்லை வெகு பிந்தியது என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. 1961-ஆம் வருஷம் கல்கி தீபாவளி மலரில் ராமேசன் எழுதிய கட்டுரை ஒன்றில் கி. பி. 1111 தான் இதன் காலம் என்று காட்ட முனைகிறார். இவ்வளவு முன்னதாக இருக்கவே முடியாது. அந்த வருஷத்தில் காஞ்சி சோழ நாட்டின் தலைநகரம் ஒன்றாக இருந்தது; சோழ அரசருக்கு இதுவும் வாசஸ்தலமாக இருந்தது.

எனவே சோழ அரசனுக்கு உட்பட்ட எந்த அதிகாரியும் தன் ஆட்சி ஆண்டைக் குறிப்பிட்டு அப்போது தான சாஸனம் ஒன்று வழங்கியிருக்கவே முடியாது. கி. பி. 1115 வரை சோழ ராஜ்யம் துங்கபத்ரா கிருஷ்ணு நதித் தீரம் முதல் கோதாவரி வரை உள்ள கடற்கரைப் பகுதியையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருந்தது. பிறகு வேங்கி நாட்டை இழந்ததன் காரணமாக கிருஷ்ணு நதியின் தெற்குப் பகுதி முழுவதும் சோழ ராஜ்யமாகச் சோழர்களாலேயே நேராக ஆளப்பட்டது.

தெல்லூர்த் தெலுங்குச் சோழர்கள் (சோடர்கள்) 12-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பிரபலமடைந்தார்கள். சக்ரவர்த்தி இரண்டாம் ராஜாதிராஜன் காலத்தில் சோழ அரசியல் விவகாரங்களில் இவர்கள் சம்பந்தப் பட்டிருந்தார்கள். ஆனால் இவர்கள் சோழர்களின் ஆதிக்கத்தை ஒப்புக் கொண்டு அடங்கி வாழ்ந்தார்கள். நல்லசித்தியும் அவன் சகோதரன் தம்முசித்தியும் மூன்றும் குலோத்துங்கனுக்கு அடங்கி கப்பம் செலுத்திய சிற்றரசர்கள். கி. பி. 1192–3 ல் நல்லன் காஞ்சீபுரத்தை பிடித்துக் கொண்டான். ஆனால் 1196-ல் இவன் இங்கிருந்து விரட்டப்பட்டான். இவனைப் பற்றிய தஸ்தாவேஜுகள் கி. பி. 1213 வரை காணப்படு கின்றன; பட்டரசனோடு சேர்ந்த (காஞ்சி) தஸ்தா வேஜுகள் 1204 முதல் 1213 வரை காணப்படுகின்றன. தம்முவைப்பற்றிய தஸ்தாவேஜுகள் 1207-8 வரை காணப்படுகின்றன. இவனுக்குப் பிறகு திக்க கண்ட கோபாலன் என்பவன் காகதீய கணபதி என்பவன் துணையோடு இந்த சீமையை வென்று கொண்டான்.

இவனும் கி. பி. 1248-ல் மரணமடைந்தான். (டாக்டர் என். வேங்கடராம ஐயரும் எம். சோம சேகர சர்மாவும்) திக்கனின் மகனுன இரண்டாம் மனுமசித்தி என்பவனும் விஜயகண்ட கோபாலன் என்பவனும் இந்த ராஜ்யத்துக்கு அரசுரிமை கொண்டாடினுர்கள். மனுமனுக்கு வீரகண்ட கோபாலன் என்ற ஒரு பெயரும் உண்டு. ஜடாவர்மன் சுந்தர பாண்டியனுல் இவன் கொல்லப்பட்டான். மதுராந்தக பொத்தப்பி சோழன் அல்லது ரங்கனுதன் என்பவனுகக் கருதப்படும் ராஜகண்ட கோபாலன் என்பவன் கி. பி. 1290—1ல் அரசனுனன்.

"புதிதாக இப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்ட" தாகச் சொல்லப்படும் முதல் செப்பேட்டில் கண்டகோபாலனின் 16ஆவது ஆட்சி ஆண்டில் தானம் கொடுத்ததாகச் சொல்கிறது. இந்தச் சாஸனத்தின் காலம் கி. பி. 1231 என்ருல் இதை அளித்த கண்ட கோபாலன் அரசேற்றது கி. பி. 1215ஆக இருக்க வேண்டும். இதில் ஒன்றும் தவறில்லை. வேறு வருஷம் எதை எடுத்துக்கொண்டாலும் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. எப்படியானுலும் தமிழ்வருஷ ஆங்கில வருஷப் பொருத்தமின்மை மிகப் பெரிய தடையாக முன் நிற்கிறதே! எது எப்படியானுலும் சாஸன காலம் கி. பி. 1111 ஆக மட்டும் இருக்கவே முடியாது. இது சோழ வரலாற்றுக்கே முரணுனது.

புகழும் பலமும் மிக்க சோழ வேந்தர்களின் புகழ் உச்சநிலையில் இருந்த காலத்தில் அவர்களுக்கு உட்பட்ட சிற்றரசன் ஒருவன் சோழநரேசுவரன் (சாஸனம் 2ஆம் வரி), திரிபுவன சக்கரவர்த்தி, சோழ பார்த்திவன் (வரிகள் 16—17) என்னும் பட்டங்களை உபயோகிக்க

அனுமதிக்கப் படுவாரு என்பதை ராமேசன் அவர்கள் கொஞ்சம் அமைதியாக ஆலோசிக்க வேண்டும். இப்படி ஒரு சிற்றரசன் துணிந்து செய்திருந்தால் ராஜத் துரோகம் என்ற குற்றத் தண்டனையை அவன் நிச்சயம் பெற்றிருப்பான். இது கிடக்கட்டும். சாஸனத்தில் சங்கர குரு என்று இருப்பதை சங்கராசார்ய குரு என்றும், ஹஸ்திசைலத்துக்கு மேற்கே உள்ள மடம் என்பதை சங்கரமடம் என்றும் ("ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம்": பக் 17 – 18) பொருள் கொள்வதற்கு என்ன ஆதாரத்தை ராமேசன் கண்டாரோ நமக்குத் தெரியவில்லை. இத்தகைய தவருன கூற்றுக்கள் படிப்பவர்களைத் தவருன கருத்துக் கொள்ளச் செய்யும். இந்தத் தான சாஸனத்துக்கு உரியவனை கண்டகோபாலன் சோழர்கள் ஆட்சியின் க்ஷீண காலத்தில் (13-ஆம் நூற்றுண்டு) தான் பிரபலம் அடைந்திருக்க முடியும் என்பதை நல்ல படிப்பாளியான ராமேசன் அவர்கள் எளிதில் அறியமுடியுமே.

தானம் பெற்றவர் யார் என்பதை நிச்சயிப்பதில் பல தொல்லைகள் முன் நிற்கின்றன. சங்கரார்யர் என்ற பெயரும் சங்கராசார்யர் என்ற பெயரும் ஒன்று என்பதில் எச். கே. சாஸ்திரி அவர்களுக்கு உடன்பாடில்லை. இரண்டாம் செப்பேட்டில் காணப்படும் 'த்விஜன்மனு' என்ற தொடர் பெரிய சந்தேகத்தைக் கிளப்புகிறது. எந்தச் சந்நியாசியையும் பொதுவான ஜாதிப் பெயரான த்விஜன் (பிராம்மணன்) என்ற பெயர் சொல்லிச் சுட்டுவது கூடாது. துரதிர்ஷ்ட வசமாக பொப்பிலி என்ற பதம் (முதல் செப்பேட்டின் கடைசி வரியிலும் இரண்டாம் செப்பேட்டின் முதல் வரியிலும் காணப்படுகிறது.

Skt. here P. P. 32) இது சங்கரார்யர் என்பவரின் 'இன்டி பேரு' அல்லது குடும்பப் பெயராகக் காணப் படுகிறது. ஒரு முடிவுகட்ட இதுபோதும். தனது உற்றார், உறவினர், மனைவி மக்கள், ஊர் பெயர் எல்லா வற்றையுமே துறந்து வெளியேறிய சந்நியாசிக்குக் குடும்பப் பெயர் எங்கிருந்து வந்தது! இப்படிக் குடும்பப் பெயரால் குறிக்கப்பட்ட இந்தச் சங்கரார்யர் ஒரு கிருகஸ்தராகத்தான் இருக்க வேண்டும்.

"சிவனையே தியானிக்கும் முனியும், ஆத்மானந் தத்தில் இன்புறுபவரும், உபநிஷதங்களைப் பற்றிப் பிரவசனம் செய்து வருபவரும், நிறைய அன்னதானம் செய்பவருமான" இந்தச் சங்கரார்யர் ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர், ஸ்ரீதர வெங்கடேசர் இவர்களைப் போல் ஒரு கிருகஸ்தராகத்தான் இருந்திருக்க வேண்டும்.

கடைசியாக ஒன்று: தெலுங்குச் சோழன் எவனா வது செப்பேட்டில் தன் பெயரைத் தமிழில் அதுவும் இன்று வழங்கும் தமிழ் லிபியில் கையெழுத்தாகப் போட் டது உண்டா? இது நடைபெறக் கூடியதா?

இந்த அம்சங்களை யெல்லாம் யோசித்தோமானால் இந்தச் செப்பேட்டுச் சாஸனம் உண்மையானது என்று நம்பத் தயக்கமாகத்தான் இருக்கிறது.

அடுத்தபடியாக வரிசையாக விஜய நகர தான சாஸனங்கள் வருகின்றன. இவற்றுள் இரண்டு சாஸனங்கள் வீர நரசிம்மன் (1505–9) அளித்த தானங்களைக் குறிப்பிடுபவை. முதல் சாஸனத்தில் சக-

1429 சுக்ல, மகம், மஹோதயம் என்ற காலக் குறிப்பைக் காண்கிறோம். சக. 1429 என்பதற்குச் சரியான கிறிஸ்தவ ஆண்டு கி. பி. 1507. கி. பி. 1510 தான் சுக்ல வருஷம். இந்தப் பிழையைத் தள்ளி விட்டால் நாம் கி. பி. 1507 தான் என்று ஒப்புக் கொள்வோம்; கி. பி. 1509 ல் நரசிம்மனுடைய ஆட்சி முடிவு பெற்று விட்டது. இந்தச் சாஸனத்தைப் பொறித்தவன் பெயர் மல்லணுசாரியின் மகன் வீரணுசாரி என்று இருப்பது சரி தான்; கி. பி. 1507 முதல் 1523 வரை வழங்கப் பெற்ற தான சாஸனங்களில் இவர் பெயர் தான் காணப் படுகிறது. இதே காலக் குறிப்பைக் கொண்ட இரண்டாம் செப்பேட்டை எஸ். வி. விஸ்வநாதன் என்பவர் சோதித்து பதிப்பித்திருக்கிருர். (E. I. IV 17) முதல் செப்பேட்டில் வழங்கப்பட்ட தானம் எலிச்சூர்; இரண்டாவதில் வழங்கப்பட்டது குடியன் தண்டலம். இதைத் தொடர்ந்து கிருஷ்ண தேவராயரின் இரண்டு தான சாஸனங்கள் வருகின்றன. (கி. பி. 1509—29) சக. 1444 (கி. பி. 1522) என்ற காலக் குறிப்புள்ள முதல் சாஸனத்தில் காஞ்சியில் வசிக்கும் யதி சந்திர சேகர சரஸ்வதி என்பவருக்கு படாவூரைத் தானமாகக் கொடுத்த செய்தி காணப்படுகிறது. இரண்டாவதன் (பதிப்பிக்கப் பெற்றது E. I. IV 12) காலக் குறிப்பு சக. 1450 (கி. பி. 1528) இதன்படி உதயம்பாக்கம் என்ற கிராமத்தைச் சதாசிவ சரஸ்வதி தானமாகப் பெறுகிருர்.

இந்த தான சாஸனங்களில் பின்கண்ட சந்நியாச பரம்பரை காணப்படுகிறது. இங்கே எந்த மடத்தின் பெயரும் பீடத்தின் பெயரும் குறிக்கப்படவில்லை.

*சதாசிவ சரஸ்வதி*
*மகாதேவ சரஸ்வதி* (கி. பி. 1507)
*சந்த்ரசூட (சேகர) சரஸ்வதி* (1522)
*சதாசிவ சரஸ்வதி* (1528)

இந்தப் பெயர்கள் எதிலும் இந்திர சரஸ்வதி என்ற பட்டப் பெயரைக் காணவில்லை. கும்பகோண மடாசாரியர்களின் சிறப்புப் பெயர் இந்திர சரஸ்வதி என்பதுதானே இவர்கள் கொள்கை. இம்மடத்தின் நண்பர் மகாமகோபாத்யாய அனந்தகிருஷ்ண சாஸ்திரி பின்வருமாறு அடித்துச் சொல்கிறார்:

(Skt. P. 33 of original)
"நியாய சந்திரிகை" என்ற நூலின் சம்ஸ்கிருத முன்னுரை பக். 77—8)

"ஆதி சங்கரரின் நேர்ச்சீடர்களுள் ஒருவரான சுரேச்வரர் என்பவர் இந்திர சரஸ்வதி என்ற பட்டம் பெற்ற ஆசார்யர்களுக்கு முதல்வர். சங்கரர் அலங்கரித்த பீடத்தில் அவருக்குப் பின் வந்தவர்கள் ஏற்ற பட்டப் பெயர் இது. இந்தப் பீடத்துக்கு நியமனம் பெருத அவருடைய சீடர்கள் ஆனந்த சரஸ்வதி என்ற பட்டத்தையே தாங்கினர்கள்." ("சாரீரக வார்திக"த்தின் முகவுரை பக். 4)

இந்தத் தான சாஸனங்களில் கண்டவர்கள் வெறும் சரஸ்வதிகள்! இந்திர சரஸ்வதிகள் அல்ல; ஆனந்த சரஸ்வதிகள் கூட அல்ல. எனவே இந்த மடச் சீடர்களில் மிகப் படித்தவர்கள் வற்புறுத்திக்

கூறும் கூற்றுப்படி இந்தப் பட்டம் காணப்படாத இவர்கள் இந்த மடத்துப் பரம்பரையைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது.

"குருரத்னமாலை", "சுஷாமா" முதலிய வரலாற்று ஆசிரியர்கள், இந்தத் தான சாஸனங்களில் கண்ட பெயர்களை எடுத்துத் தங்கள் மடத்துப் பரம்பரை பெயர்களாக ஆக்கிக் கொண்டிருக்க வேண்டும். இந்த யதிகள் காஞ்சியிலிருந்த எந்த மடத்தைச் சேர்ந்தவர்கள்? சக்கரவர்த்தியின் பெருமை, தானம் பெற்றவர்களின் பெருமை இவைகளை வெகு கவனமாக வானளாவப் புகழ்ந்திருக்கும் இந்தச் சாஸனங்களில் காமகோடி பீடம் என்ற தொடர் ஏன் இடம் பெறவில்லை? இந்தப் பீடம் இவர்கள் உரிமை கொண்டாடுகிறபடி அவ்வளவு பெருமை உடையதாக இருந்திருந்தால் சாஸனம் பொறித்தவர்கள் இந்தப் பெயரைப் பொறிக்காமல் விட்டிருப்பார்களா?

வேறு காஞ்சி சாஸனங்களில் வேறு சில சந்நியாசிகளின் பெயர்களும் காணப்படுகின்றன. துரதிருஷ்ட வசமாக இந்தப் பெயர்கள் கும்பகோணம் மடத்து வரலாற்று ஆசிரியர்களின் கண்களில் படாமல் தப்பி விட்டன போலும்!

விஜய நகர தான சாஸனம் பற்றிய இந்த விஷயத்தை விட்டு விட்டு அடுத்த தான சாஸனத்தைப் பார்க்கலாம். இந்தத் தான சாஸனத்தின் ஆண்டு கோபிநாதராவ் தவறுகக் கூறியபடி சக. 1613 அல்ல. சக. 1633 (கி. பி. 1741) ஆகும். இந்தச் செப்பேடுகளின்

தலைப்பில் பொறிக்கப்பட்டிருக்கும் உருவங்கள் திருவானைக் கோவில் அகிலாண்டேச்வரியும் ஜம்புநாதரும் அல்ல, புதுக்கோட்டை தொண்டைமான் குடும்பத்தின் குலதெய்வங்களான புதுக்கோட்டைத் திருக்கோகர்ணத்தைச் சேர்ந்த பிருகதம்பாளும் கோகர்ணேச்வரருமேயாகும். சாஸன முடிவில் காணப்படும் தொழுகையான—பெரியநாயகி துணை—என்பது தெளிவாக இருக்கிறது. பிருகதாம்பா என்ற ஸம்ஸ்கிருத பதத்தின் மொழி பெயர்ப்புத்தான் பெரியநாயகி.

'ராஜராஜ வளநாடு அல்லது ராஜேந்திர சோழ வளநாட்டின் ஒரு சிறு பகுதியான பன்றிசூழ் நாட்டைச் சேர்ந்த அன்பில் தெக்கலூர் அரையர் குலத்தைச் சேர்ந்த தொண்டைமானின் அதிகாரிகள்' என்று தம்மைப் பற்றித் தானம் அளித்தவர்கள் கூறிக்கொள்கிறார்கள். முன்னைய புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கிழக்குப் பகுதியும் தஞ்சாவூரின் தெற்குப் பகுதியும் இந்த நாட்டைச் சேர்ந்ததாகும். கொளத்தூர் தாலூக்காவைச் சேர்ந்த அம்புக்கோயிலின் பழைய பெயர்தான் அன்பில் என்பது. இது வடக்கு, தெற்கு என்ற இரண்டு பகுதிகளாக இருந்தது. தெற்குப் பகுதிதான் புதுக்கோட்டைத் தொண்டைமான் அரசர்களின் பூர்விக வாசஸ்தலம். திருச்சிராப்பள்ளி ஜில்லா லால்குடி தாலூகாவில் கொள்ளிடத்துக்கு வடகரையில் உள்ள அன்பில் என்ற ஊர்தான் இது என்று கோபிநாதராவும் ராமேசனும் செய்த முடிவு தவருன முடிவாகும். ராமேசனே இன்னும் ஒருபடி முன்னேறி இந்தத் தான சாஸனத்தைத் தொண்டைமான் அன்பில் கிராமத்திலிருந்தே வழங்கினன் என்று கூறுகிருர்!

தானம் வழங்கியவர் தொண்டைமான் அரசர் அல்ல; அவருடைய 'ஊழியக்காரர்களே' ஆவர். தானம் பெற்றவன் (காஞ்சீபுரத்தில் உள்கடை பவனி யிருக்கும்) ஒருவனுகிய வெங்கிட்டையன் என்பவன். தொண்டைமானின் ஊழியக்காரர்கள் ஒரு தர்மஸ்தாப னத்தை நிறுவுகிருர்கள். இதன் விவரங்களே தான சாஸனத்தில் சொல்லப்படுகின்றன. காஞ்சியில் இருந்த கும்பகோணம் மடத்துக் காரியக்காரர் வெங்கிட்டையன் என்று சொல்வதற்கு ஆதாரம் ஒன்றுமே இல்லை. தான சாஸனத்திலும் இது சம்பந்தமான குறிப்பு ஒன்றுமே இல்லை. கோபிநாதராவ் முகமாக வெளியான இந்தத் தவறுதலான செய்தி பலரை ஏமாற்றிவிட்டது. இந்தச் சாஸனத்தை நன்கு ஆராயும் வாய்ப்போ விருப்பமோ இவர்களுக்கு ஏற்படவில்லை. இதில் குறிப்பிட்ட காலம் புதுக்கோட்டைத் தொண்டைமான்கள் அரசாட்சியின் ஆரம்பப் பகுதியைச் சேர்ந்ததாகும். இதற்கு வெகு காலத்துக்குப் பிறகுதான் போஜராஜன் என்ற பெயர் கொண்ட விஜயரகுநாதன் (கி. பி. 1739—1807) புதுக் கோட்டை சமஸ்தானத்துக்கு வெளியே பல இடங்களில் 'தொண்டைமான் பரராஷ்டிர கட்டளை' என்ற பெயரால் பல தர்மஸ்தாபனங்களை நிறுவினன். இந்தத் தானசாஸ னத்தில் பிறவற்ருேடு இரண்டு ஜதை வஸ்திரங்களும் இரண்டு ஜதை புடவைகளும் வருஷந்தோறும் கொடு பட வேண்டும் என்ற வாசகமும் வருகிறது. இந்த வஸ்திரம், புடவைகள் என்ற வாசகத்தைப் பார்த்தபிற காவது தானம் பெற்றவர் ஒரு கிருகஸ்தன் என்பதை இந்த அறிஞர்கள் இருவரும் உணர்ந்திருக்க வேண்டாமா!

இவன் மடத்துக் காரியஸ்தனென்ற முடிவு இவர்கட்கு எப்படிக் கிடைத்ததோ! இதை எழுதும் எனக்குக் கூட இது முன் ஒரு சமயம் மனத்தில் படவில்லை. இந்திய வரலாறு என்ற பத்திரிகையில் (Journal of Indian History Vol. XXIX) நான் எழுதிய ஒரு கட்டுரையில் இதைப் பற்றி நான் சொல்லத் தவறி விட்டேன்.

எனவே இது தொண்டைமான் சாஸனம் அல்ல. இதற்கும் கும்பகோணம் மடத்துக்கும் சம்பந்தம் ஒன்றும் இல்லை; இதன் காலம் சக. 1613-ம் அல்ல; இந்தச் செப்பேடு இந்த மடத்தாரிடம் எப்படிக் கிடைத்தது? முன்பு சொன்ன விஜய நகர சாஸனங்கள் இவர்களுக்கு எப்படிக் கிடைத்தன? என்பது தான் மர்மம்.

அடுத்த சாஸனம் மதுரை விஜயரங்க சொக்கநாத நாயக்கர் சக. 1630 அல்லது கி பி. 1708-ல் லோக குரு ஸ்ரீமத் சங்கராசார்ய சுவாமுல வாருக்கு ஏதோ தானம் செய்ததாகக் கூறுகிறது. இந்தச் சாஸனத்தில் எங்குமே தானம் பெற்றவர் சாரதா மடத்து ஸ்வாமி (காஞ்சி காமகோடி பீடம்) என்பது காணப்படவில்லை. ஸ்ரீ ராமேசமேர இப்படி நிச்சயமாகக் கூறுகிறார் ("ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்"-பக். 23)?

இந்தச் சாஸனத்தின் 16-7 ஆவது வரிகளைப் படித்தால் இந்த ஸ்வாமிகளுக்குத் திருவானைக்கோயிலில் வெகு காலமாகவே ஒரு சொந்த மடம் இருந்ததாகத் தோன்றும். இதைப் பரிசோதித்துப் பார்க்கலாம். முதல் குலோத்துங்க சோழன் ஆட்சியின் 16-ஆம் வருஷம் தொடங்கி (1088) திருவானைக் கோயிலில்

காணப்படும் அவன் சாஸனங்களில் கோயிலின் வடபுறத்தில் ஆரூருடையான் சோழக் கோன் என்பவன் கட்டிய நாற்பத்தெண்ணுயிரம் மடம் என்ற ஒரு மடத்தின் பெயர் வருகிறது. இந்த மடத்துக்குத் திருஞான சம்பந்தர் மடம் என்ற ஒரு பெயரும் உண்டு; ராஜராஜ புரத்தில் உள்ள திருச்சத்தி முதலியார்களுக்கு சொந்தமான மடத்தின் கிளை மடம் இது. (மடத் தலைவர்களை முதலியார் என்று வழங்குவது இவர்கள் சம்பிரதாயம்). இந்த முதலியார்கள் புகழ் பெற்ற பாசுபத சமய ஆசார்யர்களுள் (486 & 487 of 08) ஒருவர் ஆகிய நமசிவாய தேவரின் நேர்ச் சீடர்கள். இந்த '48000 வர்' மடம் இருந்த தெருவுக்குப் 'பொன்வாசி கொண்டான்' தெரு என்ற பெயர் இருந்ததைக் கவனியுங்கள். (பொன்வாசி கொண்டான் என்பது திருஞான சம்பந்தரைக் குறிக்கிறது) இப்போது கும்பகோணம் மடத்தாருக்குச் சொந்தமாக இருக்கும் இந்தக் கட்டடம் முன்பு செல்வாக்கு மிக்க திருச்சத்தி முற்றம் பாசுபத மடத்தின் கிளை ஒன்றுக்கு இருப்பிடமாக இருந்தது.

கி. பி. 1240 ல் திருவானைக் கோயிலில் இருந்த இந்த மடத்தில் திருஞான சம்பந்தர் மடத்தின் இரண்டு ஸ்தாபனங்கள் இருந்தன. இங்கே மிகப் பிரபலமான ஆசார்யரான விச்சேச்வர சிவ என்பவர் தங்கியிருந்தார். அகில நாயகி திருமடம், நடுவில் மடம் என்ற இந்த இரண்டு ஸ்தாபனங்களும் ஒரே ஆசார்ய பரம்பரையின் இரண்டு கிளைகள். இந்த விச்வேச்வர சிவ என்பவர் 'லக்ஷாத்யாயி' அல்லது 'கோலகி சந்தான' த்தைச்

சேர்ந்தவர். இவர்கள் பாசுபதர்களாக இருந்தாலும் வைதிக கர்மாக்களையும் உபநிஷதக் கொள்கைகளையும் பின்பற்றி வந்ததோடு 'சைதன்யமெல்லாம் ஒன்றே' என்பதிலும் நம்பிக்கை உடையவர்கள்.

'பழமை ஆராய்ச்சிப் பத்திரிகை' (Journal of Oriental Research) என்ற பத்திரிகையில் டாக்டர் டி. வி. மகாலிங்கம் என்பவர் சுவாரசியமான ஒரு சாஸனத்துக்கு (135 of 36—7) விமரிசனம் எழுதியிருக்கிறார். ஜம்புகேச்வரர் கோயில் நிர்வாகமும் பூஜை உரிமையும் கைமாறிய செய்தி அதில் கண்டிருக்கிறது.

பல தலைமுறைகளாக இந்த உரிமைகள் பாசுபத லக்ஷாத்யாயி சம்பிரதாய சந்நியாசிகளிடமேதான் இருந்து வந்தன. பிறகு ஒரு சமயம் சந்திர சேகர குரு என்ற சிறந்த கல்விமானை ஒரு கிருகஸ்தரைக் கோயில் நிர்வாகத்துக்கும் பூஜை உரிமைக்கும் நியமித்தார்கள். அது முதல் இந்தக் கோயில் அர்ச்சகர்கள் கிருகஸ்தர்களாகவே இருந்து வருகிறார்கள். பாசுபதர்களின் பட்டப் பெயரான 'பண்டிதர்' என்பதைத் தங்கள் பெயருக்குப் பின் இவர்கள் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். சந்திரசேகர குரு என்பவர் ஏறத்தாழ கி. பி. 1605 ல் காலமானார். சாஸனங்களில் இந்தக் கால வீச்சில் 1714 (Cf. 130 of 36—7) வரை குருமார்களைப் பற்றிய செய்தி காணப்படுகிறது. காலம் குறிப்பிடாத சாஸனம் ஒன்றும் இருக்கிறது. இதன் காலமும் 18-ஆம் நூற்றாண்டாகத் தான் இருக்க வேண்டும். இது வரையில் இந்தக் கட்டடத்தில் இந்தச் சைவ ஆசாரியர்கள் தான் இருந்து வந்தார்கள். இப்போது ஆராயப்படும் செப்பேட்டில்

இந்த மடம் லோக குரு சங்கராசாரியரின் சொந்த மடம் என்று கண்டிருக்கிறது! லோக குருவான சங்கரா சாரிய ஸ்வாமிகளும் இந்தச் சைவ சந்தானத்தைச் சேர்ந்த ஆசாரியர்களும் ஒரே மடத்தில் இருந்திருக்க முடியாது. அப்போது இந்தச் சைவ பண்டிதர்கள் தங்கள் பரம்பரையைச் சேராத யாரையும் குருவாக ஏற்றுக் கொண்டதைக் காட்டும் ஆதாரம் ஒன்றுமே இல்லை.

திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே உள்ள கண்ணனூரைத் தலைநகராகக் கொண்டு தமிழ் நாட்டின் சில பகுதிகளை ஆண்ட ஹொய்சளர்கள் இந்தச் சைவ ஆசாரியர்களை ஆதரித்து வந்தார்கள். வீர சோம நாதன் என்பவன் அகிலாண்டேச்வரி ஜம்புநாதர் கோயிலுக்கு பல திருப்பணிகள் செய்தான். இதன் கீழ்க் கோபுரத்தை **வீரசோமீச்வரம் திருநிலை எழு கோபுரம்** என்று சாஸனங்கள் குறிப்பிடுகின்றன. இந்தக் கோபுர வேலையைத் தொடங்கியவன் முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் ஆவன். இந்தப் பணியை முடித்தவன் சோமேசுவரன். திருவானைக் கோயிலுக்கு உள்ளும் வெளியும் உள்ள பல சிறு கோயில்களைக் கட்டியவர்கள் சோமேச்வரனும் அவன் அதிகாரிகளுமேயாவர். இக் கோயில்களில் ஒன்றின் பெயர் காகதீய கணபதியின் ஆசிரியரும் குருவுமான விச்வேச்வர தேவரைப் பின்பற்றியதாக இருந்தது. இப்போது பிரபலம் அடைந்திருக்கும் முகலிங்கப் பெருமானின் சிறிய கோயில் ‘48000–வர் மடத்துக்கு’ வடக்கே உள்ளது சோமநாதனது ஆஸ்தான அதிகாரியாக இருந்த நீலகண்ட நாயகன் என்பவனால் கட்டப்பட்டதுதான்.

இந்தச் சைவ ஆசாரியர்களின் செல்வாக்கு ஒரு குறை வும் இல்லாமல் விஜய நகர அரசர் காலம், நாயக்கர் காலம் முடிய இருந்தது. கர்நாடக் நவாபுகளின் காலத் தில் கூட இது மங்கவில்லை. இந்த நவாபுகள் கோயில் நில நிர்வாகத்தில் சில மாறுதல்களைச் செய்த போதிலும் திருவானைக் கோயில் ஆலயத்தில் இந்தச் சைவ ஆசாரி யர்களுக்கு இருந்த உரிமை எதிலும் அவர்கள் தலையிட வில்லை. 18-ம் நூற்றாண்டு முடிவு வரை இந்தக் கோயிலில் வேறு எந்தச் சுவாமிக்கும் உரிமையும் இருக்க வில்லை.

இந்தச் சுவாமிகள் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டதாக காணப்படும் கிராமங்களில் கொள்ளிடத்துக்கு வடக்கே உள்ள துறையூர், அரியலூர் ஜமீன்களைச் சேர்ந்த கிராமங்களும் இருக்கின்றன. தொட்டியமும் அதனோடு சேர்ந்த கிராமங்களும் முசிறி என்ற ஊருக்கு அப்பால் உள்ளவை; முசிறி தாலூகாவைச் சேர்ந்தவை. கி. பி. 1688-க்கு உள்ளேயே மைசூர் சிக்க தேவர்ராயன் மதுரை நாயக்கர்களுக்குட்பட்ட இடங்களில் சிலவற்றை மெல்ல மெல்ல ஆக்கிரமித்துக் கொண்டு விட்டான். கருருக்குக் கிழக்கேயிருந்து சேலத்துக்கும் தர்மபுரிக்கும் ஒரு நேர்க்கோடு வரைந்தால் அவனுடைய ஆக்கிரமிப் பின் கிழக்கு எல்லையை இது தோராயமாகக் காட்டும். கி. பி. 1698-க்குப் பிறகு கொள்ளிடத்துக்கு வடக்கே உள்ள மற்ற நிலப்பகுதி எல்லாம் மொகலாயர் வசம் இருந்தது. துறையூர், அரியலூர், வாலிகண்ட புரம், உடையார்பாளையம் முதலிய ஜமீன்தார்கள் மொகலாயர் களுக்கு அடங்கிய, பாதிச் சுதந்தரம் மட்டுமே பெற்ற

அதிகாரிகளாகவே இருந்தனர். அவர்கள் மங்கம்மாளுக்குத் (1689—1706) தொல்லை கொடுக்க முனைந்த போது கர்நாடக சுபேதாரின் பிரதிநிதியாக ஆண்டு வந்த தாவூத்கான் என்பவனிடமும் புதுக்கோட்டை ரகுநாத ராய தொண்டைமானிடமும் அவள் உதவி கோரினாள். (Cf. Heming way & Love). எனவே இந்த இடங்களில் கி. பி. 1708-ல் சொக்கநாத நாயகரின் சாஸனம் எப்படி முளைத்திருக்க முடியும்?

கோபிநாத ராவின் புஸ்தகத்தில் உள்ள ஒன்பதாம் தஸ்தாவேஜு ஒரு ஃபர்மான் (Firman) அல்லது அரசாங்க கட்டளை. இதன் காலம் ஷவ்வால் A.H. 1088. இதற்குச் சரியான கிறிஸ்து வருஷம் மாதம் தேதி: கி. பி. 1677 நவம்பர் 17, சனிக்கிழமை (சக. 1599 பிங்கள மார்க்கசிர. ப. 3). கோபிநாத ராவோ அல்லது அவருக்காக இந்தத் தஸ்தாவேஜைப் படித்த அறிவாளியோ வருஷத்தைத் தவறாகக் (கி. பி. 1710 என்று) கணக்கு எடுத்து விட்டார். இதில் குறிப்பிடப்பட்டுள்ள அரசர் அபுல் ஹஸன் குதுப்ஷா (தானுஷா என்று பிரசித்தி பெற்றவர். 1672–87). இந்தச் சாஸனம் மேலப்பாக்கம் கிராமத்தைத் தானம் கொடுத்தது பற்றிக் கூறுகிறது. இது இப்போது செஞ்சிக்குச் சற்று எட்டத்தில் இருக்கிறது. (செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்தது). காஞ்சி சாரதா மடத்துப் பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரும், சத்யவ்ரதர் முதலிய விருதுகள் உள்ளவருமான பெரியவர் பூஜித்து வரும் சந்த்ர மௌளீச்வரரின் தினசரிப் பூஜைக்குப் பயன்பட என்பது இந்த சாஸனத்தின் வாசகம். இம் மூலத்தின் பாஷைகள் ஸம்ஸ்க்ருதம்,

தெலுங்கு, பெர்ஷியன் ஆகும்; லிபி தெலுங்கு. இந்தச் சாஸனத் தொடக்கத்தில் கணேசர், சாரதா, சம்பு, வராஹர் ஆகிய நான்கு தெய்வங்களின் ஸ்தோத்திரமாக ஸமஸ்கிருத சுலோகங்கள் காணப்படுகின்றன.

இதைக் கண்டவுடனே எழும் முதற் கேள்வி இது தான். 'முஸ்லீம்களின் தான சாஸனம் ஹிந்து தெய்வ தோத்திரத்தோடு தொடங்குவது எங்காவது உண்டா? இந்தச் சுலோகங்களை ஆராய்ந்து பார்க்கலாம்: இந்த மடத்து ஜாபிதாப்படி இந்த மடத்தின் 60-ஆவது பீடாதி பதியாக இருந்த சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி (கி. பி. 1746-83): (1729-89 — வெங்கடேசன் வரலாற்றுப் படி) என்பவர் இயற்றிய கிரந்தங்களுள் ஒன்றுன சிவாஷ்டபதி என்பதிலிருந்து எடுத்தவை முதல் இரண்டு சுலோகங்களும், கி. பி. 1677-ல் கொடுக்கப் பட்ட தான சாஸனம் ஒன்றில் 50 வருஷத்துக்குப் பின்னுல் ஒருவர் எழுதிய சுலோகங்கள் ஸ்தோத்திரங் களாக வருகின்றன! மற்ற இரண்டு சுலோகங்களும் முந்திய விஜய நகர சக்கரவர்த்திகளின் பிரசஸ்தி (மெய்க் கீர்த்தி) களிலிருந்து எடுத்தவை. குதுப்ஷாஹீ (முஸ்லீம்) அரசர் ஒருவர் இவற்றை ஸ்தோத்திரங்க ளாகத் தான சாஸனத்தில் மேற்கொண்டார் என்பதை நாம் நம்ப வேண்டுமாம்!

பத்ராசலம் ராமர்கோயிலிலும், விஜயவாடாவுக்கு அருகில்உள்ள பிரமர மல்லேச்வரர் கோயிலிலும் மற்ற இடங்களிலும் காணப்படும் அபுல் ஹாஸன் என்பவ ருடைய ஃபர்மான் (சாஸனங்கள்)களில்சில தனிப்பட்ட சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன.

(1) அரசர் கட்டளை ஒவ்வொன்றும் பெர்ஷியன் தெலுங்கு (ஹிந்த்வி) ஆகிய இரண்டு பாஷைகளிலும் பிறப்பிக்கப்பட்டன.

(2) பெர்ஷிய லிபி ஷாகிஷ்ட (Shakishtha) நடையில் அமைந்திருக்கும்.

(3) தெலுங்கு பாஷைப் பகுதியில் அரசனது முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும்.

(4) பர்ஷிய பாஷைப் பகுதி இதற்குப் பின்புறம் இருக்கும்.

(5) இதை எழுதுபவரும் மொழி பெயர்ப்பவரும் டபீரும் (Dabi), டபீர் ஹிந்த்வி (Hindvi) யும் ஆவர்.

(6) அரசன் கட்டளை ரெவின்யூ மந்திரியான மதோபஞ்சி (மாதண்ண)க்குத் தெரிவிக்கப்படும்; அவர் அந்தப் பிராந்திய அதிகாரிகளுக்கும் தரஃப்தாரு (Tarafdar) க்கும் தெரிவிப்பார்.

(7) அரசன் முத்திரையில் பின்வரும் வாக்கியம் பெர்ஷிய பாஷையில் இருக்கும். கதம்பில் காயிர் வுஸ் ஸாதத் (Khatam bil khair wus Sadat). இதன் பொருள் 'இது ஒரு நல்ல இன்பகரமான முடிவைப் பெறுகிறது' (ஸஜ்ஜன்லால்) என்பதாம். இந்த மடத்து இந்தச் சாஸனம் இந்த அம்சங்களில் ஒன்றையாவது கொண்டிருக்கிறதா? இல்லையே.

செஞ்சிக் கோட்டையைச் சுற்றியிருந்த பிரதேசம் 1648—1677-ல் சுல்தான் பீஜபூர் அதில் ஷாஹி என்பவனுக்குத்தான் சொந்தமாக இருந்தது. கோல்கொண்டா அரசனான குதுப் ஷாஹிக்குச் சொந்த

மாக இல்லை. (Cf. H. B. Love : 'Vesiges of Old Madras' The Indian Records Series I. P. 463)

1677 மார்ச்சில் சிவாஜி தம் கர்னுடக மாகாணங் களுக்குத் தலைநகராகச் செஞ்சியைக் கொண்டார். (மேல்பாக்கம் செஞ்சிக்கு வெகு சமீபத்தில் உள்ளது). சில மாதங்களுக்குள்ளேயே துங்கபத்திராவுக்கும் காவே ரிக்கும் இடையில் உள்ள கடற்கரைப் பிரதேசம் முழுவ தும் சிவாஜியின் கைக்கு வந்துவிட்டது. அப்துல் ஹாஸன் ஆட்சியில் இல்லை. ஆகையால் இந்தச் சாஸ னம் நம்பத்தக்கதல்ல என்று காட்ட வேறு சாட்சிகள் வேண்டுமா என்ன ?

இதில் காஞ்சியில் உள்ள சாரதா மடம் என்று வேறுவருகிறது! இந்தச் சாஸனமோ இதன் பிரதியோ உண்மை என்று சொல்ல நல்ல துணிச்சல் வேண்டும்!

கோபிநாதராவ் அவர்களின் புஸ்தகத்தில் உள்ள அடுத்த—கடைசி—சாஸனம் சக. 1608, பிரபவ, வைசாக சுத்த 15—சந்திர கிரகணம் 1687 ஏப்ரல் 16 சனிக் கிழமை என்ற காலக் குறிப்பைக் கொண்டது. காஞ்சி சாரதா மடத்துத் தலைவரான சந்திரசேகரேந்திர சரஸ்வதியின் சீடரான மஹாதேவேந்திர ஸரஸ்வதி அவர்கள் ராமா சாஸ்திரி என்ற ஒரு ஹொய்ஸலக பிராம்மணனுக்குப் பூமிதானம் செய்த வரலாற்றை இது கூறுகிறது. இதில் கண்டுள்ள வான சாஸ்திரக் குறிப்பை ஆராய்ந்த L. D. சுவாமிகண்ணு பிள்ளையவர்கள் குறிப்பிட்ட அந்த நாளில் சந்திர கிரகணம் ஒன்றும் இல்லை என்று கூறுகிருர். கோபிநாத

ராவும் பின்வருமாறு கூறுகிறார். "இதில் எழுத்துக்கள் பொறித்திருப்பதில் மிக்க கவனக் குறைவு தெரிகிறது; மிகவும் நவீனமான ஒருவகை நாகரி எழுத்துக்களால் இது அமைந்துள்ளது. எழுத்துருவங்கள் புதிதாக இருக்கின்றன; பிழைகள் மிகப்பல." இவர் கூற்றோடு நாம் பின்வரும் உண்மை ஒன்றையும் கூறலாம். இந்த மடத்து ஜாபிதாப்படியே பார்த்தாலும் 1687-ல் இந்த மடத்துக்குத் தலைமை வகித்த சந்திர சேகர ஸரஸ்வதியின் சீடராக மஹா தேவேந்திர ஸரஸ்வதி என்று யாருமே இருந்ததாகத் தெரியவில்லை இந்த மடத்து ஜாபிதாவில் கண்டபடி அப்போதைய குரு ஆத்ம போதர் அல்லது விஸ்வாதிகர் என்பவருடைய சீடரான பகவன்னும போதரே ஆவர்.

முதல் பாகக் குறிப்புகளுக்குப் போஷணையான சிலசெய்திகளை அடுத்த அத்யாயத்தில் வெகுமகிழ்ச்சியோடு தருகிறோம்.

## அத்தியாயம்—4

### பலர் அபிப்ராயங்களும்—குறிப்புகளும்

*இம்பீரியல் கெஜட்டீர் :*

*மைசூரில் உள்ள சிருங்ககிரியிலிருந்து குமானில் (Kumaun) உள்ள பத்ரிநாத் வரை மடங்களை ஸ்தாபித்த உரிமை அவருக்கே (ஸ்ரீ சங்கரருக்கே) இருந்ததாகத் தெரிகிறது. காஷ்மீர் முதல் நேபால் வரை உள்ள மலைநாடுகளில் அலைந்து திரிவதிலேயே அவர் வாழ்க்கை கழிந்தது. அங்கங்கே கோயில் பூஜை முறையை அவர் ஒழுங்குபடுத்திக் கொடுத்தார்.*

(I. P. 421)

**எச். எச். வில்சன்** (H. H. Wilson) *நாடெங்கும் அலைந்து திரிந்து வந்த இவர் பல மடங்களை ஸ்தாபித்தார்; இவற்றுக்குத் தம் சீடர்களையே தலைவர்கள் ஆக்கினர். இப்படி அமைத்த மடம் ஒன்று இன்றும் சிருங்கேரி அல்லது சிருங்ககிரியில் மேற்குத் தொடர்ச்சி மலையில் துங்கபத்திரையின் உற்பத்தி ஸ்தானத்துக்குச் சமீபத்தில் பிரபலமாக இருந்து வருகிறது. தம் வாழ்க்கையின் முடிவு காலத்தில் இவர் காஷ்மீர் வரையிலும் சென்று பலரை வாதத்தில் வென்று சர்வக்ஞ பீடம், (சரஸ்வதி சிம்மாஸனம்) ஏறினர். பிறகு இவர், ஹிமாலயத்தில் உள்ள பத்திரிகாச்ரமத்துக்கும் முடிவாகக் கேதாரிநாத்துக்கும் சென்று அங்கே சிறு வயதான 32-லேயே காலமானர். அங்கே உள்ள ஜனங்கள் சொல்லும் பழங்கதைகள் அவரது இறுதி வாழ்நாட்களைப் பற்றிய வரலாற்றை நிச்சயமாக்கு*

கின்றன. அவர் ஏறியருளிய சரஸ்வதியின் சிம்மாஸன மான சர்வக்ஞ பீடம் காச்மீரத்தில் இதுதான் என்று அந்த ஊர்மக்கள் இன்றும் சுட்டிக் காட்டுகின்றனர்.

(ஹிந்துக்களின் சமயம் என்பது பற்றி "ஆசிய ஆராய்வுகள்"(Asiatic Researches XVI) என்பதிலிருந்து எடுத்த மேற்கோள். "இந்திய என்ஸைக்ளோ பீடியா"விலும் III பக் 522-ல் இந்தச் செய்தி அடங்கி இருக்கிறது.)

கும்பகோணம்: அத்வைத தர்சனத்தை நிலை நாட்டிய சங்கராசாரியர் அவர்களின் ஒரு கிளை மடம் ஸ்மார்த்த பிராமணர்களைச் சேர்ந்த ஒரு சந்நியாசி இதற்குத் தலைமை வகிக்கிறார். (அதே ஆசிரியர் எழுதிய வியாக்யானம் பக்.206). சிருங்கேரி (Shringairy) ஸம்ஸ்கிருதத்தில் ரிஷ்ய சிருங்ககிரி சங்கரர் ஸ்தாபித்த மடங்களுள் மிக முக்கியமானது. (Ibid. பக். 635)

......மேற்கு மலைத்தொடரின் முனையில் உள்ள சிருங்கேரியில்—அவர் ஒரு சமய ஸ்தாபனத்தை நிறுவினார். அது இன்றும் இருந்து வருவதோடு, இந்தத் தீபகற்ப ஸ்மார்த்தப் பிராம்மணர் எல்லோருக்கும் தலைமை ஸ்தாபனமாகவும் இருந்து வருகிறது. (வில்ஸன்) 'சங்கராசார்யர்' என்றுதாம் எழுதிய புத்தகத்தில் (பக். 73—4) சீதாநாத் தத்தர் மேற் கோளாகக் காட்டுகிறார்.)

ஜே. என். ஃபார்க்குஹார் (J. N. Farquhar): அவர் (சங்கரர்) அத்வைதக் கல்விக்கும் ஆதிக்கத்துக்கும் கேந்திர ஸ்தாபனங்களாக இருக்கும்படி நான்கு

மடங்களை ஸ்தாபித்தார்; மைசூரில் சிருங்கேரி, புரியில் கோவர்த்தனம், துவாரகையில் சாரதா, ஹிமாலயத்தில் உள்ள பத்ரிநாத்தில் ஜோஷி, இந்த நான்கு மடங்களும் இன்றும் பிரபலமாக இருக்கின்றன. இவற்றுக்கு உள்ளடங்கிய மடங்களும் உண்டு ("Outlines of the Religious Literature in India" p. 174)

**சமயம் நன்னெறிபற்றிய அகராதி** (Encyclopedia of Religion and Ethics): *இந்தியா முழுவதிலும் சங்கரர் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். அவருடைய சீடர்கள் பத்துவகை சந்நியாச தர்மங்களை வகுத்தனர்.*

*அவர் இந்தியாவின் நான்கு திசைகளிலும் நான்கு மடங்களை ஸ்தாபித்தார்; தெற்கே உள்ள சிருங்கேரி மலையின்மேல் சிருங்கேரி மடம், மேற்கே உள்ள துவாரகையில் சாரதா மடம், வடக்கே உள்ள பத்ரிகாச்ரமத்தில் ஜோதிஷ் மடம், கிழக்கே உள்ள புரியில் கோவர்த்தன மடம். இந்த மடம் ஒவ்வொன்றின் தலைவரும் ஒரு சந்நியாசி ஆவர். சங்கராசாரியர் என்பது இவர்கள் தாங்கும் பட்டப் பெயர். இந்தப் பட்டப்பெயரோடு அவருக்கே உரிய ஆசிரம நாமமும் சேர்ந்திருக்கும்.*

**எவ்வரி மான்ஸ் என்ஸைக்ளோபீடியா** (Everyman's Encyclopedia): *அவரது வாழ்க்கை முடிவில் அவர் ஹிமாலயத்திலுள்ள கேதார நாதத்துக்குச் சென்று தமது 32-வது வயதில் அங்கேயே காலமானார்* (II p. 84)

ஸர் மானியர் வில்லியம்ஸ் (Sir Monier Williams) ......சங்கராசாரியரின் நான்கு மடங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில்; கோமதி த்வாரகாவில் சாரதா மடம், கர்நாடகத்தில் சிருங்கேரி மடம், கங்கோற் பத்தியின் ஓர் இடமாகிய பத்ரிநாத்துக்குச் சமீபத்தில் ஜ்யோதிர் மடம், புரியில் வர்த்தன (Vardhana) மடம் (பக். 179)

ஹாரஸ் எல். ஃப்ரையர்ஸும் ஹெர்பெர்ட் டபள்யூ ஷ்னைடெரும் (Horace L. Friers and Herbert W. Shneider): கொலம்பியா சர்வகலாசாலை தத்துவ ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்தவர்கள்) எட்டாம் நூற்றாண்டில் ஸ்ரீ சங்கரர் நிலை நாட்டிய குரு பரம்பரைகள் மிகவும் பழமையானவை, பிரபலமானவை. ஸ்தாபகரது நோக்கப்படி இவைகள் இன்றும் சமய அறிவை நாடெங்கும் பரப்பி வருகின்றன. சந்நியாச தர்மத்தில் பல தரங்களை இவைகள் வகுத்திருக்கின்றன. இவற்றுள் பரமஹம்ஸ முறையே மிகவும் உயர்ந்தது. இந்த வகையைச் சேர்ந்த சந்நியாசிகளிலிருந்தே துவாரகா, புரி, சிருங்கேரி, கேதாரநாத் மடத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தென் நாட்டுச் சைவர்களுக்கு நிகரற்ற ஆசார்யராக விளங்குபவர் சிருங்கேரி மடத் தலைவரே ஆவர். (Religion in various cultures p. 108)

ஜே. எஸ்ட்லின் கார்ப்பென்டர் (J. Estlin Carpenter): சீடர்கள் தம்மைச் சூழத் தொடங்கியவுடன் அவர் (சங்கரர்) நான்கு மடங்களை ஸ்தாபித்தார். இவற்றுள் ஒன்று மைசூரில் உள்ள சிருங்கேரி மடம்.

இது இன்றும் பிரபலமாக இருக்கிறது. இதன் தலைவருக்கு நல்ல செல்வாக்கு இருக்கிறது. சங்கரர் காஷ்மீரம்வரை பிரயாணம் செய்ததாகவும் ஹிமாலயத்தில் உள்ள கேதார நாதத்தில் கி. பி. 820- தமது 32-ம் வயதில் காலமடைந்ததாகவும் அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். (Theism in Medieval India p. 309)

**ஸர் சார்லஸ் எலியட் : ஹிப்பர்ட் பிரசங்கங்கள் (Sir Charles Eliot : Hibbert Lectures) இரண்டாம் தொடர் அக்டோ—டிசம் 1919)** : ... ... தம் பிரயாண காலத்தில் பால் (Paul) என்ற ஞானியரைப் போல இவரும் ஆக்க வேலைகளில் முனைந்தார். இப்போது இவர் சிருங்கேரி, புரி, துவாரகை, ஹிமாலயத்திலுள்ள பத்ரிநாத் ஆகிய இடங்களில் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். பத்ரிநாத்துக்குச் சமீபத்தில் இவர் காலமானார். (பக். 209)

**உயர் நீதிபதி கோர்ட்னி டெர்ரெல்—பாட்னா உயர் நீதிபதி (Chief Justice Courtney Terrell— Patna High Court)** : அத்வைத மத ஸ்தாபகரான ஸ்ரீ ஆதி சங்கராசாரியர் இந்தியாவை நான்கு பிரதேசங்களாக வகுத்து, ஒவ்வொன்றுக்கும் சமயத் தலைமை தாங்க ஒவ்வொரு மடத்தை ஸ்தாபித்தார். மேற்குப் பிரதேசத்தில் இப்போதைய பம்பாய் மஹாணம் தோராயமாக அமைந்திருந்தது எனலாம். இங்கே துவாரகையில் சாரதா மடம் அமைத்தார். வட இந்தியாவுக்குத் தலைமை தாங்க ஜோதிர் மடம் ஏற்பட்டது; இப்போது இது இல்லை. கிழக்கு இந்தியாவுக்குக் கோவர்த்தன மடமும் தென் இந்தியாவுக்குச் சிருங்கேரி

**மடமும் ஏற்பட்டன.** (முன் தீர்ப்புக்கு அப்பீல் No. 3 **of 1931. 1936** நவம்பரில் கொடுத்த தீர்ப்பு)

**எட்வின், டி. அட்கின்ஸன்** (Edwin T. Atkinson) **தம் சீடர்களுக்காக** மடங்களை ஸ்தாபித்தார்; மைசூரில் **துங்கபத்ராக்** கரையில் உள்ள சிருங்கேரி மடம். வடக்கே **பத்ரிநாத்**துக்குப் பக்கத்தில் ஜோதிர் மடம் (ஜோஷி **மடம்**); மேற்கே துவாரகையில் சாரதா மடம்; கிழக்கே **ஒரிஸ்ஸாவில்** புரியில் வர்த்தன மடம். தம் வாழ்க்கை **முடிவில்** சங்கரர் காஷ்மீருக்குச் சென்றார். அங்கே **பிற சமய** வாதிகளை வாதத்தில் வென்று வாக் தேவியான **சரஸ்வதியின்** சிம்மாதனத்தில்—சர்வக்ஞ பீடத்தில்—ஏறியருளினார். அடுத்தபடியாகப் பத்ரிக்குச் சென்று இடிந்து கிடந்த நாராயணன் கோயிலைச் சீர்படுத்தினார். முடிவாகக் கேதார் சென்ற அவர் சிறு வயதான 32-ஆம் வயதிலேயே தேக வியோகமானார். —("இந்தியாவின் வட மேற்கு எல்லை மாகாணங்களின் ஹிமாலய ஜில்லாக்**கள்**" : II–XI வடமேற்கு எல்லைமாகாண கேஸட்டீர்–பக் **768**-9:1884)

புஜ்யர் ஏ. ஆர். ஸ்லேட்டர் (Rev. A. R Slater) **பெருமை** மிக்க ஆசாரியர் (சங்கரர்) தம்சமயக் கொள்**கையை** நாடெங்கும் பரப்புவதற்காக நான்குத் திசை**களிலும்** நான்கு மடங்களை ஸ்தாபிக்கத் தீர்மானித்தார். **இதற்கு** இவர் தேர்ந்தெடுத்த இடங்களுள் சிருங்கேரி **ஒன்று**ம், (Q. J. M. S. VI p. 251)

**ஸ்வாமி** தயானந்த சரஸ்வதி (ஆர்ய சமாஜ **ஸ்தாபகர்**): இவர் தாம் எழுதிய "சத்யார்த்தப் பிரகாசம்"

மடமும் ஏற்பட்டன. (முன் தீர்ப்புக்கு அப்பீல் No. 3 of 1931, 1936 நவம்பரில் கொடுத்த தீர்ப்பு)

எட்வின், டி. அட்கின்ஸன் (Edwin T. Atkinson) தம் சீடர்களுக்காக மடங்களை ஸ்தாபித்தார். மைசூரில் துங்கபத்ராக் கரையில் உள்ள சிருங்கேரி மடம். வடக்கே பத்ரிநாத்துக்குப் பக்கத்தில் ஜோதிர் மடம் (ஜோஷி மடம்); மேற்கே துவாரகையில் சாரதா மடம்; கிழக்கே ஒரிஸ்ஸாவில் புரியில் வர்த்தன மடம். தம் வாழ்க்கை முடிவில் சங்கரர் காஷ்மீருக்குச் சென்றார். அங்கே பிற சமய வாதிகளை வாதத்தில் வென்று வாக் தேவியான சரஸ்வதியின் சிம்மாதனத்தில்—சர்வக்ஞ பீடத்தில்—ஏறியருளினார். அடுத்தபடியாகப் பத்ரிக்குச் சென்று இடிந்து கிடந்த நாராயணன் கோயிலைச் சீர்படுத்தினார். முடிவாகக் கேதார் சென்ற அவர் சிறு வயதான 32-ஆம் வயதிலேயே தேக வியோகமானார். —("இந்தியாவின் வட மேற்கு எல்லை மாகாணங்களின் ஹிமாலய ஜில்லாக்கள்" : II-XI வடமேற்கு எல்லைமாகாண கேஸட்டீர்-பக் 768-9:1884)

புஜ்யர் ஏ. ஆர். ஸ்லேட்டர் (Rev. A. R Slater) பெருமை மிக்க ஆசாரியர் (சங்கரர்) தம்சமயக் கொள்கையை நாடெங்கும் பரப்புவதற்காக நான்குத் திசைகளிலும் நான்கு மடங்களை ஸ்தாபிக்கத் தீர்மானித்தார். இதற்கு இவர் தேர்ந்தெடுத்த இடங்களுள் சிருங்கேரி ஒன்றாகும். (Q. J. M. S. VI p. 251)

ஸ்வாமி தயானந்த சரஸ்வதி (ஆர்ய சமாஜ ஸ்தாபகர்): இவர் தாம் எழுதிய "சத்யார்த்தப் பிரகாசம்"

என்ற நூலில் சங்கரர் ஸ்தாபித்த நான்கு மடங்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார்: துவாரகை, ஜோதி மடம், புரி, சிருங்கேரி. வேறு மடம் ஒன்றையும் இவர் குறிப் பிடவில்லை.

**டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் (இப்போதைய நமது ஜனாதிபதி):** அவர் (சங்கரர்) நான்கு மடங்களை ஸ்தாபித்தார். இவற்றுள் முதன்மை பெற்றது மைசூரைச் சேர்ந்த சிருங்கேரியில் உள்ள மடம். கிழக்கே புரியிலும், மேற்கே துவாரகையிலும், ஹிமாலயத்தில் பத்ரியிலும் உள்ளவை. மற்றவை பரம்பரை நம்பிக்கைப் படி. இவர் கேதாரநாத்தில் தமது 32-வது வயதில் தேக வியோகம் ஆனார். (Indian Philosophy II–London; George Allen and Union) "பிரம்ம சூத்திரம்" பக். 28. 1962 ஜனவரி 28-ஆம் தேதி வேங்கடேச்வர சர்வகலா சாலை பேச்சு முதலியவை.

**ஸ்ரீ ஜவஹர்லால் நேரு:** (முந்தியே குறிப்பிடப் பட்டிருக்கிறது)

**ஸ்வாமி நிகிலானந்தர் (விவேகானந்த மடம்; Red Top; Lake George, NewYork):** கேதார் நாத்தில் தமது 32-ஆம் வயதில் தேக வியோகம் ஆவதற்குமுன் சங்கரர் தெற்கே மைசூரைச் சேர்ந்த சிருங்கேரியில் ஒன்றும், கிழக்கே புரியில் ஒன்றும், மேற்கே துவாரகை (கதிய வாடு) யில் ஒன்றும், வடக்கே ஹிமாலயத்தில் ஒன்றான ஜோஷிமட்டுமாக நான்கு மடங்களை ஸ்தாபித்து ஒவ்வொன்றுக்கும் தலைமை தாங்கத் தமது சீடர்களில் சிறந்த ஒருவரை நியமித்தார். அவர் பழமையான வேதம் சொல்லும் சந்நியாசக் குழு ஒன்றை முறைப் படுத்தி இந்தக் குழுவே ஹிந்துக்களின் ஆத்மீக

விஷயங்களில் தலைமை தாங்கும் உரிமை உள்ளது என்று பகுத்துவைத்தார். ("ஆத்ம போதம்" என்ற நூலின் முகவுரை)

தலைமை நீதிபதியான புவனேச்வர் பிரஸாத் ஸின்ஹா (இந்தியாவின் சுப்ரீம் கோர்ட்): பல நூற்றாண்டுகளுக்கு முன் ஆதி சங்கரர் ஸ்தாபித்த நான்கு பீடங்கள். "என் தலைவர்" (My Master என்ற அவர் பேச்சுக்களிலிருந்து—பவன்ஸ் ஜர்னலின் விசேஷ மலர்: 1960 மார்ச் 20)

விஜனகுமார மூகர்ஜி (Bijankumar Mukharjea—formerly Chief Justice of India): தாம் போதித்த அத்வைத தத்வத்தை பலப்படுத்தி ஸ்தாபிப்பதற்குச் சங்கரர் இந்தியாவின் நான்கு திக்குகளில் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். அவை வடக்கில் பதரிநாதத்தில் ஜோதிர் மடம், கூர்ஜரத்தில் சாரதா மடம், தென் இந்தியாவில் சிருங்கேரி மடம், கிழக்கே புரியில் கோவர்த்தன மடம், இவைகளில் தம் சந்நியாசி சீடர்களை தலைமை தாங்க வைத்தார். சங்கரருக்குப் பிறகு, அவர் பெயரையே வைத்துக் கொண்டு பல சீடர்கள் பல இடங்களில் புது மடங்களை நிறுவினர்கள். சிருங்கேரியிலுள்ள ஆதி மடத்திலிருந்து ஆறு கிளை மடங்கள் கிளம்பின. (பக்கம் 24) (இதையே மறுபடியும் 296-ம் பக்கத்தில் சொல்லிவிட்டு தசநாமிகளின் தீக்ஷா நாமங்களை இந்த பிரதம நீதிபதி சொல்கிறார்) 1951-ம் ஆண்டு 'தாகூர் சட்ட பேருரைகள்'—(Tagore Law Lectures: Subject—The Hindu Law of Religious and Charitable Trust)

மற்றொரு பிரதம நீதிபதி ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரி களும் தம் உரை ஒன்றில் ஸ்ரீ சங்கரர் நான்கு மடங் களேயே ஸ்தாபித்தார் என்று சொல்லியிருக்கிறார்.

**டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் :** அவர் ஹிமாலயத்திலும், வங்காளக்குடாவின் கரையிலும், அரபிக்கடலின் கரையிலும் கர்னாடக தேசத்திலும் மடங்களை ஸ்தாபித்தார். (தமது பல நூல்களிலும் பேச்சுக் களிலும் டாக்டர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் இப்படிச் சொல்லியிருக்கிறார்)

தம் கொள்கையைப் பரப்ப ஸ்ரீ சங்கரர் ஸ்தாபித்த மடங்கள் என்று பேசும் போதெல்லாம் டாக்டர் ராமஸ் வாமி ஐயர் ஜோதி (பத்ரி), புரி, சிருங்கேரி, துவாரகை ஆகிய நான்கு மடங்களை மட்டுமே குறிப்பிடுகிறார். 'சங்கரருக்கு வழிபாடு' (Homage to Sankara) என்ற இவர் நூலைப் பாருங்கள்.

**பேராசிரியர் D. S. சர்மா :** இவர் (சங்கரர்) இந்தியாவின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை யாத்திரை செய்தார்; மைசூரில் சிருங்கேரி, ஒரிஸ்ஸா வில் புரி, குஜராத்தில் துவாரகை, ஹிமாலயத்தில் பத்ரி ஆகிய நான்கு இடங்களிலும் நான்கு மடங்களை ஸ்தா பித்தார். ('Hinduism through the Ages' பக் 35)

**ஆர் ஆர். திவாகர் (R. R. Diwakar) :** ஷிமோகா ஜில்லாவில் உள்ள சிருங்கேரியில்தான் ஸ்ரீ சங்கராசாரி யர் (8-ஆம் நூற்றாண்டு) தம் முதல் தர்மபீடம் அல்லது ஆசாரிய பீடத்தை ஸ்தாபித்தார். மேற்கில் துவாரகை, கிழக்கில் புரி, வடக்கில் பத்திரிநாத் இவை இவர் ஸ்தா பித்த வேறுமடங்கள். சிருங்கேரி பீடம் பரம்பரை இடை யறாத ஒன்று; சுரேச்வராச்சாரியர், வித்யாரண்யர்

போன்ற மகனீயர்கள் இங்கே ஆசார்ய பீடம் வகித்திருக்கிருர்கள். (Some Saints and Savants of Karnatak: Indian National Congress Souvenir 1960)

**டாக்டர் ராதா குமுத முகர்ஜி:** இந்தியாவின் நான்கு மூலைகளில் சங்கராசாரியர் நான்கு மடங்களை நிறுவினர்: அவை வடக்கே ஜோதிர் மடம், மேற்கே சாரதா மடம், தெற்கே சிருங்கேரி மடம், கிழக்கே கோவர்த்தன மடம். இவைகளை சங்கரரின் திக்விஜய ஸ்தம்பங்கள் எனலாம். இந்தியாவை வியாபிக்கும் அவர் ஆத்மீக ஸாம்ராஜ்யத்தின் கேந்திரங்களாகும் இவை. ('Who says that India was never united?' 'Bhavan's Journal' pp. 26-7 July 9, 1961)

**டாக்டர் காளிதாஸ் நாக்** (Dr. Kalidas Nag): நான்கு முக்கிய திசைகளிலும் நான்கு மடங்கள்: (ஹேமந்த குமார் ஸென் என்பவர் எழுதிய 'ஆசாரிய சங்கரர்' என்ற நூலுக்கு அனுப்பிய செய்தி) H. K. ஸென்னும் தம் நூலின் பக். 130 ல் இந்த நான்கு மடங்களையே குறிப்பிடுகிருர்.

**வி. நாகமய்யா:** (திருவாங்கூர் மான்யுவால் Travancore Manual Vol. II பக் 97): சங்கரர் ஏற்படுத்திய முக்கியமான மடங்கள் பத்ரிநாத், ஜகந்நாத், சிருங்கேரி, துவாரகை ஆகிய நான்கு மடங்கள் என்றே குறிப்பிடுகிறது.

**ஸீதாநாத் தத்தர் (தத்துவ பூஷண):** இந்த முறையில் அமைந்த பல மடங்களுக்குள் ஆதிசங்கரரே ஸ்தாபித்தவை பின்கண்ட நான்கு என்று தோன்றுகிறது: சிருங்கேரி மலையில் உள்ள சிருங்கேரி மடம், துவாரகை

யில் உள்ள சாரதாமடம், புரியில் கோவர்த்தனமடம், ஹிமாலய பத்ரிகாச்ரமத்தில் உள்ள ஜோதி மடம். ஹிமாலயத்திலுள்ள கேதார்நாத்தில் சிறுவயதான 32-ஆம் வயதிலேயே கி. பி. 820-ல் சங்கரர் காலமானர். ('Sankaracharya' பக்.10—1—Published by the Society for the Resuscitation of Indian Literature, Calcutta 1905).

சமயாசார்யர்களுள் மிக்க பெருமை வாய்ந்தவரும் சமயச் சீர்திருத்தக்காரருமான சங்கரர் பிறந்த ஆண்டு கி. பி. 788-ஆக இருக்கக்கூடும். இவர் வடதிருவாங் கூரைச் சேர்ந்த காலடியில் பிறந்தார். இவர் இந்தியா முழுவதிலும் யாத்திரை செய்ததோடு சிருங்கேரி, புரி, துவாரகை, பத்ரிநாத் இங்குமடங்களையும் ஸ்தாபித்தார். (" The way to the Buddha " VII p. 327 Publication Division, Govt. of India )

டாக்டர் ராமேச சந்திர மஜூம்தார், டாக்டர் H. C. ராய் சௌத்ரி, டாக்டர் காளிகிருஷ்ண தத்தர் : இவரது நிர்வாகத் திறமைக்குச் சாட்சியாய் இன்றும் மைசூரில் உள்ள சிருங்கேரி, காத்தியவாடில் உள்ள துவாரகை, ஒரிஸ்ஸாவிலுள்ள புரி, ஹிமயமலையின் பனி மூட்டத்தில் உள்ள பத்ரி மடங்கள் இருக்கின்றன. (An Advanced History of India II Edn. p. 203)

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி ஐயர் : இவர் கேதார் நாத்தில் தமது 32-ஆம் வயதிலோ வேறு ஒரு சாரார் கொள்கைப்படி 38 ஆம் வயதிலோ காலமானர்.

' இந்த மடங்களை ஸ்தாபித்தவர் ஒரே ஆசாரியர்; இவைகளின் லட்சியமும் ஒன்றே, ஆனாலும் இவைகளுக்

கிடையே நிர்வாக, சமூக, சமய சம்பந்தமான தொடர்பு ஏதுவும் இருந்ததாகவே தெரியவில்லை. ஆனால் இந்த மடங்களுக்குள் ஒன்றுக் கொன்று போட்டி இருந்த தாகவும் தெரியவில்லை; ஒவ்வொன்றும் தன் வேலையைக் கவனிக்கப் போதிய இடம் இந்தியாவில் இருந்தது. தெற்கே மட்டும் கும்பகோணத்தில் ஏற்பட்ட ஒரு மடம் காரணமாக ஒரு பிரிவு ஏற்பட்டது. தஞ்சாவூர் ஜில்லா விலும் சுற்றுப் புறங்களிலும் மட்டுமே இதற்குச் சீடர்கள் ஏற்பட்டனர். இந்தக் கும்பகோணம் மடம் சமீப காலத்தில் தோன்றியிருக்கும் என்று கூறலா மாயினும் இது தோன்றிய ஆண்டை நிச்சயமாகக் கணக்கிட முடியவில்லை: (சங்கராச்சார்யர் G. A. Natesan & Co., முதல் பதிப்பு பக். 71—3; 73-ஆம் பக்கத்தில் பிரசித்தமான நான்கு மடங்களையும் பற்றிய செய்தியைக் காணலாம்.)

**பிரஹ்லாத் சந்திரசேகர் திவான்ஜி** (Prahlad Chandrasekhar Divanji): தமது விஜய யாத்திரையின் போது அவர் (சங்கரர்) பல சிறந்த சீடர்களைத் தேர்ந் தெடுத்தார்; அவர்களுள் சிறந்தவர்களான சுரேச்வரர், பத்மபாதர், தோடகர், ஹஸ்தாமலகர் என்ற நால்வரை யும் தலைவர் ஆக்கி இந்தியாவின் நான்கு திசைகளிலும் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். தென்னிந்தியாவில் சிருங்கேரியிலும், கிழக்கிந்தியாவில் புரியிலும், மேற்கு இந்தியாவில் துவாரகாவிலும் வட இந்தியாவில் பத்ரி காச்ரமத்திலும் இவைகள் அமைந்தன. (மதுசூதனரின் "சித்தாந்தபிந்து" என்ற கிரந்த முகவுரை பக். 72)

**சுவாமி ஆத்மானந்தர்:** ... ... ... கடைசியாகப் பத்ரிநாத், புரி, சிருங்கேரி, துவாரகை ஆகிய நான்கு இடங்களிலும் நான்கு மடங்களை ஸ்தாபித்து இவர் தம்

பணிக்கு ஓர் உருவம் கொடுத்தார். ......... சங்கரர் இந்தியாவின் வடகோடி வரை யாத்திரை செய்து கேதார் நாதத்தில் தேகவியோகம் அடைந்தார். (Sankara's Teachings in His own Words பக். 34—35 Bhavan's Book University.)

எச். சட்டர்ஜி: வடக்கே ஹிமாலயத்தில் உள்ள பத்ரிநாத், தெற்கே மைசூரில் உள்ள சிருங்கேரி, கிழக்கே புரி, மேற்கில் துவாரகை ஆகிய நான்கு இடங்களில் அவர் (சங்கரர்) நான்கு மடங்களை ஸ்தாபித்தார். அவரது சொந்த நாடான தெற்கே ஏற்பட்ட மடமே இவற்றுக்குள் முக்கியமானது. (Brief Survey of Indian History 5-ஆம் பதிப்பு பக். 10)

சி. எஸ். ஸ்ரீநிவாஸாசாரியும், எம். எஸ். ராம சுவாமி ஐயங்காரும்: இந்திய சமயாசாரியார்களுக்குள் அவர் ஞானி பீடர் (St. Peter) போன்றவர். இவர், மைசூரில் உள்ள சிருங்கேரியில் ஒன்றும், காதியவாடிலுள்ள துவார்கையில் ஒன்றும், ஒரிஸ்ஸாவில் உள்ள புரியில் ஒன்றும், ஹிமாலயத்திலுள்ள பத்ரிநாத்தில் ஒன்றுமாக நான்கு பெருமை மிக்க மடங்களை ஸ்தாபித்தார். (பக். 267 A History of India Part I, Hindu India p. 163)

மகாமகோபாத்யாய டாக்டர் பி. வி காணே: பிரபல அத்வைத தர்சன ஆசாரியரான பெருமைமிக்க ஆதி சங்கரர் காலத்துக்குப்பின் மட ஸ்தாபனத்துக்கு ஒரு புதுப்பெருமை ஏற்பட்டது. தமது வேதாந்தக் கொள்கையைப் பரப்புவதற்காக இவர், சிருங்கேரி, புரி (கோவர்த்தன மடம்), துவார்கை (சாரதா மடம்), பத்ரி

(ஜோதிர் மடம்) ஆகிய நான்கு மடங்களை ஸ்தாபித்த தாகப் பரம்பரைப் பேச்சு இருந்து வருகிறது. (History of Dharma Sastra Vol. II 2. பக். 307)

**ஸ்ரீ** சிவானந்த ஸரஸ்வதிகள் (Founder, The Divine Life Society, Rishikesh): இப்போது பன்னிரண்டு நூற்றாண்டுகளாக விளங்கி வரும் சிருங்கேரி பீடம் உலகிலேயே பழமை வாய்ந்த பீடங்களில் ஒன்று. சங்கராசார்யர் நிறுவின நான்கு மடங்களில் இது முந்தியது; மற்றவை புரி, துவாரகா, ஜோஷி மடங்கள். இவை ஒவ்வொன்றும் நான்கு வேதங்களில் ஒன்றை முறையே குறிக்கும் (Sankara and the Sringeri Mutt—Sringeri Temple Kumbhabishekam Souvenir)

**டாக்டர் என். வெங்கடரமணய்யா:** பிராம்மண மடங்களின் ஒருவகை தங்களுக்கு மூலம் ஆதிசங்கரர் அல்லது அவர்கள் சீடர்களுள் ஒருவர் என்று கூறுகின்றன. இந்த வகை மடங்களுள் மிகவும் முக்கியமானது சிருங்கேரியில் உள்ள மடந்தான். இதற்கு மைசூர் ராஜ்யத்தோடு நெருங்கிய தொடர்பு இருந்தது. இந்த மடத்தின் கிளைகள் புஷ்பகிரி, விருபாக்ஷம், கும்பகோணம் ஆக ஸ்தாபிக்கப்பட்டன. (Studies in the History of the Third Dynasty of Vijayanagar பக். 324)

**சுவாமி தபோவன்ஜி:** சங்கரர் இங்கே (கேதார் நாத்) தான் தம் உடலை நீக்கினர். இவர் தமது விஜய யாத்திரையின் போது (காஷ்மீரில் உள்ள) சாரதா கோயிலைத் தரிசித்தார். இங்கே இவர் பல பிரபலமான சமயவாதிகளோடு வாதம் செய்து வென்று சர்வக்ஞ பீடத்தில் ஏறினர். (Himagir Vihar-Wanderings in the Himalayas பக். 42ம் 70—71ம்)

**வாரணசி சம்மேளனங்கள் :** பிரபலமான சந்நியாசிகளும் அறிவாளிகளும் வாரணசியில் (பீஹாரிபுரி மடத்தில்) 1934 செப்டம்பர் 30ஆம் தேதி கூடினார்கள். இவர்கள் சங்கரர் நான்கு மடங்களையே ஸ்தாபித்தார்கள் என்று உறுதியாகக் கூறியதோடு ஆதிசங்கரர் ஸ்தாபித்த முதன்மை பெற்ற மடம் கும்பகோணம் மடம் என்ற பேச்சை அவர்கள் ஏற்கவில்லை. மறுத்தார்கள்.

1886ல் கூடிய பிரபலமான பண்டிதர்கள் கூட்டம் ஒன்றும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஆதி சங்கரர் தாமே ஸ்தாபித்த மடங்கள் நான்குதான். அவை சிருங்கேரி, துவாரகை, ஜோதிர், கோவர்த்தனம் என்பவை தாம் என்று நிச்சயமாகக் கூறியது. சூரத் சம்மேளனம் (Skt. page 50)

**சம்மேளனம் 4-ஆம் கேள்விக்குத் தந்த பதில்** (Skt. page 50)

**கேசரி : புனே : 1898 ஏப்ரல் 16 :** (Skt. p. 50)

மேலேகண்ட மேற்கோளைக் குருநாதர் எழுதிய "சங்கரவிஜய சூர்ணிகை" (நிர்ணய சாகர்பிரஸ் S-1820) யில் காணலாம். பின்கண்டவற்றை அது கிளைமடங்கள் என்று கூறுகிறது. விருபாக்ஷ, புஷ்பகிரி, கும்பகோணம், கூட்லகி, ஸங்கேச்வரம், ஸ்ரீசைலம், ஆவணி. இந்தக் கூற்றுக்கு ஆதாரமாக கேரள "கோகில"த் (V. 5 பக். 97–9)தையும், The Light of the East Calcutta July 1894 யும் இது காட்டுகிறது.

தாம் எழுதிய "கேரளீய ஸம்ஸ்க்ருத ஸாகித்ய சரித்திரம்" என்ற நூலில் வடக்கன்கூர் ராஜராஜவர்மன் என்பவர் இந்த நான்கு பிரபல மடங்களின் பெயர்களையே குறிப்பிடுகிறார். (திருவனந்தபுரம் — கமலாலயப் புக் டிப்போ கொல்லம் ஆண்டு 1113)

சுவாமி ரங்கநாதானந்தர்: பத்து சந்நியாச முறைகளை ஏற்படுத்தி ஆதிசங்கரர் தம் மதப்பிரசார வேலை தொடர்ந்து நடக்க வழிவகுத்தார். இவர்கள் பரமஹம்ஸ பரிவ்ராஜகர் எனப்படுவர். நாடு முழுவதிலும் யாத்திரை செய்து மதப் பிரசாரம் செய்வது இவர்கள் வேலை. இதுமட்டுமன்றி இந்தியாவின் நான்கு திசைகளிலும் இவர் நான்கு மடங்களையும் ஸ்தாபித்தார். இந்த மடங்களுக்குத் தலைவர்களாக நல்ல அறிவும் ஒழுக்கமும் ஞானமும் படைத்த சந்நியாசிகளை அமர்த்தினார். தெற்கே சிருங்கேரியிலும், கிழக்கே புரியிலும், மேற்கே துவாரகையிலும் வடக்கே பத்ரிநாத்திலும் இந்த மடங்கள் ஏற்பட்டன. இவரது தூரதரிசனமும் இந்தியாவின் பூகோள, கலாசார ஒற்றுமை பற்றிய இவரது நோக்கமும் இந்தச் செயல்களால் நன்கு விளங்குகின்றன. (Eternal values for a changing Society பக். 91)

சுவாமி ராஜேச்வரானந்தர்: கல்விக்கும் ஆத்ம போதத்துக்கும் இருப்பிடமான பெருமைமிக்க ஸ்தாபனங்களாக இந்தியாவின் நான்கு திசைகளிலும் இவர் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். (Thus Spake Sankara பக். 9)

சுவாமி அதுலானந்தர்: கடைசி யாத்திரை தொடங்கியது. சங்கரர் ஹிமயமலைக்குள் புகுந்தார். பனிபடர்ந்த சிகரத்தின் அடிவாரத்தில் தம் சீடர்களை ஆசீர்வதித்த சங்கரர் தம்மை இனித்தொடர வேண்டாம் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். இவரைப் பற்றிய கடைசிச் செய்தி இதுதான். இதற்குப் பிறகு

யாரும் இவரைப் பார்க்கவில்லை. ("வேதாந்த கேசரி" 1927—8 சங்கரர் வாழ்க்கை வரலாறு பக். 477)

**ஆர். என். தண்டேகர் (R. N. Dandekar):** ஏகாத்மவாதியும் கூரிய அறிவுமிக்க சந்நியாசியுமான சங்கரர், சமயப் பிரச்சாரம் நடக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, இந்த நாட்டின் நான்கு திசைகளிலும் நான்கு மடங்களை ஸ்தாபித்தார். ஆத்மீக வாழ்வின் நோக்கம் என்ன என்பதை இந்தப் பணியே விளக்குகிறது. ("கல்யாண கல்பதரு" Vol. 16—1950—1 பக். 458—63)

**திலீப்குமார் ராயும் இந்திரா தேவியும்:** வடக்கே ஜோதிர் மடம், தெற்கே சிருங்கேரி மடம், கிழக்கே கோவர்த்தன மடம், மேற்கே சாரதா மடம் ஆகிய நான்கு பிரபலமான மடங்களையும் இவர் முதலில் ஸ்தாபித்தார். ('Kumbha' India's Ageless Festival: Bhavan's Publication)

**தொழுவூர் வேலாயுத முதலியார் (ராமலிங்க சுவாமிகளின் சீடர்):** இவர் நான்கு மடங்களையே குறிப்பிட்டிருக்கிறார். தமிழ்ச் சங்கர விஜயம் (1879-1913)

**சி. ஆர். பட்டாபிராமன்:** கோவிலுக்கும் (கேதார்நாத்) பின்னால் சில மைல்களுக்கு அப்பால் நீர்வீழ்ச்சி தெரிகிறது. இந்த நீர்வீழ்ச்சிக்கு மேலே பிரம்ம குகை இருக்கிறது. இந்த குகைக்கு இடது புறம் பிரபலமான மஹாபந்தா (Maha Pantha) இருக்கிறது ......... ஸ்ரீ சங்கரர் தமது 32-ஆவது வயதில் இந்தப் பாதை வழியே சென்றுதான் மறைந்தார். சங்கரர் ஸ்தாபித்த நான்கு மடங்களுள் பல வருஷ காலம்

செயலற்றிருந்த இந்த மடம் (ஜோதிர்மடம்) திரும்பவும் செயலாற்றத் தொடங்கியிருக்கிறது. (Bhavan's Journal VI No. 9 பக். 33)

**எஸ். அருண் :** கேதார நாதரின் ஆலயம் எடுப்பாக அமைந்திருக்கிறது. கோவிலை அமைத்தவர் ஆதிசங்கரர். அவருடைய சமாதி இங்கே இருக்கிறது. அமைதி கண்டதால்தான் சங்கரரும் அங்கே சமாதி அடைந்தாரோ! ("மஞ்சரி"—பிலவ—பங்குனி பக். 92 "நவ இந்தியா"வில் வெளிவந்த கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது.)

**சுவாமி சுத்தானந்த பாரதி :** இந்தியா எங்கும் மைய ஸ்தானங்களில் சங்கரர் மடங்களை ஸ்தாபித்தார். இவற்றுள் முக்கியமானது மைசூரில் உள்ள சிருங் கேரியில் இருக்கிறது. இதற்குச் சாரதா பீடம் என்று பெயர். புரி, துவாரகை, பத்ரிநாத் இங்கே உள்ளவை. மற்ற முக்கியமான மடங்கள் (The Illustrated Weekly of India May, 27, 1962)

**வி. சுப்ரமண்ய ஐயர் :** இவர் (சங்கரர்) இந்தியாவின் நான்கு பிரதான திசைகளிலும் நான்கு 'காலேஜ்களை' (சமய பீடங்களை) ஸ்தாபித்தார். பத்ரிநாத், ஜகந்நாத், சிருங்கேரி, துவாரகை. இவை நாடு முழுவதற்கும் ஆத்மிகத் தலைமை தாங்கின. (The Philosophy of Truth or Tattvagnana—பக். 339)

**அபிதான சிந்தாமணி—பக். 1064 :** சங்கராசாரியர் மடம் : ஆதிசங்கரர் முதலில் நாற்றிசைகளுக்கும் நான்கு மடங்கள் ஸ்தாபித்தார். அவை வடக்கு, அரித்வாரம், கிழக்கு ஜகந்நாதம், தெற்கு சிருங்ககிரி

மேற்கு துவாரகைகளாம். இவைகளில் சிறந்தது சிருங்க கிரியாம். சிருங்ககிரியின் கிளைமடம் விருபாக்ஷமாம். வித்யாரண்ய சுவாமிகள் காலத்தில் புஷ்பகிரி மடம் உண்டாயிற்றென்பர். பின்னிருந்தவர்களால் கும்பகோணம், ஆவநி, சிவகங்கை, காகர்ல (கரவீர) மடங்கள் உண்டாயின.

**T. A. சுவாமிநாதையர்:** காச்மீர தேசம் விஜயம் செய்து, ஸர்வக்ஞ பீடம் ஏறி அதனை அலங்கரித்தார். (பக். 47). பூசுரோத்தமரான சுரேசுவரர், பதும பாதர், அஸ்தாமலகர், தோடகர் என்னும் நான்கு முக்கிய சீடர்களையும் முறையே சிருங்கேரி, துவராபதி, ஜகந்நாதம், பதரி க்ஷேத்திரம் என்னும் நான்கு இடங்களிலும் உள்ள மடங்களில் வீற்றிருந்து அத்வைத மதத்தைப் போதித்து வருமாறு நியமனம் செய்தார். பின்பு இவர் இமய மலையிலுள்ள குகைக்குள் பிரவேசித்துத் தம் நிஜரூபத்தோடு திருக்கைலைக்கு எழுந்தருளினர். ("ஆசாரிய சரித்திரமாலை" : ஸ்ரீமத்சங்கராசாரியர்)

**எம். ராதாகிருஷ்ண பிள்ளை:** ஆதிசங்கராசாரியர் ஸ்தாபித்த மடங்கள் நான்கு. அவை முறையே பத்ரி, புரி, சிருங்கேரி, துவாரகா என்ற நான்கு இடங்களில் உள்ளன. ("வடநாட்டுத் தலங்கள்" பக். 45)

**கலைக் களஞ்சியம் : தொகுதி 4 பக்கம் 684-5:** ஆதிசங்கராசாரியார் அத்வைத மதத்தையும் வைதிக நெறியையும் மக்களுக்கு எப்போதும் போதிப்பதற்காகப் பாரத நாட்டின் நான்கு திக்குகளிலும் நான்கு மடங்களை நிறுவினர். அவற்றுள் தென்னிந்தியாவில் மைசூர் நாட்டில் துங்கா நதிக்கரையில் உள்ள சிருங்கேரியில்

நிறுவின மடம் ஒன்று. பாரத நாட்டில் இமையம் முதல் குமரிவரை பிரசித்தமான பல இடங்களில் இம்மடத்தின் கிளைகள் உண்டு.

x x x

19-ஆம் நூற்றுண்டில் கும்பகோண மடத்து ஆசாரியர்கள் தென்னுடெங்கும் யாத்திரை செய்யத் தொடங்கினர்கள். சில தெற்குச் சமஸ்தானங்களில் இவர்களுக்குச் சிலசில மரியாதைகள் கிடைத்தன.

1843-ல் கூட்லிமட ஆசாரியர், சிருங்கேரி மடத்துக்கு ஹைதராபாதில் காட்டப்படும் மரியாதைகள் தமக்கும் காட்டப்பட வேண்டும் என்று உரிமை கொண்டாடினர். கூட்லி மடத்தினரின் இந்த உரிமை விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்ய முதல்மந்திரி ஒரு பஞ்சாயத்தாரை நியமித்தார். இவர்கள் கொடுத்த அறிக்கைப்படி அரசாங்கம் பல ஃபர்மான் (Firman)—கட்டளைகளை —பிறப்பித்தது. 1843 அக்டோபர் 16, ரம்ஜான் 9, A. H 1260, முகரம் 11 A. H. 1260, ரபிசானி A. H. 1261 முதலிய தேதிகளில் சிருங்கேரி மடத்து மரியாதைகளைப் பெற கூட்லி மடத்துக்கும் வேறு சிறிய மடங்களுக்கும் உரிமை இல்லை' என்று இவற்றில் கண்டிருந்தது. சிறிய மடங்கள் என்ற ஜாபிதாவில் கீழ்க்கண்ட பெயர்கள் இருந்தன: சிவகங்கை, ஆவணி, புஷ்பகிரி, விரூபாக்ஷ, கும்பகோணம், கார்வார், ராமசந்திரபூர், தீர்த்தராஜபூர், ஹரிஹர்பூர், பண்டிகடே (Bandegade) முல்பாகல்.

யானை அம்பாரியில் சப்தகலசம் உபயோகிக்கவும், அட்ட பல்லக்கை உபயோகிக்கவும் தமக்கு அனுமதி தர வேண்டும் என்று கும்பகோணம் மடத்தார் கேட்ட

போது மைசூர் அரசாங்கத்து முஸ்ரை இலாகா இவற்றை அனுமதிக்க மறுத்துவிட்டது. (Pol. 109—MF. 351ட—27) இந்த மரியாதைகளும், மைசூரிலும் பெங்களூரிலும் 21 குண்டு மரியாதைகளும் சிருங்கேரி மடத்துக்கு மட்டுமே சிறப்பாக உரியவைகள் ஆகும்.

மேலே கண்டது போன்ற மேற்கோள்களை எவ்வளவு வேண்டுமானாலும் காட்டமுடியும். இவற்றைக் காட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டதற்குக் காரணம் பின்கண்டதுதான். இந்த மடத்துச் சீடர்களும் இதனிடம் அபிமானம் உடயவர்களும் இந்த மடத்தைப் பற்றிச் சொல்லும் விஷயங்களுக்கு நல்ல விளம்பரம் கொடுத்து வருகிறார்கள். இந்த விளம்பரங்களில் உள்ள உண்மையை சரியாக அறிய உதவ வேண்டும் என்பதே நாங்கள் இந்த மேற்கோள்களைக் கொடுப்பதன் நோக்கமாகும். நாங்கள் மேலே காட்டிய நூலாசிரியர்களில் பெரும்பாலோருக்கு கும்பகோணத்தின் மடத்தின் மேல் வெறுப்போ மற்ற நான்கு மடங்களின் மேல் விருப்போ இருக்க நியாயம் இல்லை; நூல்களும் அப்படியே. கும்பகோணம் மடத்தார் பிரசாரம் செய்து வரும் முக்கியமான மூன்று விஷயங்களை மறுக்கக்கூடிய இந்திய, மேனாட்டு அறிவாளிகளில் முக்கியமானவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் வாக்கிலிருந்து வந்த செய்திகளையே மேற்கண்ட மேற்கோள்கள் காட்டுகின்றன. (1) கும்பகோணம் மடத்தை ஸ்தாபித்து அதற்கு முதல் ஆசாரியராக இருந்தவர் ஆதி சங்கரர் (2) சங்கரர் சர்வக்ஞ பீடம் ஏறியது காஞ்சியில் (3) சங்கரர் விதேக முக்தி அடைந்தது காஞ்சியில் என்பவைகளே ஆட்சேபிக்க வேண்டிய மூன்று முக்கியமான பிரசார விஷயங்கள்.

என். ராமேசன் எழுதிய 'ஸ்ரீ சங்கராசாரியார்' என்ற நூலின் 'C' ஏன்ற பிற்சேர்க்கையும் (பக்.165-66) உத்தரப் பிரதேச முதல் மந்திரியான சம்பூர்ணனந்தரும் புதை பொருள் ஆராய்ச்சித் துறையின் ஜாயின்ட் டைரக்டராயிருந்த டி. என். ராமசந்திரனும் கையொப்ப மிட்டு 1952 ஜுலை 7-ம் தேதி 'ஹிந்து' பத்திரிகையில் வெளியிட்டதாகக் காட்டப்படும் ஒரு வேண்டுகோளும் வெகு சாமர்த்தியமாக அமைந்த இரண்டு தஸ்தாவேஜுகள்! இது இருவரும் சேர்ந்து வெளியிட்ட வேண்டுகோள் அல்ல. சம்பூர்ணனந்தரின் அறிவிப்பும் அதைப் பற்றி ஸ்ரீ டி. என். ராமசந்திரனும் சுவாமி அனந்தானந்தரும் சொன்ன அபிப்ராயமுமே இது. கேதாரநாத் கோயிலுக்கு அருகிலே உள்ள 'ஸ்ரீ ஆதி சங்கரர்' சமாதி என்று சொல்லப்படும் இடம், உண்மையில் அவர் உடலை விட்டு மறைந்த இடம் அல்ல. இது அவருடைய ஞாபகார்த்தமான ஒரு சின்னந்தான். எனவே இவர் மறைந்த இடத்தைக் குறிக்க வேறோர் இடத்தைத்தான் தேட வேண்டும் என்று சம்பூர்ணனந்தர் சொன்னதாக நாமெல்லாம் நம்ப வேண்டுமாம்! இந்த மடத்தார் கொள்கைப்படி தான் இவர் மகா சமாதி அடைந்த இடம் காஞ்சி காமாக்ஷி கோயிலுக்கு உள்ளே ஆயிற்றே! வேறோர் இடத்தைத் தேடுவானேன்? இந்த இரண்டு அறிவிப்புகளின் சாமர்த்தியமும் உச்சநிலையை அடைவது சுவாமி அனந்தானந்தரின் வேண்டுகோளோடு இந்த அறிவிப்புகளை இணைத்துப் பார்க்கும் போது தான்! "காமகோடி, சிருங்கேரி ஆச்சாரியர்களின் தலைமையில் தென்னாட்டு மக்கள் முனைந்து மகாஞானிய சங்கரருக்குக் கேதாரநாத்தில் உறுதியான அழியாத ஒரு நினைவுச்

சின்னம் ஸ்தாபிக்க் பிரயத்தனம் செய்ய வேண்டும்!" என்பதே இந்த ஆச்சரியமான வேண்டுகோள்!

சங்கரர் என்ற சொல்லோடு 'அவர் சமாதி' என்ற தொடரை இணைத்துச் சொல்வதையே மகா பாப மாக நினைப்பவரில் ஒருவர் டாக்டர் சம்பூர்ணனந்தர். சங்கரர் சாதாரண மக்களைப் போல மரணம் அடைய வில்லை என்பதே அவரது உறுதியான நம்பிக்கை 'தம் குருநாதரான ஸ்ரீ கோவிந்த பாதரிடமிருந்து தீக்ஷை பெற்றவுடனே அவர் (சங்கரர்) பந்தத்திலிருந்து விடுதலை பெற்றிருக்க வேண்டும்' என்று சம்பூர்ண னந்தர் தம் நண்பர் ஒருவருக்கு எழுதியிருக்கிறார். முடிவில் 'மனித உருவை நீக்கி எங்கும் நிறைந்த பரப் பிரும்மத்தோடு கலந்து விட்டார்' என்பதே அவர் கொள்கை. அவர் கூற்றிலிருந்து அறிவாளி எவனும் இந்த முடிவுதான் அவருடையது என்று நினைப்பான். 'சங்கரர் கேதாரத்தில் ஒருமுறை மறைந்துவிட்டார். பிறகு திரும்பவும் காஞ்சியில் தோன்றினர் (இதென்ன கிறிஸ்தவர் கூறும் Resurrection அல்லது திரும்பத் தோன்றுதலா ?) —தம் உடம்பை ஒரு கோயிலுக்குள் அடங்கச் செய்வதற்காக' —என்று டாக்டர் ஸம்பூர்ண னந்தர் சொல்லியிருக்கவே மாட்டார்; என்றும் சொல்ல வும் மாட்டார்; இது அவர் கொள்கை அல்ல. "சங்கரர் கேதாரநாத்துக்கு வந்தார், தற்கால மொழிப்படி அங்கே மறைந்து விட்டார்" என்றும் ஜனவாக்குப்படி "அங் கிருந்து அவர் கைலாசம் சென்றார்" என்பது ஸ்ரீ சம்பூர் ணனந்தர் சொன்னதன் பொருள் 'சங்கரர் அங்கிருந்து (கேதார்நாத்திலிருந்து) காஞ்சிக்குச் சென்று அங்கே

தேகவியோகமானார். 'அவர் சமாதி அங்கே எழுந்தது' என்ற பொருளிலிருந்து முற்றும் வேறுபட்டதல்லவா அவர் கூற்றின் பொருள்? காலஞ்சென்ற M. S. M. சர்மா அவர்களுக்கும் வேறுசில நண்பர்களுக்கும் டாக்டர் சம்பூர்ணனந்தர் எழுதிய கடிதங்களில் தம் கருத்து எது என்பதை விளக்கமாகக் கூறியிக்கிறார். சர்மா அவர்கள் டாக்டர் சம்பூர்ணனந்தர் தமக்கு எழுதிய கடிதத்தை 'ஸெர்ச் லைட் (The Search light)' என்ற பத்திரிகையில் பிரசுரித்திருக்கிறார்.

கேதார்நாத்தில் உள்ள ஞாபகச் சின்னத்தைப் பற்றித் துவாரகாபீட சங்கராசாரியாருக்கு எந்தவிதச் சந்தேகமும் ஏழவே இல்லை. இந்த விஷயமாக அவர் எழுதிய கடிதத்தில் (கட்டுரையில்) ஸ்ரீ சங்கராசார்ய கைவல்யதாமா (Sri Sankaracharya Kaivalya Dhama) என்ற தொடரை அவர் உபயோகிப்பது இந்த விவாதத்துக்கு முடிவுகட்டி விடுகிறது. கேதார்நாத் ஞாபகச் சின்னத்தின் பெருமையை உள்ளது உள்ளபடி காட்டுகிறது இவருடைய இந்தத் தொடர்.

நைனிடாலில் ஒரு கூட்டம் நடந்தது. இதற்குத் துவாரகாபீட் ஜகத்குரு அவர்கள் தலைமை தாங்கினார்கள். காலஞ்சென்ற கோவிந்தவல்லபபந்த், டாக்டர் சம்பூர்ணனந்த், டாக்டர் கே. என். காட்ஜூ, ஆசார்ய ஜுகல்கிஷோர் போன்ற உயர்பதவிவகித்த மேதாவிகள் இதில் கலந்துகொண்டனர். கேதாரத்தில் இப்போதைய ஞாபகச் சின்னத்தை, எல்லோருக்கும் விளங்கும் சொல்லான சமாதியை, எந்த வகையிலும் மாற்றுவதும் இடம் விட்டுப் பெயர்ப்பதும் கூடாது. ஆனால் அந்த மகானின்

பெருமைக்குத் தக்க சிறந்த ஞாபகச் சின்னம் ஒன்றை அதைச் சுற்றிக் கட்ட வேண்டும்', என்று தீர்மானிக்கப் பட்டது. இதற்குப் பிறகு அந்த இடத்தைச் சென்று தரிசித்த கவர்னர் வி. வி. கிரி அவர்கள், 'இந்த ஞாபகச் சின்னம் எழுப்பும் வேலையை விரைவில் செய்யுங்கள்' என்று பொதுமக்களைக் கேட்டுக் கொண்டதாகவும் தெரிகிறது. சங்கரர் மறைந்த இடம் கேதார்நாத் தான் என்று குலபதி K. M. முன்ஷி அவர்களும் திடமாகச் சொல்கிருர். சங்கர பக்தர்கள் எல்லாம் இந்த ஞாபகச் சின்ன வேலையில் ஒத்துழைக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளைத் துவாரகை ஆசாரியர் வெளியிட்டார்கள். நைனிடாலைச் சேர்ந்த வித்யானந்த ஸரஸ்வதி சுவாமி அவர்கள் பல தெய்விகப் பணிகளில் ஈடுபடும் பெரியவர். பத்திரி—கேதார்நாத் கோயில் நிர்வாகக் கமிட்டியில் இவர் அங்கம் வகிக்கிருர். இவர் படிப்பவர் உணர்ச்சிகளைக் கிளரும் வகையில் இந்தக் கைவல்ய தாமாவைப் பற்றி ஒரு சிறு பிரசுரம் வெளியிட்டிருக்கிருர். 'காஞ்சீதான் சங்கரர் சமாதியான இடம்' என்று தெற்கில் நடக்கும் பிரசாரத்தை இதில் இவர் கண்டித்து வருத்தத்தோடு எழுதுகிருர். இந்தப் பிரசாரம் 'ஆதி ஆசாரியரின் ஞாபகத்துக்கே துரோகமாகும்' என்று அவர் கூறுகிருர். (அவர் உபயோகிக்கும் வாசகத்தின் தீவிரத்தைக் குறைத்தே நாங்கள் இங்கே எழுதியிருக்கிருேம்) இந்த விஷயத்தில் இனி சந்தேகம் ஏற்படாமலிருக்கும்படி துவாரகா மட ஜகத்குரு அவர்கள் கேதார கைவல்யதாமாவில் ஸ்ரீ சங்கரரின் மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து வைத்தார்கள்.

கும்பகோணம் மடத்துச் சீடர்களுள் ஒருவராகிய மணக்கால் வி. சுந்தரம் ஐயர் தம் சங்கர விஜயத்தில் இப்படிச் சொல்கிருர்.

(பக் 117-ல்) பிறகு பரமசிவன் தரிசனர்த்தமாக கேதாரம் போனசமயம் ஸ்ரீசங்கரர் மனுஷ்ய சரீரத்தை நீக்கி பரமசிவனது திரு ஜோதிஸ்வரூபத்துடன் கலந்து ஐக்கியமானர்.

**திருக் கேதார பத்ரிநாத் யாத்திரை என்ற தம் புத்தகத்தில் சிதம்பரம் R. கிருஷ்ணசுவாமி ஐயரும் இப்படியே சொல்கிருர் :** கேதார்நாத்தில் ஸ்ரீ ஆதி சங்கரரின் ஜீவசமாதி என்று சுருக்கமாக ஒரு பகுதி இதில் இருக்கிறது. (பக். 33) இந்தப் பக்கத்துக்கு எதிர்ப் பக்கத்தில் கேதார்நாத் சமாதியின் படம் ஒன்று இருக்கிறது. கும்பகோணம் மடத்து இப்போதைய ஆசாரியார் அவர்களின் ஸ்ரீமுகமும் ஆசியும் இந்தப் புத்தகத்தை அலங்கரிக்கின்றன என்பது கவனிக்க வேண்டிய விஷயம்.

இந்த அத்தியாயத்தில் நாம் காட்டியுள்ள மேற்கோள்கள் சிலவற்றுள் சிருங்கேரிக்கு முக்கியத்வம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சங்கரர் ஸ்தாபித்த நான்கு மடங்களில் ஒன்றை உயர்த்தியும் மற்றொன்றைத் தாழ்த்தியும் கூறுவது எங்கள் நோக்கம் அல்ல.

# அத்தியாயம்—5

## வேறு சில விஷயங்கள்

'Life and Times of Sankara' என்ற தம் நூலில் ஸ்ரீ C. N. கிருஷ்ணசாமி ஐயர் பின்வருமாறு கூறுகிறார்: 'கும்பகோணம் மடம் மற்ற மடங்களுக்குப் பின்னல் ஏற்பட்டதாகத்தான் இருக்கவேண்டும் என்று தோன்று கிறது. ஆனல் இதன் காலம் இன்னும் வரையறுக்கப்பட வில்லை." இந்த கூற்றைச் சற்று ஆராய்ந்து பார்க்கலாம்.

இந்திர சரஸ்வதி என்ற பட்டம் வகித்தவர்களுள் கீர்வாணேந்திர ஸரஸ்வதி என்பவர் முதல்வராகவோ அல்லது முதல் சிலருள் ஒருவராகவோ இருக்க வேண் டும் என்று தோன்றுகிறது. இவர் 16-ஆம் நூற்றாண் டைச் சேர்ந்தவர். நமக்குத் தெரிந்த இந்திர சரஸ் வதிகள் எல்லோரும் இவருக்குப்பின் வந்தவராகவே இருக்கவேண்டும். வாசுதேவ சரஸ்வதியும் அவர் சீட ரான ராமசந்திரேந்திர சரஸ்வதியும் (உபநிஷத் பிரம் மேந்திரர் என்பது இவரது பிரசித்தமான பெயர்) 17-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். அப்பைய தீக்ஷிதர் கிரந்தம் ஒன்றுக்கு வியாக்கியானம் எழுதிய கங்காதரேந் திர ஸரஸ்வதியும் இந்த நூற்றாண்டைச் சேர்ந்தவராகத் தான் இருக்க வேண்டும். இந்திர சரஸ்வதிகளுக்குள் காலத்தால் முற்பட்டவர்கள் இவர்கள்.

இந்திர சரஸ்வதி என்ற பட்டம் கிடைத்த வரலா ருகச் சொல்லும் கட்டுக்கதை—பச்சாத்தாபம் கொண்ட இந்திரன் இதைச் சங்கரருக்குக் கொடுத்தான் என்ற கதை—ஒருபுறம் இருக்கட்டும். வைத்தியநாத தீக்ஷி தீயம், ராமானந்தீயம், யதிதர்ம ப்ரகாசிகா, மடாம்நாயம்

என்ற பிரபல மட சம்பந்தமான தர்மசாஸ்திரம் எதிலும் இந்திர ஸரஸ்வதிப் பட்டம் பெற்ற சந்நியாசிகளைப் பற்றிய பேச்சையே காணவில்லை. ஆனால் இந்தத் தீக்ஷா நாமத்துக்கு விளக்கம் யதிதர்ம நிர்ணயம் என்ற கிரந்தத்தில் காணப்படுகிறது. (skt. matter p. 59). யாராவது ஒரு யதியின் சொந்த விருப்பம் காரணமாக ஒரு சம்பிரதாயம் தொடங்குவது உண்டு; இந்திர சரஸ்வதி சம்பிரதாயம் இப்படித்தான் ஏற்பட்டிருக்க வேண்டும்.

காஞ்சி நகரத்திலும் சுற்றுப் புறத்திலும் பல சம்பிரதாயங்களைப் பின்பற்றும் யதிகள் 12–13 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்துவந்தார்கள் என்பதை காஞ்சி கோயில் சிலாசாஸனங்கள் காட்டுகின்றன. இவர்கள் ஒவ்வொருவரும் தம் தம் மடங்களில் வாழ்ந்து சீடர்களை சேர்த்துக் கொண்டனர். அத்வைதத்தை ஏற்றுக் கொண்டவர்களுள் பெரும்பாலோர் சைவர்கள் அல்லது சாக்தர்கள். இவர்கள் தானம் கொடுப்பதும் வாங்குவதும் தங்கள் பெயர்களாலேயே. இந்தக் கோயில் சித்திர வேலைப்பாடுகள் சிலவற்றுள் இவற்றின் வரலாற்றைக் காணலாம். 'ஆதி சங்கரரை' க் காட்டுவதாகக் கூறப் படும் சித்திர வேலைப்பாடு 'அவரைக் காட்டுவது தானா?' என்ற ஆராய்ச்சியை விரிவாக செய்ய இது இடம் அல்ல (தனியாகவே இது பற்றி ஓர் ஆராய்ச்சி செய்ய வேண்டும்). அத்வைதக் கொள்கைகள் ஆகமக் கொள்கைகளோடும் உபாசனாக் கிரமங்களோடும் கலந்து இருந்தது. அப்பைய தீக்ஷிதர் இந்த இரண்டையும் ஸமன்வயப்படுத்தினார்கள்.

ஆனால் எல்லோருக்கும் அவரைப் போன்ற ஆற்றலும் நம்பிக்கையும் இல்லை. தீக்ஷிதர் விஷயத்தில் கூட, ஸ்ரீ நரசிம்மாச்ரமர் கலப்பற்ற அத்வைதம் பற்றித் தீக்ஷிதரை எழுதச் சொன்னதாகவும், இதன் பயனாகவே 'பரிமளமும்' 'சித்தாந்த லேச சங்க்ரகமும்' தோன்றிய தாகவும் சொல்கிறார்கள். அத்வைத சம்பந்தமான நூல் எழுதிய மற்றொரு பெரியவர் கீர்வாணேந்திரர், இவர் ஒரு பீடாதிபதியாக இருந்தார் என்று தெரிகிறது. (skt. page 59 Manuscripts). நூல்கள் எழுதிய மற்றொருவர் உபநிஷத் பிரம்மேந்திர ராவர். உபநிஷத் பிரம்மேந்திர மடத்துக்கு இப்போது தலைமை தாங்கும் பீடாதிபதி அவர்கள் 1939 ல் வெளியிட்ட சிறு பிரசுரம் ஒன்றில் 'எங்கள் மடமே தென் இந்தியாவில் தோன்றிய முதல் அத்வைத மடம்' என்று நிச்சயமாகச் சொல்லிக் கொள்கிறார். 'சுமார் 250 வருஷங்களுக்குமுன் (அதாவது 17-ம் நூற்றாண்டில் பிற்பகுதியில்) இது ஸ்தாபிக்கப்பட்டது' என்றும் அவர் கூறுகிறார். கிளைமடங்களும் இருந்திருக்க வேண்டும். காஞ்சியில் ஒரு சாரதா மடம் என்றாவது இருந்திருக்குமானால் அதுவும் சிருங்கேரி மடத்தின் கிளை' என்ற பெயரால் அங்கு தானாகவே முளைத்த ஒன்றாகத்தான் இருந்திருக்க முடியும். விஜயநகர சக்கரவர்த்தியான அச்சுதராயர் காலத்தில் தஞ்சாவூருக்குவந்த ஹொய்ஸல கன்னட பிராம்மணரான கோவிந்த தீக்ஷிதர் என்பவர் மற்றொரு பிரபல மேதாவி ஆவர். தஞ்சாவூர் ஜில்லாவிலும், தென் ஆற்காட்டின் ஒரு பகுதியிலும் வசித்த மக்களின் சமய வாழ்க்கையில் இவர் ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்குமேல் நல்ல செல்வாக்குப் பெற்ற

வராகவே இருந்தார். இவர் காலத்தில் வாழ்ந்த பெரியவர்கள் இவரை—'ஸ்ரீமத் அத்வைத வித்யாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்திரர்' (skt. pp.59) என்றே பெருமையோடு வழங்கி வந்தார்கள். அந்தக் காலத்தில் தமிழ் ஜில்லாக்களில் குடியேறிய ஹொய்சல பிராமணர்களுக்குள் கோவிந்தரே மிகவும் பிரபலஸ்தராக விளங்கினர் .கடலாடி (Kadaladi) தான சாஸனம் (கி. பி. 1451—1530 அச்சுதராயர் ஆட்சிக் காலம்) ராமசந்திர தீக்ஷிதர் என்ற ஹொய்சலர் ஒருவருக்குக் கொடுத்த தானத்தைப் பற்றிச் சொல்கிறது. இவர் தம் பந்துக்களுக்கு விருத்திகள் பிரித்து வழங்கினராம். கோவிந்த தீக்ஷிதரின் ஆதரவு காரணமாக இந்தப் பிராத்தியங்களில் யதிகளின் — முக்கியமாகக் கன்னட பிராம்மண யதிகள்—எண்ணிக்கை அதிகரித்தது. சென்ற இரண்டு நூற்றாண்டுகளாகக் கும்பகோணம் மடத்து ஆசாரியர்கள் கன்னடியர்களில் இந்த வகையாரே என்பதைப் பொது மக்கள் நன்கு மனத்தில் வாங்கிக்கொள்ள வேண்டும். சந்திரசேகரேந்திர சரஸ்வதி என்ற தீக்ஷா நாமம் பெற்ற (1814—51) வேங்கடசுப்ரமண்ய தீக்ஷிதரான இந்த மடத்து ஆசாரியர் கோவிந்த தீக்ஷிதர் குடும்பத்தைச் சேர்ந்தவரே ஆவர். இவருக்குப் பின் வந்த எல்லா ஆசாரியர்களுமே இந்தக் குடும்பத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களே (வேங்கடராமன் பக். 1022)

பகவந்நாம போதேந்திரர் (57 ஆம்பட்டம் 1638—92) என்பவர் காசியிலிருந்து தெற்கே வந்து " முடிவாகக் காஞ்சியை அடைந்தார். அப்போது மடம் காஞ்

சிக்குத் திரும்பிவிட்டது. எனவே இவர் அந்தப் பீட ஆசாரியர் ஆனார்" (வேங்கடேசன் பக். 30). இது ஆச்சரியமாகவே இருக்கிறது! இந்த மடம் இதற்குமுன் எங்கே போயிருந்தது? எப்போது போயிற்று? போதேந்திரரைத் தலைமை தாங்க வரவேற்கத் தயாராக இது இங்கே திரும்ப நேர்ந்த காரணம் என்ன?

இந்த மடத்து ஆசாரியர் ஒருவர் காஞ்சியைவிட்டுத் தஞ்சாவூர் சென்றதற்குக் காரணமாகச் சொல்லப்படும் கதை நம்பத்தக்கதல்ல. கோயில் குருக்கள் விக்கிரகங்களை எடுத்துக் கொண்டு ஓடியதாகத்தான் அரசாங்க தஸ்தாவேஜுகள் சொல்லுகின்றன. எந்தச் சங்கராச்சாரியரைப் பற்றிய குறிப்பும் இதுசம்பந்தமாக அந்தத் தஸ்தாவேஜுகளில் இல்லை. 1792-ல் திப்பு காஞ்சியில் இருந்தபோது, கோயில்களைப் புனருத்தாரணம் செய்யவும் விக்கிரகங்களுக்கு சம்புரோக்ஷணம் செய்யவும் அவன் சிருங்கேரி ஆசாரியார் அவர்களின் யோசனையையே கேட்டான். அப்போது "காமகோடி பீட ஆசாரியர்' எங்கே இருந்தார்?

இப்படி சிதறிக் கிடக்கும் விஷயங்களையெல்லாம் ஒரு கோவையாக்கிப் பார்க்கலாம். ஆரம்பத்தில் 'குரு ரத்னமாலை'யும் 'சுஷாமா'வும் நம்மைக் கற்பனை உலகுக்குள் அழைத்துச் செல்கின்றன. அங்கிருந்து உண்மை உலகுக்கு இறங்கினால் வேறு இடத்துக்கு உரியவர்களான வித்யாதீர்த்தர், சங்கரானந்தர் போன்றவர் இந்த மடத்துத் தலைவர்கள் என்ற நம்பத் தகாத செய்திகளை நாம் கேட்கிறோம். 17-ஆம் நூற்றாண்டு வரையில் ஒழுங்காக வரையறுக்கப்பட்ட செல்வாக்குள்ள மடம்

எதுவும் காஞ்சியில் இல்லை. நல்ல அறிவாளிகளான படித்த சந்நியாசிகள் பலர் இங்கே இருந்திருக்கலாம். இவர்கள் ஆசிரமங்கள் இருந்திருக்கலாம். காஞ்சியில் கிடைத்த பல நூறு கல்வெட்டுக்கள் எதிலும் 'காஞ்சி காம கோடி பீடம்' என்ற குறிப்பே காணப்படவில்லை. 1841-ல் காஞ்சி காமாக்ஷி கோயிலுக்கு நடந்த கும்பாபிஷேகத்தில் கும்பகோணத்தில் நிறுவப்பட்ட மடத்தின் ஆசாரியர் ஒருவருக்குத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார் என்பதில் சந்தேகமில்லை. இந்த ஆசாரியர் சென்னை அரசாங்கத்துக்கு விண்ணப்பம் செய்து கொண்டு, கிடைத்த அனுமதியே இவர் இதில் கலந்து கொள்ள முடிந்ததன் காரணமாகும்.

கோயிலுக்குள் பூஜையிலிருக்கும் சக்கரத்துக்குத்தான் 'காமகோடி பீடம்' என்பது பெயரே ஒழிய இது எந்த மடத்தின் பெயராகவும் இருக்க முடியாது.

கோவிந்த தீக்ஷிதர் காலத்தில் ஒரு சந்நியாசிக் குழு பிரபலம் பெற்றது. இவர்களின் பரம்பரை ஒன்றில் இருந்து ஒருவரை தஞ்சாவூர் மகாராஷ்ட்ர அரசர்கள் ஆதரித்தார்கள். 1821-ல் அப்போது தஞ்சை அரசராக இருந்தவர்கள் இவருக்குக் கும்பகோணத்தில் ஒரு மடம் கட்டித்தந்தார். சிலவருஷங்களுக்குப்பிறகு அந்தமடத்து ஆசாரியராக இருந்தவருக்கு கனகாபிஷேகமும் செய்தார்கள். இவ்வாறு பிரபலமாகித் தஞ்சாவூர் அரசர்களின் ஆதரவையும் பெற்ற இந்த மடத்து ஸ்வாமிகளுக்கும் — வேறு பெரிய சிறிய மடாதிபதிகளுக்குக் கிடைத்தது போல— தென்னாட்டில் விஜய யாத்திரை செய்ய நவாப்களிடமிருந்தும் கிழக்கிந்தியக் கம்பெனியார்களிடமிருந்

தும் கூட அநுமதி கிடைத்தது. தஞ்சாவூரிலிருந்த இங்லீஷ் நீதிபதி ஒருவர் இந்த மடம் ஒரு 'பிரிந்த மடம்' என்று கூறுவதோடு, இதன் பெயர் 'சிக்குடையார்' (சிறிய ஆசாரியர்) ஒருவருக்கு உரிய மடமாகத்தான் இருக்க வேண்டும் என்பதை ஸ்திரப்படுத்துகிறார். இந்த குறிப்புகளை எல்லாம் ஒன்றுபடுத்திப் பொதுமக்களே ஒரு முடிவுக்கு வரட்டும்.

பெரிய சமய ஸ்தாபனங்கள் நிலை குலைந்து போவதற்கான காரணங்களை, பிரபல நீதிபதியும் இந்தியப் பண்பாட்டை நன்கு உணர்ந்தவரும் வேதாந்த அறிவுள்ளவருமான ஒருவர் பின்வருமாறு ஆராய்ந்து கூறுகிறார். "மடங்களின் செல்வாக்கும்; கட்டுப்பாடும் க்ஷீணிப்பதற்கு மூன்றாவது காரணம்; ஆசாரிய பீடத்துக்குள்ள அதிகார ஆசையும் செல்வாக்கும் காரணமாக ஒரே ஆசாரியரின் சீடர்களுக்கிடையே ஏற்படும் பகை ஆகும். இதனால் போட்டி மடங்கள் ஏற்படவும், அதை ஸ்தாபித்தவர்கள் சங்கரா சாரியார் என்ற பட்டத்தை ஸ்வீகரிகக்கவும் அந்தப் பட்டம் அந்த ஆசாரியர் பரம்பரைக்கெல்லாம் உரியதாகச் சொல்லவும் இடம் ஏற்படுகிறது. உதாரணமாகப் பின்கண்டவைகள் எல்லாம் இப்படிக் கிளம்பிய புதுமடங்களே ஆகும்: தக்காணத்தில் உள்ள கொல்ஹாபூர், பெல்காம், ஹம்பி, தென் இந்தியாவில் காஞ்சி (காஞ்சீவரம்) குஜராத்தில் பிரபாஸ் பட்டணம், தாகோர், தோல்கா என்ற இடங்கள், ஐக்கிய மாகாணங்களில் காசி. (பி. வி. திவான்ஜி, சித்தாந்த பிந்துவின் முகவுரை பக். 62—III)

சந்நியாசிகளை உயர்த்தி வைக்கும் மனப்பான்மை பொது மக்களிடையே இருப்பதுவே சில சந்நியாசிகள் சுயநலமிகளாக மாறவும் பிரசாரப் பிரியர்களின் விருப்பத்துக்கு இணங்கவும் காரணமாகிறது. இத்தகையவர்கள் பிரசாரத்துக்கு எந்தச் சாதனத்தைப் பயன்படுத்தவும் பின்வாங்குவதில்லை. இதனால் பொதுமக்கள் குறை சொல்ல தங்களை இலக்காக்கிக் கொள்கிறார்கள். இப்படி குறைகளைச் சொல்ல நேர்ந்தாலும் நாம் பகை உணர்ச்சி இல்லாமல் பவ்வியமாக, உண்மை ஒன்றையே லட்சியமாகக் கொண்டுதான் சொல்லவேண்டும்.

பழமைதான் பெருமைக்கே காரணம் என்ற நினைப்பு சரியானதல்ல. தென்னிந்தியாவில் சமயத் துறையில் நல்ல செல்வாக்குப் பெற்றுள்ள வைஷ்ணவ சைவ மடங்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றியவைகளே. கும்பகோணம் மடம் ஒரு நல்ல சக்தி வாய்ந்த ஸ்தாபனந்தான். இதற்கு இல்லாத பழமையும் தனிப்பெருமையும் இதற்கு உண்டு என்று காட்ட இம் மடத்தின் சீடர்கள் ஏன் தவறாக முயலவேண்டும்? இவர்கள் இந்தத் தப்புப் பிரசாரங்களில் முனைந்து காலத்தை வீணாக்கப் போகிறார்களா? அல்லது இவர்கள் சமயக் கொள்கையே கொண்ட மற்ற மடஸ்தாபனங்களோடு ஒத்துழைத்துச் சங்கரரின் உபதேசங்களை நாடெங்கும் பரப்பப் போகிறார்களா?

முடிவாக நமது ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் வெளிநாட்டுத் தூதர்களோடு பேசும் போது சொன்ன ஒரு உபதேசத்தை இந்த மடத்துச்

சீடர்கள் கவனிக்குமாறுவேண்டுகிறேன். இந்த உபதேசம் இந்தச் சந்தர்ப்பத்துக்கு நன்கு பொருந்தும்.

"ஒருவர் தம் கொள்கைகளை வலிந்து புகுத்த முயல்வதனாலேயே மனிதன் தனது இயல்பான பரந்த நோக்கத்தையும், இரக்கத்தையும், நட்புணர்ச்சியையும் இழந்து தவறான வழியில் இறங்க நேர்கிறது. அளவுக்கு மீறிப் புகழாமை, உள்ளத்தைத் திரித்துச் சொல்லாமை தப்புப்பிரசாரம் செய்யாமை இவைகளே நமது வாழ்க்கை லட்சியமாக இருக்க வேண்டும். உண்மை ஒன்றுக்கே நாம் செவிசாய்க்க வேண்டும். இதைச் செய்ய முடிந்தால் போதும். நமது வெற்றிக்காக நாம் பெருமைப்படலாம்."



ஸ்ரீ ராமா பிரிண்டிங் ஒர்க்ஸ், தர்மபுரி.

## குறிப்புகள்

பக்கம் 265 (Skt. Mss. page 6) இங்கு பின்வருமாறு வாசிக்கவும்.

शास्त्र निष्णातैः ... ... ... श्री राम शास्त्रिभिः नूतनोऽयं गीतार्थ संग्रहः कृतः मम प्रार्थनानुसारम् ।

பக்கம் 265 (skt. pages 7 & 8, 9 & 10) பின்வருமாறு வாசிக்கவும்.

போலகம் ராம சாஸ்திரிகளின் 'ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹ'த்தில் சுலோகங்கள் 8, 9, 11ம் மதுஸூதன ஸரஸ்வதிகளின் 'கூடார்த்த தீபிகை' யின் II, III, IV அத்தியாயங்களின் கடைசி சுலோகங்களே. பிறகு 13 முதல் 17, 19, 20, 22, 25, 26, 28, 29 சுலோகங்கள் 'ஸ்ரீதரீய'த்திலுள்ளவை. பல சுலோகங்களில் ஒருவித வித்யாசமுமில்லை. சில சுலோகங்களில் மட்டும் சில வார்த்தைகள் மாற்றப்பட்டிருக்கின்றன.

பக்கம் 270 (Skt. here p. 13) இதற்குப் பதிலாக

इमे च आनन्द ज्ञान पर नामनः शुद्धानन्द—
पूज्य पादानां शिष्याः। एतेषां कालः क्रि० 1400

பக்கம் 302 (Skt. here pp. 32 இதற்குப் பதிலாக)

(पोप्पिलि प्रथितात्मने)

பக்கம் 304 (Skt. p. 33 of original) இதற்குப் பதிலாக

सरस्वती योगपट्टं तु इन्द्रपदघटितमिन्द्र प्रार्थनया भगवत्पादानां साक्षात् भगवत्पादाधिष्ठित कामकोटि पीठाधीशानां ततः प्राप्त सन्यासदीक्षा परम्परागतानां च। इन्द्रसरस्वती सम्प्रदायस्तु कामकोटि पीठस्यैव। तच्छाखा मठस्योपनिषद्ब्रह्मेन्द्र मठस्थाप्यधीशानाम्। तदन्ते वासिनांच परंपरा वर्धते।

பக்கம் 325 ல் சேர்த்துக் கொள்ளவும்

உயர் நீதிபதி **P. B. Mukharji** (Calcutta High Court and President, Ramakrishna Mission Institute of Culture)

இந்தியாவின் நான்கு மூலைகளிலும், நான்கு திசைகளில் ஆன்மீக ஜீவநாடியான கேந்திரங்களை ஸ்தாபித்தார்.—இவை கிழக்கே புரியில் கோவர்த்தன மடமும், தெற்கே மைசூரில் சிருங்கேரி மடமும், மேற்கே துவாரகையில் சாரதா மடமும், வடக்கே ஜ்யோஷி மடமும். உபநிஷத்தின் கம்பீரமான மஹா வாக்கியங்களே இந்த மடங்களின் உயர் லக்ஷ்யமாகும். முக்கியமான ஆன்மீக சம்பிரதாயங்களை காக்கவும் நன்று ஸ்தாபிக்கவும், நிர்வகிக்கவும், உயர்த்தவும் நிறுவப்பட்ட ஓய்வற்ற காவலர்கள் போன்றவை இந்த நான்கு மடங்களும்.

('Shankara—The Panorama of his Life, Message and Philosophy')

பக்கம் 332 (Skt. page 50) இதற்குப் பதிலாக

श्रीमच्छंकराचार्य निर्मित पीठ चतुष्टयादतिरिक्ताः पीठ शाखा भवितुमर्हति नवा भवेयुश्चेत्कियत्यस्ताः कानिच तासां नामानि, तत्र स्थिता आचार्याः श्रीमच्छंकराचार्य परंपरा प्राप्त शिष्यावान्ये वा ?

सन्ति शाखा मठाः शृंगेरि मठस्य तेषां नामानि कुडली, करवीर, पुष्पगिरि, हंपी, अवनी, शिवगंगेति षट् तत्पीठस्था अपि आचार्य परम्परागता एव।

(संशयतिमिर भास्करः सुरतपत्तन शक 1808)

கேசரி: புஜ: 1898 ... ... ... வரிக்குப்பின் இதை சேர்க்கவும்.

प्राच्यां गोवर्धन मठं, प्रदीच्यां शारदा मठं, दक्षिणस्यां शृंगगिरि मठं, उदीच्यां च ज्योतिर्मठ मित्याचार्यैः चत्वारि मठानि स्थापितानि। ... ... ... पुष्पगिरि, विरूपाक्ष, कुंभकोणादि मठानि शृङ्गगिरेरुप मठान्येव।

பக்கம் 337 ல் முதல் பாராவாக இதைச் சேர்த்துக் கொள்ளவும்.

1951 ம் ஆண்டு, நவம்பர் 18ம் தேதி 'கல்கி' யில் வெளி வந்த குறிப்பிலிருந்து சில வரிகள் அப்போது கல்கி கொண்டிருந்த அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றன.

அட்டைப்பட விளக்கம்: "வேதம் நிறைந்த தமிழ் நாடு" என்று பாடினர் மகாகவி பாரதியார். தமிழ்நாடு மட்டுமல்ல, பாரத தேசமே அப்படி இன்று விளங்குவதற்கு காரண புருஷராயிருந்தவர் ஆயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன் தோன்றிய மகா ஞானி யான ஆதி சங்கரர் ஆவர். ... ... ... ... சேர நாட்டில் காலடி என்னும் க்ஷேத்திரத்தில் அவதரித்த மகான் சங்கராசாரியர் தாம் வாழ்ந்த முப்பத்திரண்டு ஆண்டு களில் சாதித்த காரியங்கள் யாரையும் பிரமிக்க வைக்கக் கூடியவை. ... ... ... காஷ்மீரத்திலிருந்து கன்னியா குமரி வரை யாத்திரை செய்து வேத கால ரிஷிகள் கோஷித்த ஹிந்து தர்மத்தை பிரசாரம் செய்ததுடன் நான்கு திசைகளிலும் நான்கு சீடர்களைத் தேடிப் பிடித்து, நான்கு மடங்கள் நிறுவினர்.

**பக்கம் 345** (Skt. matter p. 59) இதற்குப் பதிலாக

पूर्वोक्ततीर्थाश्रमादीनां मध्ये केषाञ्चिन्नाम्नां स्वस्वशीला-चार मत्ताभिमानेन जाता सम्प्रदाया स्तत्तन्नाम भेदाश्च । ...... सरस्वती सम्प्रदाय भेदौ आनन्द सरस्वती इन्द्र सरस्वती चेति ।

(பக். 387)

**பக்கம் 346** (Skt. page 59 Manuscripts) பதிலாக

(अद्वैत पीठस्थित देशिकः)

**பக்கம் 347** (Skt. pp. 59) பதிலாக

(श्रीमदद्वैत-विद्याचार्य सर्वतन्त्र स्वतन्त्र)

# பிழை—திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 259 | 21 | முதல் " சம்பந்தமாகவோ " என்பதை | எடுத்துவிடவும் |
| 264 | 23 | சாஸ்திர விஜயம் | சங்கர விஜயம் |
| 280 | 26 | என்ற சொல்லப்படும் | என்று சொல்லப்படும் |
| 281 | 3 | போம்லு ? | போலும் ? |
| 309 | 22 | விச்சேச்வர | விச்வேச்வர |
| 315 | 23 | சுல்தான் பீஜபூர் | பீஜபூர் சுல்தான் |
| 324 | 10 | " மற்றவை " இந்த வார்த்தையை | எடுத்து விடவும் |
| ,, | 11 | 'படி'க்கு அடுத்த முற்றுப் புள்ளியை | எடுத்து விடவும் |
| 347 | 12 | பிராத்தியங்களில் | பிராந்தியங்களில் |
| 348 | 20 | ஒரு கோவையாக்கி | ஒரு கோர்வையாக்கி |